வீரகேசரி பிரசுரம்: 71

# இளமைக் கோலங்கள்

சுதாராஜ்

வெளியீடு
வீரகேசரி
த.பெட்டி 160,
கொழும்பு.

RangaRakes
tamilnavarasam.com

ஈழத்தின் தலைசிறந்த எழுத்தாளர்களின் தரமான படைப்புகள் வீரகேசரி பிரசுரமாக நூலுருவில் வெளிவருகின்றன.

தவறாமல் இவைகளைப் பெற்று உங்கள் இல்லத்தில் ஓர் "குடும்ப நூல் நிலையத்தை" ஆரம்பியுங்கள்.

ஆறு புத்தகங்களை அடுத்து நீங்கள் வாங்கினால், ஏழாவது புத்தகம் இனாமாக அனுப்பி வைக்கப்படும். இப்பரிசுத் திட்டத்தில் ஏற்கனவே ஆயிரத்திற்கு மேற்பட்ட வாசகர்கள் இனாமாக நூல்களைப் பெற்றுள்ளனர்.

புத்தகங்களைக் கிரமமாகப் பெறுவதில் சிரமமிருந்தால் நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய விலாசம்:

விநியோக நிர்வாகி,
வீரகேசரி,
த. பெ. 160,
கொழும்பு.

# இளமைக் கோலங்கள்

## அத்தியாயம் - 1

மழை தூறிக் கொண்டிருக்கிறது. பஸ்ஸிலிருந்து இறங்கிய சிவகுமார், நிறுத்தத்திலுள்ள தகரக் கூடாரத்திலே ஒதுங்கிக் கொண்டான். காலையிலிருந்தே வானம் இப்படித்தான் சிணுங்கிக் கொண்டிருக்கிறது.

பஸ் நெருக்கத்தில் நசுங்கியவாறு வந்ததால் இந்த மழை நேரத்திலும் அவனது உடலில் வியர்வை கசிந்து கொண்டிருக்கிறது. கொழும்பிலே பஸ்களில் பிரயாணம் செய்வதென்றால் விசேஷ பயிற்சிபெற வேண்டும். நிறுத்தங்களில் சில விநாடிகள்தான் பஸ் நிறுத்தப்படுகிறது. அந்தக் குறுகிய நேரத்தில் எத்தனைபேர் ஏதோ ஜாலவித்தை புரிவது போல நுழைந்து விடுகிறார்கள்! கண்டக்டர் இயந்திரமாக மெசினை திருகித்திருகி ரிக்கட்டை விநியோகித்துக் கொண்டிருக்கிறான். இறங்க வேண்டியவர்கள் மூச்சைப் பிடித்துக் கொண்டு இடித்து நெருக்கி—சக பிரயாணிகளின் முணுமுணுப்பையும் கண்டக்டரின் கத்தலையும் பொறுத்தருளிக் கொண்டு இறங்க—'டிங்... டிங்...'—பஸ் ஓடிக்கொண்டேயிருக்கிறது.

வெளியே இறங்கி விட்டதால் குளிர்காற்று வந்து உடலை அணைக்கும் பொழுது இதமாக இருக்கிறது. சுகமாக மூச்செடுக்கவும் முடிகிறது. 'அப்பாடா!' எனப் பெருமூச்செடுத்தவாறே பஸ்ஸினுள் அந்தரத்தில் தொங்கிக் கொண்டுவந்த நிலையை இன்னொரு முறை நினைத்துப்

RangaRakes tamilnavarasam.com

பார்த்தான் சிவகுமார்; சனவெக்கை, குமைச்சல், வயிற்றைக் குமுட்டுகின்ற மணம். சீ!

காலி வீதியில் சிறீ வரிசைக் கார்கள் கப்பல்களைப் போல மிதந்து செல்கின்றன. கண்ணாடியில் விழுகின்ற மழைத் துளிகளை 'வைப்பர்'கள் மெதுமையாக அழித்துவிட ராஜ கம்பீரத்துடன் அவை செல்கின்றன! அவைகளின் ஒவ்வொரு விதங்களையும் அழகான வர்ணங்களையும் காணும்பொழுது அவனுக்கு சந்தோஷமாகவும் பின்னர் கவலையாகவும் இருக்கிறது. தனக்கும் அப்படி ஒரு வாகனத்தில் பவனி வர முடியவில்லையே என்ற ஆற்றாமையுணர்வு.

மழை இன்னும் தூறிக்கொண்டேயிருக்கிறது. இப்பொழுது மழையோடு சேர்ந்து சற்று வெயிலும் எறிக்கிறது. இப்படி இரண்டையும் ஒரே நேரத்தில் பார்க்கும்பொழுது அழகாகத்தான் இருக்கிறது. தான் இப்படி மழைக்குப் பயந்து ஒதுங்கி நிற்பதில் பலனில்லை என அவன் எண்ணினான். மழையும் இப்போதைக்கு ஓயப்போவதில்லை.

அதை ஒரு பொருட்டாகக் கருதாமல் அங்குமிங்கும் ஓடி அலைந்து தமது அன்றாடக் கடமைகளில் ஈடுபட்டிருக்கும் மக்கள்! 'பெல்பொட்டங்களை' முழங்கால் வரையில் இழுத்துவிட்டு ஸ்டைலாக (அப்படி நினைத்துக் கொண்டு) நடக்கும் இளவட்டங்கள். தங்கள் 'கேர்ள் பிரண்டை' ஒரு சிறிய குடையினுள் மிகவும் பக்குவமாக அணைத்துக் கொண்டு செல்லும் பல இளைஞர்கள்! விதவிதமானதும் அரைகுறையானதுமான ஆடைகளை அணிந்தவாறு தாங்களே இந்த நாட்டின் நாகரிக மறுமலர்ச்சிக்கென்று விசேஷமாகச் சிருஷ்டிக்கப்பட்டவர்கள் என அந்தரங்கமான நம்பிக்கையின் இறுமாப்பில் செல்கின்ற இளமைக் கோலங்கள்!

RangaRakes



சிவகுமார் பஸ் ஸ்ராண்டை விட்டு வெளியேறி 'இங்கே கடவுங்கள்' இல்லாத இடத்தில் காலி வீதியில் கடக்க முயற்சித்த பொழுது விரைவாக வந்த வாகனமொன்று 'சடின் பிறேக்' போட்டது—இவன் 'அருந்தப்பு!' என மனதுக்குள் நினைத்தவாறே மறுபக்கத்துக்கு ஓடினான்.

வெள்ளவத்தை பொலிஸ் நிலையத்துக்குப் பக்கத்திலுள்ள பெரிய மரங்களிலிருந்து காகங்களும் வேறு பறவைகளும் நிலத்தை அசிங்கப் படுத்தியிருக்கின்றன. நாள் முழுக்கப் பெய்த மழை நிலத்தையெல்லாம் சேறாக்கி அருவருப்பை ஊட்டுகிறது. கைலேஞ்சியைத் தலையில் வைத்து, காற்றில் பறக்காமல் காதினுள் செருகிவிட்டு இவன் நடந்தான்—'இந்தத் துமியளுக்குள்ள நனைஞ்சால் தடிமன் பிடிச்சிடும்.'

மார்க்கட்டில் வழக்கமான ஆரவாரத்துக்குக் குறைச்சல் இருக்கவில்லை. வீதியோரங்களில் மரக்கறிவகைகளை, தேங்காய், முட்டை இத்தியாதி சாமான்களைக் குவித்து வைத்து மக்களுக்குச் சேவை புரியும் (லாபாய்! லாபாய்!) வியாபாரிகள்! மாலையில் அலுவலகங்களில் வேலை முடிந்து வரும் ஆண்களும் பெண்களும் மற்றும் உயர்மட்டக் குடும்பஸ்தர்களின் வேலைக்காரர்களும் பொருட்களைப் பேரம் பேசி அள்ளிக் கொண்டிருக்கிறார்கள்! ஒரு பக்கத்தில் கொட்டப்பட்டு அழுகிக் கொண்டிருக்கின்ற மரக்கறி வகைகள் நாற்றமெடுக்கிறது. சில நோஞ்சான் சிறுவர்கள் வீசப்பட்டிருக்கிற மரக்கறிகளை பொறுக்கிக் கொண்டிருக்கிறார்கள்—எப்படி எப்படியோ இறைவன் எல்லோருக்குமே படியளந்து கொண்டுதானிருக்கிறான்!

நாளை மறுதினம் பொதுமக்களுக்கு அடிக்கப்போகிற அதிர்ஷ்டத்தைப் பற்றி ஜோசியம் சொல்லிக் கொண்டிருக்கிறான் சுவீப் ரிக்கட் வாகனக்காரன். அதைக் கேட்டதும்

tamilnavarasam.com

‘ஒரு ரிக்கட் எடுத்தாலென்ன’ என்ற அற்ப ஆசை சிவகுமாரின் மனதிலே தோன்றியது. அப்படி சிலவேளைகளில் எடுத்து அதிர்ஷ்டம் அடிக்காமல் போகிற போதெல்லாம் கொடுத்த பணம் நாட்டின் அபிவிருத்திக்குத்தானே பயன்படுகிறது என மனதுக்குச் சமாதானம் சொல்லிப் பழகியிருக்கிறான். பொக்கட்டிலே காசைக் கணக்குப் பார்த்த பொழுது, அது காய்கறிச் சாமான் வாங்குவதற்கே போதுமானதாக இருந்ததால் அந்த எண்ணத்தையும் கைவிட்டான். கால்களின் பழக்கதோஷம் ‘எக்கவுண்ட்’ வைத்திருக்கிற கடைக்குள் இழுத்துச் சென்றது.—‘ஒரு ரீ அடிச்சிட்டுப் போகலாம்.’

—‘ரீ மேக்கருக்குக் காது கேட்காதோ? இவன் ஏன் இந்தக் கத்துக் கத்துகிறான்?’

தேநீரை அருந்திவிட்டுக் காசாளர் மேசைக்கு வந்து கொப்பியை எடுத்துக் கணக்கை எழுதியபொழுது அவர், ‘என்ன தம்பி... ஒரே மழையாயிருக்குது’’ எனத் தனது ‘ரேப்’பை முடுக்கினார். இப்படி இன்று எத்தனைபேரிடம் கேட்டிருப்பாரோ? இவனும் சிரிப்பை வெளிப்படுத்திக் கொண்டே ‘‘ஓம்! விடுறபாட்டைக் காணயில்லை!’’ என்றான்.

ஓட்டமும் நடையுமாக வந்தபொழுது வீட்டு வாசலில் ‘லான்ட் லேடி’ நின்று புன்முறுவலை மலர்த்தினாள். பின்னர் ‘‘அங்கிள்! தெயார் இஸ் எ லெட்டர் ஃபோர் யூ!’’ என்றவாறே உள்ளே சென்று ஒரு கடிதத்தை எடுத்து வந்தாள். பிள்ளைகள் அழைக்கின்ற ‘அங்கிள்’ பட்டத்தையே அம்மாவும் பாவிக்கிறாள். அவளது ‘ஸ்கேர்ட்டும்’ தோற்றமும் ஒரு நடுத்தர வயது மாது என்றா தோன்றுகிறது? இன்னும் எவ்வளவு இளமையாக இருக்கிறாள்! கடிதத்தைப் பெற்றுக் கொண்டு (தாங்ஸ்!) ஒரு புன்முறுவலைப் பதிலுக்குச் செலுத்திவிட்டு வீட்டின் கோடிப்பக்கத்தை நோக்கி நடந்தான். அங்கேதான் அவனது அறை இருக்கிறது!

RangaRakes



அறைக்குள் மகேந்திரன் கண்ணாடியின் முன்நின்று தனது நீளமான தலைமுடியை வாரிக்கொண்டு நின்றான். அவன் கண்ணாடியைக் கண்டால் விடமாட்டான்.

‘‘என்னடாப்பா! பொம்பிளையள் மாதிரி எந்த நேரமும் கண்ணாடிக்கு முன்னாலை?’’ எனத் தனது சினத்தை வெளிப்படுத்தினான், மற்றவன் ஜெகநாதன்.

‘‘பெரிய மன்மதன் என்ற எண்ணமோ?’’

மகேந்திரன் அவனது கதைக்குக் காது கொடுக்காமலே துவாயை எடுத்துக் கொண்டு ‘பாத்ரூமுக்கு’ நடந்தான். பல நாட்களாக வெயிலையே கண்டறியாத குறைபாட்டைத் துவாய் பறைசாற்றியது. அவனை எப்படியாவது மட்டம்தட்ட வேண்டுமென்ற எண்ணத்துடன், ‘‘மச்சான்!... தயவுசெய்து உந்தத் துவாயைத் தோச்சுப் போடு... கிட்ட நிக்கேலாதாம்’’ என்றான் ஜெகநாதன். அவன் அலட்சியமாக ‘‘அது மச்சான்... வெயிலிலை காயாததாலைதான் புளிச்சு மணக்குது!...’’ எனக் காரணம் கூறிவிட்டுத் துவாயை அன்போடு தோளிலே கிடத்திக் கொண்டு சென்றான்.

அறைக்கு வந்து உடைகளை மாற்றிக்கொண்டு நின்ற சிவகுமார்—‘‘சரி!... சரி, இந்தக் கதையளை விட்டிட்டு வாங்கோ... சமைக்கவேணும்!’’ என அவர்களைத் திசை திருப்பினான். ‘‘இப்பொழுதே தொடங்கினால்தான் ஒரு பாடாகச் சமைத்து முடிக்கலாம்.’’

‘‘மச்சான்!... எனக்கு நேரமில்லை... சிங்கள ரியூசனுக்குப் போகவேணும்... நீங்கள் சமையுங்கோ... நான் பிறகு வந்து இயத்துக்களைக் கழுவுறன்...’’ எனச் சமாளித்தான் மகேந்திரன்.

ஜெகநாதனுக்கு இது பொறுக்கவில்லை. ‘‘நீர் லேசான வேலையைப் பார்க்காமல் வாரும்!... ஒவ்வொரு நாளும்

tamilnavarasam.com

இப்பிடி ஒவ்வொரு சாட்டைச் சொல்லிப் போட்டுப் போக லாம் எண்ட நினைவோ?'' எனத் தடுத்தான்.

''இல்லை மச்சான்... சோதினையும் கிட்டுது... கிளாசுக் குப் போகாட்டி என்னெண்டு பாஸ் பண்ணுறது?... நாளைக்கு விடியப்புறம் நான் எழும்பித் தனியச் சமைக் கிறன் .. இப்ப குழப்பாதையுங்கோ!''

எப்பிடியாவது ஒரு காரணத்தைச் சொல்லி விட்டு அவன் நழுவிவிடுவான்.

''நீ... ரீயூசன்... ரீயூசன் எண்டு சொல்லிக் கொண்டு ரீயூசனுக்குத்தான் போறியோ... அல்லது வேறை என்னத் துக்குப் போறியோ ஆர் கண்டது!'' என்றான் சிவகுமார்.

''சிவா! நீயும் என்னைப் பற்றி அப்பிடி நினைக்கிறியே மச்சான்?'' என அவனுக்கு 'ஐஸ்' வைத்தான் மகேந்திரன்.

''சரி!... சரி...! போய்த்துலை!... என்னவோ நல்லாய் வந்தால் சரி!'' எனக் கூறிவிட்டு எழுந்து அறையை ஒதுக் கத் தொடங்கினான் சிவகுமார்.

குளியலறையில் மகேந்திரன் 'பைப்'பைத் திறந்து விட்டு முகம் கழுவுகின்ற ஓசை கேட்கிறது—

''உவன் மச்சான் சரியான ஆள்! ஒவ்வொருநாளும் ஏதாவது சாட்டுச் சொல்லிப் போட்டுக் கழண்டிடுவான்.'' என ஜெகநாதன் முணுமுணுத்தான்.

''ஜெகா! நீ இந்த இயத்துக்களைக் கழுவிக்கொண்டு வா!... நான் அதுக்கிடையிலை இவ்விடத்தை ஒருக்கால் கூட் டிறன்'' என்றவாறே சமையலுக்குத் தேவையான சில பாத்திரங்களைக் கொடுத்தான் சிவகுமார்.

# அத்தியாயம் - 2

சுவாமி அறை, படுக்கை அறை, வரவேற்பறை, சமை யல் அறை என எல்லா சௌகரியங்களையும் தன்னகத்தே கொண்டுள்ள (அப்படிக் கருதப்படுகின்ற) ஓர் அறையே அந்த மூன்று நண்பர்களையும் குடிவைத்திருக்கின்ற புண் ணிய கைங்கரியத்தையும் செய்கிறது. வெள்ளவத்தைப் பகுதியில் இப்படி ஓர் அறை 'வசதியாகக்' கிடைத்திருப் பது அவர்கள் முற்பிறப்பில் செய்த புண்ணியமோ என் னவோ! (இப்பிறப்பில் உருப்படியாகச் செய்தது என்ன இருக்கிறது?)

அறையின் யன்னலோரமாக ஒரு கட்டிலும் அதற்கு எதிராக மறுபக்கத்தில் இன்னொரு கட்டிலும் போடப்பட் டிருக்கின்றன. இந்தக்கட்டில்கள் படுக்கைகளாக உப யோகப்படுவது மாத்திரமின்றி வந்தாரை வரவேற்று அமரவைக்கின்ற இருக்கைகளாகவும் சேவையாற்றுகின் றன. இன்னொரு கட்டில் போடுவதற்கு இடமில்லாத தனாலோ, அல்லது தனது சம்பளத்தை வைத்துக்கொண்டு கொழும்புச் சீவியமும் நடத்தி ஒரு கட்டிலுக்கும் சொந்தக் காரனாக இருக்குமளவுக்கு வசதியில்லாததனாலோ கட்டி லொன்றின் அவசியத்தைப் பற்றி மகேந்திரன் சிந்தித் ததேயில்லை. ஜெகநாதனுக்குச் சொந்தமான கட்டிலுக்குக் கீழே சுருட்டிப் போடப்பட்டிருக்கும் பாய் இரவு வேளை களில் இவனது தூக்கத்துக்கு வகைசொல்லும் நல்ல துணை யாக இருந்து வருகிறது.

அறையின் ஒரு பக்க மூலையில் மேசையும் கதிரையும் இருக்கின்றன. இவையிரண்டும் ஜெகநாதன் பெரிய மன சோடு இந்த அறைக்குத் தானம் செய்தவை. மேசையில்

RangaRakes tamilnavarasam.com

நெருப்புப்பெட்டி முதல் 'டிக்செனறி' ஈறாக சகலவிதமான சாமான்களும் பரவியிருக்கின்றன.

மேசைக்கும் மேலே சுவரிலே, 'யாமிருக்கப் பயமேன்' என இந்த அறைவாசிகளுக்கு அபயமளித்தவாறு தோற்றமளிக்கின்ற பிள்ளையார் - முருகன் திருவுருவப்படம். அவ்வப்போது கொளுத்தப்படும் ஊதுபத்திகளின் சாம்பல் மேசையிலுள்ள புத்தகங்களின் மேல் உதிர்ந்து கிடக்கின்றது.

அறைக் கதவின் உட்புறமாக சில அழகான குமரிகளின் கவர்ச்சிப் படங்கள் ஒட்டப்பட்டிருக்கின்றன. அந்தப் படங்களில் ஏதோ கலையம்சம் இருக்கிறது என்பது மகேந்திரனின் வாதம்.

ஒரு மண்ணெண்ணெய் அடுப்பும் வேறு தட்டுமுட்டுச் சாமான்களும் வைப்பதற்காக, அறையின் மறுபக்கத்து மூலையில், பக்கீசுப் பெட்டிப் பலகையில் மேசையுருவில் செய்யப்பட்ட இரு பொருட்கள் உள்ளன. அதற்குக் கீழே சில சிறிய பெரிய போத்தல்களும் ஒரு துருவலையும் வைக்கப்பட்டிருக்கின்றன. வீட்டுச் சொந்தக்காரன் இல்லாத நேரம் பார்த்து சுவரில் அடிக்கப்பட்ட ஆணியில் கொழுவப்பட்டுள்ள கம்பியொன்றில் சில இடியப்பத்தட்டுகளும் ஒரு நீத்துப்பெட்டியும் ஈவிரக்கமின்றி அந்தச் சுவரின் அழகையே கெடுப்பவை போலத் தொங்கிக்'கொண்டிருக்கின்றன.

அன்றாடம் கடைகளிற் சாப்பிடுவதால் 'போகவா, நிற்கவா' என ஊசலாடுகின்ற உயிர்களைத் தடுத்தாட்கொள்வதற்காக அவர்கள் கையாள்கின்ற தந்திரந்தான் இந்தச் சமையற் திட்டம். இதிலே எதிர்பார்த்த வெற்றியும் கிடைக்கவில்லை. தோல்வியும் இல்லை. மகேந்திரனையும் வழிப்படுத்தி ஒத்துழைக்கச் செய்தால் கரைச்சலாக இருக்காது என்பது ஜெகநாதனின் அபிப்பிராயம். ஜெகநாதன்



ஆரம்பித்து வைத்த இந்த 'நாங்களே சமைக்கிற' திட்டத்தை முறிந்து போகாமல் நல்ல முறையில் ஒப்பேற்றிக் கொண்டு போகிறவன் சிவகுமார்.

அறையைக் கூட்டி ஒதுக்கிவிட்டு மண்ணெண்ணெய் அடுப்பைப் பற்ற வைத்துக்கொண்டே சிவகுமார் சொன்னான்: ''மச்சான்! நான் உலைக்குத் தண்ணியை வைச்சிட்டுத் தேங்காயைத் திருவிறன்... நீ கறியை ஒருக்கால் கழுவிக் கொண்டு வா!''

மீன் கழுவித் துப்புரவு செய்வதில் ஜெகநாதன் வலு விண்ணன். சிவகுமார் நுணுக்கம் பிடிச்சவன், ஆறச்சோர அமர்ந்திருந்து கழுவுகின்ற அளவுக்குப் பொறுமையும் இல்லாதவன்.

ஜெகநாதன் அறைக்கு வெளியே உள்ள 'பை'புக்குப் பக்கத்தில் ஒரு பலகையைப் போட்டு அமர்ந்தவாறே மீனை வெட்டத் தொடங்கினான்.

அதிகாலையில் எழுந்து சமைத்து விட்டு வேலைக்குப் போகும் பொழுது சாப்பாட்டைக் கட்டிக்கொண்டு போகலாம் என்றுதான் ஆரம்பத்திற் கருதினார்கள். ஆனால், அது எல்லோருக்குமே கஷ்டமான காரியமாகத்தான்பட்டது. கொழும்பு உத்தியோகத்தர்களின் வரப்பிரசாதமான பாண் காலை வேளைகளில் கைகொடுக்கின்றது. ஜெகநாதன் ஸ்பெஷலாக 'பட்டரும்' வேண்டி வைத்திருந்தான். பாணைச் சீவல் சீவலாக வெட்டிப் பின்னர் கரண்டியை எடுத்து மெதுவாக பட்டரில் தடவி அதைப் பாணிலே பூசுவான். இதையெல்லாம் மிகப் பொறுமையாக இருந்து நுணுக்கமாக அவன் செய்வதைப் பார்க்க ஆச்சரியமாகவிருக்கும்; ''இவன் சரியான கசவாரம் மச்சான் பாணுக்கு பட்டர் தடவுகிறானே... பட்டரைப் பொலிஷ் பண்ணுகிறானே?... அரை றாத்தல் பட்டரை வேண்டி ஒரு மாதமாகுது அப்பிடியே வைச்சிருக்கிறான்'' என்று மகேந்திரன்

RangaRakes tamilnavarasam.com

எரிச்சலோடு கூறுவதைக் கேட்டு சிவகுமார் சிரித்துக் கொள்வான்.

மத்தியான நேரத்தில் எங்காவது ஒரு கபேயில் அவ ரவர் பாட்டைக் கவனித்துக் கொள்வார்கள். இரவிலே மாத்திரம் சமைத்துச் சாப்பிடுவதற்கு வசதியான நேரம் கிடைக்கிறது. இப்படித் தாங்களே சமைப்பதால் சத்தான உணவாக இருக்குமென்ற காரணத்துக்காகச் சில சங் கடங்களை மனதார ஏற்றுக் கொண்டார்கள். இது தேகாரோக்கியத்தைப் பொறுத்தவரையிற்தான் பொருந் தும். நாவிற்குச் சுவையில்லாதிருப்பது என்னவோ 'கசப் பான' உண்மைதான்!

சிவகுமார் தேங்காயைத் துருவி வைத்துவிட்டு அரிசி யைக் களைந்து உலையில் போட்டான். பின்னர் வெண்காயம் மிளகாயை எடுத்து நறுக்கிக்கொண்டே "ஜெகா!... இவ் வளவு நேரமும் என்ன செய்து கொண்டிருக்கிறாய்?" என்று குரல் கொடுத்தான்.

"இந்தா முடிஞ்சிட்டிது... வாறன் மச்சான்!"

ஜெகநாதன் மீன் கழுவிக்கொண்டிருந்த பொழுது அகிலா வாசற்கதவைத் தள்ளிக்கொண்டு உள்ளே வந் தாள். வீட்டைச் சுற்றிலும் சிறுசிறு சாடிகளில் வைக்கப் பட்டிருக்கிற ரோசாச் செடிகளில் அழகான மலர்கள் மெல்லிய காற்றின் தழுவலில் அடக்கமாக அசைவது போல — அகிலா எழிலாக மெல்ல மெல்ல நடந்து வரு கின்ற அழகை இவனது கண்கள் கள்ளத்தனமாக ரசித்தன. மீன் அரிந்துகொண்டிருந்த கத்தி சதக்கெனக் கையைப் பதம் பார்த்து அவனது குற்றத்தை உணர்த்தியது.

அவன் மீன் கழுவிக்கொண்டிருப்பதைக் கவனித்து அகிலா, தான் காண்பதை அவன் உணர்ந்தால் கூச்சப் படக்கூடும் என எண்ணி அதைக் காணாதவள் போல மறு பக்கமாகத் திரும்பிக்கொண்டே வீட்டினுள் நடந்தாள்.



கழுவிய மீனை அறையினுள் கொண்டு சென்று உப்புப் போட்டு மூடிவைத்தவாறே, "மச்சான்! கதாநாயகி வந் திட்டா!" என்றான் ஜெகநாதன்.

"கதாநாயகியோ?... ஆரது விளங்கச் சொல்லன்."

சிவகுமார் தேங்காய்த் துருவலில் பாலைப் பிழிந் தெடுத்தான்.

"வேறை ஆர்?... அகிலாதான்!"

காற்றுக் குளிர்மையாக வீசி வந்து உடலைத் தழுவு கின்ற சுகமான ஸ்பரிசம்.

# அத்தியாயம் - 3

**வா**னம் வெளித்து விட்டது. ஆங்காங்கே நட்சத்திரங் கள் தலைகாட்டிக் கொண்டிருக்கின்றன. மழையில்லை. காற்று வீசியதால் தூறல் போட்டுக் கொண்டிருந்த மேகங்கள் விலகிவிட்டன.

சமைத்து முடிந்துவிட்டதால் பெரியதொரு தலையிடி தீர்ந்தது போலிருந்தது. சிவகுமார் சஞ்சிகையொன்றை வாசித்துக் கொண்டிருந்தான்.

தூரத்தே கடலில் குமுறுகின்ற அலைகள்.

ஜெகநாதன் சிகரட்டைப் புகைத்துக் கொண்டே "வொ! கடற்கரை வரைக்கும் நடந்திட்டு வருவமே?"

RangaRakes tamilnavarasam.com

எனக் கேட்டான். சிவகுமாரும் உற்சாகத்தோடு எழுந்தான்.

கொழும்பில் இயந்திரமயமான வாழ்க்கையில் சற்றேனும் மனதுக்கு ஆறுதலாக இருப்பது இந்தக் கடற்கரைதான். இரவு வேளைகளில் நெடுநேரம் இந்தக் கடற்கரைக் கற்களில் அமர்ந்து கொண்டு பல பிரச்சினைகளைப் பற்றியும் பேசித் தீர்த்திருக்கிறார்கள்.

கடற்கரையை நோக்கி நடந்துகொண்டிருந்த பொழுது, ''அழகில்லாத பொம்பிளையைக் கலியாணம் முடிக்கிறதைப் பற்றி என்ன நினைக்கிறாய் சிவா?'' என்று கேட்டான் ஜெகநாதன்.

இந்த நேரத்தில் இப்படியொரு சிந்தனை தோன்றக் காரணம் என்னவென்று எண்ணியவாறு; ''ஏன் கேக்கிறாய்?'' என்றான் சிவகுமார்.

''ஒரு கதைக்காகத் தான் கேட்டனான்......சொல்லன்! ......''—ஜெகநாதன் புதிர் போட்டான்.

''அழகில்லாத பொம்பிளையளும் கலியாணம் முடிக்கத்தானே வேணும்?''

கடற்கரையோரத்துப் புகையிரதப் பாதையின் இரும்புத் தண்டவாளத்தில் கால்களைப் பதித்து நடந்துகொண்டே, ''அதில்லைப் பிரச்சனை...... வடிவில்லாதவளை முடிச்சுக் கொண்டு மன நிறைவோடை வாழலாமா எண்டு தான் கேட்கிறன்.''

—பொங்குகின்ற பேரலைகளின் இரைச்சல்,

''அது அவரவற்றை மனதைப் பொறுத்த விஷயம்!''

ஜெகநாதனுக்கு இந்தப் பதில் திருப்தியளிக்கவில்லை. மௌனம் சாதித்துக் கொண்டு நடந்துவந்த இருவரும், வசதியாக ஒரு கல்லில் அமர்ந்து கொண்டனர்.



''சரி! உன்ரை அபிப்பிராயம் என்ன? .....நீ வடிவில்லாத ஒருத்தியைக் கட்டச் சம்மதிப்பியோ?''

சிவகுமாரின் பாடு சங்கடமாகப் போய்விட்டது. ஒருவாறு சமாளித்துக் கொண்டு, ''ஆரெண்டாலும் வடிவானவள்தான் தங்கடை மனைவியாய் வரவேணுமெண்டு விரும்புவாங்கள்......அப்பிடித்தான் நானும்''

''கூ......க்''குரலிட்டவாறு புகையிரதம் ஓடி வந்தது. பக்கத்திலிருந்து இந்த அலைகளின் ஓசையை எவ்வளவு நேரமும் கேட்டுக் கொண்டிருக்கலாம். இடையிடையே இந்தப் புகையிரதத்தின் இரைச்சலைத்தான் சகிக்க முடியவில்லை.

''அப்பிடியெண்டால் அழகில்லாதவளெல்லாம் கலியாணமே முடிக்கக் கூடாதெண்டு சொல்லுறியோ?'' சிவகுமாருக்குப் பேசமுடியவில்லை. சற்று முன்னர், 'அழகில்லாத பெண்களும் கலியாணம் முடிக்கத்தானே வேணும் எனத் தான் சொன்ன நியாயத்தையே அவன் திரும்பத் தனக்கு உணர்த்துவதை நினைத்தபொழுதுதான் இப்படி வாய் அடைத்துக் கொண்டது.

''என்ன பேசாமலிருக்கிறாய்?.........சொல்லன்...........வடிவில்லாத பொம்பிளையளும் வாழத்தானே வேணும்?........... எல்லாரும் அழகிதான் வேணுமெண்டு நிண்டால்...........அழகில்லாதவையளை ஆர் முடிக்கிறது?''

''நான் சொல்லுறன் எண்டதுக்காக எல்லாற்றை கருத்தும் அதுதான் எண்டு அர்த்தமில்லை...........வடிவில்லாத பொம்பிளையளை முடிச்சுக் கொண்டு எத்தனையோ பேர் மகிழ்ச்சியாகச் சீவிக்கினம்தானே?...........அதுமாதிரி அழகில்லையெண்டதுக்காக எந்தப் பெண்ணும் ஒதுக்கப்படமாட்டினம்...........''

கடதாசிச் சுருளிலுள்ள சுண்டல் கடலையைக் கொறித்தவாறு ஒரு சோடி அன்னநடை போடுகிறது. அவள் அவ

RangaRakes tamilnavarasam.com

னுக்குக் கடலையை ஊட்டியும் விடுகிருள். அவள் அவனது மனைவியோ அல்லது காதலியோ தெரியாது.

"சரியடாப்பா!—அப்பிடிச் சொல்லுற நீயே..........அழகி தான் வேணுமெண்டு நிக்கிருய்?" ஜெகநாதனும் விடாமல் அவனது மனதைக் குடைந்தான்.

"அது என்ரை விருப்பம் எண்டுதானே சொன்னனுன். அதையும் மீறி நீ சொல்லுறமாதிரி..........வடிவில்லாதவளைத் தான் முடிக்க வேண்டி வந்திட்டால் என்ன செய்யிறது?"

"அப்ப, நீ..........அழகில்லாதவளைக் கலியாணம் செய்யச் சம்மதமென்டுருய்?"

"ஓமெண்டுதான் வைச்சுக் கொள்ளன்!"..........

"..........இப்ப ஆரைக் கொண்டு வந்து என்ரை தலையிலை கட்டுறதுக்குக் கேட்கிருய்?" என எரிச்சலோடு வினவினுன் சிவகுமார்.

"மச்சான்..........எனக்கொரு கலியாணம் பேசி வந்திருக்கு..........ஆனுல், பொம்பிளை வடிவில்லை..........அதுதான் யோசிக்கிறன்" எனப் புதிரை விடுவித்தான் ஜெகநாதன்.

சிவகுமாருக்கு ஆச்சரியம் மேலிட்டது. அழகற்ற ஒருத்தியை மண முடிக்கலாமா என அவன் கருத்திற் கொண்டதே பெரிய காரியம்தான். "நீ பொம்பிளையைப் பார்த்திட்டியே?"

"இன்னும் பார்க்கயில்லை..........ஆனுல், போட்டோ பார்த்தனுன்."

"போட்டோவிலை வடிவில்லாதவையள் சிலவேளை நேரிலை வடிவாய் இருப்பினம்.........." சிவகுமார் சமாதானப்படுத்தினுன்.



"இல்லை!..........நேரிலை பார்த்த ஆக்கள் சொன்னவையள்..........அவ்வளவு வடிவில்லைத்தானும்.........."

"நீ சம்மதம் சொல்லியிட்டியோ?"

"இன்னும் சொல்லயில்லை..........ஆனுல், அதைச் செய்யலாமெண்டுதான் நினைக்கிறன்."

ஜெகநாதனின் அழகிற்கும் கம்பீரத்திற்கும் தோதான பெண் எடுப்பதானுல் நல்லதொரு அழகிதான் வாய்க்க வேண்டும் என நினைத்திருந்தது பொய்யாகப் போய்விட்டது.

"உனக்குச் சம்மதமெண்டால் செய்ய வேண்டியது தானே மச்சான்?..........பிறகேன் யோசிக்கிருய்?"

"இல்லை..........இதிலை யோசிக்க வேண்டிய விஷயங்களும் இருக்கு!"

ஜெகநாதன் சிகரட்டை வாயில் வைத்துக் கொண்டு நெருப்புக் குச்சியைத் தட்டி அதைப் பற்ற வைக்க முயன்ருன். கடற்காற்று அம் முயற்சிக்குக் குறுக்கே நின்று தடை செய்து கொண்டிருந்தது. புகையிரதப் பாதையில் ஒருவர் புகைத்துக் கொண்டு வரவே இவன், "லைட்பிளீஸ்" கேட்டுப் பற்ற வைத்துக் கொண்டான்.

"அதென்ன புதுப் பிரச்சினை?"

"இப்ப மச்சான்..........நான் அவளைக் கட்டிக் கொண்டு வந்திட்டன் எண்டு வை! நாளைக்கு அவளோடை ரோட்டிலை போகயிக்கை..........நாலு தெரிஞ்சவங்கள் கண்டிட்டு நொட்டை சொல்ல மாட்டாங்களோ?"

"நீ ஏன் மற்றவங்களைப் பற்றிக் கவலைப்படுகிருய்?......உனக்குச் சரி எண்டுபட்டால் செய்ய வேண்டியதுதானே?"

RangaRakes tamilnavarasam.com

"நல்லாயிருக்கு!........... நாங்கள் இந்தச் சமூகத்திலை கௌரவத்தோடை வாழவேணுமெண்டால் மற்றவங்களுக்கும் பயப்பிடத்தானே வேணும்?.......... ஊரிலை எங்களைப்பற்றி என்ன கதைக்கிறாங்கள்..........எப்படி மதிக்கிறாங்கள் எண்டதைப் பற்றிக் கவலைப்படாமல் வாழேலுமே?"

சிவகுமார் எரிச்சலடைந்தான்; 'கௌரவம்' என்று வெளிப்புறமான போர்வையில் மாத்திரம் போலி வாழ்க்கை வாழத்தானா இவனும் விரும்புகிறான்?

"ஜெகா!..........அப்பிடியெண்டால் வீணாய் மன அவஸ்தைப்படாமல்..........உனக்குப் பிடிச்ச ஒரு அழகியைக் கட்டிக் கொண்டு சந்தோஷமாய் இருக்க வேண்டியதுதானே!"

"ஒண்டும் தெரியாதவன் போலக் கதைக்கிறாய் சிவா! ..........அழகியைக் கட்டினாப்போலை பிரச்சினை இல்லையே?.......... அதுகும் ஆபத்துத்தான்!"

வானத்திலே வண்ணமதியை அணைத்துச் செல்கிற மேகக் கூட்டங்கள் இடையிடையே பூமியில் இருள் கவியச் செய்கின்றன.

"ஆபத்தோ?" இவன் ஆச்சரியத்தோடு கேட்டான்.

"பின்னையென்ன?..........வடிவானவளைக் கட்டிப்போட்டு அவளுக்குப் பின்னாலையும் முன்னாலையும் திரியேலுமே!.......... அழகு இருக்கிற இடத்திலைதான் ஆபத்தும் இருக்குது!.......... இதாலை பிறகு குடும்பத்திலை பெரிய சச்சரவுகளும் வரும் ..........இப்படி எத்தனை கேசுகளை நான் கண்டிருக்கிறன்."

சிவகுமார் அவனை விசித்திரமாகப் பார்த்தான். தன் நம்பிக்கை இல்லாமையினாற்தான் இவன் அழகியைக் கட்ட விரும்பவில்லையோ எனத் தோன்றியது. அவனது மனதில் அப்படியோர் எண்ணம் தோன்றுவதற்கு என்ன காரணம்



என்றும் புரியவில்லை. இப்படிச் சந்தேகக் கண் கொண்டவனுக்கு யார்தான் ஒத்துவரப் போகிறாள்?

"அப்ப..........நீ என்னதான் செய்யப் போறாய் எண்டு சொல்லன்?..........பிரம்மச்சாரியாய் இருக்கப் போறியோ?"

ஜெகநாதன் இதுவரை பேசிக் கொண்டிருந்ததை விடக் குரலைத் தாழ்த்திச் சொன்னான், "இல்லை மச்சான் ..........இப்ப பேசிற சம்பந்தம் நல்ல சீதனத்தோடை வந்திருக்குது!"

"ஓஹோ! இப்பத்தானே எனக்கு உன்ரை பிரச்சினை விளங்குது!..........இவ்வளவு சீதனத்தோடை வந்த சம்பந்தத்தை விடவும் மனமில்லை..........வடிவில்லாதவளைக் கட்டிறதுக்கும் யோசனையாயிருக்குது.......... அதுதான் புதுவிளக்கமெல்லாம் சொல்லுகிறாய்!.........."

ஜெகநாதன் சற்றுநேர மௌனம் சாதித்து விட்டுப் பின்னர் ஒரு மெல்லிய சிரிப்புடன் சொன்னான்.

"சிவா!..........ஒவ்வொருத்தரும் தங்களை மனதிலை வைச்சுக் கொண்டு நியாயம் சொல்லுறதுதான் வழக்கம்!.......... உனக்கு என்ன குறை?..........அழகான ஒரு காதலி..........உன்ரை அதிர்ஷ்டத்துக்கு அவள் பணக்காரியாயும் இருக்கிறாள்.......... அதுதான் நீ இந்த ஞாயம் பிளக்கிறாய்?..........சீதனம் வேண்டாமல் கலியாணம் முடிச்சுப் போட்டுப் பிறகு கஷ்டப்படுறதே?"

"நான் அதுக்காகச் சொல்லயில்லை மச்சான், உண்மையைச் சொன்னால் நான் இந்தச் சீதன முறைக்கே எதிர்ப்பானவன்தான்..........இப்ப, உன்னையே எடுத்துக் கொள்ளுவம்! சீதனம் வேண்டித்தான் கலியாணம் முடிக்க வேணுமெண்டு என்ன அவசரம்?..........சொத்துப்பத்தில்லையோ..........வீடு வாசலில்லையோ..........கை நிறையச் சம்பளம் எடுக்கிறாய்!..........வேறை என்ன தேவை?.........."

RangaRakes tamilnavarasam.com

"என்ரை பிரச்சினை என்னெண்டால் மச்சான் அண்ணையவையள் ரெண்டு பேரும்..........நல்ல இடங்களிலை...... பொருள் பண்டத்தோடை 'மெறி' பண்ணி நல்லாயிருக்கிருங்கள்..........பிறகு, நான் சீதனம் வேண்டாமல் செய்தால்..........மதிக்கமாட்டினமெல்லே? அவையளைப்போலை நானும் 'ஸ்ரேற்றைசை மெயின்ரெயின்' பண்ண வேணுமெண்டால் சீதனம் வேண்டத்தான் வேணும்."

கடல் அலைகள் பெரிதாகச் சிரிப்பதுபோல கற்களில் மோதிக் கொள்கின்றன.

# அத்தியாயம் - 4

அறைக்கு வெளியே பின்பக்கமாக, பக்கத்து வீட்டுக் குசினியின் மறைப்புக்காக அடிக்கப்பட்டிருக்கின்ற சீலிங் பலகையின் இடுக்கினூடாக எதையோ பார்த்துக் கொண்டிருந்தான் ஜெகநாதன். தற்செயலாக அந்தப் பக்கம் வந்த சிவகுமார் "என்ன மச்சான்..........கதாநாயகியைத் தேடுருய் போலையிருக்கு?" என விளையாட்டாகக் கேட்டான்.

அவனை இந்த நேரம் எதிர்பாராததினுல் சற்றுத் தடுமாற்றமும் கூச்சமும் ஏற்பட, "இல்லை.......... சும்மா பாத்தனுன்..........''என மெல்லிய சிரிப்பை வரவழைத்துக் கொண்டு சமாளிப்பாகக் கூறினுன். சிவகுமாருக்கு வேடிக்கையாக இருந்தது; 'ஊரிலை கலியாணம் பேசுருங்கள் எண்டு சொல்லுகிருன்..........இஞ்சை பக்கத்து வீட்டைக் கள்ளமாய் எட்டிப் பார்த்துக் கொண்டு நிற்கிருன்!'



"நீ சும்மா பார்த்தனுன் எண்டு சொல்லுகிருய்.......... இப்ப கதாநாயகன் வந்தால் விடுவானே?" எனக் கேட்டவாறே அறையினுட் சென்ருன் சிவகுமார்.

"ஆரடாப்பா, அது கதாநாயகன்?" என அதிர்ச்சி மேலிடக் கேட்டவாறு அவனைப் பின் தொடர்ந்து ஓடி வந்தான் ஜெகநாதன்.

"மகேந்திரன்தானே? அவன்தான் நெடுக ஏதோ அலட்டிக் கொண்டிருக்கிறவன்..........உந்தப் பக்கமும் அடிக்கடி மினைக்கிடுறவன்!"

"அவற்றை விறுத்தத்திலை..........கதாநாயகன் பட்டம் வேறையே?"—எரிச்சலுடன் வார்த்தைகள் வெளிவந்தன.

"பின்னை ஆரடாப்பா கதாநாயகன்? நீயே?.......... நீ அகிலாவைக் கதாநாயகி எண்டதும்..........நான் இவன்தானுக்கும் கதாநாயகன் எண்டு நினைச்சன்."

அவனது கேலியான பேச்சைப் புரிந்து கொள்ளாமலே .........."சீச்சீ! என்னையேன் இதுக்குள்ளை இழுக்கிருய்?.......... எனக்குத்தானே கலியாணம் முற்ருகப் போகுது எண்டனன்.........."

வீதியிலே வாகனமொன்று பிறேக் போடுகின்ற சத்தம் கேட்கிறது. யாரோ குறுக்கே போய்விட்டாரோ?

கல்வி அறிவு பெற்று, வளர்ந்து உத்தியோகம் பார்க்கும் பெரியவனுகி, நாலுபேருடன் பழகி, சமூகத்தில் கௌரவஸ்தனுக மதிக்கப்படுகின்ற நிலையை அடைந்த பின்னரும் சில வேளைகளில் இப்படிச் சிறுபிள்ளைத்தனமான ஆசைகளும் முகிழத்தான் செய்கின்றன!

அகிலா இவர்களுடைய மனதில் எம்மாதிரியான அலைகளைக் கிளறி விட்டிருப்பாள்?

RangaRakes tamilnavarasam.com

பக்கத்து அறைக்கு அவள் குடிவந்து இரண்டு மாதங்களுக்கு மேலாகின்றது. கெதியாகவே இவர்களுடைய அன்றாடப் பேச்சுக்களில் அவளது பெயரும் அடிபடத் தொடங்கினாலும் இன்னும் தொலைவிற்தான் அவள் இருப்பதாகப்பட்டது. 'என்ன பெண் இவள்? பக்கத்து வீட்டிலிருப்பவர்கள் என மரியாதைக்காவது ஏறெடுத்தும் பார்க்கிறாளா'—இது இந்தப் பக்கத்து அறை இளைஞர்களின் மனக்குறை.

வெள்ளவத்தையில் காலி வீதியிலிருந்து கடற்கரைப் பக்கமாகத் திரும்புகின்ற ஒழுங்கையொன்றில் உள்ள ஆடம்பரமான ஒரு வீட்டின் பின் பகுதியில் இந்த அறைகள் அமைந்திருக்கின்றன. சிறிய சிறிய சாடிகளில் சீவனம் செய்கின்ற அழகான பூஞ்செடிகள், தோகையை விரித்துக் கொண்டு நிற்கும் இரு சிறு செவ்விளநீர்க் கன்றுகள்......... தண்ணீர் பாய்ச்சி வளர்க்கப்பட்டு மட்டமாக வெட்டப்பட்ட புற்தரை!—வீட்டிற்கு அழகு செய்யும் சாதனங்கள். வீட்டின் வலப்பக்கமாகவும் இடப்பக்கமாகவும் செல்லக் கூடிய வெவ்வேறு அறைகள் வாடகைக்கு விடப்பட்டிருக்கின்றன.

இப்படிக் கோடிப் பக்கத்தில் சம்பாதிக்கிற தொகை வீட்டுக்காரரின் கொழும்புச் சீவியத்துக்குப் பெரிதும் உதவுகிறது. கொழும்புக்கு உத்தியோகம் பார்க்க வருகின்ற ஆண்கள் வயதெல்லையின்றி இந்த அறைகளுக்குக் குடிவந்து போயிருக்கின்றனர்.

இரண்டு மாதத்திற்கு முன்னர் ஒரு சந்தோஷமான செய்தி வந்தது. பக்கத்து அறைக்கு ஒரு பெண்ணும் அம்மாவும் குடிவருகிறார்களாம். 'உங்களுக்கு ஒரு ஆட்சேபனையும் இல்லையே?' என வீட்டுக்காரர் அழகான ஆங்கிலத்தில் கேட்டார். அவர் அதிகம் கதைக்கமாட்டார். இப்படி ஏதேனும் முக்கிய தேவைகளுக்குத்தான் தன் திருவாயைத் திறப்பார். மற்றப்படி 'கொறஸ்போண்டன்ஸ்' எல்லாம் திருமதியோடு தான்.



பக்கத்து அறைக்கு ஒரு குமரி வருவது இந்த நண்பர்களைப் பொறுத்தவரையில் கொண்டாட்டமான சங்கதி தான். அவளது சிநேகிதத்தை யார் முதலில் தட்டிக் கொள்வது என்ற போட்டி மனப்பான்மை இவர்களிடம் ஏற்பட்டுவிட்டது. ஆனால், அவளோ இவர்களை வெளியே காண நேரிடும் வேளைகளில் மென்மையான புன்சிரிப்பை முகஸ்துதியாக மலர்த்திவிட்டுத் தலையைக் குனிந்தவாறு போய்விடுகிறாளே! வீட்டில் அவளுடைய குரலைக் கூடக் கேட்கக் கிடைப்பதே அரிது.

''சரியான புறௌவ்ட் பிடிச்ச கேர்ள் மச்சான்!'' என அடிக்கடி சொல்லிக் கொள்வான் மகேந்திரன்.

அகிலா வேலை செய்கின்ற அலுவலகம், அலுவலகத்துக்குப் போகின்ற வருகின்ற நேரங்கள், பாதைகள், பஸ்சிற்காகக் காத்து நிற்கின்ற இடம் எல்லாவற்றையும் அறிந்து வைத்துக்கொண்டு அவளுடைய கடாட்சத்திற்காக அலைவது அவனது சுவையான பொழுது போக்குகளில் ஒன்று! எப்படியாவது அவளைத் தன் வலையில் விழுத்திக் காட்டுவதாக அறையில் நண்பர்களுக்குச் சவால் விட்டிருக்கிறான். அந்தச் சாதனையைத் தானே முதலில் நிலைநாட்ட வேண்டுமென்ற அல்ப ஆசை ஜெகநாதனுக்கு! கட்டிலிற் படுத்தவாறே சிகரட்டையும் ஊதிக்கொண்டு சற்று முன்னர் கிடைத்த தரிசனத்தில் லயித்து முகட்டைப் பார்த்துக் கொண்டு படுத்திருந்தான்.

வருஷக் கணக்காகத் துப்பரவு செய்யப்படாத தூசிகள் முகட்டில்—மூலைப்பக்கமெல்லாம் சிலந்திப் பூச்சிகள் வலை பின்னி விட்டிருக்கின்றன. இவற்றையெல்லாம் தட்டித் துப்பரவு செய்ய வேண்டுமென யார்தான் நினைக்கிறார்கள்?

அகிலா மறுபக்கத்தில் தேநீர் தயாரித்துக் கொண்டு நின்ற தோற்றம் நினைவில் விரிந்தது. நேரிலே காணும் சந்தர்ப்பங்களில் மென்மையான ஒரு புன்னகையுடன் தலை

RangaRakes tamilnavarasam.com

யைக் குனிந்து கொண்டு செல்வது போலவே அவளது ஒவ்வொரு செய்கைகளும் நிதானமாக இருந்தன —பாத்திரங்களைப் பட்டுப்போலத் தூக்கினாள். கேற்றிலை நோகாமல் எடுத்தாள். தண்ணீரை ஓசைபடாமல் ஊற்றினாள். தலைமயிர் முகத்திலே விழுந்தபொழுது ஒரு குழந்தைப் பிள்ளையைப்போலப் பக்குவமாக ஒதுக்கினாள்.

—அவளுக்குத் தெரியாமல் பின்பக்கமாகச் சென்று அப்படியே அணைத்துக் கொண்டால்? அவள் நாணத்தோடு திரும்பி அவனைப் பார்ப்பாளோ? அணைத்துக் கொள்கிற அவனது கைகளை மென்மையாக அழுத்தித் தனது விருப்பத்தைத் தெரியப்படுத்துவாளோ? அவளது கணவனாக வரப்போகின்றவனுக்கு அந்தப் பாக்கியம் கிடைக்கும்.

'இங்கிலீஷ்' பாட்டொன்றின் மெட்டை முணுமுணுத்தவாறு அறையினுள் நுழைந்த மகேந்திரனுடைய வருகை ஜெகநாதனின் கற்பனையை உடைத்தது. அந்த வயிற்றெரிச்சலை உணராமல், ''சாய்..........என்ன வடிவான கேர்ள் மச்சான்!'' எனத் தான் சொல்லப் போகின்ற ஏதோ கதைக்கு முன்னுரை போட்டான் மகேந்திரன்.— அன்றாடம் பஸ் பிரயாணங்களில் கிடைக்கின்ற குளுமையான அனுபவங்களைச் சுவைகுன்றாமல் நண்பர்களுக்குக் கூறி அவர்களது வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்வதில் அவன் வல்லவன். அவனைப் பொறுத்தவரை பஸ்சின் நெருக்கமே ஒரு குளுமையான விஷயந்தான்!

''நாங்கள் இஞ்சை வாய்க்கிதமாய்ச் சமைச்சு வைக்கிறம்.......... நீர் இப்பிடி ஊருலாத்திக் கொண்டு வாருமன்!'' எனத் தனது எரிச்சலை வெளிப்படுத்தினான் ஜெகநாதன்.

''ரேக் இற் ஈஸி மச்சான்!'' என அவனைப் பார்த்துச் சிரித்தவாறே தான் புகைத்துக் கொண்டிருந்த சிகரட் 'பட்'டைக் கொடுத்தான் மகேந்திரன்.



சிவகுமார் இவர்களுடைய சம்பாஷணையில் கலந்து கொள்ளாமல், படுத்திருந்தவாறே கடிதமொன்றை வாசித்துக் கொண்டிருந்தான். அதைக் கவனித்த மகேந்திரன் ''என்ன மச்சான் மனிசியிட்டை இருந்து வந்ததோ...? வலு கரிசனையோடை படிக்கிறாய்'' எனக் கேட்டவாறு உடையை மாற்றத் தொடங்கினான்.

சிவகுமார் கடிதம் வாசிப்பதை நிறுத்தினான். சிந்தனைகள் தடைப்பட்டன. உள்ளத்தை ஊடுருவிப் பாய்கின்ற ஓர் இன்பக் குமுறல்!

## அத்தியாயம் - 5

மகேந்திரன் 'மனிசி' எனக் குறிப்பிட்டதும் மின்னலைப் போலத் தோன்றிய கலைச்செல்வியின் நினைவுதான் அவனை அப்படியொரு மனக் கிளர்ச்சிக்குட்படுத்தியது. அடுத்த கணமே அது தந்தையிடமிருந்து வந்த கடிதமென்பது நினைவுக்கு வந்ததும் மனம் ஒருவித தவிப்புக்குள்ளாகியது. இப்படித்தான் எப்போதாவது இருந்துவிட்டு ஒரு நாளைக்கு எழுதுவார்.

''தம்பி... நீ படிச்சனி. நான் புத்தி சொல்லத் தேவையில்லை. ஏதோ உன்ரை புத்தியைப் பாவிச்சு நல்லாய் வாத் தெரிய வேணும். குடும்பத்திலை இருக்கிற கஷ்டங்களும் நிலவரங்களும் உனக்குத் தெரியுந்தானே? மனத்திலை இருக்கிற ஆசாபாசங்களை மறந்து பொறுப்போடை நடக்கத் தெரிய வேணும். இரவிலை வெளியிலை போறதெண்டால் மணிக்கூடு கட்டிக்கொண்டு போகாதை. காலம் கெட்டுப் போய்க் கிடக்குது.

RangaRakes tamilnavarasam.com

………இனி என்ரை காலமெல்லாம் போட்டுது. நீதான் குடும்பத்தைப் பார்க்க வேண்டியவன்…'' எனத் தனது மனச் சுமைகளையெல்லாம் இறக்கியிருப்பார். அந்தச் சுமைகள் அவனது மனதில் ஏறிவிடும்.

''தம்பி… கண்ட பெடியளோடையும் சேரக்கூடாது. குடிவெறி, சிகரட் பாவிக்கிற பெடியங்களோடை இருக்கக் கூடாது. பிறகு உன்னையும் ஏமாத்திக் கொண்டு போய்க் குடிக்க வைச்சிடுவாங்கள். சந்தர்ப்ப சூழ்நிலைகள்தான் மனிசன் நல்லாய் வாறதுக்கும் கெட்டுப் போறதுக்கும் காரணம்…… ஏதோ கவனமாய் நடந்து கொள்……''

சிலவேளைகளில் இதையெல்லாம் வாசிக்கும்பொழுது சிரிப்புத்தான் ஏற்படும். ''அப்பா இன்னும் என்னைக் குழந்தைப்பிள்ளையெண்டுதான் நினைச்சுக் கொண்டிருக்கிறார்!''

''இவன் ராசாவின்ரை மறுமொழியும் வந்திட்டுது. எழுதியிருப்பான்தானே? அநேகமாய் வாசிற்றிக்கு அனுமதி கிடைக்குமெண்டுதான் நினைக்கிறன். அதுக்கு வேறை சிலவுகளும் வரும்……

வீடு கட்டுறதுக்குப் பட்ட கடன்தான் பெரிய பிரச்சினையாயிருக்குது. ஈட்டுக்காரன்ரை ஆய்க்கினையாலை வெளியிலை தலைகாட்டேலாமல் இருக்குது. இனியெண்டாலும் நான் நிம்மதியாய் இருக்கலாமெண்டால்…… நீங்களெல்லாம் எப்ப ஆளாகப் போறியள்…… இந்தக் கடன் தனியெல்லாம் எப்ப தீரப் போகுது எண்ட கவலைதான். பாங்கிலை ஐயாயிரம் ரூபாய் கடன் எடுக்கலாமெண்டு எழுதியிருந்தாய். அதையெண்டாலும் எடுத்தால் குடுத்திட்டு மிச்சத்துக்கு ஒரு தவணை கேட்டுப் பார்க்கலாம்…… பாங்குக்குப் போய்க் கதைச்சியோ? மனேஜருக்குத் தெரிஞ்சவங்கள் ஆரையேன் புடிச்சியெண்டால் எடுக்கிறது சுலபம்.''



கடிதத்தை வாசித்து முடித்ததும் அவனையறியாமலே ஒரு பெருமூச்சு வெளிப்பட்டது. ''அப்பா இனியெண்டாலும் நிம்மதியாய் இருப்பதற்கு, தான் இனி நிம்மதியைத் துறந்துதானாக வேண்டும்'' என்ற உணர்வு தோன்றியது. நடுத்தர வர்க்கத்தினரின் சாபக்கேடு இது. பொறுப்புக்களும் சுமைகளும் பூதாகாரமாக தன்முன்னே உருவெடுத்துக் கொண்டு நிற்பதை உணர்ந்தான்.

''என்ன மச்சான்…… பெலத்த யோசினையிலை இருக்கிறாய் எங்களுக்கும் சொல்லன்?'' மீண்டும் அவன் வாயைக் கிளறினான் மகேந்திரன்.

''வேறை என்ன?…… காசுப் பிரச்சினைதான்!''

''இவனுக்கு எந்த நேரமும் இந்தப் பிரச்சினைதான்…'' என ஜெகநாதன் அலுத்துக் கொண்டான்.

''உனக்கென்னடாப்பா?…… காசுக்காரன்………… குடும்பப் பொறுப்பு இல்லாதனி…… உப்பிடித்தான் சொல்லுவாய்.''

'என்ன அவசரத்துக்கு இப்ப காசு தேவை?'' மகேந்திரன் கரிசனையோடு கேட்டான்.

''ஒரு ஈட்டுப் பிரச்சினை…… ஈட்டுக்காரன் சித்தாரிக்கப் போட்டான்…… அப்பர் தவணை கேட்டிருக்கிறார்…… அதுக்குள்ளை கட்டுறதெண்டால் எங்கை போறது?''

''எவ்வளவு காசு……?''

''காசு பத்தாயிரம் எடுத்தது மச்சான்……… இப்ப பத்து வருசத்துக்கு மேலையாகுது……''

இன்னும் கட்டயில்லையோ? என்னத்துக்காக எடுத்தனீங்கள்?''

''நாங்கள் இப்ப இருக்கிற வீடு கட்டினது அப்பாதான். அதுக்காகப் பட்ட கடன். எடுத்த முதல் கட்டி

RangaRakes tamilnavarasam.com

யாச்சு. இப்ப அதின்ரை வட்டி மாத்திரம் ஒன்பதினாயிரம் ரூபா மட்டிலை இருக்குது!''

மகேந்திரன் ஆச்சரியத்தோடு கேட்டான், ''ஏன விட்டனியள்? டாப்பா இவ்வளவு வட்டி வரும் வரைக்கும் விட்டனியள்? ஜெகநாதன் இந்தச் சம்பாசணையில் காது குடுக்காமல் தன் அலுவலைக் கவனித்துக் கொண்டிருந்தான்.

''என்ன செய்யிறது......? எடுக்கயிக்கை தெரியாது.... பிறகு குடுக்கையிக்கைதானே திண்டாட்டம். அப்பாவும் பெரிய கஷ்டப்பட்டுத்தான் முதலை,..... ஐயாயிரம் பிற கொரு மூவாயிரம் அதுக்குப் பிறகு ஒரு ரெண்டாயிரம் முதலைக் குடுத்தார்...... இப்ப வட்டியைப் பார்த்தால் மலைபோல நிக்குது''

''என்ன அநியாயம்?'' எனக் கவலைப்பட்டான் மகேந் திரன்.

''அநியாயம்தான் மச்சான்... அதுக்காக இனி என்ன செய்யிறது? வட்டி எடுக்கிறவனுக்கு நியாயம் அநியாயம் விளங்காது......''

''கடன் எடுக்கலாமெண்டவுடனை போய் அந்த வட் டிக்கு எடுக்கிறதே? காசு பிறகு குடுத்துத் தீர்க்கிற வழியை யோசிக்காமல் எடுக்கிறதே''

மகேந்திரன் தன் தந்தையைத் தாக்கிக் கதைத்ததும், ''இனி என்ன செய்யிறது? ஒரு மாதிரிக் கட்டத்தானே வேணும்...... அவரென்ன கடன்பட்டு அநியாயச் செலவு செய்தவரே...... எங்கடை வீடு கட்டத்தானே?'' எனக் கதைக்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்க முயன்றான் சிவகுமார்.

''அது சரி...... நான் இப்ப கொப்பரைக் குறை சொல்ல யில்லை........... அவரும் கட்டியிடலாம் எண்ட நம்பிக்கையிலை தான் எடுத்திருப்பார். ஆனால், அது முடியாத காரிய



மெண்டு இப்பத்தானே விழங்குது. இப்ப நீ உழைக்கிறது அன்றாடச் சீவியத்துக்கே போதாது........... இந்த விசித்திரத் திலை கடனும் அடைக்க வேணும்! ஒன்பதாயிரத்துச் சொச்சமெண்டால் சும்மாவா...........? நீ பாங்க் லோன் எடுத்து ஐயாயிரத்தை இப்ப கட்டிறுயெண்டு வைப்பம்...... மிச்ச நாலாயிரத்தையும் கட்டிறதெண்டால்........... நீ பாங் கிலை எடுத்த ஐயாயிரமும் கட்டி முடிய வேணும்...... அது முடிய இந்த நாலாயிரம் வளர்ந்து ஒரு பெரிய தொகையாக நிற்கும்...... அப்படியே சங்கிலித் தொடர்போலை உங்கடை உழைப்பை ஆரோ ஒரு அந்நியனுக்குக் கொட்டிக் கொண் டிருக்கப் போறியள்...... அவன் எப்பவோ போட்ட முதல் சீவியம் முழுக்க சும்மாயிருக்கச் சாப்பாடு போடுது!''

மகேந்திரன் தனது நிலைமைக்குப் பரிந்து கதைப்பது சற்று ஆறுதலாகவிருந்தது.

சற்று நேரம் மனம் திறந்து கதைத்ததில் ஒரு வகை யில் மனச்சுமை இறங்கிய சுகம் தெரிந்தது.

''மச்சான்...... அப்பா பட்ட கடன்களை நான் உழைச்சு அழிக்கிறன் என்று நினைக்கப் பெருமையாகத்தான் இருக் குது...... ஆனால், நீ சொன்ன மாதிரி அது தேவையில்லாமல் இன்னொருத்தனுக்குத் தாரைவாக்கிற உழைப்புத்தானே? எங்கடை குடும்பத் தேவைகளுக்கே அதை மூலதனமாக்கி னால் எவ்வளவு பிரயோசனமாய் இருக்கும்?''

அதை ஆமோதித்தவாறே மகேந்திரன் கேட்டான் ''பாங்கிலை என்ன சொல்லுறாங்கள்?''

''தாறதெண்டுதான் மனேஜர் சொல்லியிருக்கிறார்...... அதுக்கும் எத்தனை தரம் ஓடித்திரிய வேண்டியிருக்குது... எவ்வளவு அலைச்சல்? அவங்களும் ஒவ்வொருக்காலும் போகையிக்கை ஒவ்வொரு விபரங்களைக் கேட்டுக் கேட்டு அலைக்கழிக்கிறதைப் பார்க்க...... பேசாமல் விட்டிட்டு இருந்

RangaRakes tamilnavarasam.com

திடலாம் போலையிருக்குது!'' சிவகுமார் சலிப்புடன் கூறினான்.

''கவலைப்படாதை மச்சான் எல்லாம் வெல்லலாம்!' என அவனைத் தேற்றுவது போலக் கூறினான் மகேந்திரன்.

அவனது பேச்சுக்களும் நடவடிக்கைகளும் சிவகுமாருக்கு ஆச்சரியத்தையே அளித்தன. அவனைப் போல, எந்தப் பிரச்சினைகளையுமே சாதாரணமாகக் கருதிக்கொண்டு மனம் போனபடி வாழ்வதற்குத் தன்னால் ஏன் முடியவில்லை என எண்ணிக் கொண்டான்.

பறவையொன்று சிறகடித்துக் கொப்பு மாறுகின்ற ஓசை கேட்டது. வெளவாலாக இருக்கும். அதைத் தொடர்ந்து உறக்கம் கலைந்த கோபத்தில், இரு காகங்கள் மாறி மாறிக் கரைகின்றன. பின்னர் நிசப்தம். காலி வீதியில் ஓடுகின்ற வாகனங்களின் இரைச்சல் மட்டும் இடையிடையே கேட்கிறது.

இரவு உறங்கிவிட்டது.

## அத்தியாயம் - 6

வெள்ளவத்தைப் பிள்ளையார் கோவிலில் அடியார்கள் குழுமத் தொடங்கிவிட்டனர். வெள்ளிக்கிழமை மாலை நேரங்களில் கோவில் களைகட்டிவிடும். தெருக்கூட்டுகின்ற தொழிலாளர் முதல் ஆடம்பர (அல்லது வசதியான) வாழ்க்கை வாழ்கின்ற சிறிவரிசைக்கா(ர)ர்கள் வரை இறைவனின் அடியவராக இங்கு வருகை தந்தாலும்



கொழும்பில் நடுத்தர வாழ்க்கை நடத்துகின்ற உத்தியோகத்தர்களையும் பல்கலைக்கழக மற்றும் தனியார் கல்வி நிலைய மாணவர்களையும் பொறுத்தவரையிற் தான் கோயில் விசேஷம் பெறுகின்றது.

விண்ணப்பங்களோடும் வேண்டுகோள்களோடும் இறைவனைக் காண வருகின்ற பக்தர்களின் மனதில் நண்பர்களையும் உற்றாரையும் கண்டு அளவளாவலாம் என்ற பொழுது போக்குணர்வும் கலந்திருக்கின்றது. இறைவனைத் தரிசிக்க வருகின்ற 'நிறங்களை'த் தரிசிக்கலாம் என்ற நியாயமான விருப்பமும் பல இளைஞர்களின் மனதில் இளையோடியிருக்கிறது.

சிவகுமாரும் மகேந்திரனும் வந்தபொழுது மாலையும் இரவும் இரண்டறக் கலக்கின்ற நேரம்—பஸ் நிலையத்தில் விபூதி சந்தனத்தோடு காட்சி தருகின்ற காற்சட்டைக்காரர்கள்—தங்கள் நேர்த்திக் கடனை முடித்துக் கொண்டு திரும்பிப் போவதற்கு ஆயத்தமாக நிற்கின்ற நண்பர்களுக்கு முகத்தை மலர்த்த வேண்டியிருந்தது.

''கெதியிலை வா மச்சான்! பூஜை துவங்கப் போகுது!'' என ஜெகநாதனை அவசரப்படுத்தியவாறே நடந்தான் சிவகுமார். சில குடும்பஸ்தர்கள் தங்கள் மனைவிமார்களுக்குப் பின்னால் 'பய' பக்தியோடு பிரவேசிக்கின்றனர்.

கோயிலின் முன் மண்டபத்துப் பக்கத்துத் திண்ணைக் கட்டில் பல இளைஞர்கள் வரிசையாக அமர்ந்திருக்கின்றனர். இந்தத் திண்ணையில் அமர்ந்திருப்பதே ஒரு சுகம் தான். நேரம் போவதே தெரியாமல் இருந்து எத்தனை கவலைகளை மறக்க முடிகிறது! விடிந்ததும் அவசரமாக வேலைக்குச் சென்று உழைத்துச் சோர்வடைந்து மீண்டும் வந்து போய் உழைத்து இயங்கி இயங்கித் தேய்ந்து............. (மெய்) ஒரு நாளைக்கு வைத்தியசாலையில் பெரிய 'பிறேக் டௌன்' ஆகிக் கிடந்து—

RangaRakes tamilnavarasam.com

கடைகளில் சாப்பாட்டுப் பிரச்சினைகளை, அலுவலகங்களில் வேலைத் தொல்லைகளை, வீதியிலே விதவிதமான கவர்ச்சிகளை, பஸ்களில் நெரிசலின் சுகங்களை, 'கிளப்'களில் மீண்டும் அந்த ஒரே பிரச்சினைகளைக் கதைத்துக் கதைத்து (வாய்)—

இமைகளை மூடி விழிப்பதற்குள் ஈக்களைப் போலக் குறுக்கும் நெடுக்கும் பறக்கின்ற (ஓடுகின்ற) வாகனங்களில் மனிதர்களின் அவசர வாழ்க்கைகளை, வீதியில் பிச்சைக்காரர்களின், பைத்தியங்களின் அழுக்கான தோற்றங்களையும் அவலமான வாழ்க்கையையும் (ஐயோ பாவம்!). 'ஷோசியல் மூவிங்'குகளின் மயிர்க் கூச்செறியும்.................. மன்னிக்கவும், உள்ளத்தைத் தொடும் காதல் காட்சிகள், 'ரீன் ஏஜ்'களின் மிகக் குறுகிய ஆடைகளில் பொலிஷ் பண்ணப்பட்ட........ ('காணக் கண்' ஆயிரம் வேண்டுமையா!)—

கொழும்பில் நெருக்கமான பகுதிகளையெல்லாம் கழுவி வருகின்ற சாக்கடை வாய்க்கால்கள், தொழிற்சாலைகளிலிருந்து வெளிப்படுகிற கழிவு வாயுக்கள், பஸ் நெரிசலில் பிணைபடுகின்ற சனங்களின் வியர்வை கசிந்துருகி........ (லேஞ்சியை எடுத்து 'மூக்கில்' வைத்து) சீ!......

வாகனங்கள், தொழிற்சாலைகளின் இரைச்சல்கள் மலிவு விலை வியாபாரிகளின் காதைக் கிழிக்கின்ற சத்தங்கள். (செவி)—

—இயந்திரமயமான வாழ்க்கையில் தம்மையறியாமலே இரண்டறக் கலந்து விடுகின்ற நிர்ப்பந்தத்தில் விரக்தியடைகின்ற மனதுக்கு ஆறுதலளிக்கின்ற சுகம்.

ஐம்புலன்களை அடக்கி மனதைப் புனிதமாக்கிப் பக்தி மயப் படுத்துகின்ற கற்பூர வாசனை காற்றில் மிதந்து வருகிறது.—அரோகரா கோஷம். மனதை ஒரு வழிப்படுத்துகின்ற மணியோசை. பூசை ஆரம்பமாகிவிட்டது.



கற்பூர ஆராதனை நடக்கிறது! கூப்புகின்ற கரங்கள் தலைகளுக்கு மேல் உயர்கின்றன. தங்கள் குறை நிறைகளை அந்தரங்கமாக இறைவனிடம் சமர்ப்பித்துப் பரிகாரம் கேட்கின்ற பக்தர்கள் தீபங்களில் அர்ச்சிக்கப்படுகின்ற இறைவனின் ஒளிமயமான தோற்றத்தைத் தரிசிப்பதற்கு இடிபடுகின்றனர்.

இந்த நேரத்தில் வெளியில் சற்றுப் பரபரப்பு—கப்பல் போன்ற ஒரு கார் ஆலய வாயிலினுள் நுழைகின்றது. கணப்பொழுதிலே சங்கதி மூலஸ்தானம்வரை பரவுகிறது. —வந்திருப்பவர் ஒரு 'மினிஸ்றர்!' பக்த கோடிகளின் முகங்களில் ஆச்சரியம் மேலிடுகிறது, 'எட! மினிஸ்றர் கூட வந்திருக்கிறார்!'

தரிசனத்தில் நின்றவர்கள் பலர் ஆவலோடு வாகனத்துக்கு அண்மையில் ஓடி வருகிறார்கள். அண்மையில் சென்று தரிசிக்க வேண்டுமென்ற துடிப்பு—இப்படி ஒரு 'சான்ஸ்' பிறகு கிடைக்காதே! கோயிலினுள் நின்ற சனங்களிலும் பலர் முண்டியடித்துக் கொண்டு வெளியில் ஓடி வருகின்றனர். சிலர் கடவுளைக் கூப்பிய கைகளோடு தலைகளை மாத்திரம் இந்தப் பக்கம் திருப்பி இருமனதோடு நிற்கிறார்கள். சில கொழும்பு வாழ் முக்கியஸ்தர்கள் முன்னே ஓடி வந்து 'மினிஸ்றரை' எதிர் கொண்டு வரவேற்றுப் பாதுகாப்போடு உள்ளே அழைத்துச் செல்கின்றனர். அமைச்சர் வந்த புண்ணியத்தில் இறைவனுக்கு ஒரு விசேட பூசையும் நடைபெறுகிறது!

சிவகுமார் ஜெகநாதனைப் பார்த்து—''மச்சான்! கடவுளைக் கண்டியோ?'' எனக் கேட்டான். ''சும்மா இரடா! ...... அதுகள் பெரிய இடத்துச் சங்கதிகள்'' என ஜெகநாதன் அவனது வாயை அடைக்கிறான்.

இப்படியாகப் பூசை முடிந்த பின்னரும் மினிஸ்றர் வந்துபோன செய்தி பலராலும் வாய் நிறையக் கதைக்கப் பட்டுக் கொண்டிருக்கிறது.

RangaRakes tamilnavarasam.com

கோயிலுக்கு வருவதற்கு முன்னர் சோறு மாத்திரம் காய்ச்சி வைத்துவிட்டு வந்ததால் இனிப் போய்த்தான் கறி சமைக்க வேண்டுமென்பதை நண்பனிடம் நினைவு படுத்தினான் சிவகுமார்.

“சிவா! நான் பம்பலப்பிட்டிக்கு ஒருத்தனைச் சந்திக்கப் போக வேணும்..........நீ அறைக்குப் போய் ஆயத்தப் படுத்து......வந்திடுவன்......” என்றவாறே இருவரும் வெளியேறுவதற்கு வந்தபொழுது சிவகுமாருக்குக் காலைவாரி விட்டது போலிருந்தது—அவனது செருப்பைக் காணவில்லை.

“மச்சான் செருப்பை ஆரோ அடிச்சிட்டாங்கள்” எனப் பரிதாபமாகக் கூறினான்—இரண்டு நாட்களுக்கு முன்னர் வாங்கிய புதுச் செருப்புக்கள்.

சிவகுமார் அழுவாரைப்போல நின்றான். சகல வெட்டுக் கொத்துகளும் (பைசிக்கல் கடன் + வட்டி, தொழிற்சங்க சந்தா, பண்டிகைக்கால முற்பணம், விசேட முற்பணம்—வட்டியில்லாதது; இனக் கலவரத்தின் பின்னர் வழங்கப்பட்டது, நலன்புரிச் சங்க சந்தா, வைத்திய உதவி நிதி, டிஸ்றஸ் லோன் + வட்டி, ஈ. பீ. எவ் 10%, வருமானவரி) போக மிச்சமாகக் கிடைத்த சம்பளத்தையெடுத்து சாப்பாட்டுக் கடைக்காரனுக்கும், அறை வாடகையும் கொடுத்துப் பெற்றோருக்கும் ஏதாவது (மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி) அனுப்பிய பின்னர் இருபது ரூபா சொச்சம் மீதியிருந்தது. வெகுநாட்களாகச் செருப்பு வேண்ட வேண்டிய குறையைக் கால்கள் உறுத்திக் கொண்டிருந்ததால்......வாயைக் கட்டி ஒரு சோடி செருப்பை வேண்டினான். அந்தோ,............புதிய செருப்புக்களைப் பொலித்தீன் பையினுள்ளிருந்து பெருமிதத்தோடு, (“இனிக் கொஞ்ச நாட்களுக்கு வெள்ளைக்காரன் மாதிரித் திரியலாம்.”) எடுத்த பொழுது இருந்த மகிழ்ச்சியில் மண்ணை அள்ளிப் போட்டவன் யார்?



தனது கால்களைப் பார்த்தவாறு தவிப்போடு நின்றான் சிவகுமார்; வெறும் காலோடு எப்படிப் போவது?

“மச்சான் ஒண்டுக்கும் யோசியாமல் அதிலை கிடக்கிறதிலை ஒண்டை மாட்டிக் கொண்டு வா!”

சீ! இதென்ன வெட்கம் கெட்ட வேலை—தானே இன்னொருவனது செருப்பைக் களவாடுவதா?

“என்ன ...என்னையும் போய்க் களவெடுக்கச் சொல்லுறியோ?”—சிவகுமார் சற்று எரிச்சலோடு தான் கேட்டான்.

“இது களவில்லை மச்சான்!..........உன்ரை செருப்பை ஆரோ எடுத்திட்டான்......இப்ப எப்படி வெறுங் காலோடை நடக்கப் போறாய்?”

‘அது கூட உண்மைதான். காலில் செருப்பில்லாமல் எப்படி நடப்பது? ஆபத்துக்குப் பாவமில்லையாமே’

‘சரி!—தன்னை யாராவது பார்க்கிறார்களா என்பதைச் சாடையாகக் கவனித்துவிட்டுச் சென்று ஓரமாக வைக்கப்பட்டிருந்த ஒரு சோடி செருப்பினுள் (சொந்தக்காரனுக்கு ஆழ்ந்த அனுதாபங்கள்.) கால்களை மாட்டி—

“தம்பி!..........உங்களைத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறம்!”

—சற்றுத் தூரத்தில் கதைத்துக் கொண்டிருந்த இளைஞர்களுள் ஒருவன் ஓடிவந்து இவனது சேட்டைப் பிடித்து இழுத்தான்—சொந்தக்காரனின் கேள்வி; “இதுக்கெண்டு தானே வாறனீங்கள்..........?”

சிவகுமாரின் கால்கள் தடுமாறின.—தன்னைப் பரிகாசமாகப் பார்க்கின்ற கண்களைத் தாங்குவதற்குத் திராணியற்றுத் தலை குனிந்தான். கால்கள் மணலினுள் அமிழ்ந்து

RangaRakes tamilnavarasam.com

கொண்டு போவதுபோல......எல்லோரின் முன்னிலையில்
இன்னும் கீழே.........கீழே..........சீ! என்ன கேவலம்.

''பிளடி ருஸ்க்கல்ஸ்'' என்றவாறே இன்னொருவன்
வந்து அவனது முதுகிலே 'புள்ளடி' போட ஆயத்தமானான்
—போன கிழமை பாவமன்னிப்புக்கோரிக் கோயிலுக்கு
வந்து தன் செருப்புகளைப் பறிகொடுத்த (அப்)பாவி:

ஜெகநாதன் பக்த கோடிகளின் செவிப்பறையில் அறை
வது போல உரத்துச் சொன்னான்; ''ஹலோ ஏன் இப்பிடி
விசாரிக்காமல் சத்தம் போடுறீங்கள்? அவனைப் பாக்கக்
கள்ளன் மாதிரியே இருக்கு?''—பின்னர் பெரிய சிரமத்
தோடு உண்மையை விளக்கிச் சிவகுமாரை விடுவித்தான்.

கோயிலைவிட்டு வெளியேறியபொழுது ''சிவா! கவ
லைப்படாதை.........இதெல்லாம் சின்ன விஷயம்'' என ஆறு
தல் கூறிவிட்டு பம்பலப்பிட்டி போவதற்காக வீதிக்கு மறு
பக்கமாக நடந்தான் ஜெகநாதன்.

சிவகுமார் அறையை நோக்கி நடக்கத் தொடங்கி
னான்.

வெறுமையான கால்களில் கற்களின் குற்றல். கன
மான மனதிலே அவமானத்தின் குதறல்கள்.

# அத்தியாயம் - 7

கட்டிலுக்குக் கீழே தள்ளி விடப்பட்டிருந்த பழைய செருப்புகளை எடுத்து, ஊசியைக் குற்றிச் சரிசெய்து கொண்டான் சிவகுமார். அவற்றைக் கால்களில் செருகி நடந்த பொழுது ஒரு பக்கத்தில் ஊசியின் சாதுவான நெருடல் இருக்கத்தான் செய்தது. கொஞ்சம் 'அஜஸ்ட்' பண்ணி நடக்கலாம் என நினைத்துக் கொண்டான்.

வளக்கமான 'சிங்கள ரியூசனுக்கு' பல்லவியுடன் சென்ற மகேந்திரன் இன்னும் வரவில்லை; 'இரவுச் சாப்பாட்டுக்குக் கறி சமைக்கவும் வேணும்.'—சலிப்புத்தட்டுகிற மனதோடு எழுந்து பாத்திரங்களை எடுத்துக் கொண்டு கழுவுவதற்காகப் பின் பக்கமாகச் சென்றான்.

பின் பக்க வேலியோரமாக நிற்கும் குரோட்டன் செடிகள் காற்றில் அழகாக ஆடுகின்றன. அந்தச் செடிகளுக்குள்ளிருந்து பூச்சியொன்று 'கிறீச்' எனச் சத்தமிட்டுக் கொண்டிருக்கிறது. இந்தப் பூச்சிகளுக்கு ஓர் அற்புதமான சக்தி இருக்கிறதாம். சன சந்தடி சத்தங்கள் அதிகமான பகுதியாயினும் சரி, தனது துணையைத்தேடி ஒரு பூச்சி அழைக்கின்ற ஓசை அதன் சோடிக்கு இரண்டு மூன்று மைல்களுக்கு அப்பாலிருந்தாலும் புரிந்து கொள்ளக் கூடியதாயிருக்குமாம்—எங்கோ வாசித்திருக்கிறான்.

பக்கத்து வீட்டில் மோட்டார் வாகனமொன்று 'ஸ்ராார்ட்' செய்யப்படுகின்ற ஓசை—எங்கே போகப்போகிறார்களோ?

சிவகுமார் பாத்திரங்களைக் கழுவிக் கொண்டு திரும்பிய பொழுது 'அனெக்ஸ்ட்' பலகையில் யாரோ தட்டுகிற

RangaRakes
tamilnavarasam.com

சத்தம் கேட்கிறது. அவன் உன்னிப்பாக அந்தப் பக்கம் கவனித்தான்—தற்செயலாகத் தட்டப்படுகின்ற சத்த மில்லை. யாராக இருக்கும்?

அகிலா அந்தப் பக்கம் நின்று செருமினள். பதிலுக்கு என்ன செய்வது என்று இவன் தடுமாறினன். பேசாமல் உள்ளுக்கு ஓடிவிடலாம் போல இருந்தது. இதற்கு முன் னர்—ஒருபோதுமே அவளுடன் கதைத்ததில்லை. இப் பொழுது தன்னையே அழைக்கிருள் என்பது சரியாகத் தெரி யாமற் கதைக்கலாமா? அவள் அப்படிக் காரணத்தோடு தான் செய்கிருளோ அல்லது தற்செயல் நிகழ்வுகளோ தெரியவில்லை. தன்னையே அவள் அழைப்பதாக வைத்துக் கொண்டாலும் முதலில் முகம் பார்க்காமல் எப்படிக் கதைப்பது? என்ன கதைப்பது? அவள் எதற்காக அழைக் கிருள்? இதென்னடா தர்ம சங்கடம்! அல்லது இன்னொரு மானக்கேடா? இன்றைக்கு என்ன முழுவியளம்? பேசா மற் போய்விடலாமா?

தான் இன்னும் அங்கேயே நிற்பதை உணர்த்துவதற் காக இவனும் வலிந்து செருமினன். உடனடியாக அவ் விடத்தை விட்டுப் போக ஏனே மனது மறுத்தது.

''உங்களத்தான்!''

''என்......னையா?''

''ஓம்!''

காரணம் புரியாத பதட்ட உணர்வு உடலெங்கும் ஊடு ருவியது. அப்படி அவள் வலிந்து கதைப்பதற்கு என்ன ரக சியம் இருக்கும்?

''இஞ்ச கொஞ்சம் வாங்களன்!''

—இவன் மந்திரத்திற் கட்டுண்டவனைப் போல, பல கைப் பக்கமாகச் சென்றான். அகிலாவுடன் கதைத்து அவ ளது நட்பைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென அறையில் ஜெகநாதனும் மகேந்திரனும் எவ்வளவு போட்டி போடு கிருர்கள்! இப்பொழுது அந்த அதிர்ஷ்டம் இவனையே தேடி வருகிறதா? ஒருவிதமான பெருமித உணர்வு தோன் றியது. நண்பர்கள் வந்ததும் இதைச் சொன்னல் பொரு மைப்படுவார்கள். அல்லது நம்புவார்கள் தானே என் னவோ!

தான் பலகைக்கு அண்மையாக வந்து விட்டதை உணர்த்த மீண்டும் ஒருமுறை செருமிக் காட்டினன். சுவரி லிருந்து விடுப்புப் பார்த்துக் கொண்டிருந்த ஒரு பல்லி 'சச் சச்சச்' என்று சாத்திரம் சொன்னது.

''உங்களுக்கு வதக்கி ஆக்கின முருங்கைக்காய்க் குழம்பு பிடிக்கும்தானே?''

சிவகுமார் ஆச்சரிய மேலீட்டால் கதைக்க முடியாமல் சற்றுத் தாமதித்துவிட்டுக் கேட்டான்......

''உங்களுக்கு எப்படித் தெரியும்?''

''சாத்திரம் பார்த்தன்!''—அவள் மெல்லிய ஓசையிற் சிரித்தாள். இவன் விழித்தான்.

''சாத்திரமோ?''

''இல்லை......அப்ப......நீங்க கதைச்சுக் கொண்டிருந்தது...... கேட்டுது!''

''ஐயோ!''

''என்ன பயப்பிடுறீங்க?''

''நாங்கள் கதைக்கிறதெல்லாம் உங்களுக்குக் கேட் குமா?''

''ஓ!...நல்ல வடிவாய்க் கேக்கும்!''



RangaRakes tamilnavarasam.com

''ஐயோ!''

''என்ன......மறுகாவும் ஐயோ?''

''நீங்கள் கேட்கக் கூடாத கதையெல்லாம் கதைச் சிருப்பம்...அதுதான்......'' இவன் தடுமாறினுன்.

''பயப்பிடாதையுங்க...ஆம்பிளையள் எல்லாம் கதைப் பானுகள்...அப்படிக் கதைகளுக்கெல்லாம் நான் காது குடுக்கிறதில்லை.''

சிவகுமாருக்கு உண்மையிலேயே இப்பொழுது பயமும் பிடித்துக் கொண்டது. இரவு நேரத்தில் தான் இப்படி நின்று கதைத்துக் கொண்டிருப்பதை ஜெகநாதன் வந்து தற்செயலாகக் கண்டுவிட்டால் என்ன நினைப்பான்? இதையே கரவாக வைத்துக் கொண்டு எத்தனை கதைகளைச் சோடிப்பான்?

''அப்ப...நான் போகட்டா?''

''வந்த விசயத்தையும் மறந்து போறியள்?...முருங்கைக்காய் குழம்பு வேண்டாமா?''

என்ன பதில் சொல்வதென்று இவனுக்குப் புரியவில்லை. வேண்டாமென்று சொல்லி விடலாம். இவ்வளவு வலிய வந்து கேட்டவளுடைய மனத்தை முறித்த மாதிரிப் போய்விடும். கேட்ட மாத்திரமே கைநீட்டி வேண்டுவதற்கும் மனது கூசியது.

''பின்னுக்கு நிண்டு பேசிறது சரியில்லதான் ...... வீட்டுக்கு வாங்கஎன்!'' என அவள் கூறிவிட்டு இவனது பதிலையும் எதிர்பாராமற் சென்ருள். நிலைமை தற்காலிகமாகச் சமாளிக்கப்பட்டதில் இவனுக்கும் திருப்திதான். சிவகுமார் ஆச்சரியத்தோடு யோசித்துப் பார்த்தான்; மாலை ஐந்து மணிபோல மூவரும் அறையில் இருந்த பொழுது



இன்று என்ன சமைக்கலாம் என்ற பிரச்சினை எழுந்தது. அப்பொழுது தான் சிவகுமார் சொன்னுன்:

''மச்சான்! வதக்கிக் குழம்பு வைச்ச முருங்கைக்காய் கறி எண்டால் எவ்வளவு ருசியாயிருக்கும்!......அப்பிடியெல்லாம் சாப்பிட்டு எவ்வளவு நாளாகுது!''

''சிவா...கிடைக்காத பொருளுக்கு ஆசைப்படக் கூடாது! எங்களைப் பொறுத்தவரை...காய் கறியையும் ...வெண்காயம் மிளகாயையும் வெட்டிப் போட்டு...தேங்காய்ப் பாலையும் . தூளையும் தண்ணியையும் உப்புப் புளியையும் சேர்த்துக் கலக்கி......அடுப்பில வைச்சு இறக்கி எடுக்கிறது தான் கறி!...அப்படிச் சாப்பிடுறதுக்கும் ஒரு மாதத்துக்கு மேலை பழகியிட்டம்...பிறகேன் உனக்கு இந்த விபரீத ஆசையெல்லாம்?'' என வேடிக்கையாகக் கேட்டான் ஜெகநாதன்.

''இல்லை ஜெகா......எனக்கு எதிலையாவது விருப்பம் வந்திட்டால்......எப்படியாவது அதை அடைஞ்சே தீரவேணும். ...இல்லாட்டி மனம்...கேளாது எத்தனை நாளைக்குத் நான்...எங்கடை உப்புச் சப்பில்லாத கறியைச் சாப்பிடுறது?...வாய்க்கு ருசியாய்ச் சாப்பிடுறதுக்காகவெண்டாலும் ஒருக்கால் யாழ்ப்பாணம் போட்டு வரலாம் போலையிருக்கிறது.''

''இதுக்குத்தான்ரா சொல்லுறது......நேரகாலத்தோடை கலியாணத்தை முடியுங்கோ எண்டு! ..ஒருத்தியைக் கலியாணம் முடிச்சுக் கொண்டு வந்து பக்கத்திலை வைச்சிருந்தால்...இப்பிடிச் சின்ன விசயங்களுக்கெல்லாம் யோசிச்சுக் கொண்டிருக்கத் தேவையில்லைத்தானே?'' என இலவச ஆலோசனை வழங்கினுன் மகேந்திரன்.

இந்தச் சம்பாஷணைதான் அகிலாவுக்குக் கேட்டிருக்கக் கூடும் என்ற நினைவுடனே அகிலாவின் வீட்டை (அறையை) நோக்கி நடந்தான் சிவகுமார்.

RangaRakes tamilnavarasam.com

இடம் எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அதை நுணுக்கமாக அழகுபடுத்தி வைத்திருக்கின்ற பக்குவம் இவனுக்கு வியப்பை அளித்தது. தங்களுடைய அறைக்கும் இந்த அறைக்குமுள்ள வித்தியாசம் எவ்வளவு! பிரம்மச்சாரிகளுடைய அறைகளின் கதி அதுதான். தங்களைப் போல சமையல் வேலைகளையும் ஒரே அறையிலேயே வைத்திருக்காமல் பின்புறமாக உள்ள அறையாக்கப்பட்ட பகுதியைத்தான் ஒதுக்கியிருக்கிறார்கள்.

"என்ன?......வந்தவர்......இருக்கக் கூடயில்ல......என்னத்தக் கண்டு சொக்கிப்போய் நிற்கிறீங்க?"

"இஞ்சை உள்ள எல்லாமே அழகாய்த்தான் இருக்கு!"

அவனது சிலேடையான குறும்பை அவள் ரசித்தாள். பின்னர் அம்மாவுக்கு...... "இவர்தானம்மா பக்கத்து அறையில் இருக்கிற மிஸ்டர் சிவகுமார்" என அறிமுகப்படுத்தினாள்.

—ஓ! இவள் பெயரைக் கூடச் சரியாகத் தெரிந்து வைத்திருக்கிறாளே! விடிந்தால் வேலைக்குப் போகவும், மாலையில் வந்தால் தானுண்டு தன்பாடுண்டு என இருக்கவும் தான் இவளுக்குத் தெரியும் எனக் கருதியிருந்தது பிழையாகிப் போய்விட்டது.

"வாங்க தம்பி!" என்றவாறு அம்மா ஒரு கதிரையில் அமர்ந்தாள். அந்த அறையில் ஒரு பக்கத்தில் கட்டிலொன்றும் மறுபக்கத்தில் நான்கு வரவேற்புக் கதிரைகளும் அழகாக வைக்கப்பட்டிருக்கின்றன.

"கதைச்சுக் கொண்டிருங்க'......ரீ போட்டுக் கொண்டு வாறன்" என்றவாறு அகிலா சென்றாள்.

"இல்லே......வேண்டாம்!"



'-இதென்ன தம்பி!...முதல் முதல்ல வந்திருக்கீங்க—தண்ணி வென்னி குடியாமல்......போறதா?"—அம்மா வற்புறுத்தினாள்.

சம்பாஷணைகள் வளர்ந்தன.

அம்மா தனது பிரச்சினைகளையெல்லாம் கவலையோடு கூறினாள். மட்டக்களப்பில் உள்ள ஆரையம்பதி ஊர்—அகிலா பெற்றோருக்கு இரண்டாவது மகள். தந்தை நெசவுத் தொழிற்சாலையொன்றில் காவலாளியாக உத்தியோகம் பார்க்கிறார். மூத்த மகளுக்குத் திருமணம் முடித்து வைத்ததோடு அவர்களது கைகளும் வரண்டு விட்டன. ஆரையம்பதியில் சொந்தமாகவிருந்த காணித் துண்டொன்றும் சிறிய வீடும் அக்காவுக்குச் சீதனமாகக் கொடுத்தாயிற்று. மற்றைய செலவுகளுக்காகத் தொட்டம் தொட்டமாகப் பட்ட கடன்கள் தலைக்குமேல் இருக்கின்றன. அப்பாவும் மற்றைய தங்கையும் கடைசித் தம்பியும் அக்காவுக்குச் சீதனமாகக் கொடுத்த வீட்டில் இருக்கிறார்கள்.

"கடவுள் புண்ணியத்தில் அகிலாவுக்கு இந்த உத்தியோகமாவது கிடைச்சபடியாத்தான் ஏதோ எங்கடை பாட்டையும் பாத்துக் கொண்டு அவனுகளுக்கும் ஏதாவது அனுப்ப முடியுது......அவர் உழைக்கிறது என்னத்தக் காணும்" எனப் பெருமூச்சோடு கூறினாள் அம்மா.

சிவகுமார் இரக்கத்தோடு அகிலாவைப் பார்த்தான். இந்தக் குழந்தைத் தன்மையான பெண்ணுக்குத்தான் எவ்வளவு பொறுப்புக்கள்!

அவளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது தனது பொறுப்புக்களும் சுமைகளும் அற்பமானவையாகத் தோன்றின. பெண்ணாகப் பிறந்த ஒருத்தி இவ்வளவு சுமைகளையும் ஏற்று நம்பிக்கையுடன் வாழ்க்கை நடத்தும் பொழுது தன்னால் ஏன் முடியாது என எண்ணிப் பார்த்தான். அடுத்த

கணமே அந்த எண்ணமும் சுயநலமானதாகத் தோன்றியது. எந்த ஒரு விசயத்தையும் தன்னோடு ஒப்பிட்டுப் பார்ப்பது ஒரு பலவீனம்தானே என நினைத்தான்.

''என்ன பேசாமலிருக்கீங்க. கதைக்க விருப்பமில்லையா?'' அகிலா அவனது மௌனத்தைக் கலைக்க முயன்றாள்.

''அம்மா கதைக்கிறு தானே......கேட்டுக் கொண்டிருக்கிறன்...''

''அம்மாவுக்கு வேலையென்ன?...... வாறவனுக எல்லாரிட்டையும் தங்கட கவலைகளைச் சுமத்தத்தான் தெரியும்...... இதுக்கெல்லாம் கவலைப்பட்டு என்ன செய்யிற? எல்லாம் அவங்கட அவங்கட தலையில எழுதியிருக்கு!''

''தலையெழுத்தெண்டாப் போல?......கவலைப்படாம முடியுமா? எண்ட பிள்ளை இப்பிடிக் கிடந்து கஷ்டப்பட வேணுமெண்டு எழுதியிருக்கு?...முருகா......இதுக்கொரு வழியைக் காட்டுவாயா?'' அம்மாவின் மனசு அங்கலாய்த்தது.

அவர்களுக்கு ஏதாவது ஆறுதல் சொல்ல வேண்டும் போலிருந்தது சிவகுமாருக்கு; ஆனால், அது தன்னால் இயலாத காரியம் என்பதையும் உணர்ந்தான். ஒருவித கவலையும் பதட்டமும் மனதிலே உருவெடுத்தன. நண்பர்கள் வருவதற்கு முன்னரே அறைக்குப் போய்விட வேண்டுமென நினைத்தான்.

அவர்களிடம் விடை பெற்றபொழுது அகிலா ஒரு பாத்திரத்தில் கறியைக் கொண்டு வந்து கொடுத்தாள். இவன் நன்றியோடு கேட்டான்:

''நீங்கள் ஏன்...எங்களுக்காக இவ்வளவு கஷ்டப்படுறீங்கள்?''

''இதில என்ன கஷ்டமிருக்கு?...... நீங்க ஆம்பிளையள்..... வேலையால வந்து களைப்போடை ஆக்கி வாய்க்கு ருசியில்லாமல் சாப்பிடக்குள்ள அதப் பார்த்துக் கொண்டு பேசாமலிருக்க ஏலுமா?''

''பிள்ளை அடிக்கடி சொல்லுறவதான் தம்பி!......பாவம் ஆம்பிளையள் என்னெண்டு ஆக்கிறது ...... கஷ்டப்படுதுகள் எண்டு.''

அகிலாவுடைய பெருந்தன்மையான குணத்தை நினைத்து வியப்படைந்தான் சிவகுமார்; ''அதுக்கென்ன செய்யிறது?......கடையளிலை சாப்பிட்டு அலுத்துப் போனம் ...நாங்கள் சமைச்சால் துப்பரவாயும் இருக்கும்......சத்தான சாப்பாடும் சாப்பிடலாம் ...... கடையளிலை...... என்னத்தை அவிச்சுப் போடுறுங்களோ......ஆர் கண்டது?''

''வேலை செய்யிறனீங்கள் நல்லாய்ச் சாப்பிடவும் வேணும்தானே? ......சுவர் இருந்தாத்தானே சித்திரம் எழுதலாம்?''

அம்மாவுடைய பேச்சைக் கேட்டு அகிலா சிரித்தாள். சிவகுமாரும் சிரித்துக் கொண்டே விடை பெற்றான்.

# அத்தியாயம் - 8

'இவ்வளவு நேரமாகியும் இவர்களைக் காணவில்லையே' என்றஎண்ணத்தோடு அறைக்கு வெளியேவந்து பார்த்தபொழுது மகேந்திரன் திருமதி வெங்கடாசலத்தோடு (லான்ட்லேடி) கதைத்துக் கொண்டு நிற்பது தெரிந்தது. அவன் கதைத்துக் கொண்டு நிற்கின்ற சுவாரஸ்யத்தைப் பார்த்தால் இப்போதைக்கு வரமாட்டான் என்பது நிச்சயம். இப்படியே கதைத்துவிட்டு வந்து அவளது கட்ட



RangaRakes tamilnavarasam.com

மைப்பான உடலமைப்பையும் கவர்ச்சியான சிரிப்பைப் பற்றியும் சொல்வான். அவளது அழகுக்கும் எடுப்புக்கும் அவர் (மிஸ்டர்) தோதான ஆளில்லை என்று வாதிப்பான். தன்னை அடிக்கடி இழுத்து வைத்துக் கதைப்பதற்கும் காரணம் அதுதான் என்பான்.

இந்த எண்ணங்களெல்லாம் அவனது சலனங்கள் தானோ என்று சிவகுமார் நினைத்திருக்கிறான். எந்நேரமும் இதுபோன்ற எதிர்பார்ப்புக்களோடு இருப்பதாற்தான் அவனால் இப்படியெல்லாம் நினைக்க முடிகிறது போலும். திருமதி வெங்கடாசலத்தை ஒரு வஞ்சகமில்லாத மனுசியாகத்தான் இவனாற் கருத முடிகிறது. அவளது கள்ளம் கபடமில்லாத சிரிப்பு அப்படித்தான் எண்ணத் தோன்றுகிறது?

முருங்கைக்காய்க் கறியின் நினைவு பசியை அதிகரித்துக் கொண்டிருந்தது. 'ஜெகநாதனெண்டாலும் நேரவழிக்கு வருகிறானில்லையே' என்று நினைத்த பொழுது வாசற் கதவைத் திறந்து கொண்டு அவன் நுழைந்தான். (அவனுக்கு ஆயுசு நூறு!) மகேந்திரன் வீட்டுக்காரியோடு கதைத்துக் கொண்டிருப்பதைப் பார்த்து ஒரு மனமில்லாத ஒரு புன்னகையை மாத்திரம் உதிர்த்துவிட்டு வந்தான். என்றாலும் அவர்கள் மகிழ்ச்சியாகச் சம்பாஷிப்பது இவனுக்குச் சம்மதமில்லை என்பதை மாத்திரம் முகம் காட்டிற்று. ஜெகநாதன் மனதிலே கற்பனை செய்கிற அளவுக்கு செயற்திறன் இல்லாதவன் செயல் வீரன் மகேந்திரன் மேல் அடிக்கடி இவன் முகச்சுளிப்போடு பாய்வதன் காரணமும் இதுதான்.

மகேந்திரன் ஒன்றுக்கும் கவலைப்படாமல் கதைத்துக் கொண்டிருந்தான்.

ஜெகநாதன் நெடுநாள் பசி கிடந்தவனைப்போல அவசரப்பட்டான்; ''அவன் கிடக்கட்டும் மச்சான்! நாங்கள் சாப்பிடுவம்''

RangaRakes



''சரியில்ல...அவனும் வரட்டுக்கும்.''

நண்பர்களின் பொறுமையை அதிக நேரம் சோதித்த பின்னரே மகேந்திரன் அறைக்கு வந்தான். எல்லோருமாகச் சாப்பிட அமர்ந்த பொழுது, கறியை எடுத்து முன்னால் வைத்தான் சிவகுமார்.

''இதென்னடா புதுக்கறி! ... நல்ல மணம் குணமாயிருக்குது!'' — இருவரையும் ஆட்கொள்ளும் ஆச்சரியம்.

''நான்தான் சமைச்சனான்!''

''ஓ! பெரிய சமையல்காறனெண்டு இவருக்கு எண்ணம்! சொல்லடா விஷயத்தை?'' ஜெகநாதன் அவசரப்பட்டான். சிவகுமார் குரலைத் தாழ்த்திக் கூறினான்; ''அகிலா தந்தது!'' ஜெகநாதன் எதிர்பார்ப்பது போலவே சங்கதி கவலைக்கிடமானதாக இருந்தது. ''சும்மா கதை விடாதை...அவளாவது தாறதாவது...! ''அது பொய்யாகவே இருக்கக் கூடாதா என்ற ஏக்கம்.

''உண்மையாகத் தான் மச்சான்! ... நாங்கள் பின்னேரம் கதைச்சுக் கொண்டிருந்தது அவையளுக்குக் கேட்டிருக்குது...பிறகு கூப்பிட்டுத் தந்ததுகள்...பாவங்கள்... நல்ல சனம்.''

''ஓ!...அப்ப மாப்பிளை பிடிக்கிற யோசனை போலையிருக்கு! எங்கத்தை ஆக்களெண்டு தெரியும் தானே?''

சிவகுமார் இப்படியொரு தாக்குதலை எதிர்பார்க்கவில்லை. ''மெல்லமாய்க் கதையடாப்பா!...அங்காலை கேக்கப் போகுது...அதுகள் மினக்கெட்டுச் செய்து தந்திருக்குதுகள்...நீ என்ன பேய்க்கதை கதைக்கிறாய்?''

''கேக்கட்டன்... கேட்டால் என்ன பயமே... ஆரை ஏமாத்தி அமத்தலாமெண்டு பாத்தாளவை? உதுக்கு

tamilnavarasam.com

ஆரேன் உன்தரவளி இளிச்சவாயனைப் போலப் பிடிக்கச் சொல்லு.''

சிவகுமாரது மனம் புகைந்தது? இந்தச் சம்பாஷணையை அகிலா கேட்க நேரிட்டால் எவ்வளவு மனம் வருந்துவாள் என்ற கவலையும் தோன்றிற்று.

''சரி...சரி... உனக்கு விருப்பமில்லாட்டிச் சாப்பிட வேண்டாம் ... வீணாய்த் தேவையில்லாத கதை கதையாதை!''

சிவகுமார் சாப்பிடத் தொடங்கினான், மகேந்திரன் சங்கடத்துடன்; 'எடுப்பதா...விடுவதா' என்ற யோசனையோடு ஜெகநாதனை நோட்டம் விட்டான்.

''மகேந்திரன் நீயும் உதைச் சாப்பிடப் போறியே? அதுக்குள்ள...என்ன மருந்து போட்டிருப்பாளவையோ தெரியாது! சொல்லவேண்டிய கடமைக்குச் சொல்லிட்டன்...இனி உன்ரை விருப்பம்.''

வீதியில் யாரோசிலர் நிறை தண்ணியில் தமது கருத்துச் சுதந்திரத்தைப் பிரயோகித்துக்கொண்டு நடக்கிறார்கள்- அக்கம் பக்கத்திலும் வீடுகள் இருக்கின்றன, தாங்கள் மனிசத் தன்மையில்லாமல் சத்தம்போட்டுச் செல்வது அவர்களுக்கு இடைஞ்சலாக இருக்கும் என்பதைப் பற்றிக் கொஞ்சமும் கவலைப்படவில்லை.

''அதையெல்லாம் நீ நம்பிறியே மச்சான்? மருந்தும் மாயமும்...எல்லாம் மோட்டுக்கதையள்''- மகேந்திரன் சமாதானம் கூறினான். ஜெகநாதன் எதையும் கேட்கத் தயாராயில்லை. அவனுக்கு சிவகுமாரைப் பார்க்கவே எரிச்லாயிருந்தது. தாங்களெல்லாம் அகிலாவைப் பற்றிக் கதைக்கும் சந்தர்ப்பங்களில் அமுசடக்கிக் கள்ளன் மாதிரிப் பேசாமல் இருந்துவிட்டு 'நைசாக' வேலையைக்



கொண்டு போயிருக்கிறான் என்ற ஆத்திரம் மட்டும் மேலோங்கி நின்றது.

சிவகுமார் யாருடனும் கதைக்க விரும்பாமலிருந்தான்.சமூகம் இவ்வளவு கேவலமானதாகவா இருக்கிறது? படித்தும் பகுத்தறிவில்லாத சனக் கூட்டந்தான் பெருகிக் கொண்டே இருக்கிறது.

விரைவாகவே சாப்பாட்டை முடித்துக் கொண்டு எழுந்து சென்றான் ஜெகநாதன். இல்லாவிட்டால் எல்லோருக்கும் கடைசியாகப் பந்தியை முடிப்பது அவன்தான். இப்பொழுது சுறுக்காக எழுந்து சென்றது மகேந்திரனுக்குச் சிரிப்பாக இருந்தது. இவ்வளவு நேரமும் மெதுவாகவே சாப்பிட்டுக்கொண்டிருந்த அவன் ஜெகநாதன் சென்ற பின்னர், ''உவனுக்கு மச்சான்...எல்லாம் கரவுதான்!'' என்றவாறே தானும் அந்தக் கறியை எடுத்துச் சாப்பிடத் தொடங்கினான்.

சிவகுமாருக்கு சிரிப்பு மேலிட்டது. 'இவனும் மற்றவனுக்குப் பயந்துதான் வாழ்கிறான்! பெரிய விண்ணன்களைப் போல கதைக்குக் குறைச்சலில்லை. தங்கடை கருத்துக்களை நேர்மையாய் சொல்வதற்கே முதுகெலும்பில்லாத மடையன்கள்.

'எங்களைச் சூழ உள்ள மனிதர்களையும் இந்தச் சமூகத்தையும் எவ்வளவாக நேசிக்கிறோம். ஆனால், அங்கே எத்தனை பேர் போலி வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்! நேர்மை, இலட்சியப் பிடிப்பு என்பதெல்லாம் காண்பதற்கு அரிதாகவே இருக்கின்றது. சுயநல வாதிகளும் சந்தர்ப்ப வாதிகளும் ஏமாற்றுக் கும்பல்களும் மலிந்துவிட்டனர். இவர்களுடைய பண்புகள் எப்பொழுது நாக

RangaRakes tamilnavarasam.com

ரிகமடையப் போகின்றன? நாகரிகம் என்பதே கல்வியில், கலாசாரத்தில், வாழ்க்கை முறை பழக்க வழக்கங்களில் ஏற்படுகின்ற முன்னேற்றமான நல்ல மாற்றங்கள் என்பதை ஏன் இவர்கள் உணர்கிறார்களில்லை?

'இந்த மகேந்திரன் தலைமுடியை நீளமாக வளர்ப்பதையும் விதவிதமாக ஆடைகள் அணிவதையும் தான் நாகரிகம் எனக் கருதுகின்றானோ?'

சிவகுமார் மௌனமாகவே இருப்பதைப் பார்க்க மகேந்திரனுக்குச் சங்கடமாக இருந்தது.

'என்ன மச்சான் என்னோடையும் கோபமா?''

''சீ! ... எனக்கென்ன கோபம்? ஒவ்வொருதற்றை போக்கையும் யோசிச்சன்.''

''அதுக்கென்ன செய்யிறது?...அது அவரவற்றை பல வீனம், மனிசனாய்ப் பிறந்தவனுக்கெல்லாம் இப்படி ஏதா வது பலவீனம் இருக்கத்தான் செய்யும்!'' எனத் தத்துவம் பேசினான் மகேந்திரன்.

அதற்குப் பதில் கூற விரும்பாதவனைப்போல சாப்பாட்டுக் கோப்பையை எடுத்துக் கொண்டு 'பைப்' பக்கமாகச் சென்றான் சிவகுமார்.

இராக் குருவியொன்று அவசரமாக ஏதோ கூறிக் கொண்டு பறக்கிறது. அந்த அவலமான கூவலிலும் ஓர் இனிமை இருக்கத்தான் செய்கிறது.

# அத்தியாயம் - 9

அழகை இன்னும் கவர்ச்சியாகக் காட்டுவதற்குப் பெண்கள் விதம் விதமாகப் பல வர்ணங்களில் ஆடைகளை அணிந்து கொள்வது போல வர்த்தக நிலையங்களின் பெயர்ப் பலகைகள் தோற்றமளிக்கின்றன. இலகுவில் விலை போகக் கூடிய பொருட்களுக்குக் கூடக் கவர்ச்சியான விளம்பரங்களும் தேவைப்படுகின்றதே! ஒவ்வொருத்தர் ஒவ்வொரு உத்திகளைக் கையாண்டு மிக நுணுக்கமாகத் தங்கள் பொருட்களுக்குத் தருகின்ற விளம்பரங்கள்! அங்கேயும் ஒருவரை ஒருவர் வென்று செல்வதற்குப் போட்டிகள்; எங்கே தான் போட்டி இல்லை?

கண்ணாடிப் பெட்டிகளில் காட்சியறைகளிலெல்லாம் 'எங்களை எடுத்துக்கொள்ளுங்களேன்' என்பது போல வீற்றிருக்கும் பொருட்கள், பொருட்கள்! அவற்றை விலை கொடுத்து அனுபவிக்க லாயக்கில்லாத பெரும்பாலானோர் நின்று பார்த்து- கவர்ச்சியான உடைகளுடன் எடுப்பாக வீதியில் செல்கின்ற கன்னியரைப் பார்த்து ஏக்கப் பெருமூச்செடுக்கின்ற சுமாரான இளைஞர்களைப் போல,சொக்கிப்போய் நிற்கின்ற பரிதாபமான கோலங்கள்.

சிவகுமார் காலி வீதி ஓரமாக வர்த்தக நிலையங்களின் 'ஷோகேஸ்'களைப் பார்த்தவாறே நடந்துகொண்டிருக்கிறான். இப்படிப் பார்த்துக்கொண்டு செல்வதே ஒரு சுவையான பொழுது போக்குத்தான். எத்தனை நாட்கள் பார்த்தாலும் அலுக்காது.

வர்த்தக நிலையமொன்றின் முன்னிலையில் பல வேறு ரகங்களிலுள்ள சப்பாத்துக்களும் செருப்புகளும் பார்

RangaRakes tamilnavarasam.com

வைக்கு வைக்கப்பட்டிருக்கின்றன. எதைப் பார்த்தாலும் நன்றாகத் தான் இருக்கிறது. நவீன மயமாக பலவர்ணக் காலணிகள் கண்களைப் பறிக்கின்றன; மரக்கொப்புகள் கிளைவிட்டுப் பிரிவது போன்ற அமைப்பில் அவை அடுக்கப்பட்டு அவற்றிற்குரிய விலைகளும் குறிக்கப்பட்டிருக்கின்றன. (சீச்சீ! இந்தப் பழம் புளிக்கும்!)

சிவகுமார் மிக அவதானமாக அடியெடுத்துவைத்து நடந்துகொண்டிருக்கிறான். இல்லாவிடில் நேற்றையைப் போல நேரம்காலம் தெரியாமல் செருப்பு காலைவாரிவிட, அந்த இக்கட்டான நேரத்தில் சந்தி சிரிக்க நிற்கலாமா?

காலி வீதியிலிருந்து கிளைவிட்டுப்பிரிகின்ற வீதியொன்றின் ஓரத்தில் 'க. தங்கவேலு' என்ற பெயர்ப்பலகை குறிப்பிடுவது ஒரு பெரிய தாபனம் அல்ல. தங்கவேலு ஒரு செருப்புத் தைக்கும் தொழிலாளி. வீதி ஓரத்து மரநிழலில் பழைய செருப்புக்களைப் பரவிவிட்டு உட்கார்ந்திருக்கிறான். வாயைப் பிளந்துகொண்டிருக்கும் மீன் கருவாடுகளைப் போல பல பழைய சப்பாத்துக்கள் அடுக்கப்பட்டிருக்கின்றன. மற்றும் செருப்புத் தையலுக்குத் தேவையான ஊசி, நூல், தோல், இரும்புக்கட்டை இத்தியாதி பொருட்களுடன் அவனது தாபனம் எவ்வித விளம்பரங்களும் இன்றி சமூகப்பணி செய்து வருகிறது. 'க.தங்கவேலு' என்ற பெயரை மாத்திரம் கோணல் மாணலாக சிறிதும் பெரிதுமாக சுண்ணாம்பினால் எழுதியிருக்கிறான்.

வாய் நிறைய வெற்றிலையைப் போட்டுக் குதப்பிக் கொண்டிருந்தவன் சிவகுமாரைக் கண்டதும்,

''வாங்க சாமீ!'' என முக மலர்ச்சியோடு வரவேற்கிறான். பின்னர் உதட்டில் விரல்கள் இரண்டைப் பதித்து 'சளக்'கென வெற்றிலைச்சாறை ஒரு பக்கமாகத் துப்பி, தனது பொழுது போக்கிற்குத் தற்காலிகமான ஓய்வு கொடுக்கிறான்.



சிவகுமார் அவன் முன்னிலையில் செருப்பைக் கழட்டி விட்டதும் அதை ஆதரவோடு எடுத்து வருத்தம் இருக்கின்ற இடத்தைக் கண்டு பிடித்துப் பரிகாரம் செய்யத் தொடங்குகிறான்.

அவனுக்குப் பக்கத்தில் சற்று விலகி விரிக்கப்பட்டிருக்கின்ற பொலித்தீன் தாளின் மேல் இரண்டு பிள்ளைகள் ஆழ்ந்த உறக்கத்திலிருக்கின்றன. ஒரு குழந்தையின் அரையில் 'யங்கி' மாத்திரம் இருக்கிறது. மற்றதுக்கு இது கூட இல்லை. சனசந்தடியும் வாகனங்களின் இரைச்சலும் அவர்களின் தூக்கத்தை எவ்விதத்திலும் பாதிப்பது போலத் தெரியவில்லை. இன்னொரு பக்கத்தில் மூன்று கற்கள் அடுப்பாக அடுக்கப்பட்டு அதன்மேல் பானையொன்றில் ஏதோ அவிகிறது—சமையல் நடக்கிறது! எரிகின்ற அடுப்பிற்கு காற்றுத் தடையாக இருக்காமல் ஒரு சிறிய தகரத் துண்டினால் மறைப்புச் செய்திருக்கிறான்.

''என்னப்பா சமையல் நடக்குதுபோலை?'' சிவகுமார் தனது சந்தேகத்தை வினாவாக்கினான்.

''ஆமங்க சாமி!''

ஆச்சரியமாக இருந்தது! நிரந்தர இருப்பிடமின்றிப் பாதையோரத்தில் வாழ்கின்ற சீவன்களும் இருக்கத்தான் செய்கின்றன! இப்படி மழையையும் வெயிலையும் பொருட்படுத்தாமல் பாதையோரங்களையும் வீதி முடக்குகளையும் நம்பி வாழ்கின்ற எத்தனையோ குடும்பங்களைக் கொழும்பிலே காணலாம்.

''இரவிலையும் இதிலைதான் படுப்பீங்களா?... மழை வந்தால்?......இந்தக் குழந்தைகளையும் வைச்சுக் கொண்டு கஷ்டம் தானே?''

''கஷ்டத்தைப் பார்த்தா முடியுங்களா......செல வேளை இங்கிட்டு ஒதுக்கமா சரிஞ்சுக்குவம்......இன்னொரு

RangaRakes tamilnavarasam.com

எண்ணம் வந்துச்சின்னு......ஐயா அவங்கடை கடவாசல்ல போய்த் தூங்கிக்குவம்.''

அவன் ஐயா எனத் தன்னையே குறிப்பிடுவது போலிருக்கவே சமசியத்தோடு திரும்பவும் கேட்டுப் பார்க்கிறான்.

''ஆமாங்க......அங்கிட்டு இருக்கே ஐயா அவங்கட கட......'' என சிவகுமாரையே குறிப்பிட்டுப் பதிலளித்தான் தங்கவேலு.

''இதென்னப்பா......புதினம்!......எனக்கு இஞ்சை ஒரு கடையும் இல்லையே?''

''ஐயா யாழ்ப்பாணம் தானே?'' தங்கவேலு சந்தேகத்தோடு கேட்டான்.

''ஓம்!''

''அதுவும் யாழ்ப்பாணத்துக் காரங்கட கடைதானுங்க!''

சிவகுமார் சிரித்துக் கொண்டான். அந்த ஏழையின் மனோ நிலையை அறிய ஆச்சரியமாகவும் இருந்தது. ஒரே ஊரவர் என்பதற்காக ஒன்றாகக் கருதுகின்ற உள்ளம் யாருக்கு இருக்கும்? ஆனால் ஊர் ஒன்றாக இருந்தாலும் ஒவ்வொருத்தரும் பிரிந்து பிரிந்து பிரிந்து எத்தனை வேறு பாடுகள்? அக்கம் பக்கத்து வீடுகளில் ஒற்றுமையாக இருக்கின்ற குடும்பங்களை எங்கே காணலாம்?

''என்னப்பா சமையல்?''—சிவகுமார் விடுத்து விடுத்துக் கதை கொடுத்தான். அவனோடு கதைப்பதற்கு மிக விருப்பமாக இருந்தது.

''சோறுதானுங்க!''

''ஒவ்வொரு நாளும் அரிசிக்கு உன்ரை உழைப்புப் போதுமா தங்கவேலு?'' சிவகுமார் இன்னும் கரிசனை



யோடு கேட்டான். தனது பெயரை ஆதரவாக அழைத்தது அவனுக்குப் பெரிய புளுகமாக இருந்தது.

''ஆமாங்க......தொறை! படச்சவன் படி அளக்காமலாவுடுவான்?......கெடைக்கிற சல்லியில் அந்திக்கு எதுன்னுச்சும் வேண்டலாமுங்க.''

''ஒரு நாளைக்கு எவ்வளவு உழைப்பாய்?''

''மூணு றூபாவும் கெடைக்கும்......நாலு றூபாவும் கெடைக்கும்......சில நாளைல எட்டு ஒம்போது றூபாவும் கெடைக்கும்.''—எட்டு, ஒன்பதைக் குறிப்பிட்டபோது தங்கவேலுவின் கண்கள் பெரிய ஆனந்தத்தாலும் ஆச்சரியத்தாலும் விரிந்து அபிநயம் செய்தன.

''மூன்று ரூபா அரிசிக்குத் தானே காணும்!......கறிக்கு என்ன செய்வாய்?''

''அந்திக்கு 'மார்க்கெட்'லை கெட்டுப்போன காய்கறி வீசுவாங்க......பொறுக்கிக்குன்னு வந்தா.........தெரிஞ்சு எடுத்துக்கலாம்......எறைச்சிக் கடயில ஒரு அம்பேசத்தை நீட்டினா இம்புட்டு எலும்பு கொடுப்பாங்க......''என இரு கைகளையும் அகற்றிக் காட்டினான். கிடைப்பதை வைத்துக் கொண்டு அவன் திருப்தியாய் வாழ்வதை அறிய அதிசய உணர்வு மேலிட்டது. இப்படி வீதியோரத்தில் வாழ்கின்ற சீவன்களுக்கு நாள்தோறும் தென்படுகிற செல்வந்தர்களும் அவர்களது ஆடம்பர வாழ்க்கையும் எவ்விதமான பாதிப்பையும் அளிக்காதா?

''தங்கவேலு?......உன்ரை சம்சாரம் எங்கை? காணயில்லை......''

''சில அம்மாமாருங்க எதுன்னுச்சும் பழசு இருந்தா கொடுப்பாங்க அதுதான் போயிருக்கு.. ...அந்தியாச்சின்னா மாக்கெட்டுக்குப் போயி......வர லேட் ஆகும் தொறை?''

RangaRakes tamilnavarasam.com

அட, பரவாயில்லையே! அவனது வாயில் கூட கொழும்பு வாடை (லேட்) வீசுகிறதே!

“என்ன உனக்கு இங்கிலிஷ் கூடத் தெரியும் போலயிருக்கு!” என சிவகுமார் கேட்ட கேள்விக்கு வாய் நிறையப் பல்லைக் காட்டி வஞ்சகமில்லாத சிரிப்பை வெளிப்படுத்தினான் தங்கவேலு. கதையோடு கதையாக தைத்து முடித்த செருப்புக்களை சிவகுமார் முன்னிலையில் போட்டதும் அவன் அதைக் கொழுவிக் கொண்டே “தங்கவேலுவுக்குச் சொந்த ஊர் எது? வீடு வாசல் இல்லையா?” எனக் கேட்டான்.

“வீடு வாசல் ஏதுங்க?......” என்றவாறே அவன் தனது சொந்த ஊரின் பெயரைக் குறிப்பிடுகிறான். முன்னர் ஒருபொழுதும் கேள்விப்பட்டிருக்காத பெயர். அங்கேதான் அவனது உறவினர்கள் சிலர் இருக்கிறார்களாம்......இன்னும் விபரமாகக் கேட்டபொழுது......அது மலைநாட்டுப் பகுதியிலுள்ள ஒரு சிங்களக் கிராமம் என்று தெரியவருகிறது. நாட்டின் பல பகுதிகளிலும் தமிழர்கள் பரந்து வாழ்கிறார்கள் என்பதை அறிய மகிழ்ச்சியாயிருந்தது. இவன் வயிற்றுப்பாட்டுக்காக பட்டணத்தை நோக்கி வந்திருக்கிறான். இப்படியே காலத்துக்குக் காலம் ஒவ்வொரு பகுதியாகச் செல்வது வழக்கம். யாழ்ப்பாணத்தையும் கொழும்பையுமே உலகம் என்று நினைத்து வாழ்கின்ற தனது வாழ்க்கையோடு இந்த நாடோடி வாழ்க்கையை ஒப்பிட்டு எண்ணிப் பார்த்தான்—வாழ நினைத்தால் வாழலாம்!

“தங்கவேலு அப்ப நான் போட்டுவாறன்!” என்றவாறே கூலியைக் கொடுத்தான் சிவகுமார்.

“ரொம்ப நல்லம்......சாமி!” தங்கவேலு கைகூப்பி விடை கொடுத்தான்.



நினைத்த மாத்திரத்தில் காலிவீதியைக் கடந்து வர முடியாதவாறு அடுக்கடுக்காக வாகனங்கள் விரைந்து கொண்டு செல்கின்றன. அழகழகான, பெரிய கப்பல்களைப்போன்ற ஆடம்பரமான வாகனங்கள்......அவற்றைக் காண்கையில் இப்பொழுது ஏக்கப் பெருமூச்சு தோன்றவில்லை.

# அத்தியாயம் - 10

சிவப்பு விளக்கு வாகனங்களை எச்சரித்து நிறுத்தி, பொது மக்களை ‘இங்கே கடக்க’ உதவி செய்தது. சிவகுமார் வீதிக்கு மறுபக்கமாக நடந்தான்.

ஒரு ‘ரீ’ குடித்தால் நல்லது போலிருந்தது. எக்கவுண்ட் கடையை நோக்கி நடக்கத் தொடங்கினான் சிவகுமார். சைக்கிளில் வந்து கொண்டிருந்த பஞ்சலிங்கம் இவனைக் கண்டதும் அவதியாய்க் குதித்து சைக்கிளை இழுத்துப் பிடித்துக் கொண்டு நின்றார்.

“தம்பியைத்தான் ஒரு அலுவலாய்க் காணவேணுமெண்டு நினைச்சனான்.”

பஞ்சலிங்கத்தார் தொழிற் திணைக்களத்தில் வேலை செய்கின்ற ஒரு ‘சீனியர் ஹான்ட்’, எக்கவுண்ட் கடைகளில் கண்டு அறிமுகமாகிய பழக்கம்.

சைக்கிளுக்கு ‘பிறேக்’ இருந்தாலும் அவர் அதைப் பாவிக்க விரும்புவதில்லை. “இப்படிப் பாவிக்கிறபடியால் நான் பதினைந்து வருசத்துக்கு மேலை அது கிடந்து உதவுது” எனப் பெருமையுடன் கூறிக் கொள்வார். பஸ்

RangaRakes tamilnavarasam.com

போக்கு வரத்து வசதிகள் திருப்திகரமாக உள்ள கொழும் பிற் கூட அவர் தனது சைக்கிளைக் கொண்டு வந்து வைத் திருப்பது அதன் மேலுள்ள காதலினுல் அல்ல - பிரயாணச் செலவுகள் மிச்சப்படுமே என்பதற்காகத்தான்.

'என்னண்ணை......ஏதாவது அவசரமான அலுவலே? ......''

''சீ!......சும்மா ஒரு காரியமாய்க் கதைக்க வேணும் ——எங்க அறைக்குத்தானே போறீர்?......வாரும்...... நானும் வாறன் போயிருந்து ஆறுதலாய்க் கதைப்பம்.''

''ஓம்......வாங்கோ ஒரு ரீ அடிச்சிட்டுப் போவம்...''

கடையில் இருவருமாகத் தேநீரை அருந்திவிட்டுச் சிவ குமார் கணக்குக் கொப்பியை எடுத்துத் தனது பக்கத்தில் கணக்கைக் குறித்துவிட்டு வந்தான்.

சைக்கிளை உருட்டியவாறு நடந்து கொண்டே, ''எங் கை உம்மடை சிநேகிதர் அறையிலைதான் இருப்பினமோ?'' எனக் கேட்டார் பஞ்சலிங்கத்தார்.

''சனிக்கிழமையெல்லே? ......இப்பபோய் அவங்களைப் பிடிக்க மாட்டியள். மகேந்திரன் சிங்கள ரியூசனுக்குப் போயிருப்பான்......ஜெகநாதனும் ஏதோ படத்துக்குப் போக வேணுமெண்டவன்.''

என்ன விஷயமாகக் கதைக்கப் போகிருர் என்பது புரி யாமலிருந்தது சிவகுமாருக்கு. அவரது நடவடிக்கையைப் பார்த்தால் விஷயம் ஏதோ முக்கியமானதாக இருக்கும் போலிருக்கிறது.

தனது வழுக்கைத் தலையை ஆதரவோடு தடவி விட்ட வாறே அறையினுள் பிரவேசித்தார் பஞ்சலிங்கம். சிவ குமார் மேசைக்கு முன்னுலிருந்த கதிரையை இழுத்துப் போட்டபொழுது, ''என்னத்துக்கு நான்......இதிலை இருக்



கிறன்'' என்றவாறே கட்டிலில் தனது புகழுடம்பை அமர்த் திஞர். (புளிமூட்டை எனப் புகழ் பெற்றது அவரது உடம்பு) மூக்குக் கண்ணுடியைச் சரி செய்து விட்டுக் கொண்டு அந்த அறையை நிதானமாகப் புலனுய்வு செய் தார். கண்கள் ஒவ்வொரு பொருளையும் துளாவியெடுத் தன. அங்கு வீசப்பட்டிருந்த சிகரட் கட்டைகள் அவருக் குத் துப்புக் கொடுத்தன.

''உதார் தம்பி......அந்தக் கட்டிலிலை படுக்கிற ஆள்?''

'ஏன் கேட்கிறியள்......அது ஜெகநாதன்ரை கட்டில்!'

''நல்லாய்ச் சிகரட் குடிப்பார் போலையிருக்கு......அங் கை பார்த்த இடமெல்லாம் சிகரட் கட்டைதானே!''

சிவகுமார் ஆமோதித்தான்; ''சிகரட் இருந்தால் அவ னுக்குச் சாப்பாடும் தேவையில்லை.''

ஏதோ பெரிய ஹாஸ்யத்தையே கேட்டு விட்டவர் போல பஞ்சலிங்கத்தார் தனது உடல் குலுங்க கெக்கட்ட மிட்டுச் சிரித்தார். தனது வழுக்கைத் தலையை அன்போடு தடவுகின்ற பணியையும் செய்தார். அவரது அபிப்பிரா யங்களும், சிரிப்பும் கதைக்கின்ற விதமும், இன்று முழுக் கக் கேட்டுக் கொண்டிருக்கலாம் போலிருந்தது.

''நல்லாய்ச் சொன்னுய் தம்பி!......சில பேருக்கு...... அது ஒரு பழக்கமாய்ப் போச்சு! நானும் முந்தி இப்பிடித் தான்......இப்ப குறைவு.........எப்பாலும் இருந்திட்டு டிறிங்ஸ் எடுக்கிற நேரங்களிலை பாவிப்பன்......இவர் எப் படி? .......... ஜெகநாதன் குடிக்கிறவரே?''

''சில வேளையிலை குடிச்சிட்டும் வருவான்......ஆனல் குழப்படி ஒண்டுமில்லை......''

''ஓம்! ஓம்!......இடைதரம் பாவிக்கிறதிலை பிழையில் லைத்தானே...... இனி வயதும் அப்பிடித்தானே?''

RangaRakes tamilnavarasam.com

பஞ்சலிங்கத்தாரின் கண்கள் கதவின் பின் பக்கத்தில் ஒட்டப்பட்டிருக்கின்ற பெண்களின், கவர்ச்சிப் படங்களை இப்பொழுதுதான் கவனித்திருக்க வேண்டும்—அவற்றில் இருந்து மீள முடியாத தடுமாற்றம்;

''அங்கை... நல்ல நல்லபடங்களும் ஒட்டியிருக்கிறியள் போலை!... ஒரு மாதிரியான படங்களாயிருக்கு......'' எனக் கூறியவாறு சிரிப்பை வலிந்து வரவழைத்துப் பின்னர் ஏதோ சிந்தனைவயப்பட்டவர்போல மௌனம் சாதித்து, சற்று நேரம் அப்படியே இருந்துவிட்டு;

''இவர் ...... எப்பிடித் தம்பி..........ஜெகநாதன் வித்தியாசமான சிநேகிதங்கள் தொடர்புகள் வைச்சிருக்கிறாரே?'

'வித்தியாசமான' என்பதன் அர்த்தம் சிவகுமாருக்குப் புரியாமலிருந்தது.

''ஆராவது பெட்டையளோடை தொடர்பிருக்குதோ எண்டு கேட்டனான்...... தெரியாதே இளந்தாரிப் பொடியள்''—உடலைக் குலுக்கி வெளிப்படுத்துகின்ற சிரிப்பு.

அவருடைய 'றூட்' மாறிப்போவது இப்பொழுதுதான் சிவகுமாரது உணர்வுக்கு எட்டியது—

''என்னண்ணை......ஜெகநாதனுக்குக் கல்யாணம் பேசிறியள் போலையிருக்கு......அவனிலை நல்லாய்க் கரிசனைப்படுறியள்?''

பஞ்சலிங்கத்தார் ஓர் அசட்டுச் சிரிப்பை உதிர்த்துச் சமாளித்தார். எக்கச்சக்கமாக மாட்டுப்பட்டு விட்டதனால் இனி உண்மையை ஒப்புக் கொண்டு சரணடைய வேண்டிய சங்கடம்;

''சரியாய்ச் சொன்னாய் கண்டியோ!......சம்பந்த விஷயம் தான்.''



''உங்கடை சொந்தத்துக்கையே?''

''இல்லை......என்ரை மனிசியின்ரை பகுதியிலை.......ஒரு வழியாலை தூரத்து உறவான ஆக்கள் தான்...கண்டியோ! ......நான் இஞ்சை இருக்கிறனெண்டாப்போலை...அறிஞ்சு எழுதச் சொல்லி எழுதியிருக்கினம்.''

சிவகுமார் மௌனம் சாதித்தான்.

''எப்பிடித் தம்பி பெடியன்?......நல்லவனே?''—பஞ்சலிங்கத்தார் குடைந்தார்.

இதற்கு என்ன பதில் சொல்லலாமென்று சிவகுமாருக்குப் புரியவில்லை......ஜெகநாதனிடம் சில கூடாத பழக்கங்களும் இருக்கலாம். அவற்றையெல்லாம் உள்ளது உள்ளபடியே சொல்லிவிடுவது அவனுடனுள்ள சிநேகிதத்துக்குச் செய்கின்ற துரோகச் செயலாகும். தான் அறியாமல் ஏற்கனவே எதையாவது சொல்லித் துலைத்து விட்டேனு என நினைத்துப் பார்த்தான்.

பஞ்சலிங்கத்தார் உற்சாகத்துடன் தனது விசாரணையைத் தொடர்ந்தார்,

''மெய்ய தம்பி? ஜெகநாதன் சிங்களச் சோதனை பாஸ் பண்ணியிட்டாரே?''

சிவகுமார் சிரிப்புடனே கேட்டான்; ''என்னண்ணை கலியாணம் முடிக்கிறதுக்குச் சிங்களமும் தெரிய வேணுமே? ....பொம்பிளை சிங்களத்தியே?''

''உமக்கு எல்லாம் ஒரு பகிடிப் பேச்சுத்தான் கண்டியோ!.......அரசாங்க உத்தியோகக்காரர்......இருந்தாப்போலை சிங்களம் தெரியாதெண்டு நிப்பாட்டிப் போடுவாங்கள்......இனி ஒரு புறமோசன் கிறமோசன் குடுக்கிறதெண்டாலும் அதைத்தானே பாக்கிறாங்கள்!''

RangaRakes tamilnavarasam.com

''என்னவோ பழமொழி சொல்லுவாங்கள் அண்ணை... ...நினைவு வருகுதில்லை......உங்களுக்கு உத்தியோகக்கார மாப்பிளையும் வேணும்!......அவன் சிங்களம் தெரிஞ்சவனுய் இருக்கவும் வேணும்......ஒரு வேலை செய்யுங்கோவன் ஒரு சிங்கள உத்தியோகக்காரனைப் பார்த்து எடுத்தால் பொருத்தமாயிருக்கும்!''

''தம்பி சிவா... நீர் இன்னும் குழந்தைப் பொடிதான் ......ஒண்டும் தெரியாத மாதிரிக் கதைக்கிருய்?......ஒரு கலியாணத்தை ஒப்பேற்றிறதுக்கிடையிலை எத்தனை அலைச்சல் தெரியுமே?''

சிவகுமார் சிந்தனை வசப்பட்டிருந்தான்; ஒவ்வொருவருடைய குண நலங்களை உண்மையாக அறிந்தே பெண் கொடுப்பதனுல் எத்தனை பேர்கள் கலியாணத்திற்குத் தகுதியானவர்களாவார்கள்?

''அண்ணை! சொல்லுறனெண்டு குறை விளங்காதையுங்கோ!......உதெல்லாம் வீண் வேலை!.........உப்பிடி மாப்பிளைமாரைப் பற்றி புலனுய்வு செய்து கொண்டு போறதெண்டால் நீங்கள் இந்த உலகத்திலை ஒரு மாப்பிளையும் எடுக்கமாட்டியள்!''

''நீர் சொல்லுறதும் சரிதான் கண்டியோ! எண்டாலும்............இவ்வளவு சீதனத்தோடை பெட்டையைக் குடுக்கிறதெண்டால்..........நல்லது பொல்லாததுகளை அறியாமல் குடுப்பினமே?'' பஞ்சலிங்கத்தார் சொன்ன நியாயம் சிவகுமாரது எரிச்சலைக் கூட்டியது.

''ஓ!.........அப்ப பெட்டையைக் குடுக்கிறதுக்காக இல்லை ............இவ்வளவு பொருள் பண்டத்தைக் குடுக்கிறபடியாத்தான் அக்கறையோடை மாப்பிளையைப் பற்றி அறிய விரும்புகினமோ?''



''அப்பிடிச் சொல்லாதையும் தம்பி!......பெடியன் எப்பிடி ஊதாரியோ...... பொருள் பண்டத்தை வைச்சுப் பாதுகாக்கக் கூடியவனே எண்டு தெரியவும் தானே வேணும்?'' —பஞ்சலிங்கத்தாருடைய பேச்சிலும் சற்று சூடேறியது.

''அதைத்தானண்ணை நானும் கேட்கிறன்......பெடியன் பெட்டையை என்னபாடு படுத்திஞலும் பறவாயில்லை .........பொருள் பண்டத்தை வைச்சுப் பாதுகாக்கக் கூடியவனெண்டால் போதும்!.........அப்பிடித்தானே?.........உங்கடை கதையைப் பார்த்தால்.........பொருள் பண்டமில்லாமல் பெட்டையை எடுப்பாங்களெண்டால் எந்த நாயிட்டையும் பிடிச்சுத் தள்ளுவியள் போலையிருக்கு!''

பஞ்சலிங்கத்தாருடைய முகம் கறுத்துப் போய்விட்டது. இவனேடு கதைத்துத் தப்பேலாது என எண்ணிக் கொண்டார். இவனிடம் வாயைக் கொடுத்தால் தேவையில்லாத நியாயங்களெல்லாம் பேச வேண்டும் போலிருந்தது.

அவரது முகமாறுதலைக் கவனித்த சிவகுமார்; ''என்னண்ணை முகம் கறுத்துப் போச்சுது!......நான் சும்மா ஒரு கதைக்குத்தான் அப்படிச் சொன்னனுன்......எங்கடை ஆக்களின்ரை சுபாவம்தானே அது?......... அதுக்கு நீங்கள் தான் என்ன செய்யிறது............நான் தான் என்ன செய்யிறது?''...... எனச் சமாதானம் கூறினுன்.

''இப்ப தம்பி!......நீர் சொல்லுறதிலையும் ஞாயம் இருக்குக் கண்டியோ! எங்கடை சமூகம் முன்னேருமல் இருக்கிறதுக்கு முக்கிய காரணமே சீதனப் பிரச்சனைதான் .........இதாலை எத்தனை குமருகள் கரை சேராமல் ஏங்கிக் கொண்டிருக்குதுகள்! இதைப்பற்றி எல்லாரும்தான் வாய் கிழியக் கத்துகினம்!...... ஒரு முடிவையும்தான் காணயில்லை. இதுக்குள்ளை...... குலம் கோத்திரமெண்டு எத்

தினை சாதி பிரிச்சு வைச்சிருக்கிறுங்கள்...... ஒவ்வொரு சாதிக்குள்ளேயும் பல சாதிகளாகப் பல கிளைகள் விட்டு... அந்தக் கிளைகளும் பிரிஞ்சு......எத்தனை சாதியள்!......எத்தினை சிக்கல்கள்!''

அவரது மாற்றமான பேச்சைக் கேட்கச் சிவகுமாருக்கு ஆச்சரியமாக இருந்தது. இந்தப் பழமையின் உருவத்தினுள் இப்படி நல்ல கருத்துக்களும் அமிழ்ந்திருக்கின்றனவா? அல்லது தனது மனதைச் சமாதானப்படுத்துவதற்காகத்தான் அப்படிக் கதைக்கிறுரோ என்பதும் புரியவில்லை.

''அண்ணை! ஒருத்தரை ஒருத்தர் மிதிச்சுவாழ வேணுமெண்ட ஆசை எல்லாருக்கும் ஊறிப் போயிருக்கு! அதாலே தான் எத்தனையோ சாதியெண்டு குறைச்சுக் குறைச்சு ஒருத்தனை ஒருத்தன் தாழ்த்திக் கொண்டே போறுன்! நல்லாய் யோசித்துப் பாருங்கோ!...... ஆகத் தாழ்த்தப்பட்ட சாதியெண்டு ஒருத்தரைச் சொல்லவுமேலாது... எனெண்டால் அவன் தனக்குக் கீழேயும் ஒருத்தனைப் போட்டு மிதிச்சுக் கொண்டுதானிருக்கிறுன். அதுபோலே... .. நான் தான் உயர்ந்த சாதியெண்டு சொல்லிக் கொண்டிருக்கிறவனுக்கு மேலேயும் ஒருத்தன் ஆட்சி செலுத்திக் கொண்டுதானிருக்கிறுன்!''

''நல்லாய்ச் சொன்னுய் கண்டியோ!...... எங்கடை சமூக அமைப்பு அப்பிடி! சமூகத்திலே ஒரு கலாச்சார புரட்சி வரவேணும்......அப்பத்தான் இதெல்லாம் மாறும் .....அது உம்மைப்போல.....நல்ல எண்ணமும் துணிவுமுள்ள பெடியளாலேதான் முடியும்! ஆனுல்...... இப்படிச் சீர் திருத்தம் கதைக்கிற பெடியளும் கடைசியிலே நல்ல கொழுத்த சீதனங்களோடையெல்லே கலியாணம் முடிச்சுக் கொண்டு போகினம்!''



சிவகுமார் அவரை வியப்போடு நோக்கினுன். அவர் சொல்வதிலும் எவ்வளவோ நியாயங்கள் இருக்கத்தான் செய்கின்றன. தான் முதலிலே அவரோடு சற்றுச் சூடாகக் கதைத்ததற்காக வருத்தமேற்பட்டது. ஆனுல், பஞ்சலிங்கத்தாருக்கு ஐந்து பெண் பிள்ளைகள் இருப்பதும் அதனுற்தான் அவருடைய திருவாய் இப்பிடி முற்போக்கான கருத்துக்களை அருளியது என்பதும் அவனுக்குத் தெரியாது.

# அத்தியாயம் · 11

**மா**லைப் பொழுது கடல் தங்கமயமாக ஜொலித்துக் கொண்டிருக்கிறது — நீர் மட்டத்தில் கண்களைப் பதிக்க முடியாத அளவுக்கு பட்டுத் தெறிக்கின்ற சூரிய ஒளி. செவ்வானத்தில் ஒரு செப்புத் தகடு பதிக்கப்பட்டது போல வட்டமாகத் தோன்றும் சூரியன் தண்ணீரை நோக்கி மெல்ல இறங்கிக் கொண்டிருக்கிறுன். கண்களுக்கும் மனதுக்கும் ரம்மியமான காட்சி.

கரையிலே கல்லொன்றில் அமர்ந்திருக்கிறுன் சிவகுமார். பஞ்சலிங்கத்தார் வந்து போன பின்னர் அறையில் தனிமையாய் இருப்பது 'போர'டித்தது. தனிமையென்றுல் அவன் மிக விரும்புவது இந்தக் கடல்தான். இருண்டு வெகுநேரமாகும் வரையில் கடலையே பார்த்துக் கொண்டிருக்கலாம், நிலவுக் காலங்களில் இன்னும் அழகாக இருக்கும், தூரத்தில் சிறு சிறு பொட்டுக்களாகக் கண்களைச் சிமிட்டும் விளக்குகளுடன் தோன்றுகின்ற மீன்பிடி வள்ளங்கள், துறைமுகத்தை நோக்கிச் செல்லும் பாரிய கப்பல்கள், இவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டே இருக்கலாம். துறைமுகத்திற்கு அண்மையாக எத்தனை

RangaRakes tamilnavarasam.com

கப்பல்கள் நிறுத்தப்பட்டிருக்கின்றன என்று கணக்குப் போடலாம்.

இன்னும் இருளவில்லை. மாலை வெயில் கூட மங்கவில்லை. சற்று நேரம் அமர்ந்திருந்து விட்டு எழுந்து புகையிரதப் பாதையிலே நடக்கத் தொடங்கினான். பாதையையும் கடலையும் பிரிக்கின்ற எல்லையைப்போல தாழை மரங்கள் சில இடங்களில் கூட்டம் கூட்டமாகப் பின்னிப் பிணைந்து கொண்டு நிற்கின்றன சில மரங்கள் வளைந்து முண்டு கொடுத்துப் படுத்திருக்கின்றன. கடும் வெயிலெறிக்கும் நண்பகல் நேரங்களிலும் இந்த நிழலில் பல சோடிகள் ஆறுதலாக அமர்ந்திருப்பதைக் கவனித்திருக்கிறான். அந்த நினைவு வந்ததும் அவனையறியாமலே கால்களை இறுக்கி தாழை மர நிழலினுள் கண்களைச் செலுத்தினான்.

தங்களையும் இந்த உலகத்தையும் மறந்த நிலையில் பல இளம் சோடிகள் — அவர்களது 'கிஸ்' கிசு பேச்சுக்கள்! இவர்கள் யாராக இருக்கும்? பஸ் நிறுத்தங்களில், தியேட்டர்களில் அல்லது நடைபாதைகளில் காண நேர்ந்த தற்காலிக நண்பர்களோ? (மகேந்திரன் கூட சில வேளைகளில் அங்கலாய்த்துக் கொள்வானே, ''பஸ்சுக்குள்ளை ஒரு ரொப் கேர்ள் ஆப்பிட்டிது மச்சான்...... சீ? ஒரு இடம் தான் கிடைக்காமல் போச்சுது......'' என்று) அல்லது முன்னரே அறிமுகமாகிய வாடிக்கையான நட்பாக இருக்குமோ? இல்லை; அலுவலக நண்பர்களாக...... காதலர்களாக?

பொங்கி வருகின்ற கடலலைகள் கரையில் மோதுகின்றன; அடங்காத இன்பக் குமுறல்கள்.

''செல்வி!'' என ஆசை பொங்க மனதினுள்ளே அழைத்தான்; ''உன்னைப் பார்க்க வேண்டுமே!''



மல்லிகையின் நறுமணத்தை அள்ளிவரும் தென்றல் தருகின்ற இதமான சுகத்தைப்போல அவளைப் பற்றிய நினைவும் அவனுக்கு இதத்தையே அளிக்கிறது. அந்த இதத்தில் ஏற்படுகின்ற இன்ப ஏக்கமே ஓர் அலாதியான சுவைதான். அவளது குழந்தைத் தனத்தில், அடக்கமான சிரிப்பில், நாணமான பார்வைகளில் எல்லாம் தன்னை இழந்திருக்கிறான்.

நண்பன் சத்தியநாதனது தங்கை கலைச் செல்வி. அப்பொழுது க. பொ. த. உயர்தரம் இறுதியாண்டு படித்துக் கொண்டிருந்த அவனைத் தனது தங்கைக்கு ரியூசன் கொடுக்குமாறு ஒழுங்குபடுத்தியவன் சத்தியன் தான்.

சிறு பராயம் கடந்து யுவப்பருவமடைகின்ற காலங்களிலிருந்தே தன் ஒவ்வொரு செய்கைகளாலும் மெல்ல மெல்ல அவனது மனக் கதவைத் திறந்து நிரந்தரமான ஓர் இடத்தைப் பிடித்துக் கொண்டவள் கலைச் செல்வி. ஒரு பெண்ணின் அழகும், அவள் மென்மையும் புன்னகையும் பார்வையும் சாதாரண விஷயங்கள் எனக் கருதிய பருவம் கடந்து, அவற்றையெல்லாம் நிறைந்த அர்த்தங்களுடனும் உணர்ச்சி வசத்துடனும் ஆராய்கின்ற வயதில் அந்த அழகிய கன்னியுடன் தனி அறையில் மிக அண்மையில் இருந்து பாடம் சொல்லிக் கொடுக்கின்ற சந்தர்ப்பங்கள் அவனது மனக் கதவைத் தட்டியிருக்கின்றன. ஆரம்பத்திலே சலனத்தை ஏற்படுத்தாத ஒவ்வொரு அசைவுகளும் நாளிலும் பொழுதிலும் அவனை அசைக்கத் தொடங்கிவிட்டன. அந்த மந்திரத்தை எண்ணி அவனால் வியக்க முடியவில்லை – தனது மனமாற்றத்தைத் தவிர்க்க முடியாத பல உணர்வுதான் ஏற்பட்டது. செல்வியை மறந்து விட வேண்டுமென எண்ணினாலும் அடுத்த கணமே அது முடியாத காரியம் போலத் தோன்றும்.

RangaRakes tamilnavarasam.com

செல்வி! இப்படி எதற்காகத் தவிக்க வைக்கின்றாய்? இந்த உள்ளத் துடிப்பு உனக்குப் புரியவில்லையா? எப்பொழுதும் நிதானமாகவும் அமைதியாகவும் இருக்கின்றாய்! அப்படியானால் உனக்கு எந்தவித சலனமுமே தோன்றவில்லையா? எனது ஆசைகள் ஏக்கங்கள் எல்லாம வெறும் கற்பனைகளாக, கனவுகளாக அர்த்தமில்லாதவைகளாகவே போக வேண்டியது தானா? மனம் உன்னைப் பற்றி எப்படியெல்லாம் கனவுகள் காண்கிறது! உன்னை நினைக்காத நாட்களே இல்லாமற் போய்விட்டது. விடியும் பொழுதெல்லாம் உன் நினைவுடனேயே எழுவதையும் தவிர்க்க முடியவில்லை. நாள் முழுதும் உன்னைப் பற்றிய சிந்தனைதான். இரவிலும் உன்னை வட்டமிடுகின்ற எண்ணங்கள் நீண்ட நேரம் உறங்காமற் செய்து விடுகின்றன. இதயத்தில் அடங்காமல் எழுந்து கொண்டிருக்கும் ஒரே கேள்வி—ஒரேயொரு கேள்வி; 'நீ என்னை விரும்புகிறாயா செல்வி' அதற்கு மாத்திரம் பதில் சொல், 'சிவா!' என ஒருமுறை ஆசையோடு அழைத்துவிடு. அப்பொழுது உன் கண்கள் நாணத்துடன் என்னைப் பார்க்கட்டும் — இந்த உலகத்தையே வென்று வருகிறேன்...... ஆனால், நீ ஏன்...பேசாமலே பதுமையைப் போல இருக்கின்றாய்? என்னை உனக்குப் பிடிக்கவில்லையா? என்னை நீ விரும்ப மாட்டாயா?

அவள் விரும்பக் கூடும். அதை எப்படித் தெரியப் படுத்துவாள்? பெண். அதிலும் எனது மாணவி.

—செல்வி! டார்லிங் உன்னை என் மாணவியாகவா கருதுகிறேன்? பார்த்தாயா, என்னையறியாமலேயே 'டார்லிங்' என்ற வார்த்தையும் வெளிப்பட்டு விட்டது! என் அன்புக்குரியவளாக, பிரியத்திற்குரியவளாக, என் காதலியாக, மனைவியாக! உன்னைச் சுற்றிய ஒரு வட்டத்துக்குள்ளேயே எனது எண்ணங்களையெல்லாம் சுருக்கிக் கொண்டு வந்தாய்......பின்னர் வேடிக்கையும் பார்க்கிறாய்? ஒரு சின்னக் குழந்தையைப்போல உனது மடியிலே தவழ

RangaRakes



விரும்புவது புரியவில்லையா? அப்பொழுது நீ என்னை அணைத்துக் கொள்ள வேண்டும்.

—அவன் மனதிலே ஆசைகளின் வளர்ச்சி. அவற்றைத் தடை செய்யும் பொழுது ஏக்கங்களின் வெடிப்பு. அந்த எண்ணங்களை எப்படிப் புரிய வைக்கலாம்? துணிவு எங்கிருந்து வரும்?

ஒரு நாள் அந்தத் துணிவு வந்து விட்டது.

அது ஒரு மறக்க முடியாத மாலை நேரம். அவன் சென்ற பொழுது செல்வியின் வீடு அமைதியாக இருந்தது. வீட்டில் எவருமில்லையோ என நினைத்துக் கொண்டு திரும்பினான், முற்றத்தில் பூஞ்செடிகளின் மத்தியில் நின்று கொண்டு கலைச்செல்வி குரல் கொடுத்தாள்.

''மாஸ்டர்!''

இவன் நின்று திரும்பி நோக்கினான்.

அந்த ரோசா மலர்களில் ஒரு மலராக செல்வியின் முகம் மலர்ந்து போயிருந்தது. ரோசாச் செடிகளில் சிலும்பலாக இருந்த சிறிய கொப்புகளை வெட்டி அழகுபடுத்திக் கொண்டிருந்தாள்.

அந்த மலர்களைப் போலவே அவள் உடலும் மென்மையாக இருக்கும் — மனது குறும்பாகச் சிந்தித்தது. மலரை ஸ்பரிசிக்க வேண்டும் போல உள்ளத்திலே பிறக்கின்ற உந்துதல் — ரோசாச் செடிகளின் அண்மையில் மெல்ல நகர்ந்தான். ஒரு மலரில் இதழ்களைத் தொட்டு அதன் பட்டு மென்மையை உணர்ந்து கொண்டு;

''செல்வி! வீட்டிலே......ஒருத்தரும் இல்லையா?''

''இல்லை!''

''எங்கை போயிட்டினம்?''

tamilnavarasam.com

''அப்பாவும் அம்மாவும்......கோயிலுக்கு......அண்ணையும் வெளியிலை எங்கையோ போட்டார்......''

''வேலைக்காரி இல்லையா?''

''அடுப்படியிலை நிற்கிறாள்.''

அது ஒரு பெரிய வீடு. குசினியில் நிற்பவளுக்கு முன்னுக்கு நடப்பவைகளைக் கவனிக்க முடியாது.

தனிமை!

அவன் செல்விக்காக எண்ணி ஏங்கிய நாட்களிலெல்லாம் கிடைக்காத தனிமை!

வெளியே சென்றவர்கள் தற்போதைக்கு வரமாட்டார்கள் என்ற நம்பிக்கையான துணிச்சல்.

''செ......ல்......வி!''

—அவன் அவளை அழைத்தான். வார்த்தைகள் தொடர்ந்து வெளிவராமல் தொண்டையினுள்ளே அடங்கிப் போயின. பதட்டம் ஏற்பட்டது.

அவனது அழைப்பிற்கு நிமிர்ந்து நோக்கிய கலைச் செல்வி மறுகணமே தலையைக் குனிந்து கொண்டாள்.

என்ன பெண் இவள்! இந்த அழைப்பு அவளுக்கு அலட்சியமாகவா தோன்றுகிறது? இவ்வளவு மென்மையாக அழைத்த வித்தியாசத்திலிருந்தே புரிந்திருக்கலாமே? ஆசை பொங்க அணைப்பது போல, மென்மையாய்த் தடவிக் கொடுப்பது போல எவ்வளவு இதமான அழைப்பு! அது அன்பு நிறைந்த வார்த்தையாக இருக்கவில்லையா?

ஒரு ரோசாமலரைப் பிடுங்கினான். அதை அவளுக்குச் சூட்டிவிட வேண்டுமெனக் கைகளில் அடங்காத ஒரு துருதுருப்பு ஏற்பட்டது. அவளை ஏக்கத்துடன் நோக்கினான். அந்தப் பார்வையை அவள் புரிந்திருக்க வேண்டும்.



மெல்ல, அவளை நோக்கிக் கால்கள் நகர்ந்தன. அண்மையில், மிக அண்மையில், சென்று பின்னர் ஏதோ தடையேற்பட்டது போல நின்றான். செல்வியும் அவனையே பார்த்துக் கொண்டு மௌனமாக நின்றாள். கண்கள் கலந்து கொண்டன. அவள் நாணத்துடன் கண்களை மீட்டாள். பின்னர் மீண்டும் அவனை நிமிர்ந்து நோக்கினாள். அந்த அழைப்பு விடுக்கின்ற பார்வையில் எவ்வளவு நேரமும் சிக்கித் தவிக்கலாம் போலிருந்தது.

அவன் கதைக்க முயன்றான். முடியவில்லை. சுவாசித்தலில் மூச்சு விடுவதே கஷ்டமான காரியம்போற் தோன்றியது. சுவாசப் பையினுட் சென்ற காற்று இயற்கையாகவே வெளிவர மறுத்தது. முயன்று வெளிப்படுத்திய பொழுது ஒவ்வொரு மூச்சும், ''செல்வி!'', ''செல்வி!'' என்ற ஓசையுடன் வெளிப்படுவது போலிருந்தது. இந்த விசித்திரத்தில் கதைப்பது எப்படி?

மீண்டும் பெரும் முயற்சி செய்து மூச்சைப் பிடித்துக் கொண்டு; ''செல்வி!''

அவள் அவனை மோகத்துடன் நோக்கினாள். அந்த விழிகள் அவனை மயக்கின.

''செல்வி......உங்களுக்கு......இந்தப் பூவை நானே......குத்திவிடவா?''

இப்பொழுது அவள் கதைத்தாள்;

''ஆராவது பாத்தினமெண்டாலும்!''

—வெற்றி! அவனது உணர்ச்சிகள் கட்டுக்கடங்க மறுத்தன. 'யாராவது பார்த்தாலும்' என்பதில், 'பார்க்காவிட்டால் சம்மதம்' என்ற அர்த்தம் அடங்கியிருக்கிறதே!

ஆதரவுடன் அவள் கூந்தலைத் தொட்டு அதில் மலரைச் சூட்டினான். அவனது மனதில் பெரிய நிறைவு ஏற்பட்டது. ஆசை பொங்க அவள் முகத்தை நோக்கினான்.

—செல்வி! உன்னைப் பெருமை பிடித்தவள் என்று நினைத்தேன். ஆனால், நீ! எவ்வளவு பணிவோடு எனது அழைப்பை

RangaRakes

tamilnavarasam.com

ஏற்றுக் கொள்கிறாய்? எவ்வளவு அமைதியாக எனது ஒவ்வொரு செயல்களையும் அனுமதிக்கிறாய்!

''முதல்......முதல்......என்னைத் தொட்டுப் பூக்குத்தி விட்டது நீங்கள் தான்......என்னை......நீங்களே கலியாணம் முடிப்பீங்கள்..... எண்டு கடவுள் உணர்த்தினது போலையிருக்குது......''

அவன் அசந்து போனான். கலைச்செல்வி தானா இப்படிப் பேசுகிறாள்! அவளுக்கு இவ்வளவு துணிவும் எங்கிருந்து வந்தது! அல்லது தன்னைப் போலவே மன ஏக்கங்களுடன் அலைந்து......எப்படியாவது ஒரு முடிவு அறிய வேண்டுமென்ற எண்ணத்தில் அப்பிடிச் சொன்னாளா? சிவா! நீ படு முட்டாளடா! எவ்வளவு நுட்பமாக உனது நோக்கத்தைப் புரிந்து கொண்டு தனது எண்ணத்தை வெளிப்படுத்தினாள்! இந்தச் சாதுரியம் யாருக்கு வரும்?

குயிலொன்று கூவுவதைப் போல விட்டு விட்டு ஒவ்வொரு வார்த்தைகளாக அவள் கதைத்த விதம் காதுகளிலிருந்து மறைய மறுத்தது. சொல்லி முடித்து ஏதோ தவறு செய்து விட்டவள்போல கலக்கத்துடன் நின்றாள். அவளது கண்களும் கலங்கிப் போயிருந்தன.

அதைக் கண்டு இவனும் கலங்கிப் போய் விட்டான். 'செல்வி! நான் உன்னைக் கைவிட்டு விடுவேனென்றுதான் கலங்குகிறாயோ?' எனக் கேட்க வேண்டும் போலிருந்தது. 'கண்ணே! உன்னை என் உயிருள்ளவரை கைவிடமாட்டேன்.' எனத் தன் நெஞ்சோடு அணைத்துக் கொண்டு சொல்ல வேண்டும் போலுமிருந்தது. ஆனால், நினைத்தது போல எதையுமே செய்ய முடியவில்லை. கண்ணீர் இமைகளின் தடையையும் மீறி வழியத் தொடங்கியது.

அவனது கண்ணீரைக் கண்டு செல்வி துடித்துப் போனாள். சற்றும் எதிர்பாராத விதமாக அவனது முகத்திலே கை

RangaRakes



யைப் பதித்து கண்ணீரைத் துடைத்து விட்டாள். அந்த நேரத்தில், தாயொருத்தியின் அணைப்பில் இருக்கின்ற ஒரு குழந்தையின் உணர்வை அடைந்ததும் இன்னும் அழுகை வந்தது. செல்வியின் கையை அவன் பற்றிக் கொண்டான். அப்படியே தன் உதடுகளில் அந்தக் கையைப் பதித்து முத்தமிட்டான். அவன் சொல்ல விரும்பியதையெல்லாம் சொல்லிவிட்ட நிறைவும் அவளிடம் எதிர் பார்த்த எல்லாமே கிடைத்து விட்ட திருப்தியும் ஏற்பட்டது.

அலையொன்று கற்களில் மோதி சிவகுமார் மீது தண்ணீரைத் தெளித்தது. பழைய நினைவலைகளில் மிதந்து வந்தவன் கல்லொன்றில் அமர்ந்திருப்பதை உணர்ந்தான். அற்புதமான கனவொன்று கலைந்து விட்டதைப் போன்ற மனநிலை ஏற்பட்டது.

அலைகள் ஓய்வதில்லை என்பது உண்மைதான். அதோ! தூரத்திலே பொங்கி வருகின்ற கடலலைகள்! முன்னே வருகின்ற அலைகள் கரையில் மோதிச் சிதறிவிட, மீண்டும் அலைகள் பொங்கி வருகின்றன. இது தொடரும்; அலைகள் ஓயாது.

''இனிப் போய்ச் சமைக்க வேண்டுமே!'' என்ற நினைவு தோன்றியதும் சலிப்புணர்வுடன் இருக்கையை விட்டு எழுந்தான் சிவகுமார்.

tamilnavarasam.com

# அத்தியாயம் - 12

இருளப் போகின்றது—

இரண்டு முப்பது மெட்னி காட்சிக்குப் போயிருந்த ஜெகநாதன் ஏற்கனவே அறைக்கு வந்து விட்டான். முகட்டைப் பார்த்தவாறு கட்டிலிற் படுத்து சிகரட்டில் லயித்துக் கொண்டிருந்த அவனைக் கண்ட சிவகுமார் "என்ன சமைக்கிற யோசனையில்லையோ?" என எழுப்பினான்.

"சமைப்பம்..... இப்ப என்ன அவசரம்?" என அவனிடமிருந்து சோம்பலான பதில் வந்தது.

"சமைக்கிறதுக்கு அவசரமில்லை......பிறகு சாப்பாட்டுக்கு அவசரம் வந்திடுமல்லே?"

அவர்கள் சமைப்பதற்கு ஆயத்தம் செய்து கொண்டிருந்த பொழுது புதிய செய்தியொன்றுடன் அறைக்கு வந்தான் மகேந்திரன்.

'மச்சான்!...... ஒரு சங்கதியெல்லே! இண்டைக்கு ஓராள் என்னட்டை எக்கச்சக்கமாய் மாட்டுப்பட்டிட்டுது.'

அவனது புதிரைப் புரிந்து கொள்ள முடியாமல் நண்பர்கள் இருவரும் விழித்தார்கள்.

"என்னடாப்பா? விழங்கக் கூடியதாய்ச் சொல்லன்!" —ஜெகநாதன் அவசரப்படுத்தினான். அவனது வழக்கமான மன்மதலீலைகளாகத் தான் இருக்கும். வயிற்றெரிச்சலான விஷயமென்றாலும் அவன் தத்ரூபமாக விபரிப்பதைக் கேட்காமல் இருக்கவும் மனது கேளாதே!

"சொல்லத் தானே போறன்......அந்த ரகசியத்தை அம்பலப்படுத்தாமல் விடலாமா?"



"சரி......கனக்க அலட்டாமல் சொல்லடாப்பா!"— அப்படி என்ன ரகசியத்தைச் சொல்லப் போகிறான்?

"எனக்குத் தெரியும் மச்சான்! இவள் சாதாரண ஆளாய் இருக்க மாட்டாளெண்டு...... ஊரை விட்டிட்டு வெளிக்கிட்டவுடனே தாங்கள் பெரிய மகாராணிகள் என்ற நினைவு!......நேரிலை பார்த்தால் இந்தப் பூனையும் பால் குடிக்குமோ எண்டு நினைக்கிற அளவுக்குப் பதுங்கிக் கொண்டு திரிவாளவை...... ஊருக்குப் போனால் தாங்கள் பெரிய கற்புக்கரசிகள் என்று நடிக்கிறது...... இஞ்சை அவையின்ரை ஆட்டத்தைப் பார்த்தாலல்லோ தெரியும்." எனக் கூறிவிட்டுத் தனது பிரசங்கத்தை இடை நிறுத்தினான் மகேந்திரன், நண்பர்களின் அபிப்பிராயத்துக்குச் சந்தர்ப்பமளிப்பது போல.

ஜெகநாதனால் இனிப் பொறுக்க முடியாது. யாரோ ஒரு பெண்ணுடைய ரகசியம் அம்பலத்துக்கு வருகிறது. இந்த சுவாரஸ்யத்தைக் கேட்காமலிருக்க முடியுமா?

"ஆரையெடா சொல்லுகிறாய்?......என்ன விஷயம்?"

"வேறை ஆர்?......எங்கடை பக்கத்து வீட்டுப் பதிவிரதை...... கற்புக்கரசி...... அகிலாவைப் பற்றித்தான் சொல்லுறன்!"

—சிவகுமாருக்கு இப்பொழுது அதிர்ச்சி. ஆட்டைக் கடித்து மாட்டைக் கடித்துக் கடைசியாக என்ன அநியாயக் கதையைச் சொல்ல வந்திருக்கிறான்? நாளுக்கு நாள் அகிலாவைப் பற்றி ஏதாவது சொட்டைக் கதைகளைக் கதைக்காவிட்டால் அவர்களுக்கு உறக்கம் வராது. இது கூட அந்த முயற்சிதானா?

ஜெகநாதன் ஆவலோடு மகேந்திரனை உற்சாகப்படுத்தினான். என்ன சங்கதி மச்சான்? உவள் சரியான அமு

RangaRakes tamilnavarasam.com

சடக்கிக் கள்ளியாயிருப்பாளெண்டுதான் நானும் நினைச்சனுன்!

ஒரு பெண் வாய் திறந்து நியாயம் கேட்க வரத் துணிய மாட்டாள் என்பதற்காக நினைத்தபடி எதையும் பேசிவிட்டுப் போகலாமா? மேலும் சகித்துக் கொண்டிருக்க முடியாமலே சிவகுமார் வாய் திறந்தான்.

''கதைக்கிறதை யோசிச்சுக் கதையடாப்பா......உனக்கும் அக்கா......தங்கச்சி இருக்கினம்......ஏன் ஒருத்தி மேலே தேவையில்லாமல் பழி சுமத்திறியள்?''

மகேந்திரனுக்கு அந்தச்சூட்டைத் தாங்க முடியவில்லை.

''எனக்கு அக்கா, தங்கச்சி இருக்கினமெண்டாப்போலே ......அதுகளும் உவளைப் போலே ஆடிக்கொண்டு திரியுதுகளோ?......... நான் கண்ணாலே கண்டதைத்தான் சொல்லுறன்......'' எனக் கூறிவிட்டுப் பின்னர் ஜெகநாதனைப் பார்த்து, ''அவவைப் பற்றிக் குறை சொன்னவுடனே இவருக்கு வர்ற கோபத்தைப் பாரன்!'' என்று ஏளனமாகத் தனது எரிச்சலை வெளிப்படுத்தினான். அக்கா, தங்கச்சியைக் குறிப்பிட்டுக் கதைத்தது அவனுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும்.

ஜெகநாதனுக்குப் பெரிய ஏமாற்றம். சிவகுமாரது குறுக்கீட்டினால் மகேந்திரன் மேற்கொண்டு கதையைச் சொல்லாமல் விட்டு விடுவானோ என்ற கவலையும் தோன்றியது.

''அவன் விசரனை விட்டிட்டு......நீ சொல்லு மச்சான்!'' ஆரம்பத்திலிருந்த உற்சாகம் குறைந்து விட்டாலும் ஜெகநாதனின் தூண்டுதல் அவனைத் தொடர்ந்து பேச வைத்தது.

''அகிலாவை இண்டைக்குப் பின்னேரம் பிளாசாத் தியேட்டரிலே கண்டனான்...... மெட்னி ஷோவுக்கு வந்திருந்தாள்......''



''தனியவோ? அல்லது ஆரோடையேன் வந்தவளோ?'' ஜெகநாதன் அங்கலாய்த்தான். அவன் கூட பிளாசாவுக்குத் தான் போயிருந்தான். தனக்கு அந்த 'சான்ஸ்' கிடைக்கவில்லையே!

''அவள் இன்னொருத்தனோடை வந்திருந்தாள். என்னைக் காணயில்லை......நான் ரகசியமாய் எல்லாத்தையும் நோட் பண்ணிக் கொண்டுதான் இருந்தனான்......''

''அடச்சீ! எனக்குத் தெரியாமல் போச்சுதே!''—ஜெகநாதன் குறுக்கிட்டான்; ''அவன் யாரெண்டு தெரியாதே?''

''தெரியாது!......பொறு!...... இன்னும் இரண்டொரு நாளிலே விசாரிச்சுப் பிடிச்சுப் போடுறன்...... இவ ஒபிசிலேயும் ஒரு மாதிரியெண்டு தான் கேள்வி!''

சிவகுமாருக்கு அதற்கு மேலும் பொறுமையாக இருக்க முடியவில்லை.

''உங்களுக்கேன் மற்றவயின்ரை கதையள்?......முதலிலே உங்களைத் திருத்திக் கொண்டு மற்றவயின்ரை குறையைக் கதையுங்கோ!''

மகேந்திரன் நிதானமாகச் சொன்னான்; ''நாங்கள் ஆம்பிளையள்!......எப்பிடியும் நடப்பம்......நீரேன் அவவுக்குப் பரிஞ்சு கதைக்கிறீர்?''

ஆம்பிளையள் எண்டாப்போலே என்னத்தையும் செய்யலாமெண்டு எண்ணமோ?...... உங்களைப்போலே ஆம்பிளையள் இருக்கிறபடியாத்தான் அப்பிடியும் பொம்பிளையள் கெட்டுப் போகுதுகள்!''

''இவர் பெரிய திறம்! விடிஞ்சால் பொழுதறதியும் அவவின்ரை வீடே கதியெண்டு கிடக்கிறாய்; பிறகு பெரிய ஞாயம் பேசிறாய்!......எப்பிடியோ...... இப்ப அவளை கெட்டவள் என்றதையாவது ஒப்புக் கொள்கிறாய் தானே?''

RangaRakes tamilnavarasam.com

அவனை ஓங்கி அறைய வேண்டும் போலிருந்தது. வரிந்து கட்டிக் கொண்டு ஒரு பெண்ணைக் கெட்டவளென்று பட்டம் சூட்டி விடுவதில் இவனுக்கு என்ன லாபம்? சில நாட்களாக அவளுக்குப் பின்னாலும் முன்னாலும் திரிந்து பல் இளித்துப் பார்த்து அதிலெல்லாம் தோல்வி கண்ட ஆற்றாமையினாற்தான் இப்படியொரு பழியைச் சுமத்துகிறான்? அல்லது......அவன் சொல்வதிலும் ஏதாவது உண்மை இருக்குமா? இல்லை; அகிலாவின் கள்ளம் கபடமில்லாத மனதில் இப்படியொரு கீழ்த்தரமான சுபாவம் ஒளிந்திருக்க முடியாது.

''மகேந்திரன்! நீ சொல்லுறதை நான் ஒருக்காலும் நம்பமாட்டன்...... அகிலா பாவம்...... இப்படி அநியாயமாய் பழி சுமத்தாதை''—சிவகுமாரின் உறுதியான வார்த்தைகளில் இரக்கம் கலந்திருந்தது. மகேந்திரன் சினத்தோடு ''அப்பிடியென்றால் நான் பொய்யா சொல்லுறன்?'' எனப் பாய்ந்தான்.

''அப்பிடியும் இருக்கும்!'' என எரிச்சலோடு பதிலளித்தான் சிவகுமார். இது அவனது கோபத்தை இன்னும் அதிகரித்தது.

''ஓ!.......நீ எப்படி ஒப்புக் கொள்ளுவாய்?.......அவள்தானே உனக்கு மருந்து போட்டு மயக்கி வைச்சிருக்கிறாள். ......அவளைக் குறை சொன்னால் உனக்குச் சுடும் தானே?''

வீட்டுக்காரரின் நாய் எதற்காகவோ, 'வாள், வாள்' என்று குரைக்கின்ற சத்தம் கேட்கிறது. அது இப்பிடித்தான்; சில வேளைகளில் ஒன்றுமில்லாத ஒன்றிற்குப்போய் எதையோ பேய், பிசாசைக் கண்டுவிட்டது போல அவதி அவதியாகக் குரைத்துவிட்டு ஓயும்.

''சிவா!......உண்மை சுடும்தான். நீ என்ன நோக்கத்திலை அவளோடை பழகிறியோ தெரியாது!......அவள் உனக்கு நல்லவளாய் நடிச்சுக்கொண்டு வெளியிலை நடத்தை



கெட்டுத் திரியிறாள்!...... உன்னோடை கூடிப் பழகின குற்றத்துக்கெண்டாலும் புத்தி சொல்ல வேண்டியது எங்கடை கடமை. அதுதான் சொல்லுறம்......அவளின்ரை சகவாசத்தை விட்டிடு!'' ஜெகநாதன் வலுகரிசனையோடு ஆலோசனை வழங்கினான்!

''சும்மா......விசர்க்கதை கதையாதை ஜெகநாதன்!...—எதையும் தீர விசாரிச்சுப் போட்டுத்தான் கதைக்க வேணும்......கண்ணாலை காணுறதும் பொய்...... காதாலை கேக்கிறதும் பொய்......'' சிவகுமாரது நெஞ்சிற் குமுறலெடுக்கின்ற வேதனை சீற்றமான வார்த்தைகளாக வெளிப்பட்டன.

''அது லேசிலை விடக்கூடிய சகவாசமெண்டால் விடலாம்......இது முத்திப்போன சங்கதியெல்லே?'' மகேந்திரன் ஏளனமாகக் கதைத்தது சிவகுமாரை உணர்ச்சிவசப்படச் செய்தது.

''நான் எந்த வித்தியாசமான நோக்கத்தோடையும் பழகவில்லை. அப்படிப் பழகவேண்டிய அவசியமும் எனக்கில்லை......இதை எவ்வளவு சொல்லியும் நம்பாமலிருந்தால் நான் என்ன செய்யிறது?......ஒண்டை மாத்திரம் உறுதியாய்ச் சொல்லுறன்—அகிலா நல்லவள். அவளைப் பற்றி நீங்கள் என்ன சொன்னாலும் நம்பமாட்டன். எல்லா விசயத்திலையும் ஏன் பொம்பிளையளை மாத்திரம் சந்தேகத்தோடை பாக்கிறீங்கள்? இந்தச் சமூக அமைப்பிலை அதுகளுக்குக் கிடைச்சிருக்கிற சாபக்கேடு இது! உங்களைச் சொல்லிக் குற்றமில்லை.''

—சிவகுமார் நிச்சயமாக ஒரு மடையன் என முடிவுகட்ட வேண்டியதுதான். எப்பிடிச் சொல்லியும் கேட்கிறானில்லை, இடையிலை வந்த ஒருத்திக்காக எவ்வளவோ காலம் பழகி வந்த தங்களது சொல்லை அவன் நம்புகிறானில்லை; ''கடவுளே! அந்த ஆட்டக்காரியை இவன் கலி

RangaRakes tamilnavarasam.com

யாணம் முடிச்சுக் கொண்டு......பிறகு கிடந்து கவலைப்பட வேணும்,......அப்பதான் புத்திவரும்''—மகேந்திரன் ஆவேசம் வந்தவனைப் போலக் கூறினான்.

சிவகுமார் மௌனம் சாதித்தான். என்னத்தையாவது சொல்லிவிட்டுப் போகட்டும். இனம் புரியாத கவலை மனதை அரிக்கத் தொடங்கியது, அது;

ஒன்றாக இருந்து சீவிக்கின்ற நண்பர்கள் ஏன் இப்படி விரோதிகளைப் போல நடந்து கொள்கிறார்கள் என்பதனாலோ அல்லது ஒரு பேதைப் பெண் மேல் எதற்காகப் பழி சுமத்தித் தொலைக்கிறார்கள் என்பதனாலா என்று புரியவில்லை. உண்மை எது? பொய் எது? யாரை நம்புவது? யாரை நம்பாமல் விடுவது?

ஏதோ நினைத்துக் கொண்டவனைப் போல சிவகுமார் எழுந்து வெளியேறினான். அவன் அகிலாவைக் காணத்தான் போகிறான் என இவர்கள் நினைத்துக் கொண்டார்கள்.

சற்றுநேர அமைதிக்குப் பின் ஜெகநாதன் சொன்னான், மகேந்திரன் நானும் பிளாஸாவுக்கு வந்திருந்தனான். மகேந்திரனின் முகத்தில் சற்று கலவரம் ஏற்பட்டது. தடுமாறியவாறு ''நீ......அவையளைக் காணயில்லையே?'' என்றான்.

''இல்லை......உன்னைக் கண்டனான்!''

''அப்ப......ஏன் வந்து கதைச்சிருக்கலாமே?'' அவன் வந்தானா என உண்மை பொய் அறிய வேண்டுமென்ற ஆவல் மகேந்திரனுக்கு,

''நீ ......பால்கனிக்குப் போனாய் ...... எப்பிடி வந்து கதைக்கிறது?......நீ போன போக்கும் சரியில்லை......''

மகேந்திரன் மௌனியானான்.



ஜெகநாதன் தொடர்ந்து கேட்டான்; ''ஆரடாப்பா உன்னோடை வந்த கேர்ள்?''

மகேந்திரன் கள்ளச் சிரிப்பை உதிர்த்தவாறு சொன்னான்; ''அதுதான் நான் சிங்கள ரியூசன் எடுக்கிற கேர்ள்!''

வெள்ளவத்தை தேவாலய மணி கணீரென ஒலிக்கத் தொடங்கியது.

# அத்தியாயம் - 13

காலையிற் பூத்த மலர் வாடிப் போயிருக்கிறது. அகிலா வாசலில் நிற்பதைக் கண்டும் எதுவுமே பேசாமல் உள்ளே நுழைந்து கதிரையில் அமர்ந்தான் சிவகுமார். அவளும் அவனது மனநிலையை உணர்ந்தவள் போல மௌனமாக நின்றாள்.

சிவகுமார் இருந்தாற் போல நிமிர்ந்து அகிலாவைப் பார்த்தான். அந்தக் கண்களின் ஆராய்ச்சியை அவளால் தாங்க முடியவில்லையோ? தலை குனிந்து கொள்கிறது. நிமிர்ந்து நேருக்கு நேர் நோக்கும் திராணி இல்லையென்றால்......?

சிவகுமாருக்கு குரல் கொடுத்து கதைப்பதற்குக் கூட சக்தியில்லாதது போன்ற சோர்வு;

''அகிலா!''

அந்த அழைப்பை எப்படிப் புறக்கணிக்க முடியும்? அவள் தலையை நிமிர்த்தினாள். கண்கள் கலங்கிப் போயி

RangaRakes
tamilnavarasam.com

ருக்கின்றன. அவனது பார்வையைச் சந்திக்கும் கண்ணீர் உடைத்துக் கொண்டு வந்தது. அவனுக்கு வேதனை - அறையில் நடந்த சம்பாஷணையை அகிலா கேட்டிருக்கக் கூடும்.

''அகிலா...... கவலைப்படாதையுங்கோ ...'' - அதற்கு மேல் அவனால் கதைக்க முடியவில்லை. எந்த முகத்தை வைத்துக் கொண்டு கதைக்கலாம்? துக்கம் தொண்டையை அடைத்தது.

''அவங்களுக்கு வேலையில்லை......'' என்று மாத்திரம் சொன்னான். அவளது மனதைச் சமாதானப் படுத்த அந்த அளவிற்காவது கதைக்க முடிந்ததே பெரிய காரியம்தான்.

''நான்...... எல்லாம் கேட்டிட்டுத்தானிருந்தன்......'' சிவகுமாரதுநெஞ்சிலே 'திக்' கென்ற அதிர்ச்சி.

அகிலா தொடர்ந்து பேச முடியாமல் நின்றாள். தனக்காகப் பரிந்து பேசுவதற்கு ஓர் உள்ளம் இருக்கிறது. பல சந்தர்ப்பங்களில் அவனது நல்ல சுபாவத்தை உணர்ந்திருக்கிறாள். அந்த அன்பையும், பரிவையும், பாசத்தையும் எண்ணுகின்ற பொழுது, தான் அதற்கெல்லாம் தகுதியானவள் தானோ என்ற எண்ணமும் தோன்றியது. அந்தக் காரணத்துக்காகவே அழுகையும் பீறிட்டுக் கொண்டு வந்தது; அவனிடம் எதையுமே மறைத்திருக்கக் கூடாது.

''சிவா...... அவனுகள் கதைச்ச...... உண்மைதான்!''

எரிமலையொன்று வெடித்தது. சிவகுமார் ஆச்சரியத்துடனும் இப்படியும் நடக்குமா எனும் அதிசய உணர்வுடனும் அவளைப் புதினமாகப் பார்த்தான். மீளமுடியாத அதிர்ச்சி. இந்தப் பூனையும் பால் குடிக்குமா?

பெண்களின் சரித்திரத்தில் எங்கள் சமூகம் எவ்வளவு கரிசனையாயிருக்கிறது! இவள் இப்படி நடக்கலாமா? ஏன் தனக்குத் தானே அழிவைத் தேடிக்கொள்கிறாள்? ஆண்கள்



நேர்மையாக நடக்க வேண்டும் என்ற வாதம் ஒரு பக்கம் இருக்கட்டும். இதனால் ஏற்படக் கூடிய பாதிப்பு பெண்களைத்தானே தாக்கும் என்பதையாவது மனதில் வைத்து கவனமாக நடக்கத் தெரிய வேண்டாமா?

சிவகுமாரது மனது அலைக்கழிந்தது, அவள் இப்படி நடப்பதற்கு என்ன காரணம்? அவளை ஒரு கெட்டவளாகவும் கணித்துவிட மனம் இசையவில்லை. யாரையாவது காதலிக்கிறாளோ? அல்லது ஏதேனும் தவிர்க்க முடியாத நிர்ப்பந்தமாக இருக்குமோ?

''அகிலா அழாதையுங்கோ...... உங்களுக்கு என்ன பிரச்சினை......? மனசை திறந்து உள்ளபடி சொல்லுங்கோ...... என்னாலை முடிஞ்சவரை உதவி செய்யிறன்.''

அவளது கண்களை நிறைக்கின்ற கண்ணீர் இப்பொழுது எதையும் சொல்லக்கூடிய மனநிலையில் இருக்கமாட்டாள் என உணர்த்தியது. சற்று நேரம் அழுது தீர்க்கட்டும் எனப் பேசாமலிருந்தான். பின்னர் கவனத்தை வேறு பக்கமாகத் திருப்ப முயற்சித்தான்.

''எங்கை அகிலா...... அம்மாவைக் காணயில்லை?''

''மார்க்கட்டுக்குப் போனா......''

அப்பாடா! இப்பவாவது இந்தத் திருவாய் மலர்ந்ததே......''

அகிலாவுக்கு வேதனையிலும் ஒரு மென்மையான சிரிப்பு மலர்ந்தது.

''இருங்க தேத்தண்ணி போட்டிட்டு வாறன்'' என்றவாறு எழுந்து சென்றாள்.

கால்களை நீட்டி தலையைக் கதிரையின் சார்விற் பதித்து மேலே நோக்கியவாறு அமர்ந்து கொண்டு நெற்றியைக்

RangaRakes tamilnavarasam.com

கையினால் வருடினான். பூச்சியொன்று 'லைட்' டைச் சுற்றி சுற்றி வட்டமிட்டுச் கொண்டிருக்கிறது. பாவம்; அதி லேயே விழுந்து மாய்ந்து போகுமோ?

சற்று நேரத்தில் அகிலா தேநீருடன் வந்தாள். தேநீரை வேண்டி ஆவலோடு பருகினான். ஒரு தாயைப் போன்று பரிவோடு பார்த்துக் கொண்டிருந்தாள் அகிலா- நன்றாக களைத்துப் போயிருக்கிறான், பாவம்.

''சிவா ஏன் அவனுகளோடை சண்டை பிடிச்சீங்க?''

''பின்னை என்ன?...... எவ்வளவு அநியாயமான கதை யெல்லாம் கதைக்கிறாங்கள்!''

''இல்லை அவனுகள் சொன்னது உண்மைதான்.''

''என்ன உண்மை?''

''இன்னொருத்தரோடை படத்துக்குப் போனன்தான்''

சிவகுமார் மேற்கொண்டு பேசாமலே இருந்தான். பாவத்துக்குத் துணை போனதாக அவள் ஒப்புவிக்கும் போது என்ன செய்வது? அவள்மேல் கோபமும் பற்றிக் கொண்டு வந்தது.- 'சீ! நான்தான் தப்புக் கணக்கு போட்டு விட்டேனா!'

அவள் நினைத்தாள்; அவனுக்கு உண்மை சொல்ல வேண்டும். இல்லாவிட்டால் அவனது நல்ல மனதுக்குச் செய்கின்ற துரோகமாகும். சொல்லாமல் விட்டதும் தவறு தான்.

''சிவா, படத்துக்கு என்னோடை வந்தவர் என்னைக் கலி யாணம் செய்ய இருக்கிறார்.''

விளக்குகள் சட்டென்று அணைந்தன. கும்மிருட்டில் சிவகுமாரது முகமாற்றத்தைக் கவனிக்க முடியவில்லை.



மின்தடை ஏற்பட்டிருக்க வேண்டும். தலைநகரில் இப் படியான ஒரு நிலைமையைக் கற்பனை செய்து பார்த்தான் சிவகுமார். வீதிகள், வியாபார நிலையங்கள், களியாட்ட விழாக்கள் சனங்கள் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் வெளிச்சம் சடுதியாக அற்றுப் போய் இருள் ஆக்கிரமிக் கின்ற பொழுது எப்படி இருக்கும்; பெரியதெருக்கள் எல் லாம் இப்படித்தான் இருக்குமா? அந்த இருளில் வாகனங் கள் கண்களைக் குற்றுகின்ற ஒளியை உமிழ்ந்தவாறு ராஜாக் களைப் போலச் செல்லும். எத்தனையோ பேர் சினந்து கொள் வார்கள். அவை யாருக்காகவும் கவலைப்படாமல் ஓடும்.

அகிலா இருளிலே எழுந்து தட்டுத் தடுமாறி நடந் தாள். மேசை லாச்சியொன்றில் இருக்கும் மெழுகுதிரியை யாவது எடுத்துக் கொளுத்தலாம் என்ற நினைவுடன் லாச் சியைத் திறந்த பொழுது வெளிச்சம் பளிச்சென்று வந்தது. சிவகுமார் சிரித்துக்கொண்டிருந்தான்; 'என்ன லவ்வரா' என்றான்.

''உங்கட பாசயில சொன்னா அப்பிடித்தான்.''

அவன் அதைப்பற்றி அபிப்பிராயம் சொல்ல விரும்ப வில்லை. வரப் போகிறவன் நல்லவனாக இருந்தாற் சரிதான்.

''இந்த நல்ல மனதைக் கவர்ந்த கள்வன் யாரோ?',

''என்ன கேலி பண்றீங்கள்...... சிவா?''

''இல்லை உண்மையாத்தான் கேக்கிறன்.''

''அவரும் எங்கடை ஒப்பீசிலை தான் வேலை செய்கிறார் எங்கட பக்கம்தான்...... கிழக்கு மாகாணம்.''

''அப்ப உங்கட ஊர்க்காரரைத்தான் தேடிப் பிடிச்சி ருக்கிறீங்கள் என்று சொல்லுங்கோ......''

RangaRakes tamilnavarasam.com

"அப்பிடியெண்டில்லை...... அவர்தான் நான் இன்ன இடமெண்டு தெரிஞ்சிட்டு வந்து வந்து கதைச்சார்......"

கொழும்பில் இப்படி ஆரம்பிக்கின்ற எத்தனையோ அலுவலகக் காதல்கள் போகின்ற இடம் தெரியாமல் போகின்ற கதைகள் எல்லாம் அவனுக்குத் தெரியும். அகிலா என்ற மென்மையான மலரை விரும்புகிறவன் நேர்மையானவன்தானே என்னவோ?

"அகிலா...... உங்களுக்கு ஒரு சந்தோசமான வாழ்க்கை அமைஞ்சால்...... முதலிலை மகிழ்ச்சியடைகிறவன் நான் தான்" என ஆரம்பித்து எப்படிச் சொல்வது எனப் புரியாமல் தடுமாறினான். நீங்கள் கொஞ்சமெண்டாலும் முன் யோசனையோடை நடக்கவேண்டும்...... நான் அடிக்கடி சொல்லுவன்...... இந்த விஷயத்திலை பொம்பிளையள் நெருப்பாய் இருக்கவேணும்...... ஆம்பிளையளிலை எத்தனையோ பேர் நச்சுப் பாம்புகள். அந்த விஷம் பாதிக்காமல் உங்களைப் பாதுகாக்க வேண்டியது உங்கடை பொறுப்புத்தானே?...... ஆம்பிளையள் இந்த விஷயத்திலை சுயநலமாய்த்தான் இருப்பாங்கள். சொல்லுறனெண்டு குறை நினையாதையுங்கோ...... கலியாணம் முடிக்க முதல் இப்பிடிக் கண்டபடி சேர்ந்து திரியிறது சரியில்லை."

தான் நினைப்பதை எப்பிடிப் புரிய வைப்பது என அவனுக்குப் புரியவில்லை. அவள் புரிந்து கொண்டாள்.

"நீங்கள் என்ன சொல்லுறீங்களெண்டு விளங்குது...... நானும் இப்பிடியெல்லாம் திரிய விருப்பமில்லைதான்...... ஆனா......"

"என்ன ஆனல்...... எல்லா கேர்ள்சும் இப்பிடித்தான்...... தங்களை லெவலாய்க் கதைக்கிறது...... உங்களுக்கு விருப்பமில்லாமலா காதலிக்கிறீங்கள்!"- அவன் கிண்டலாகத்தான் கேட்டான்.



அவள் "தலைவிதி!" என்றாள்.

சிவகுமார் திடுக்குற்றான். அப்படி என்ன தலைவிதி? நிர்ப்பந்தமா?

"அகிலா! உங்கடை போக்கு எனக்கு ஒண்டும் விளங்குதில்லையே!"

"எனக்கே என்னெண்டு விளங்கல" அகிலா வலிந்து சிரித்துக் கொண்டாள். அவன் எரிச்சலடைந்தான்,

"என்ன விசர்க்கதை கதைகிறீங்கள்?"

"ராஜேசன் நல்லவர்...... எண்டு தான் நானும் முதல்ல நினைச்சன்...... நான் வேலைக்கு வந்த புதுசில வலிய வலிய கதைச்சார்...... ஒரு ஜெண்டில்மன் மாதிரி உதவி செய்தார். அவர் என்னை விரும்புகிறார்போல எண்டு நினைச்சன்.

"அவரும் அப்பிடித்தான் சொன்னார்...... எண்டாலும் நான் சம்மதிக்கவில்ல எங்கட குடும்ப நிலையை நினைச்சுப் பயந்துதான். அவர் அதையெல்லாம் சொல்லிக் கேட்கல்ல........ ஆர் என்ன சொன்னாலும் என்னத்தான் கலியாணம் முடிக்கிறதென்று சொன்னார்.

"அவற்ற பிடிவாதம்தான் என்னை மாத்திச்சு...... என்னில இவ்வளவு அன்பும் விருப்பமும் உள்ளவரோட வாழுறதில பிழை இல்லத்தானே எண்டு நினைச்சன்...... அதோட எனக்கு இப்பிடியொரு அதிஷ்டம் கிடைக்கிறது, பெத்தவங்களுக்கும் பாரமில்லாமற்போகும் எண்டு தோன்றிச்சு......

"போகப் போகத்தான் அவர் கண்ட கண்ட கேர்ள்ஸ் சோடை திரியிறது எண்டும் தெரிஞ்சுது ..... எண்டாலும் என்ன செய்ய?"

RangaRakes tamilnavarasam.com

கண்களில் பனித்த கண்ணீரை விரலினால் தட்டிவிட்டவாறே தொடர்ந்தும் பேசினாள் அகிலா.

''என்ன இருந்தாலும்...... அவர் என்னில அன்பு குறையாமத்தான் பழகினார்...... அவரோட இவ்வளவு பழகியாச்சு...... சபலபுத்தி உள்ளவரெண்டாப் போல விடுறதா? திருத்தலாமெண்ட நம்பிக்கை இருக்கு. அதுக்காகத்தான் அவர் விரும்புற மாதிரியெல்லாம் நடக்கிறன்...... இல்லாட்டி வேறை கேர்ள்ஸோட அவர் திரியிறதப் பார்த்துக் கொண்டிருக்கேலுமா?''

சிவகுமார் அவளது மனதை சமாதானப்படுத்துவது போல, ''அகிலா மனிசனை உருவாக்கிறதும் அழிக்கிறதும் பெண்களின்ரை கையிலதான் இருக்குது. நீங்கள் கெட்டித்தனமாய் நடந்து கொள்ளுங்கோ...... உங்கடை 'லவ்வர்' திருந்துவார். ...... உங்களைப்போல......ஒருத்தி கிடைக்கக் குடுத்து வைக்கவேணும்.''

அகிலா தன் மனக் குமுறல்களையெல்லாம் மறைத்துக் கொண்டு சிரிக்க முயன்றாள். சிவகுமார் தனக்காக வீணே கவலைப்படக்கூடும் என்று எண்ணியவள்;

''சிவா...... இதுக்காகக் கவலைப்படாதீங்க...... எனக்கொரு மன வருத்தமுமில்லை...... அவர் என்னை வைச்சுக் காப்பாற்றுவார் சரிதானே? என ஆறுதல் கூறினாள்.

ஒன்றில் ஒன்று தங்கியிருக்கும் இயல்பு. ஒருவரை ஒருவர் தேற்றுவதற்கு இரண்டு ஒத்துப் போகக் கூடிய உள்ளங்கள் தேவைப்படுகிறது. இப்படி ஒருவரின் கவலையை மற்றவரால் மறக்கடிக்கப்படக் கூடிய வசதி இல்லாவிட்டால் எத்தனை பேருக்கு பயித்தியமே பிடித்துவிடும்?

# அத்தியாயம் - 14

மின் குமிழ் வெளிச்சம் மேசையில் அடுக்கப்பட்டிருந்த போத்தல்களில் பட்டுத்தெறிக்கிறது. -மெண்டிஸ் ஸ்பெஷல். அதற்கு 'சண்டி' யாக பிளேய்ன் சோடா. சில பேருக்கு லெமெனெட்தான் பிடிக்குமாம். ஸ்பெஷலின் கசப்பை அது கொஞ்சம் குறைத்துக் காட்டும் என்பதாற் போலும். பொலித்தீன் தாள்கள் உரிக்கப்படாத சிகரட் பைக்கட்டுக்கள் புதிய பொலிவுடன் காட்சியளிக்கின்றன.

கட்டிலில் வந்தமர்ந்த நண்பனொருவனுக்கு வியர்த்துக் கொட்டுகிறது. பார்ட்டிக்கு சரியான நேரத்துக்கு வர வேண்டுமென்பதற்காக அவசரமாக நடந்திருப்பான். மகேந்திரன் அறையின் யன்னலை திறந்து விடுகிறான். இன்னும் ஒரு சிலர் வரவேண்டியிருக்கிறது. 'ரேஸ்ற்' றுக்காகப் பொரிக்கப்படுகின்ற இறைச்சியின் மணம் நாக்கில் ஜலத்தை ஊற்றெடுக்கச் செய்கிறது. பஞ்சலிங்கத்தார் குறிப்பிட்ட நேரத்துக்கு வந்திறங்கி தனது சைக்கிளை பவுத்திரமாக ஓரப்படுத்தினார். ''எதுக்கு நேரந் தவறினாலும் இதுக்குப் பிந்தமாட்டாங்கள்......'' உள்ளே யாரோ ஜோக் அடிக்கிறார்கள். எல்லாருக்கும் முதல் நீதானே வந்தனீ?'' 'பதில் ஜோக்' தேவையற்ற சிரிப்புக்கள்.

''வெயார் இஸ் ஜெகா?...... விஸ் யூ ஒல் த பெஸ்ற் தம்பி!'' என்றவாறே அறையினுள் பஞ்சலிங்கத்தார் நுழைகிறார். அவன் அடக்கமாகத் 'தாங்ஸ்' அளித்தான்.

அறை ஏழெட்டுப் பேருக்குப் போதவில்லை. கட்டில்கள் ஒதுக்காக அடுக்கப்பட்டிருக்கின்றன.

'ரேஸ்ற்' றும் மேசைக்கு வந்துவிட்டது.

RangaRakes tamilnavarasam.com

''ஏன் சுணங்குவான்?... .. ஷால் வீ ஸ்ரார்ட்?'' - பல நல்ல கருமங்களை ஒப்பேற்றிய அனுபவம் பஞ்சலிங்கத் தாருக்கு!

சிவகுமார் மேசையில் கிளாஸ்களை எடுத்து அடுக்கினான்.

''இந்தாருங்கோ நீங்களே ஸ்ராட் பண்ணி வையுங்கோ.'' ஜெகநாதன் போத்தலை பஞ்சலிங்கத் தாரிடமே ஸ்பெஷலாகக் கொடுத்தான்.

''இல்லை...... ஏன்.....? நீர்தான்...... ஆரம்பிக்க வேணும்......''

—யார் போத்தலை உடைப்பது என்ற முகஸ்துதிப் பிரச்சினை யாராவது நல்லவன் பெரியவன் ஆரம்பித்து வைக்க வேண்டுமே!

''இஞ்சை !... கொண்டாடாப்பா......'' இதுக்குப் போய் இழுபறிப் படுறியள்...... என்றவாறு மகேந்திரன் அந்த நல்ல காரியத்தைச் செய்ய முன்வந்தான்.

கைகள் கிளாஸ்களைப் பற்றி உயர்த்தின. கோரஸ்; ''நண்பர் ஜெகநாதனின் ஒளிமயமான எதிர்காலத்துக்கும் மகிழ்ச்சிகரமான குடும்பவாழ்வுக்கும் வாழ்த்துக்கள் - சியர்ஸ்'' - கிளாஸ்கள் முத்தமிட்டன.

—'பச்சுலர்ஸ் பார்ட்டி' நடக்கப் போகிறது. பார்ட்டியில் பஞ்சலிங்கத்தாரைத் தவிர மற்ற யாவருமே இன்னும் திருமணமாகாத குமரர்கள்தான். ஆனால், அவர்கள் எல்லாரும் 'பச்சுலர்கள்' என்பதற்கு எவ்வித உத்தரவாதமுமில்லை. எப்படியிருப்பினும் இந்த விருந்து வைபவத்தைக் குறிப்பிடுகின்ற சம்பிரதாயபூர்வமாக பெயர்-- ''பச்சுலர்ஸ் பாட்டி''



ஜெகநாதனுக்கு திருமணம் நிச்சயமாகிவிட்டது. இன்னும் சில தினங்களில் அவன் குடும்ப சமேதராகப் போகிறான். அதற்காக நெருங்கிய நண்பர்களால் ஜெகநாதனின் செலவில் அளிக்கப்படும் பிரியாவிடைதான் இந்தப் பார்ட்டி. திருமணம் பஞ்சலிங்கத்தாரால் பேசி ஒப்பேற்றப்பட்டது. அவருக்கு விசேஷ அழைப்பு. பிரமச்சாரிகளின் அறையென்றால் பார்ட்டிகளுக்குக் குறைவில்லைத் தான். சம்பள தினங்கள், ஓவர்ரைம் தினங்கள் மற்றும் விசேஷ தினங்களில் 'சின்டிகேட்' போட்டு சிறிய அளவில் ஆங்காங்கே பார்ட்டிகள் நடைபெறும். இது வீட்டுக்காரருக்கோ, சுற்றாடலிலுள்ளவர்களுக்கோ இடைஞ்சலளிக்காமலும் பார்த்துக் கொள்ளவேண்டியது முக்கியம். அல்லது அடுத்தநாளே பெட்டி படுக்கைகளைத் தூக்கிக் கொண்டு அலைய வேண்டியும் நேரிடலாம். அதற்காகத்தான் ஒரு சுப நாளாகப் பார்த்து இன்றைய தினத்தை தேர்ந்தெடுத்தார்கள்.

பிரபல ஹோட்டலொன்றில் நடைபெறும் திருமண விருந்து வைபவமொன்றுக்கு வீட்டுக்காரர்கள் போய்விட்டார்கள். அந்த பிரபல ஹோட்டலில் ஏறுகின்ற அளவுக்கு அவர்கள் தகுதியற்றவர்கள் (பொருளாதாரரீதியாக) என்பது என்னவோ மறுக்க முடியாத உண்மைதான். ஆனால், தங்கள் மேல்மட்ட வாழ்க்கையை உறுதி செய்து கொள்வதற்கு இதுபோன்ற ஆடம்பரமான வைபவத்தை ஆதரிப்பது மறைக்க முடியாத உண்மை. (கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழிக் கதை) கொழும்பில் எத்தனையோ வசதி படைத்தவர்கள் இருக்கிறார்கள். அன்றாடம் விருந்துகள் கேளிக்கைகளில் அவர்கள் நேரத்தையும் பணத்தையும் செலவிடுவது சர்வசாதாரணம். அந்தப் பொழுது போக்குகளில் மனம் கவரப்பட்டு அல்லது தங்களையும் அவர்களில் ஒருவராகக் காட்டிக் கொள்வதற்காக இன்னும் எத்தனையோ பேர் தங்கள் பொல்லாச்சிறகை விரித்து ஆடுகிறார்கள்!

RangaRakes tamilnavarasam.com

கிளாஸ்களை உதடுகள் தடவித் தீர்க்கின்றன. சிகரட் புகை அறையிலுள்ளவர்களைப் பழுக்கப் போடுகிறது. 'ரேஸ்ற் எண்டால் ரேஸ்ற்தான்! ' - சமையல் செய்த வருக்கு இலவச 'சேர்ரிபிக்கட்' கிடைக்கிறது.

''சிவா!...... யூ ஆர் ஸ்றில் சிலோ...... ...... டிறிங் வில் யூ.'' மகேந்திரனுக்கு மப்பு — அவனது 'இன்டிகேசன்' ஆங்கிலம்தான். வழக்கமாக இங்கிலீசில் கதைப்பதில்லை. தண்ணி பாவிக்கிற நாட்களில் ஆங்கிலம் தாறு மாறாகத் துள்ளி விளையாடும். எப்படியோ நாக்கைக் கொழுவிக் கொள்ளாமல் ஒப்பேற்றி விடுவான். மற்றவர்களோடு இங்கிலீசில் சண்டை கூடப் பிடிப்பான்! ''வெல் டண் மகேந்திரன்!''

''என்ன சிவா...... அப்பிடியே வைச்சுக் கொண்டிருக் கிறாய்?...... குடியன்ராப்பா ...... நாங்கள் இஞ்சை ரெண் டாவது றவுண்டும் வந்திட்டம்.'' ஜெகநாதனின் பரிவான வார்த்தைகள். கொஞ்ச நாட்களாக சிவகுமார் நண்பர் களோடு கூட அவ்வளவு மனம்வைத்து கதைத்ததில்லை. இந்த நேரத்திலாவது அவனைச் சமாதானப் படுத்த வேண் டுமென ஜெகநாதன் கருதினான்.

''என்ன புதுப்பழக்கமோ?'' - பஞ்சலிங்கத்தார் கேட் டார்.

''...... இல்லை... என்ன அவசரம். ஆறுதலாகக் குடிப் பம்!''

''ஹீ...... நோஸ் ஹிஸ் லிமிட்..... உங்களாலை அவனை அசைக்கேலாது.'' - மகேந்திரன் புகழ்கிறானா அல்லது பரி கசிக்கிறானா என்பது புரியவில்லை.

நுளம்புகள் நிம்மதியாக இருக்கவிடாமல் தலையைச் சுற்றி வட்டமிட்டு காதுகளுக்கருகே வந்து பொப்பிசைப் புயல் நடத்துகின்றன. வேறு பிராக்காக இருந்து விட்டால்



மெல்ல 'லான்ட்' பண்ணி - ''சடக்'' - நுளம்பின் மேல் ஏற்பட்ட ஆத்திரம் அடிபட்ட இடத்தைத் தடவ வைக்கிறது. நல்ல அடி! ''ரத்தத்தைக் குடிச்சு அதுகளுக்கும் வெறி வரப் போகுது'' - ஒரு ஜோக். கோரஸ் சிரிப்புக்கள்.

மகேந்திரன் அலட்டிக் கொண்டிருப்பதைக் கவனித்து விட்டு ஒரு நண்பன் திசையை மாற்றுகிறான்......

''மகேந்திரன்...... வை டோன்ற் யூ சிங் ஏ சோங்?''

''யேஸ்...... டெஃபினிற்லி!''

- பூமியென்ன சுயிசு என்று அவன் பாடத் தொடங்குகி றான், போட்டாத்தான் அற்புதமான தத்துவங்களும் பிறக் கின்றன!

நண்பனொருவன் மேசையை மத்தளமாகப் பாவிக்கின் றான். (நாளைக்குத்தான் கையில் வலி தெரியும்.) பார்ட்டி யில் சூடு பிடிக்கிறது. இரு நண்பர்கள் எழுந்து ஒமங்கா கக் கால்களைப் பதித்து முன்னும் பின்னும் அசைந்து ஆடு கிறார்கள். பரீட்சைக்குப் பாடமெழுதுகின்ற மாணவனின் அவதானம், அவர்களுக்கு ஆட்டத்தில் இருக்கிறது! ஆடிய படியே அவர்கள் ஜெகநாதனைக் கைகோத்து இழுக்கிறார் கள். அவனுக்கு அவர்களோடு ஈடு கொடுக்க முடியவில்லை. கைகளைத் தட்டி மெல்ல துள்ளல் போட்டு சமாளித்துக் கொள்கிறான்.

பஞ்சலிங்கத்தார் இன்னொரு 'ட்றாமை' ஊற்றி உறுஞ்சி விட்டு புதிய உற்சாகத்தோடு எழுந்து பழைய பாகவதர் பாட்டொன்றை இராகம் இசைத்துப் பாடத் தொடங் குகிறார். ஒருபாடாக அவரது பாட்டும் முடிந்தது.

''ஐயாவரவைப் பார்த்துவீட்டில் ஏங்குறாங்க! அம்மா. இந்த ஐயா இங்கே கும்மாளம்தான் போடுறாங்க சும்மா!'' என்று பாடத் தொடங்கினான் மகேந்திரன். அவ

RangaRakes tamilnavarasam.com

னோடு நண்பர்களும் சேர்ந்து வேண்டுமென்றே இந்த வரிகளைத் திரும்பத் திரும்பப் பாடினார்கள் பஞ்சலிங்கத்தார் இளமை திரும்பியவரைப் போல அவர்களோடு கும்மாளமடித்தார் - 'ஒரு சந்தோஷமான பிறவி!'

“நேரம் போகுது...... இனி முடிப்பம்” என்றான் சிவகுமார். மற்றவர்கள் நேரத்தைப் பார்த்தார்கள். பதினொரு மணி.

'நைற் இஸ் ரு...... யங்” என்றான் மகேந்திரன். பின்னர் “பசுமை நிறைந்த நினைவுகளே” என்ற பாட்டை ஆரம்பித்தான். அது எல்லாரின் மனதையும் தொடுவதாக இருந்தது. எங்கோ பிறந்து வேலை நிமித்தமாக கொழும்பிற்கு வந்து ஒரே அறைகளில் கோபதாபங்களோடும் இன்ப துன்பங்களோடும் ஒரு குடும்பத்தவர்களைப்போல வாழ்க்கை நடத்திய தங்களது நட்பில் பெரிய பிரிவு நேரப் போவது போன்ற கவலை மனதை வருத்தியது.

இப்படியே நெடுநேரம் ஆட்டங்களுடனும் பாட்டுக்களுடனும் கழிந்த பின்னர் அவரவராக “குட்நைட்” சொல்லி விடை பெற்றனர். “குட்நைற்” சொன்ன பொழுது நேரம் பன்னிரண்டு மணியையும் தாண்டி விட்டது!

மகேந்திரன் கட்டிலொன்றில் குப்புற விழுந்து கிடந்தான். கட்டிலுக்குப் பக்கத்தில் ஓங்கழித்துச் சத்தியெடுத்தான்.

“சனியங்கள் குடிக்கையிக்க யோசிச்சுக் கட்டுமட்டாய் குடிக்கமாட்டாங்கள்” எனத் திட்டியவாறே அவனது நெற்றியைப் பிடித்து கட்டிலிலிருந்து அந்தரத்தில் தொங்குகிற தலையைத் தாங்கிக் கொண்டான் சிவகுமார்.



ஜெகநாதன் கோப்பையைக் கழுவிக் கொண்டு சாப்பிட ஆயத்தம் செய்தான். “சிவா! வா அவனையும் எழுப்பிக் கொண்டு...... சாப்பிடலாம்.”

“அவன் இப்ப சாப்பிடக் கூடிய மாதிரியே கிடக்கிறான்?”

சிகரட் கட்டைகள் அறை முழுவதும் குப்பையாகச் சிதறிக் கிடக்கின்றன. அநாதரவாகக் கிடக்கின்ற கிளாஸ்கள் - விட்டகுறை தொட்டகுறை - மகேந்திரன் எடுத்த சத்தியை மூடுவதற்காக மண்அள்ளுவதற்கு வெளியே வந்தான் சிவகுமார்.

அப்பொழுதுதான் வெங்கடாசலம் தம்பதியர் பார்ட்டி முடிந்து ஒரு ரக்சியில் வந்து இறங்கியிருக்கிறார்கள். மிஸ்டர் வெங்கடாசலத்துக்கு நிறை தண்ணி. நடக்கக் கூடச் சக்தியில்லை. திருமதியார் பெரிய சங்கடத்தோடு அவரைச் சுமந்து இழுத்துக் கொண்டு வருவதைப் பார்க்க பரிதாபமாக இருந்தது. மனிசன் வருகின்ற வரத்தைப் பார்த்தால் பார்ட்டியில் மனிசிக்காரியின் மானத்தை வாங்கியிருக்குமோ என்னவோ? 'ஏன் இந்தப் பாடு?' என எண்ணியபொழுது தானும் கொஞ்சம் குடித்திருக்கிறான் என்ற உணர்வு, நெஞ்சில் உறுத்தியது. பேசாமல் மண்ணை அள்ளிக் கொண்டு அறையினுள் நுழைந்தான். மகேந்திரன் ஓங்காழிக்கிற சத்தம் கேட்கிறது.

RangaRakes tamilnavarasam.com

# அத்தியாயம் - 15

யாழ்ப்பாணம் வந்து நாவலர் வீதியில் அலைந்து, நாலு பேரை விசாரித்து, ஒழுங்கையை கண்டு பிடித்து இறங்கி நடந்து இலக்கத்தைப் பார்த்து வீட்டை அடைந்து;

"வீட்டுக்காரர்:...... வீட்டுக்காரர்!"

"ஆரது...... இஞ்சாலை வாருங்கோ!"

ஜெகநாதன் உள்ளே நுழைந்து முற்றத்திலே நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்த நாய்க்குப் பிடிக்கவில்லை! எழுந்து பொல்லாத கோபத்தோடு குரைத்துக்கொண்டு ஓடி வந்தது.

"அடிக்!...... அடிக்!......" "அது கடிக்காது!...... நீர் வாரும்!"

ஜெகநாதன் நாயை பார்ப்பதா குரல் வருகின்ற திசையைப் பார்ப்பதா என்று புரியாமல் பயம் கலந்த சிரிப்பை மலர்த்தி தனது சிநேக பூர்வமான வருகையை நாய்க்கு உணர்த்த முயன்றான்.

அவனது சிரிப்பைக் கண்டோ அல்லது எசமானியின் அதட்டலினாலோ நாய் தனது சண்டித்தனத்தை விட்டு சமாதானக் கொடியை (வாலை) ஆட்டியது.

"ஆரைத் தேடுறீர்" தென்னோலையில் கிடுகு பின்னிக் கொண்டிருந்த பூமணி...... ஓலையை ஒரு பக்கத்தில் இழுத்துப் போட்டு விட்டு எழுந்தாள்.

"அருணாசலம் மாஸ்டர் வீடு இதுதானோ?"



ஓம்!...... இதுதான் உள்ளுக்கு வாரும்" என்றவாறே வீட்டினுள் நுழைந்து, "இஞ்சருங்கோ...... உங்களை ஆரோ தேடி வந்திருக்கினம்!" எனக் குரல் கொடுத்தாள்.

பாய்யொன்றில் ஓய்வாய் புடுத்திருந்த அருணாசலம் மாஸ்டருக்கு எழுந்து வர மனதில்லை. "அதாரப்பா? விளங்கச் சொல்லன்" எனச் சினந்தார்.

"ஆரெண்டு தெரியவில்லை...... ஒரு புதுப் பெடியனாயிருக்கு...... உங்களைத்தான் காணவேணுமாம்."

ஜிம்மி நாய் இப்பொழுது ஜெகநாதனை ஏற்கனவே தெரிஞ்சது போல சுற்றிச் சுற்றி மோப்பம் பிடிக்கத் தொடங்கியது.

தனது திருமணத்திற்காக ஊருக்கு வந்திருந்தான் ஜெகநாதன். முதல் வருகின்ற நாளுக்கே கலியாணத்தை முடித்துவிட வேண்டுமென்று பெண் வீட்டுக்காரர் ஒற்றைக் காலில் நிற்பதால் திடுதிடுப்பென்று வரவேண்டியதாயிற்று. கொழுத்த சீதனம். விடமுடியுமா?

ஊருக்கு வந்தவனுக்கு யாழ்ப்பாணம் வரவேண்டிய அலுவல் இருந்தது. மாலை நாலு மணியைப் போல 750ஆம் இலக்க பஸ் எடுத்து யாழ்ப்பாணம் வந்தவன், கையோடு சிவகுமார் வீட்டுக்கும் போய் விட்டு வரலாம் என்ற எண்ணத்தாலும் வந்து நிற்கிறான்.

அரையிலிருந்து விழுகின்ற களிசானைப் பிடித்தபடி அண்மையில் ஓடி வந்த சிறுவனொருவன் "ஜிம்மி!...... இஞ்சாலை வா!" எனத் அழைத்தவாறு இவனை விடுப்புப் பார்க்கத் தொடங்கினான். ஜெகநாதன் வீட்டு வாசலைப் பார்த்தபடி நின்றான்.

அண்மையிற் கட்டப்பட்ட வீடு. வீட்டைச் சுற்றவர தோகையை விரித்துக் கொண்டு நிற்கும் தென்னங்கன்று

RangaRakes tamilnavarasam.com

கள். சில வாழைகள். முன்னே அழகாக வெட்டப்பட்டிருக்கும் குரோட்டன் செடிகள். பூங்கன்றுகள் பின்பக்கமாக உயர்ந்து தலையை நிமிர்த்திக் கொண்டு நிற்கும் பனை மரங்கள்.

படுக்கையிலிருந்து 'முருகா!' வைத் துணைக்கு அழைத்துக் கொண்டு வேண்டா வெறுப்பாக எழுந்தார் அருணாசலம் மாஸ்டர். வேட்டியை சரிசெய்து உதறிக் கட்டிக் கொண்டு வெளியே வந்தவர் ஜெகநாதனைக் கண்டதும் 'அறியாத முகமாயிருக்குதே' என்ற குழப்பத்துடன் மெல்லிய புன்னகையைக் காட்ட முயன்றார்;

''ஆரை காண வந்திருக்கிறீர்?''

''அருணாசல மாஸ்ரர் நீங்கள்தானே?''

''ஓம்!...... உம்மைத்தான் எனக்கு விழங்கவில்லை......''

''நான் கொழும்பிலை உங்கடை மகனோடை அறையிலை இருக்கிறன்......''

அருணாசலத்தாரின் மனது பதட்டமடைந்தது. விஷயம் என்னவோ ஏதோ?

''வாரும் ...... இருந்து கதைக்கலாம். ஏதேன் முக்கியமான அலுவலோ?''

''அப்பிடியொண்டுமில்லை ...... என்ரை ஒரு அலுவலாய் யாழ்ப்பாணம் வரவேண்டியிருந்தது... பின்னைத் தான் சிவகுமாற்றை வீடும் இந்தப் பக்கம் எண்டாப் போலை ...... பாத்திட்டுப் போகலாமெண்டு வந்தனான்!''

அருணாசலம் மாஸ்டர் ஜெகநாதனை வசீகரிக்கின்ற சிரிப்பைக் காட்டினார். மகனோடு அறையில் இருக்கின்ற நண்பன் வந்திருப்பது ஒருவித மகிழ்ச்சியையும் ஏற்படுத்





தியது. பிள்ளைகளது பழக்க வழக்கங்களில் மிகவும் அக்கறையானவர் அருணாசலம் மாஸ்டர். கண்டிப்பாக வளர்த்தவர். 'இப்பொழுது கண்காணாத இடத்தில் ...... என்ன செய்கிறானோ ...... எப்பிடி இருக்கிறானோ?' என்பது அடிக்கடி எழுகின்ற ஏக்கம்.

''எப்பிடித்தம்பி கொழும்புப் பக்கம்?'' எனச் சம்பிரதாயபூர்வமாக பேச்சை ஆரம்பித்து வைத்தார் மாஸ்டர்.

அகிலாவுடன் சிவகுமார் அன்னியோன்யமாகப் பழகுவதை எப்படியாவது நிறுத்திவிடவேண்டுமென, மகேந்திரனுடன் கூட்டுச் சேர்த்து போட்ட திட்டத்தின் ஓர் அம்சத்தை அமுல் நடத்துவதற்கென வந்திருக்கிற ஜெகநாதனுக்கு இது போதாதா?

சம்பாஷணைகள் வளர்ந்தன.

பூமணி (மாஸ்டரின் மனைவி) தேநீர் கொண்டு வந்து வைத்தாள். அருணாசலத்தார் எதையோ பறிகொடுத்தவர் போல இருந்தார். ஜெகநாதன் கச்சிதமாகத் தனது வேலையை முடித்து விட்டான். மாஸ்டரால் அந்தக் கதையை எப்படி ஜீரணிக்க முடியும்?

''தம்பி ........ தேத்தண்ணியை எடுத்துக் குடியும் ...... ஆறுது!'' பூமணி நிலைமையைச் சமாளிக்க முயன்றாள். கணவனின் முகமாற்றத்தைக் கொண்டே அவர் மனநிலையை அவளால் ஊகிக்க முடியும். கோபம் வந்தால் மாஸ்டர் பொல்லாதவர்.

சற்றும் எதிர்பாராத நேரத்தில் மனைவியின் பக்கம் திரும்பிய மாஸ்டர்;

''பாத்தியே !...... உன்ரை பிள்ளை செய்திருக்கிற வேலையை ..... எல்லாம் நீ வளர்த்த வளர்ப்புத்தான்!''

tamilnavarasam.com

எதிர்பாராத தாக்குதல் - இது மாஸ்டருடைய குணம். அந்தப் பழியை அமைதியாக சகித்துக் கொண்டாள் பூமணி.

அருணாசலம் மாஸ்டர் அதே சீற்றத்துடன் ஜெகநாதனின் பக்கம் திரும்பி, ''ஒரு பிள்ளை நல்லாய் வாறதும் கெட்டுப் போறதும் ...... தாய் வளர்க்கிற வளர்ப்பிலை தான் தங்கியிருக்குது'' எனக் குற்றம் சுமத்தினார். ஜெகநாதனும் ஆமோதிப்பவன் போலப் பாவனை செய்தான். பிறர் முன்னிலையிலும் நியாயமில்லாமல் மனைவியின் மேல் குற்றம் சுமத்துவது மாஸ்டருக்கு பழகிப் போய்விட்ட சுபாவம். அப்படிச் செய்வதால் தனது கவலையைக் குறைத்துக் கொள்ள முயல்கிறாரோ என்பதும் புரியவில்லை. அவரை மணந்து கொண்ட நாள் முதல் இது பழகிப் போய்விட்ட சங்கதியானதால் பூமணியும் பெரிதுபடுத்திக் கொள்வதில்லை.

''தம்பி! ... நான் மானத்துக்குப் பயந்த மனிசன்!... அப்பிடி ஏதாவது ...... நீர் சொல்லுறமாதிரி ஏறுக்குமாறாய் செய்வானெண்டு கண்டால் ...... பிறகு பிள்ளையெண்டும் பார்க்கமாட்டன் ...... சுட்டுத் தள்ளிப் போடுவன்.''

''அப்பிடி ஒண்டுக்கும் யோசிக்காதையுங்கோ ...... நாங்கள் கவனிக்காமல் விட்டிடுவமே?...... ஒண்டாயிருக்கிற நாங்கள் சொல்லாமல் விட்டிட்டம் எண்டு பிறகொரு காலத்திலை குறை சொல்லக் கூடாதெண்டதுக்காகத்தான் ...... என்ரை அலுவல்களையும் விட்டிட்டு மினைக்கெட்டு வந்தனான்.''

அருணாசலம் மாஸ்டர் ஜெகநாதனை நன்றியுடன் நோக்கினார். இப்படியொரு குடும்பநிலைமை, பொறுப்பு உணர்ந்த பிள்ளை தனக்கு இல்லையே என்ற கவலை துளிர்த்தது.



''நான் இவங்களுக்குப் படிச்சுப் படிச்சு எத்தனை புத்திமதிகளைச் சொல்லியிருப்பன்! பனை மாதிரி வளர்ந்தது தான் மிச்சம் ...... ஒரு தேப்பன் சொல்லுறானெண்டு அதைக் கேட்டு நடக்கிறாங்களே ......?'' மாஸ்டரின் மனத் துடிப்பு. மகன் அடிக்கடி ஊருக்கு வராமல் விட்டதற்கும் இது தான் காரணமோ என எண்ணிப் பார்த்தார். வங்கியில் எடுக்கிற கடன் பணத்தைக் கொண்டு வருவதாக முதல் எழுதியவன் பின்னர் லீவு கிடைக்கவில்லை என எழுதி காசோலையை அனுப்பி விட்டதற்கும் இதுதான் காரணமாயிருக்கும்.

''வரட்டுக்கும்! எல்லாத்துக்கும் ஒரு முடிவு கட்டுறன் ...... காலா காலத்திலை ஒரு கால் கட்டைப் போட்டு விட்டால் அடக்கமாய் இருப்பாங்கள்!''

அருணாசலம் மாஸ்டர் பேயறைந்தவர் போல இருந்தார். சிவகுமாரை பணயமாக வைத்துக் கொண்டு அவர் பறக்கடிக்க நினைத்த பிரச்சினைகள் எத்தனை? ஆசிரியராக இருந்து உழைத்த சேமிப்பெல்லாம் வீடு கட்டியதோடு கரைந்துவிட்டது. வீடு கட்டுவதற்காக ஈடுவைத்த காணியை இன்னும் மீளமுடியவில்லை. இந்த விசித்திரத்திலை திருமணத்திற்காக மூத்தவளொருத்தியும் காத்திருக்கிறாள். மற்றப் பிள்ளைகளின் படிப்புச் செலவுகளுக்கே பென்சன் பணம் பறந்து விடும். எல்லாவற்றிற்குமே மலை போல நம்பியிருப்பது சிவகுமாரைத்தான்.

கஷ்டத்தோடு கஷ்டமாக சிவகுமாரைப் படிப்பித்து ஆளாக்கி விட்டும் - அரசதிணைக்களமொன்றில் சாதாரண ளார்க்கு உத்தியோகம்தான் கிடைத்தது - செல்வாக்கு இல்லாதவர்கள் படித்தும் என்ன பலன்? இருந்தாலும் இது போதும் அவருக்கு. இந்த ஒரு தகுதியை வைத்துக் கொண்டே யாழ்ப்பாணத்து கலியாணச் சந்தையில் எத்தனை வித்தைகளைக் காட்ட முடியும்! அதற்காக அவர்

RangaRakes
tamilnavarasam.com

ஓடாத இடங்களும் இல்லை. பார்க்காத புரோக்கர்மாரும் இல்லை, பேசாத சம்பந்தங்களும் இல்லை. எல்லாவற்றிற்கும் காலம் நேரம் ஒத்து வர வேண்டுமே!

—'அதுக்குள்ளை ...... இந்தப் பெடியன் அவசரப்படுகுது!......

''நான் அப்ப வரப் போறன்!'' என அவரது சிந்தனையைக் குலைத்தான் ஜெகநாதன்.

''என்ன தம்பி அவசரம்?''

''பொழுதுபடுகுது!...... இருளுக்கு முந்திப் போயிட வேணும்!''

''அப்ப பின்னப் போட்டு வாருமன் ...... இனிமேலும் வா்ர நேரங்களிலை இஞ்சாலிப் பக்கம் வந்திட்டுப் போம். அங்கத்தை சங்கதியளையும் அறியலாம்''

''ஓமோம்!...... ஆனால், ஒண்டு, நான் இஞ்சை வந்ததைப் பற்றிச் சிவகுமாரிட்டைச் சொல்லிப் போடாதையுங்கோ ...... பிறகு குறை விளங்குவார்!''

''சாச்சாய் ... நாங்கள் ஒண்டும் பறையமாட்டம் ... இன்னொரு அலுவல் ...... பாரும் நீரெண்டாலும் சொல்லி அவனை ஒருக்கால் வேறை அறைக்கு மாறிப் போகச் சொன்னால் நல்லது!''

''சொல்லிப்பாக்கிறன் ...... சொன்னப்போலை அவர் கேட்கப் போறரே?'' என அவரது மனதை இன்னும் கலக்கியவாறு புறப்பட்டான் ஜெகநாதன்.

'படலை வரை சென்று ஜெகநாதனை வழியனுப்பி விட்டு இனம் புரியாத கலக்கத்துடன் திரும்பினார் மாஸ்டர்.

காற்றிலே அசைகின்ற பனை ஓலைகள் கலகலத்துச் சிரிக்கின்றன. கீழ் நோக்குகின்ற காவோலைகள்; மேலே உயரும் குருத்தோலைகள்!

—'பனையை வளர்ப்போம் பயனைப் பெறுவோம்'

# அத்தியாயம் - 16

கடலலைகளின் தாலாட்டில் இரவு உறங்கிக் கொண்டிருக்கிறது. கடற்கரைப் பாதையில் வருகின்ற புகையிரதம் இந்தப் பாடலுக்குப் பின்னணி இசைக்கிறது. மென்மையாக ஆரம்பித்து தாளலயத்துடன் படிப்படியாக உயர்ந்து மீண்டும் அதே தொனியில் மறைந்து போகும்வரை மனதை லயிக்கச் செய்கின்ற ஓசை.

ஜெகநாதன் எதையோ பறிகொடுத்தவனைப் போல கட்டிலில் படுத்திருந்தான். தலையணை அவனது அணைப்பிலிருந்தது. அவன் கிடக்கிற கோலத்தைப் பார்த்துவிட்டு, ''எப்பிடி மச்சான் முதலிரவு?'' என்றான் மகேந்திரன்.

ஜெகநாதன் ஒரு சிரிப்பை மாத்திரம் உதிர்த்தான்.

பின்னேரம் அவனைக் கண்ட நேரம் முதலே அவனிடம் கேட்க வேண்டுமென மகேந்திரன் நினைத்திருந்த கேள்வி இது. இப்பொழுதுதான் அதற்குச் சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது.

இன்று பிற்பகல் யாழ்ப்பாணத்திலிருந்து வந்திருந்த ஜெகநாதன் மாலை எங்குமே புறப்படவில்லை. இரவு சாப்பாட்டுக்கு மாத்திரம் கடைக்குப் போய்விட்டு வந்தான். பின்னர் நீண்ட நேரம் கட்டிலிலேயே கிடக்கிறான்.

மகேந்திரன் படுக்கையை விரித்துக் கொண்டே மீண்டும் அதே கேள்வியைக் கேட்டான். ஜெகநாதன் சிவகுமாரைத் திரும்பிப் பார்த்துச் சிரித்துக்கொண்டான். வெட்கப்படுகிறானோ? அல்லது எதையுமே சொல்ல விரும்பவில்லையோ?

RangaRakes tamilnavarasam.com

கட்டிலில் படுத்திருந்தவாறே சிவகுமார் கேட்டான்;

''எப்பிடி கலியாணமெல்லாம்?''

''பறவாயில்லை.''

''என்ன நான் கேட்டதுக்குப் பேசாமலிருக்கிறாய்...... எப்பிடி மச்சான் பொம்பிளை?'' என அவனது கவனத்தைத் திருப்பினான் மகேந்திரன். அதற்கும் ஒரு புன்முறுவலை மாத்திரம் உதிர்த்து விட்டு மௌனம் சாதித்தான் ஜெகநாதன்.

பின்னர் எழுந்து ஒரு சிகரட்டைப் பற்றவைத்தவாறே சொன்னான்; ''சுவீப் அடிச்ச மாதிரித்தான் ...... சீதனமும் எக்கச்சக்கம் ...... பொம்பிளையும் நல்ல வடிவு.''

''நல்ல புளியம் கொப்பாய்த்தான் பிடிச்சிருக்கிறாய் எண்டு சொல்லு.'' சிவகுமார் ஏளனமாகத்தான் அப்பிடிச் சொல்கிறானா என்று புரியவில்லை.

''பின்னை ...... லேசுப்பட்ட ஆளெண்டு நினைச்சியே?... காரும் வேண்டித்தாறதெண்டு சொல்லியிருக்கினம்.''

''அப்ப மாப்பிள்ளையை நல்லாய் பிடிச்சிட்டுது போலை ...... எங்களுக்கெல்லோ தெரியும் மாப்பிளையின்ர திருகுதாளங்கள் ...... பொம்பிளை எந்தப் பகுதி?'' — மகேந்திரன் குறுக்கிட்டான்.

''உங்கடை ஊர்தான்.''

''அதாரடாப்பா எங்கட ஊரிலை இவ்வளவு பணக்காரர்?''

ஜெகநாதன் விபரம் சொன்னான்.

''ஆ ... .. இப்ப எனக்கு ஆக்களைத் தெரியும்......''



கதை வளர்ந்து கொண்டு போவதை உணர்ந்த சிவகுமார் ......'' மச்சான் லைட்டை ஓஃப் பண்ணுவம் ...... வெங்கடாசலத்தார் அண்டைக்கும் பெரிய நியாயங்கள் எல்லாம் பேசினார்......''

''என்னவாம்?'' — ஜெகநாதன் கேட்டான்.

''அண்டைக்கு பார்ட்டியிலை சொல்ல சொல்ல கூத்தடிச்சுக் கொண்டு நிண்டீங்கள்...... அந்தாளுக்கு ஆரோ...... சொல்லிப் போட்டினம் போலை ...... பெரிய குறையெல்லாம் சொன்னார். அப்பிடி நாங்கள் செய்தால் தங்களுக்குத்தான் கௌரவக் குறைச்சலாம்......''

''அவரும் அண்டைக்கு எங்கையோ போய் குடிச்சிட்டு உலகம் தெரியாமற்தானே வந்தவர் ......'' — ஜெகநாதன் நியாயம் பேசினான்.

''அது ரகசியமாய்த்தானே,'' சிவகுமார் தொடர்ந்தான்; ''இனியும் இப்பிடி நடக்குமெண்டால் அறையை விட்டிட்டுப் போகட்டாம் ...... மற்றது இரவு பத்துமணிக்குள்ளை லைட் எல்லாம் ஓஃப் பண்ணிப்போட வேணுமாம் ... அதுக்கு மேலையும் பாவிக்கிறதெண்டால் லைட் பில்லுக்கும் சேர்த்துத் தரவேணுமா ......''

மகேந்திரன் எரிச்சலோடு; ''அந்த விசரன்ரை கதையை விடடாப்பா! அவர் ஒருத்தர் தான் இந்த உலகத்திலை வீடு வைச்சிருக்கிற மாதிரிக் கதைக்கிறாய் ...... அவங்கள் நித்திரை ...... நாங்கள் மெதுவாய்க் கதைப்பம்''

''நித்திரையில்லை! ...... வரயிக்கை வெங்கடாசலத்தின்ரை இருமல் சத்தம் கேட்டதெல்லே?''

''அவையளுக்குப் பயந்துகொண்டு கதைக்காமல் படுக்கிறதே ...... இதில்லாட்டி இன்னொரு வீடு......''

RangaRakes tamilnavarasam.com

சிவகுமார் சிரித்துக் கொண்டே சொன்னான்; "நாங்கள் நினைச்சவுடனை போறதுக்கு இங்கை எல்லாரும் வீடுகளைத் திறந்தா வைச்சிருக்கிறாங்கள்?"

"அந்தத் துணிவில்லைதான் ...... அவரும் இப்பிடிக் கதைக்கிறார்? ......" என்று கேட்ட மகேந்திரன் சற்றுநேர மௌனத்துக்குப் பின்னர் ...... "புது மாப்பிளை வந்திருக்கிறான் ...... புது அனுபவங்களைக் கேக்கிறதை விட்டிட்டு இதென்ன தேவையில்லாத கதை கதைச்சுக் கொண்டிருக்கிறாய்? ...... ஜெகா!.. ... எப்படி முதலிரவு?" என்றான்.

அந்தப் புதிய அனுபவங்கள்! அம்மி மிதித்து அருந்ததி பார்த்து ...... கல்யாண வைபோகம்! விருந்து கொண்டாட்டங்கள்! சுபநேரம் இரவு பத்து சொச்சத்துக்கும் பன்னிரண்டுக்கும் இடையில் இருந்தது. சம்பிரதாய பூர்வமான சடங்குகள் எல்லாம் முடிந்து இளம் மனைவியை இவனிடம் ஒப்படைத்தபொழுது அதிகாலை இரண்டு மணிக்கும் மேலாகி விட்டது.

முன்பின் அறிமுகமில்லாத ஒருத்தியை ...... திருமணத்திற்கு சில தினங்களுக்கு முன்னர் தான் காண நேர்ந்த ஒருத்தியை, தனிமையில் ...... எப்படிக் கதைக்கலாம்? திருமண நேரங்களிலும் முன்னரும் அவள் சரியாக முகம் கொடுத்துக் கதைக்கவுமில்லை. அந்த அளவுக்கு வெட்கப் பட்டவள், இப்போது நாணத்தைவிட்டு எப்படிக் கதைப்பாள்?

வெளியே நல்ல நிலவு எறித்துக் கொண்டிருந்தது. குளிர்மையான இளங்காற்றும் வீசியது. மிகவும் மென்மையான வெளிச்சத்தில் இளம் மனைவி தங்கச்சிலையென இருந்தாள்.

"என்ன யோசிக்கிறீங்கள் ...... படுக்கயில்லையா?" ஜெகநாதன் மனைவியைப் பார்த்துக் கேட்டான்.



"...... நீங்கள் படுங்கோ" அவள் தலையைக் குனிந்தவாறே பதிலளித்தாள். என்ன கரிசனை! எவ்வளவு ஆதரவான வார்த்தைகள்! அவனது சுக துக்கத்தில் அக்கறை கொள்ள ஒருத்தி! அவன் ஆதரவோடு அவளது கையைப் பிடித்தான்.

"என்னடாப்பா! நாங்கள் கேக்கிறம் நீ ஏதோ கோட்டையைப் பிடிக்கிற யோசினையிலை இருக்கிறாய்?" மீண்டும் மகேந்திரன்......

ஜெகநாதன் சிந்தனை கலைந்து ஓர் அசட்டுச் சிரிப்பை உதிர்த்தான்.

"தாலி கட்டெல்லாம் முடிய நேரஞ்செண்டு போச்சுது ...... அவவுக்கும் சரியான களைப்பு ...... 'வாழ்க்கை முழுக்க ஒண்டாயிருக்கிற நாங்கள் தானே, இண்டைக்கு என்னத்துக்கு' எண்டு சொன்னா ...... பின்னைப் பேசாமல் படுத்திட்டம்."

"நீ சரியான பேயன்ரா ......"! மகேந்திரன் ஏளனம் செய்தான்; "இப்பிடி ஒரு அருமையான இரவை ஆரேன் கோட்டை விடுவானே?"

ஜெகநாதனுக்கு, தான் ஏதோ தவறு விட்டதைப் போன்ற உணர்வு முளைவிட்டது. அவனது முகமாற்றத்தைக் கண்டு, "இல்லை ...... அவன் செய்ததுதான் சரி!...... எங்கடை ஆசைகளுக்காக பொம்பிளையின்ர மனசைப் பாதிக்கிறமாதிரி நடக்கக் கூடாது" சிவகுமார் பரிந்து பேசினான்.

"ஆர் சொன்னது மனசைப் பாதிச்சு நடக்கச் சொல்லி? ஆதரவான அணைப்பாலையும் அன்பான பேச்சாலையும் மனதை மாற்றியிருக்கலாமெண்டுதான் சொல்லுறன்."

RangaRakes tamilnavarasam.com

''சரி ...... சரி!...... அந்தக் கதையை விடு இப்ப என்ன குடிமுழுகிப் போச்சே?...... உன்ரை கதையைக் கேட்டிட்டு அவன் நாளைக்கே ஊருக்கு ஓடப்போறான்!''

சிவகுமார் சொன்னதைக் கேட்டு ஜெகநாதன் சிரிப்போடு கூறினான். போய் லீவு போட்டிட்டு வாறனெண்டு தான் சொல்லிப் போட்டு வந்தனான் ...... நாளையிண்டைக்குப் போக வேணும்......''

''அப்ப நீ இனி ...... எங்களோடை இருக்கமாட்டாயெண்டு சொல்லு!...... ஒண்டு செய்யடாப்பா ...... ஒன்றில் யாழ்ப்பாணத்துக்கு மாற்றம் எடு! அல்லது மனிசியை இஞ்சை கொண்டுவா! இல்லையெண்டால் வேலைக்கு முழுக்குப் போட வேண்டித்தான் வரும்.''

''இந்த வேலையைக் காட்டித்தானே அந்தச் சீதனம் எடுத்தது ...... பிறகு இதுவும் போயிட்டால்?'' மகேந்திரனின் வழக்கமான கேலிப் பேச்சு.

''இவனுக்கு எப்பவும் பகிடிதான். இனிக் கதைச்சது காணும் மச்சான் படுப்பம்'' என்றவாறே லைட்டை அணைத்து விட்டுப் படுத்தான் சிவகுமார்.

தன் கட்டிலின் பக்கத்தில் பாயில் படுத்திருந்த மகேந்திரனிடம் ஜெகநாதன் ரகசியமாகக் கேட்டான், ''மச்சான் உன்னட்டை ஏதாவது புத்தகங்கள் இருக்கோ?''

''என்ன புத்தகமடாப்பா?''

வேறை என்ன?...... விளங்காத மாதிரிக் கேக்கிறாய் .. எங்கடை ஊர்ப் பெட்டைகளைப் தெரியாதே? ஒரு சவமும் தெரியாது!''

மகேந்திரனுக்குப் பெருமையாக இருந்தது. இந்த விஷயத்தில் தன்னை ஒரு பொருட்டாகப் பாவித்து அவன் பாடம் கேட்கும் பொழுது உதவாமல் இருக்கலாமா?



''ஒரு ஃபிரண்டிட்டை இருக்குது. நாளைக்கு வேண்டித் தாறன்.''

''கட்டாயம்...... மறந்திடாதை......''

''நீ ஒண்டுக்கும் யோசியாதை எல்லாம் வெல்லலாம்.''

கடற்கரைப் பாதையில் ஒரு 'சிலோ றெயின்' ஓடிக்கொண்டிருக்கிற சத்தம் இரவின் அமைதியைக் குலைக்கிறது.

# அத்தியாயம் - 17

வெள்ளவத்தை இராமகிருஷ்ண மண்டபத்தில் மேடையேறவிருக்கும் கட்டுப்பெத்த வளாக தமிழ் மன்ற மாணவர்களின் நாடகத்திற்குப் போகலாம் என மகேந்திரன் சிவகுமாரை அழைத்தான். சிவகுமாருக்கும் அது நல்ல 'ஐடியா' வாகத் தோன்றியது. இருவருமாக, கதைத்துக் கொண்டே மண்டபத்துக்கு நடந்து சென்றார்கள்.

சில ஏழைச்சிறுவர்கள் வீதியோரத்தில் கொட்டப்பட்டிருக்கும் குப்பைகளிலிருந்து அவர்களுக்குப் பெறுமதியான பொருட்களைப் பொறுக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

''இவங்கள் ஏன் குப்பையைக் கிளறிக்கொண்டிருக்கிறாங்கள்?'' என்றான் மகேந்திரன்.

''குப்பையில்தானே குண்டுமணி கிடக்குமாம்'' என்றவாறு அவர்கள் பக்கமாக சிவகுமாரும் நோட்டம் செலுத்தி

RangaRakes tamilnavarasam.com

ஞன்; வெற்று பால்மாத் தகரங்கள், அரைகுறையாகப் பழுதடைந்த விளையாட்டுப் பொருட்கள், சிறிய போத்தல்கள், கிழிந்த சப்பாத்துக்கள், அறுந்த செருப்புக்கள்! இவற்றைக் கொண்டு சென்று அவர்கள் காசாக்கக்கூடும். சிறு துரும்பும் பல்லுக் குத்த உதவுமாமே? எல்லாம் வயிற்றை நிரப்புகிற முயற்சிதான்!

''மச்சான் வயிறு பசியெடுக்குது ஏதாவது கடிச்சிட்டுப் போவோம்.''

''சரி!''

ஏக்கவுண்ட் கடை வரவேற்றது. ஜெகநாதன் கடையிலிருந்து வெளியே வந்தான். நண்பனொருவன் இரவுச் சாப்பாட்டிற்கு அழைத்திருப்பதாகவும் வருவதற்கு நேரமாகும் என்றும் கூறிச் சென்றான். இரண்டு நாட்களில் வருவதாக மனைவியிடம் கூறிவிட்டு வந்தவனுக்கு அலுவலகத்தில் லீவு கிடைக்காதது பெரிய மனக்குறை. மேலதிகாரிகளுக்கு அவனது கஷ்டத்தைப் புரிந்து கொள்ள மனதில்லை. நேற்றைய இரவும் எங்கேயோ பார்ட்டிக்கு என்று சென்றவன் நிறை தண்ணியிற்தான் வந்தான். (''மாப்பிளையெண்டால் தங்கக் கம்பி!...... பீடி சுருட்டு தொடுறதில்லை...... தண்ணிவென்னி பாவிக்கிறதில்லை......'' — கலியாணப் புரோக்கர்கள் வாழ்க!)

கடையினுள் வந்து அமர்ந்து கொண்டே மகேந்திரன் சொன்னான்;

''மச்சான்!...... உனக்கு ஒரு சங்கதி சொல்ல வேணுமெண்டிருந்தனான்......''

''என்ன?''

''ஜெகநாதன் முடிச்சிருக்கிற பொம்பிளையைப் பற்றி ..... எனக் கூறிவிட்டு மேற்கொண்டு சொல்லத் தயங்குபவன் போல வாயை மூடினான்.



''உனக்கு ஆரையேன் பற்றி சொட்டை சொல்லாமல் இருக்கேலாது!''

''இல்லை...... இது உண்மைக்கதை மச்சான்...... அவள் முந்தி ஒருத்தனோடை இருந்தவள்......''

''நீ...... நேரிலை கண்டவன் மாதிரிச் சொல்லுறாய்?''

''ஊரெல்லாம் தெரிஞ்ச கதைதானே...... அவள் முந்தி யூனிவசிற்றியிலை படிக்கையிக்கை...... ஆரம்பிச்ச தொடர்புதான்.''

''தொடர்பெண்டால்?......''

'' 'லவ்' தான்...... ரெண்டுபேரும் ஒரே வீட்டிலைதான் இருந்தவையெண்டும் கேள்வி.''

''அப்ப, கேள்விப்பட்ட கதையைத்தான் சொல்லுறாய்?'' சிவகுமாரது கேள்வி அவனைச் சினங்கொள்ளச் செய்தது —

''உனக்கு ஒண்டும் சொல்லேலாது. நான் உண்மையைத்தான் சொல்லுறன் ...... யூனிவசிற்றியாலை வெளிக்கிட்ட பிறகும் ...... இவ வேலை செய்கிற இடத்துக்கு அவர் போய்வாறவராம் ...... சிங்கள வீட்டிலைதான் இவ இருந்தவ ...... அவரும் அங்கை மாசக்கணக்கிலை தங்கியிருந்தவராம்.''

'' 'மறி' பண்ணிக் கொண்டோ?''

''அந்த மாதிரித்தான்!''

''பிறகேன் விட்டவையள்?''

''சாதிப் பிரச்சனைதான் ...... அவன் ஏதோ குறைவாம் ...... இவையள் காசுக்காறுக்கள் ...... விடுவினமே?''

RangaRakes tamilnavarasam.com

''பெட்டையும் ஓமெண்டு விட்டிட்டாளே?''

''அதுதானே ...... பெரிய இழுபறி நடந்து கதையும் சந்திக்கு வந்தது ...... அவளுக்கு வேலையும் வேண்டா மெண்டு கொண்டு வந்து எத்தினைநாள் வீட்டுக்கை பூட்டி வைச்சிருந்தவங்கள்.''

''அவன் இப்ப எங்கை?''

''பாவம் மச்சான்!. இப்ப எங்கேயோ தெரியாது...... அவனையும் பெரிய சித்திரவதை செய்துதான் விட்டவங் கள் ...... காசு என்னதான் செய்யாது?''

இவ்வளவு நேரமும் குறுக்கு விசாரணை செய்து கொண்டு வந்த சிவகுமார் மௌனம் சாதித்தான். அந்த அப்பாவிக்காக வேதனைப்படுகிறானா இந்தப் பேதையை எண்ணி வருந்துகிறானா அல்லது அரக்கத்தனமான செயல் களை எண்ணிக் குமுறுகிறானா என்பது புரியவில்லை. மூன்று காரணமாகவும் இருக்கலாம்.

கணக்குக் கொப்பியை எடுத்து தேநீருக்குரிய கணக் கைக் குறித்துவிட்டு வெளியேறினார்கள். கஷியருடைய செயற்கையான சிரிப்பு, போலித்தனமான சம்பிரதாயம்.

''எங்கை நாடகத்துக்குப் போறியளோ?'' தேவையற்ற முகஸ்துதி.

''இப்ப இவள் ஜெகநாதனை முடிச்சிட்டாள்தானே?'' —சிவகுமாருக்கு எல்லாமே குழப்பமாக இருந்தது.

''காசு எல்லாத்தையும் மறைச்சுப் போட்டுது.''

''அவள் மனமில்லாமல் தான் இது நடந்திருக்கும் எண்டு சொல்லுறியோ?''



''அது எப்படியோ!...... இவன் பேயன் ஏமாந்து போனான்.''

ஜெகநாதன் அடைந்திருப்பது உண்மையில் ஏமாற்றம் தானா என்ற எண்ணம் சிவகுமார் மனதில் முளைவிட்டது. ஜெகநாதனது சுபாவத்தோடு ஒப்பிடுவதானால் அவனுக்கு இது பெரிய இழப்பில்லை. ஆனால், நியாயமாகவே ஆண் கள் அனைவரும் ஒரு புதிய மனைவியிடம் எதிர்பார்க்கின்ற புனிதத்தன்மை இல்லாது போவதே பெரிய ஏமாற்றம் தானே? அப்படி எதிர்பார்ப்பதற்கு அவன் அருகதை உள் ளவனாகவும் இருக்க வேண்டுமே?

''மகேந்திரன் ...... உனக்கு ஜெகநாதனைப் பற்றித் தெரி யும்தானே?...... அவனும் லேசுப்பட்ட ஆளில்லை.''

''அது வேறை விஷயம் மச்சான்...... ஆரெண்டாலும் தனக்கு வருகிற மனைவி முந்தி ஒருத்தனுக்கு வாழ்க்கைப் பட்டவள் என்றால் ஒத்துக்கொள்வானோ?''

சிவகுமாரால் அதை ஒத்துக் கொள்ள முடியவில்லைத்தான் தெரிந்து செய்வது வேறு விஷயம். தெரியாமல் முடித்து ஏமாறுவது என்றால் கவலைக்கிடமான சங்கதிதான். இந்த நேரத்தில் ஜெகநாதனுக்காக அனுதாபம் ஏற்பட்டது. மடையன், 'காசு, காசு' என்று ஆசைப்பட்டதனாற்தானே இது நேர்ந்தது. இனிக்கடைசிவரையும் இது ரகசியமாகவே இருக்க வேண்டும். இடையில் அறிய வந்தால் அவனது குடும்பத்தில் என்னமாதிரியான பிளவுகளும் விளைவுகளும் நிகழக்கூடும். எல்லாவற்றிற்கும் மேலாக அவளும் மன மொத்துத்தான் இவனை மணமுடித்தாளோ என்பதும் கேள் விக்குரிய விஷயமே'. அல்லது நிர்ப்பந்தமோ என்னவோ?

''மகேந்திரன்!...... அவளும் மனமொத்துத்தானே செய்திருப்பாள்?'' என்று தனது சந்தேகத்தை மீண்டும் கேள்வியாக்கினான்.

RangaRakes tamilnavarasam.com

''அது என்னவோ தெரியாது ... .. எனக்கெண்டால் ஐமிச்சம் ...... அவன் முதலிரவுக் கதை சொல்லயிக்கை கேட்டுக்கொண்டிருந்தனிதானே? ...... 'வாழ்க்கை முழுக்க ஒண்டாயிருக்கிற நாங்கள்தானே ...... இண்டைக்கு வேண்டாம்' என்றுளாம்!......ஆரெண்டாலும் இப்பிடிச்சொல்லுவாளவையே?''

மீண்டும் மௌனம் சாதித்தவாறு நடந்து கொண்டிருந்தான் சிவகுமார். உல்லாசப் பிரயாணிகளாக வந்து வாகனங்களில் பவனிவரும் வெளிநாட்டுக்காரர்களின்மேல் பார்வை விசேஷமாகச் சென்றது. இரு ஆண்களுடன் மிக அன்னியோன்னியமாகப் பழகியவாறு செல்லும் 'வெள்ளை' உள்ளம் படைத்த பெண்! இரு பெண்களுடன் செல்லும் ஒரு ஆண். நீண்ட வயது வித்தியாசமான கிழ, இளம் சோடிகள். எல்லோரும் வாழ்க்கையை அக்குவேறு ஆணி வேருக, அனுபவிப்பதையே தங்கள் தலையாய கடமையாகக் கொண்டவர்கள் போன்ற கோலங்கள். இவர்களுக்கு எந்தப் பிரச்சினைகளுமே இல்லையா?

ஆறுமாதங்கள் வண்டனுக்கு உல்லாசப் பிரயாணிகளாக சென்று வந்த நடுத்தர வயதான அலுவலக நண்பனும் மனைவியும் சொன்ன விஷயங்கள் சிவகுமாரது நினைவிற்கு வந்தது. அங்கெல்லாம் இளைஞர்களும் யுவதிகளும் மிக அன்னியோன்னியமாகப் பழகுகிருர்களாம். தங்களை 'செக்ஸ்' சில் திருப்திப்படுத்துகிறவர்களை சரியாக ஊர்ஜிதப்படுத்திக்கொண்டுதான் மணம்செய்கிருர்களாம். நமது நாட்டுத் திருமணங்கள் ''பெரியோர்களால் நிச்சயிக்கப் படுகிற'' சங்கதியைக் கேட்டு அவர்கள் ஆச்சரியப்படுகிருர்கள்! ஒருவரை ஒருவர் பூரணமாக அறிந்து கொள்ளாமல் எப்படி ஒன்று சேர்ந்து வாழ்வது?

உண்மையோ பொய்யோ கேள்விப்பட்ட அவ்விஷயத்தை மகேந்திரனுக்குச் சொன்னுன் சிவகுமார்.



''மச்சான்! அவங்கடை பண்பாடு ...... அந்தச் சூழ்நிலையில் வளந்தவர்களுக்கு அது ஒரு பாரதூரமான விஷயமாகவே இருக்காது ...... எங்கடை பண்பாடு வேறை!...... பெண்கள் பூவைப் போல புனிதமாக இருக்க வேண்டுமெண்டு கருதுறவை எங்கடை ஆக்கள்!''

கதையோடு கதையாக இராமகிருஷ்ண மண்டபம் வரை நடந்ததே தெரியவில்லை.

ஒரு தவறு நடந்தால் அதற்கு மன்னிப்பு இல்லையா? அல்லது ஒரு விபத்து நடந்தால் அதிலிருந்து மீட்சியே இல்லையா?

சிவகுமார் சொன்னுன்; இனி என்ன செய்யிறது?...... மச்சான்? ''நாங்கள் நினைக்கிறமாதிரி வாழ்க்கை அமையாவிட்டால் எங்களுக்கு அமையிற வாழ்க்கையை ஏற்றுக்கொள்ள வேண்டியதுதான்''

''நீ வலு லேசாய்ச் சொல்லிப் போட்டாய் ...... தலையிடியும் காச்சலும் தனக்கு வந்தாத்தான் தெரியும்.''

''எனக்கு இப்ப உன்ரை கதையைக் கேக்கத் தலையிடிக்குது ...... பேசாமல் வா!...... நாடகத்தைப் பார்ப்பம்.''

அண்மைக் காலங்களில் கட்டுப்பெத்தை வளாக மாணவர்கள் தமிழ் நாடகத்துறைக்கு அளித்துவரும் பங்களிப்பை வியந்து பேசினுன் மகேந்திரன். சிவகுமாருக்கு அது ஆச்சரியத்தை அளித்தது; இவனுக்குக் கலைஞானமும் இருக்கிறதே!

நாடகம் நிறைவு பெற்றதும் பலவித அபிப்பிராயங்களுடன் சனங்கள் கலையத் தொடங்கினர்; ''நாடகம் நல்லாய்த்தான் இருக்குது ......ஆனுல், வேறைமொழிக் கதை தானே?'' — ''வழக்கமான தமிழ் நாடகங்களிலை இருந்து

RangaRakes tamilnavarasam.com

இது வித்தியாசமாயிருக்குது ...... அது நல்ல வளர்ச்சிக் குரிய அறிகுறிதானே?'' —'' பிறநாட்டுக் கதையெண்டா லும் கெட்டித்தனமாய் மொழிபெயர்த்து இயக்கியிருக்கி றுங்கள்'' — ''இதைப்போல எங்கடை தமிழ் சமூகத்திலே இருக்கிற பிரச்சினேகளேயும் ...... புதுக் கோணங்களிலே அணுகிச் சித்தரிச்சால் நல்லாய் இருக்கும்.''

மகேந்திரன் தனது தொலேநோக்குக் கண்களால் யாரையோ கண்டுவிட்டு அவதிப்பட்டான்! ''மச்சான்!...... ஒரு சோடி வருகுது கண்டியோ?''

''ஆரடாப்பா?''

''மிஸ்டர் அன்ட் மிஸிஸ் அகிலா!''

அகிலா தூரத்தில் வந்துகொண்டிருந்தாள். ஏற்கனவே திருமணமான தம்பதியரைப் போல அவனேடு அணைந்து இணைந்து அவள் வருவதைப் பார்க்க நல்ல பொருத்தமான துணையாகத்தான் தேடியிருக்கிறுள் எனத் தோன்றியது. அண்மையில் வந்து சிவகுமாரைத் கண்டதும் புன்னகையை மலர்த்திஞள். அவனேயும் அழைத்துக்கொண்டு அருகே வந் தாள். ராஜேசனுக்கு முதலில் சிவகுமாரையும் பின்னர் மகேந்திரனேயும் அறிமுகப்படுத்திஞள். சிநேகபூர்வமான சிரிப்புக்கள், சம்பாஷணேகள். ஒரு பண்பாளனேப் போல ராஜேசன் பழகிய விதம் அவனே கள்ளங்கபடமற்ற ஒருவன் என எண்ணத் தோன்றியது. இவனேயா மலருக்கு மலர்தா வும் வண்டு என மகேந்திரன் சொல்கிறுன்?

அகிலாகூட அந்த மாதிரித்தான் சொல்லியிருக்கிறுள். தப்புக்கணக்கா? எப்படியோ இனி அவன் நல்லவஞக இருந்துவிட்டால் போதுமானது.

''ராஜேஸ் ...... இவங்களும் பக்கத்து அறைதானே? நான் இவங்களோடை போறன் ........ நீங்க போங்களன்''



என அகிலா கூறியதும் ராஜேசனுடைய முகத்தில் சற்று மாற்றம் ஏற்பட்டது. தனது புதிய ஹொண்டா சைக்கிளில் அவளே ஏற்றிக்கொண்டு செல்லலாம் என்ற அவனது இத மான எண்ணத்தில் இடி விழுந்துவிட்டது! குளிர்மையான காற்று ஊடுருவும் பொழுது அவள் மென்மையான கரத் திஞல் தனது வயிற்றைச் சுற்றி வளைத்து அணைத்திருப்பா ளென்ற கற்பனேயின் சுகமும் போய்விட்டது. வேண்டா வெறுப்பாகச் 'சரி' சொல்லிவிட்டுச் சென்று சைக்கிளே எடுத்து சீற்றத்தோடு உதையத் தொடங்கிஞன். மோட் டார் சைக்கிள் சீறிக்கொண்டு ஓடியது.

இவர்கள் நடக்கத் தொடங்கிஞர்கள். வர்த்தக நிலே யங்களில் ...... ஓடுவதுபோல ஜாலவித்தை காட்டிக்கொண் டிருக்கும் விளம்பர விளக்குகளின் சிரிப்பு! அகிலா செய்த காரியம் சரியில்லேயென சிவகுமாருக்குப் பட்டது. ராஜே சனுக்கு அது சம்மதமாயிருக்குமோ என்று சந்தேகமாயி ருந்தது. அதை அவளிடமே சொல்லலாமெனத் தோன்றிஞ லும் மகேந்திரனும் கூட வந்ததால் பேசாமலே வந்தான்.

''சிவா, நாளேக்கு இரவு எங்கட வீட்டில சாப்பாடு... மூன்று பேரும் வாங்க!''

''என்ன விசேஷம்?...... கலியாணச் சாப்பாடா?''

அகிலா மென்மையாகச் சிரித்தவாறு அவன்மேற் கோபப்படுவது போன்ற பாவனேயிற் பார்வையைச் செலுத்திஞள். அந்த கோபமும் சிரிப்பும் கலந்த நளினம் மகேந்திரனே மயக்கியது.

''...... அப்பிடியில்லே...... அதுக்கு இன்னும் நாள் கிடக்கு...... இப்ப சும்மாதான்!'' ''அதென்ன ...... ஒரு நாளும் இல்லாத திருநாள் சும்மா?''

RangaRakes tamilnavarasam.com

மகேந்திரன் தேவையில்லாமற் சிரித்தான். அகிலாவோடு சமமாக நடந்து வருவதிலும்...... அவளது பேச்சைக் கேட்பதிலும் அற்ப திருப்தி ஏற்பட்டது.

''நாளைக்கு என்ர பேர்த்டே......'' என்றாள் அகிலா.

''அப்பிடியா சங்கதி ...... வெறிகுட் ராஜேசும் வருவாரா?......''

''அவருக்கும் சொன்னன்... . வரயில்லை என்னுட்டார்!..... அவர் வீட்டுக்கு அவ்வளவாய் வாறதில்லை ...... அதுகும் நல்லம்தானே ...... பிறகு ஏதேன் கதைப்பானுகள்...... நீங்கள் ...... இப்பெல்லாம் கடையில தானே சாப்பிடுறீங்க ...... அதுதான் சொன்னன் ...... ஒரு 'சேன்ஞ்' சாய் இருக்கும்தானே? வாங்க ...... ''

தெரிந்தோ தெரியாமலோ அவளுக்கு பொருளாதாரச் சிக்கலை ஏற்படுத்த விரும்பாதவன் சிவகுமார். எனினும் அவளது வற்புறுத்தலையும் புறக்கணிக்கமுடியவில்லை.

''அகிலா ...... ஜெகநாதனையும் கூட்டியாறதா? அவன் வருவானோ தெரியாது ...... பிறகு நீங்கள் மருந்து போடமாட்டீங்கள்தானே?'' என பகிடியாகக் கேட்டான் சிவகுமார்.

அகிலா கபடம் இல்லாமல் சிரித்தாள்.

# அத்தியாயம் - 18

இருள்வதற்கு முன்னரே சிவகுமார் வந்து விட்டான். அகிலாவிற்கு 'ஹப்பி பேர்த்டே' கிடைத்தது. முகத்திலே தென்பட்ட மகிழ்ச்சி செயற்கையாகப்பட்டது. அப்படியென்றால் மனப்பூர்வமாக இல்லையா? என்ன காரணம்? ஏதேனும் கவலையாக இருக்குமா? அகிலாவுக்குக் காரணம் கேட்கத் துணிவில்லாமலிருந்தது, குழம்பிய மனநிலையில் அவன் இருக்கும்போது நேரடியாகக் காரணத்தைக் கேட்டால் சிலவேளைகளில் சினந்தும் கதைத்து விடுவான். பின்னர் அதற்காக அவனே வருத்தப்படுவான். அது அவளுக்கும் கவலையைக் கொடுக்கும். சுற்றி வளைத்துத் தான் விஷயத்தைக் கேட்டறிய வேண்டும்.

''என்ன சிவா, உங்கட பிரண்ட்ஸ் வரமாட்டானுகளா?......தனிய வந்திருக்கிறீங்க?''

''வருவாங்கள்......ஓசிச் சாப்பாடென்றால் விடுவாங்களே? ''சிவகுமார் சற்று வேடிக்கையாகப் பேசிய விதம் அவன் அவ்வளவு மோசமான மன நிலையில் இல்லையென்பதை உணர்த்தியது.

''ஐயோ, பாவங்கள்......அப்பிடிச் சொல்லாதையுங்கோ!''

''நான் விளையாட்டுக்குத்தான் சொன்னனான்......நீங்கள் எல்லாரையும் பாவம் பாக்கிறீங்கள்......அவங்களும் அப்படி நினைக்க வேணுமே?''

''அவனுகள்........எப்படியும் இருக்கட்டும்......எங்களுக்குத் தொல்லை தராட்டிச் சரி தான்!''

RangaRakes tamilnavarasam.com

"அதைத் தான் நானும் சொல்லுறன்."

"அது சரி...சிவா?......என்ன ஒரு மாதிரி இருக்கிறீங்க??"

"எனக்கு ஒரு குறையுமில்லை நல்லாய்த் தான் இருக்கிறன்......"

"சும்மா...... ரேப்விடாதையுங்களேன் ......குறையில்ல என்கிறதே ஏதோ குறை இருக்கு என்னுமாப்போலை யிருக்கே?"

குசினியிலிருந்து 'சுவையான' வாசனை வருகிறது. 'பேர்த்டே' பார்ட்டிக்கு அம்மா சமையலில் ஈடுபட்டிருக்கிறாள்.

"அகிலா......உங்களுக்கேன் இந்தத் தேவையில்லாத சிலவெல்லாம்?......"

"இதென்ன பெரிய சிலவு?......கடயில சாப்பிட்டு உங்களுக்கும் அலுத்திருக்கும்......அது தான் 'பேர்த்டே'யை சாட்டி வரச் சொன்னன்... இல்லைன்னு வரவே மாட்டீங்க... ஒரு நாளைக்காவது உங்கட வயிறு குளிரச் சமைச்சுப் போட வேணுமெண்டு தான் ஆசை......அது தான் கூப்பிட்டன்."

அகிலா சொன்ன காரணம் அவனை உணர்ச்சி வசப்பட வைத்தது. என்ன பெண் இவள்? அல்லது பெண்கள் எல்லோருமே இப்படித் தானா? அவங்கள் இவளைப் பற்றி இல்லாத பொல்லாத கதைகளையெல்லாம் சொல்லித் திரிவதைத் தன் காதுபடக் கேட்ட பின்னரும் இப்படியொரு எண்ணமா? அவங்கள் தின்றால் என்ன கிடந்தால் என்ன என்ற கோபம் வரவில்லையா? கடைகளிலும் கன்ரீனிலும் தின்றது பாதி தின்னாதது பாதி என்று அவர்கள் திரிவது இவளது மனதையும் பாதிக்கிறதா? அல்லது 'உங்கள்' என



அவள் குறிப்பிட்டது தன்னை மாத்திரமா? அப்படி நினைத்த பொழுது ஒரு குதூகலம் மனதை ஆட்கொண்டது. இந்தக் கையால் சீவியம் முழுக்க சாப்பிட்டுக் கொண்டிருக்கலாமே! மறு கணமே அந்த நினைவு 'சுருக்'கென்று தைத்தது. அதற்குக் குடுத்து வைத்தவன் ராஜேசன் தான்.

சடுதியாக எதையோ நினைத்துக் கொண்டவன் போலக் கேட்டான்.

"அகிலா நேற்று இரவு நீங்கள் செய்த வேலை சரியில்லை?"

அகிலா திடுக்குற்றாள். தான் ஏதாவது தவறு செய்து விட்டேனா? அதுதான் அவனது வாட்டத்திற்குக் காரணமா?

"என்ன சிவா?"

"மிஸ்டர் ராஜேசனை அனுப்பிவிட்டு எங்களோடை தனிய வந்தீங்கள்...அவர் என்ன நினைச்சாரோ தெரியாது"

பெரிய ஹாஸ்யத்தைக் கேட்டவள்போல அகிலா சிரித்தாள். "இதுதானா உங்கட கவலை? நான் என்ன தனியவா வந்தன்?......நீங்க இரண்டு பேர் துணைக்கு வந்தீங்க ........வீணா அவர் அலையிறது ஏன் என்று நினைச்சுத் தான் போகச் சொன்னன்."

"அதை அவர் விரும்பியிருக்க மாட்டார்!"

'நீங்கள் சொல்லுறது விளங்குது......அப்பிடி அவர் சந்தேகப்படத் தேவையில்லை......என்னில எனக்கு நம்பிக்கையிருக்கு."

"நீங்கள் இப்படிச் சொல்லுறீங்கள். ஆம்பிளையளின்ரை மனம் அதைக் கேட்காது! ஒரு பெண்ணைக் காத

RangaRakes tamilnavarasam.com

லிக்கிருனென்றால் அவன்றை மனதும் அவளைச் சுற்றியே சுருங்கி விடும்.........அவள் எதைச் செய்தாலும் தனக்காகத் தான் செய்ய வேணும் என்று விரும்புவான். உங்கட துணைக்காக வேறை ஆம்பிளை வாறது என்பதே அவனைப் பொறுத்தவரை பாரதூரமாக மனதைத் தாக்கியிருக்கும்.''

அகிலாவுக்கு இனம் புரியாத கவலையொன்று உள்ளத்தை நெரித்தது. ராஜேசன் நேற்றைய இரவு மோட்டார் சைக்கிளுக்கு உதைத்த உதை பளிச்சென நெஞ்சிலிடித்தது. இன்று அலுவலகத்துக்கு லீவு போட்டதற்கும் அது தான் காரணமோ? 'சிக்' என்று துண்டு அனுப்பியிருந்தான். என்ன சிக்? மனமோ? கொஞ்சமாவது முன் யோசனையோடு நடந்திருக்கலாம் தான்.

''இனி என்ன செய்யிற.........இருங்க தேத்தண்ணி போட்டிட்டு வாறேன்'' என்றவாறே எழுந்து சென்றாள். அவள் அப்போதைய நிலைமையைச் சமாளிக்கத்தான் அப்படிச் செய்கிறாள் என அவன் நினைத்தான்.

சற்று நேரத்தில் மகேந்திரனும் ஜெகநாதனும் வந்தார்கள். ''ஹப்பி பேர்த்டே ரூ யூ'' சொன்னார்கள். (ஆஹா என்ன பண்பு!) சிரித்துச் சிரித்துப் பேசினார்கள்! பேசிக் கொண்டே இருக்க நேரம் கடந்தது.

சாப்பாடு மேசைக்கு வந்தது. கண்களை மூடிக் கொண்டு மூக்குமுட்டப் பிடித்தார்கள். உண்மையிலேயே நல்ல சாப்பாடு எனப் புகழ்ந்தான் ஜெகநாதன். எதற் கெடுத்தாலும் மருந்து மாயம் எனப் பழி சொல்கிறவனுக்கு இன்றைக்கு எப்படி ஞானம் பிறந்தது! தன்க்குத் திருமணம் முடிந்து விட்ட படியால் இனி எதற்கும் பயப்படத் தேவையில்லையென நினைக்கிறான் போலும்.

சிவகுமார் அவ்வளவு உற்சாகமாகக் காணப்படவில்லை. நண்பர்கள் விடைபெற்ற பின்னரும் சிவகுமார் அங்கேயே



இருந்தான். அவனிடம் கவலைக்கான காரணத்தைக் கேட்டாள் அகிலா. அன்று வீட்டிலிருந்து வந்திருந்த கடிதமொன்றை எடுத்து நீட்டினான் பதிலுக்கு.

கடிதத்தை வாசித்து முடித்ததும் அவளுக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது. அந்த மகிழ்ச்சியில் மலர்ந்த முகத்தோடு அவனைப் பார்த்தாள்......அவன் புன்முறுவல் செய்தான். அதில் நிறைவில்லை.

இந்த விஷயத்துக்குப் போய் யாராவது கவலைப்படுவார்களா என்று தோன்றியது—

''என்ன சிவா?.........மகிழ்ச்சிப்பட வேண்டிய விஷயத்துக்குக் கவலைப்படுறீங்க!''

''மகிழ்ச்சி தான். ஆனால், என்ன செய்கிறது?''

''ஏன்?'' அவனது புதிரைப் புரிந்து கொள்ள முடியாமல் கேள்வி கேட்டாள்.

''இப்ப இதுக்காகக் காசுக்கு எங்கை போறது? இருக்கிற பிரச்சினைக்குள்ள இது வேறை தலையிலை விழுந்திட்டுது.........என்ரை கஷ்டம் எனக்குத் தானே தெரியும்.''

சிவகுமாரது தம்பி சிவராசனுக்குப் பல்கலைக்கழக அனுமதி கிடைத்துவிட்ட செய்தி தான் கடிதத்தில் வந்திருந்தது. அதை நினைக்க அவனுக்குப் பெருமையே ஏற்பட்டது.

தான் படித்து டொக்டராக வேண்டுமென சிவகுமாரும் நினைத்திருந்தான். குடும்பத்தில் பொருளாதாரச் சிக்கலினால் இடையிலே படிப்பைநிறுத்தி உத்தியோகத்துக்குப் போக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு விட்டமை அவனைப் பொறுத்தவரை பெரிய ஏமாற்றமே. இப்பொழுது

RangaRakes tamilnavarasam.com

தனது உடன் பிறந்த தம்பி அந்த ஆசையை நிறைவு செய்யப் போகிறான். அப்படியே ஓடிச் சென்று அவனைக் கட்டியணைத்துத் தனது நன்றியைச் சொல்ல வேண்டும் போன்ற துடிப்பு. அதையும் மீறிச் சடுதியாக அவனைப் பல்கலைக் கழகத்திற்கு அனுப்புவதானால் அதற்கு வேண்டிய செலவுகளை எப்படிச் சமாளிப்பதென்ற தவிப்பு.

அகிலாவுக்குக் கவலை மேலிட்டது. எத்தனையோ பேர் எத்தனையோ விதமாகவெல்லாம் பணத்தைச் சேர்த்து வீண் பொழுது போக்குக்களுக்கும் அநியாயக் கருமங்களுக்கும் செலவு செய்கிறார்கள். இப்படி நல்ல மனதோடு முன்னேறத் துடிக்கின்ற பிள்ளைகளைத்தான் கடவுள் சோதிக்கின்றார்.

''சிவா!........எவ்வளவு காசு தேவைப்படும்?''

அவனுக்குச் சிரிப்பு வந்தது.

''என்ன அகிலா .........ஏதோ கேட்டவுடனே தரப்போற மாதிரிக் கேட்கிறீங்கள்?''

''சரி!........எனக்கு அவ்வளவு உதவி செய்யிற அருகதையில்லத்தான்! உங்கட கவலையில நானும் சேரக்கூடாதா? சும்மா அறியிறதுக்காகத் தான் கேட்டன்'' —பொய்க் கோபம். அதுகூட அவனை அசைத்து விட்டது.

சொன்னான்......

அகிலா தெம்பூட்டினாள் ''என்ன சிவா இதுக்குப்போய் பயப்படுறீங்க......நீங்க ஆம்பிளை தானே?........'சிம்பிளா' யோசியுங்க எல்லாம் சரி வரும்.''

''அதுக்கில்லை அகிலா......இப்பவே சம்பளத்தில மிஞ்சிறதில்லை......வீட்டுக்கு அனுப்புறது...........என்ர சாப்பாட்



டுச் சிலவுகள்.........பாங்க் லோன் எடுத்தது மாதம் நூற்று அறுபது சொச்சம் வெட்டியிடுவாங்கள்......இந்த விசித்திரத்தில நான் இன்னொரு கடனைப்பட்டிட்டு அதை எப்படி அடைக்கிறது? அவன் கம்பசுக்குப் போனப் பிறகும் மாசம் மாசம் அனுப்பவேண்டியிருக்குமே?''

''பிறகு வாறதை நினைச்சு ஏன் 'வொறி' பண்றீங்க... இதுதான் உங்களிலை இருக்கிற பலவீனம்......எங்கட கஷ்டத்தைப் பார்த்து ஒரு பிள்ளையிட.........படிப்பைக் கெடுக்கிறதா?.........இப்ப உள்ள பிரச்சினைக்கு ஏதாவது வழி செய்வம்...........பிறகு எல்லாம் சரி வரும்.

அதுகூடச் சரியான வாதம்தான். இன்றைக்கு வசதியில்லையென்று கையை விரித்துவிட்டால் நாளைக்கு அவன் எங்கேயாவது ஒரு சாதாரண கிளார்க்காக......தனக்குத் தானே சுமையாகவும் தனக்கு மேலும் இறக்க முடியாத பளுவைச் சுமந்து கொண்டு?

இரவு நேரம் கடந்துவிட்டது. அவன் விடைபெற்ற போது அகிலா தன் கழுத்திலிருந்த தங்கச் சங்கிலியைக் கழற்றி அவனிடம் நீட்டினாள்.

''அகிலா என்ன இது?''

''உங்களுக்குத் தேவையான காசைத் தருகிற வல்லமை இப்ப இதுக்கு இருக்கு.''

அவனது வாய் அடைத்துப் போய்விட்டது. முயன்று கதைத்தான்.

''அகிலா......உங்களிட்ட இருக்கிறதே இந்த ஒரேயொரு சங்கிலிதான். நீங்கள் வேலைக்கும் வெளியிலேயும்

RangaRakes tamilnavarasam.com

போகைக்கை இதுதான் கழுத்திலை இருக்குது. அதைக் கழட்டித் தந்திட்டால்?''

''சிவா, சங்கிலி தங்கத்தில செய்து போடுறது இப்பிடி ஏதாவது ஆபத்துக்கு உதவுமெண்டுதான்.''

அவனுக்கு மனது கேட்கவில்லை.

''வேண்டாம் அகிலா......அம்மாவுக்குத் தெரியாமல் நீங்கள் இதைச் செய்யுறீங்கள்......சரியில்லை......நான் எப்படியாவது காசு பிரட்டுவன். கவலைப்படாதையுங்கோ'' எனக் கடத்தினான்.

''அம்மாவுக்கும் சொல்லி யிட்டன்......''

''இல்லை......எனக்காகத்தான் இப்படி எல்லாம் சொல்லுறீங்கள். என்ர கஷ்டம் என்னோடை! தயவு செய்து வைச்சிருங்கோ......'' என்றவாறு சங்கிலியை வேண்ட மறுத்தான்.

''என்ன சிவா இது? அது ஒரு நல்ல காரியத்துக்கு உதவுது என்ட சந்தோஷம் எனக்கு இல்லையா?........இதுக்கும் மேலே கேக்காட்டி எனக்குக் கோபம்தான் வரும். கதைக்க மாட்டன்'' என்றவாறு அவனது கையைப் பிடித்துக் கொடுத்தாள்.

அவனது கண்கள் பனித்து விட்டன.

# அத்தியாயம் - 19

விடியப்புறமாக நாய் குரைத்த சத்தத்தில் எழுந்த பூமணி சிவகுமாரைக் கண்டதும் ''எட தம்பி!...... இப்பதானேடா வாறாய்?'' என மகிழ்ச்சியோடு முற்றத்துக்கு இறங்கி வந்தாள். ஆளையறியாமல் முதலில் குரைத்த ஜிம்மிநாய் பின்னர் அவனைச் சுற்றிச் சுற்றி, தொங்கி விழுந்து கைகளை நக்கித் தனது விசுவாசத்தைக் காட்டத் தொடங்கியது. அவனோடு சேர்ந்து விறாந்தைக்கும் ஏறியது.

''அங்காலை போ...... இறங்கு கீழை......!'' என அம்மா அதட்டினாள்.

சிவகுமார் பயணப் பையை ஒரு பக்கத்தில் வைத்து விட்டு சப்பாத்துக்களைக் கழற்றி கால்களை விடுவித்தான். அவனையே பார்த்துக்கொண்டிருந்த அம்மா, ''என்னடா தம்பி......சரியாய் வயக்கட்டுப் போனாய்? என அனுதாபப் பட்டாள். அவனுக்கு அதற்குப் பதில் சொல்ல வேண்டும் போற தோன்றவில்லை. ''இரு! தேத்தண்ணி போட்டுக் கொண்டு வாறன்'' என்றவாறே அம்மா குசினிக்குப் போனாள்.

அவனுக்கு எரிச்சலாக இருந்தது. ''உடனடியாக வரவும்'' என்று தந்தி அடித்துவிட்டு காரணத்தைச் சொல்லாமல் இருந்தால்? நேற்றுத் தந்தியைக் கண்டதும் அவன் எவ்வளவு பதட்டமடைந்தான். என்னவோ ஏதோ என்று ஏக்கமடைந்தான். அம்மாவுக்கு ஏதாவது சுகவீனமோ? அல்லது அப்பாவுக்கு? ஒருவேளை அக்காவின் சம்பந்த விஷயங்கள் ஏதாவது ஒப்பேறியிருக்குமோ?

RangaRakes tamilnavarasam.com

காலையில் வந்து வீட்டையும் அம்மாவையும் தரிசித்த பின்னரே பெரிய நிம்மதி தோன்றியது. எனினும் என்னவோ ஏதோ என்ற தவிப்பு இன்னும் இருக்கத்தான் செய்தது.

சிவகுமார் வந்திருப்பது தெரிந்து அக்காவும் தம்பியும் எழுந்து வந்தார்கள். இந்த ஆரவாரத்தில் சின்னவனும் எழுந்து சிணுங்கிக் கொண்டே வந்தான்.

"இஞ்சற்ரு பெரியண்ணை வந்திருக்கிருர்!" என அவனுக்கு ஏதோ அற்புதத்தைக் காட்டுவது போன்ற பாவனையில் அம்மா அடுப்படியில் இருந்து வந்தாள்.

"என்ன தம்பி எங்களையெல்லாம் அடியோடை மறந்திட்டியோ? இந்தப் பக்கம் வந்து எத்தினை மாசம்?" என அக்கா குறைப்பட்டாள். அதற்கு ஒரு மெல்லிய சிரிப்பைப் பதிலாக உதிர்த்து சமாளித்துக் கொண்டான்.

தனக்குப் பக்கத்தில் பேசாமல் அமர்ந்திருந்த சிவராசனிடம் "உனக்கு எப்ப கம்பஸ் துவங்குது?" எனக் கரிசனையோடு விசாரித்தான் சிவகுமார். விடியப்புறமே எழுந்து பின் வளவுக்கு தோட்டப்பக்கம் சென்ற அப்பா திரும்பி வந்தபொழுது மகன் வந்திருக்கிற அசுகை அறிந்து ஒன்றும் பேசாமல் செம்பை எடுத்துக் கொண்டு பால் எடுப்பதற்காக மாட்டுக் கொட்டில் பக்கம் போனுர். அது அவனுக்கு ஏமாற்றமாக இருந்தது. அப்பா என்ன கோபக்காரனைப் போல ஒன்றுமே பேசாமல் போகிருர்?

இதற்கு மேலும் பொறுக்க முடியாமல் அவனுகவே கேட்டான்.

"அம்மா! என்னணை ஏதோ அவசரமாய்த் தந்தி அடிச்சியள், பிறகு ஒரு கதையுமில்லாமல் இருக்கிறியள்?"



அதற்கு என்ன பதில் சொல்லலாமென்று சங்கடம் அம்மாவுக்கு. பின்னர் ஒருவாறு சமாளித்துக் கொண்டு;

"ஏன் அவசரமெண்டாத்தானே தந்தி அடிக்க வேணும்?...... நீ இஞ்சை வீட்டுக்கு வந்து எத்தினை மாசம்? வீட்டிலையும் தாய் தேப்பன் சகோதரங்கள் இருக்குதெண்ட நினைவில்லையே உனக்கு?"

சப்பென்று போய்விட்டது. "இவ்வளவு தானு சங்கதி?"

உங்களுக்கு வேறை வேலையில்லை! நானும் என்னவோ ஏதோவெண்டு பயந்திட்டன்."

"நாங்களும் அப்படித்தான் பயந்து கொண்டிருக்கிறம்."

சிவகுமாருக்கு 'திக்' கென்றது. இதென்ன அம்மாவுக்கும் என்னவோ ஏதோ என்ற தவிப்பு?

"என்னணை விளங்கச் சொல்லன்?"

"அதெல்லாம் பிறகு ஆறுதலாகச் சொல்லுறன். நீ போய் முதல்லை கால் முகத்தைக் கழுவிக் கொண்டு வா!"

"தம்பி மறைக்காமல் சொல்லடா? நீயேன் கனநாளாய் வீட்டுக்கு வரயில்லை?"

"அடிக்கடி வாறதுக்கு நானென்ன பெரிய சம்பளக்காரனே?"

அம்மாவுக்கு இந்தப் பதில் திருப்தியளிக்கவில்லை,

"முந்தியெண்டால் அடிக்கடி ஓடி வருவாய்!...... இப்ப இந்தப் பக்கத்தையே மறந்திட்டாய்!" எனத் தனது சந்தேகத்தை வெளிப்படுத்தினுள்.

RangaRakes tamilnavarasam.com

அந்தக் கேள்விக்கு என்ன பதில் சொல்வதெனச் சிவகுமாருக்கு புரியவில்லை. உண்மையிலே தான் முன்னரைப் போல அடிக்கடி வராமல் விட்டதற்கு என்ன காரணம்? அந்தக் காரணம் தெரியாமலே அவன் கன நாட்கள் கொழும்பில் நின்றிருக்கிறுன். அப்படி ஊருக்கு வராத குறையே அவனுக்குப் பெரிதாகத் தோன்றியதுமில்லைத்தான். கொழும்பு வாழ்க்கை பழகிப் போய்விட்ட காரணமா?

ஊருக்கு வருவதென்றுல் சும்மாவா? எப்பொழுது தான் கையில் மேலதிகமாகக் காசு இருந்திருக்கிறது? இப்பொழுது தந்தியைக் கண்டவுடனும் கடன்பட்டுக்கொண்டு தானே ஓடிவந்திருக்கிறுன்.

''அம்மா! நெடுகலும் ஒரு மாதிரியே ...... வரவர எனக்கு எத்தனை பொறுப்புக்கள் கூடுது? அதையெல்லாம் சுமக்கிறதெண்டால் என்ரை ஆசைகளை கொஞ்ச மெண்டாலும் விட்டுக் குடுக்கத்தானே வேணும்? எனக்கு ஊருக்கு வாறதுக்கு ஆசை இல்லையே?'' சிவகுமார் இப்படிக் கூறிய பொழுது கலைச்செல்வியின் நினைவும் கூடவே எழுந்தது.

''எடேய் ராசா...... சொல்லுகிறனெண்டு குறை நினையாதையடா தம்பி...... நீங்களெல்லாம் கொப்பரின்ரை விருப்பப்படிதான் நடக்க வேணும். உங்களையெல்லாம் வளர்த்து ஆளாக்கிவிட்ட மனுசன் அவர்...... கொப்பற்றை குணம் தெரியும்தானே? அவற்றை விருப்பத்துக்கு மாருய் ஏதேன் நடந்துதெண்டால் பிறகு பிள்ளையெண்டும் பாக்க மாட்டார்...... உங்களுக்குள்ளை ஏதேன் பிணக்கெண்டால் பிறகு என்னைக் கண்ணிலையும் காணமாட்டியள்.''

அம்மாவின் உபதேசம் சிவகுமாருக்கு ஆச்சரியமாக இருந்தது. அம்மா இப்படி யெல்லாம் எச்சரிப்பதற்குக் காரணம்? என்ன ஒருவேளை கலைச்செல்வியின் விஷயம் வெளிப்பட்டு விட்டதோ? சத்தியநாதன் வீட்டுக்குசிவகுமார் போய்வருகின்ற சங்கதியும் சாடைமாடையாக அம்மாவுக்குத் தெரியும். ''ஏன் தம்பி சும்மா சும்மா அங்கை போருய்...அங்கை ஒரு குமர்ப்பிள்ளை இருக்குதெல்லே? பிறகு ஊர் வேறை விதமாகக் கதைக்கும்'' எனத் தடுத்துமிருக்கிறுள்.



''இப்ப ஏன் இந்தத் தேவையில்லாத கதையெல்லாம் கதைக்கிறீங்கள்? நான் ஏதோ உங்கடை விருப்பத்துக்கு மாருய் ஒருத்தியைக் கொண்டு வந்துவிட்ட மாதிரியெல்லே கதைக்கிறியள். இதுக்குத்தானே இவ்வளவு அவசரமாய்த் தந்தியடிச்சுக் கூப்பிட்டனீங்கள்? சிவகுமார் எரிந்து விழுந்தான். இதற்குப் பின்னர் நீண்ட நேரம் மௌனம் நிலவியது. தம்பியின் இக்கட்டான நிலைமையைக் காண சுகந்திக்கும் மனவருத்தமாக இருந்தது. அவளும் ஒன்றுமே பேசாமல் எழுந்து சென்றுள்.

மகன் தன்மேல் எரிந்து விழுந்தது பூமணிக்கு கவலையாயிருந்தது. எப்படி இருந்தாலும் குடும்பத்தில் ஒரு சச்சரவும் இல்லாமல் தந்தைக்கும் பிள்ளைகளுக்குமிடையில் சுமுகமான உறவு இருக்க வேண்டும் என்பதுதான் அவளது ஏக்கம். 'மனிசன் ஒரு பிடிச்சிராவி. இதுகளும்...... இனி தலைக்குமேலை வளந்திட்டுதுகள்...... ஏதாவது எதிர்க்கதை கதைச்சுப் போடுதுகளோ' என்ற பயம்தான். சிவகுமார் சாப்பிட்டு இடையில் எழுவதைக் கண்ட பூமணி,

''தம்பி .. எடேய்...... என்னடா அதுக்கிடையிலை எழும்பியிட்டாய் ...இந்தாடா இன்னுமொருக்கால் போட்டுறன் சாப்பிடு!''... அவன் ஒன்றுமே பேசாமல் முற்றத்துக்குச் சென்று கையைக் கழுவினுன்.

தன்மேல் ஏற்பட்ட கோபத்தினுல்தான் அவன் இடையிலை எழுந்து போய் விட்டான் என எண்ணியதும் வயிற்றைப் பற்றி எரிந்தது பூமணிக்கு. அழுகையே வந்துவிடும் போலிருந்தது. அந்தநேரம் அவளுக்கு கணவன் மேலும்

RangaRakes tamilnavarasam.com

ஆத்திரம் ஏற்பட்டது பிள்ளைகளின் விருப்பங்களுக்கு கொஞ்சமெண்டாலும் விட்டுக் கொடுக்காமல் ஏன்தான் இப்படி பிடிவாதக்காரராய் இருக்கிறாரோ? இந்த அந்நியக் கெட்டதுகளோடை கிடந்து உலையாமல் வேளைக்குத் துலைஞ் சிடலாமெண்டால் இந்தக் கடவுளுக்கும் கண்ணில்லாமல் போச்சுது' என அங்கலாய்த்துக் கொண்டாள்.

விருந்தைக்கு வந்தபொழுது அப்பா முதல்தரமாகக் கதைத்தார்.

''எத்தனை நாள் லீவு போட்டிட்டு வந்தனீ?''

கதையை ஆரம்பிக்க இதைத் தவிர வேறு விஷயம் அவருக்கு கிடைக்கவில்லை. அவரது கேள்விக்கு ஒரு சொல் லில் பதிலளித்து விட்டு நின்றான் சிவகுமார்.

''உன்ரை ட்ரான்சர் விஷயம் இப்ப என்னமாதிரி இருக்கு?'' எனக் குறுக்கு விசாரணை ஆரம்பமாகியது.

கொழும்பில் நாலு வருடங்களுக்கு மேல் சேவை செய்துவிட சிவகுமாருக்கு காலிக்கு மாற்றம் கிடைத்திருந் தது. நாட்டில் இனக் கலவரங்கள் நடைபெற்ற காலமாக இருந்தபடியால் அதைக் குறிப்பிட்டு யாழ்ப்பாணப்பகு திக்கு மாற்றம் எடுப்பதற்கு விண்ணப்பிக்குமாறு அருண சலம் மாஸ்டர் கூறியிருந்தார்.

''கடிதம் எழுதியிருக்கிறன்...... ஒரு பதிலையும் காண யில்லை...... சிலவேளை போகவேண்டி வந்தாலும் வரும்.''

சற்றுநேரம் யோசித்துக் கொண்டிருந்தார். பின்னர் நிதானமாகச் சொன்னார்.

''எல்லாத்துக்கும் பயப்பட்டாமல் சீவிக்கேலுமே? விதிப் படி நடக்கிறது நடக்கட்டும். இன்ன நேரத்திலை இப்படி நடக்கவேணும் எண்டு எழுதியிருந்தால் அது காலியிலை இருந்தாலென்ன கொழும்பிலை இருந்தாலென்ன நடந்து தான் தீரும்......''



தந்தை எதைக் குறிபிடுகிறார் என்பது அவனுக்குப் புரிந்தது. இனக்கலவரம் நடந்த பொழுது போக வேண் டாம் என்றவர் இப்பொழுது போகுமாறு பணிக்கிறார். இடையில் அவரிடம் ஏற்பட்ட மாற்றத்துக்குக் காரணம் என்ன என்பது மாத்திரம் புரியாத ஆச்சரியமாகவே இருந் தது. எப்படியாவது மாறிச் செல்லவேண்டிய நிர்ப்பந்த மேற்பட்டால் தான் பயப்படுவேன் என்ற உணர்வில் தெம் பளிப்பதற்காக அப்படிக் கூறினாரா அல்லது?

வெகுநேரத்திற்குப் பின்னர் சுகந்தி தம்பியோடு கதைத்துக் கொண்டிருந்தபொழுது ஒரு விஷயத்தைக் கூறினாள்.

''போனமாதம் ...... உன்ரை றூம்மேற் ஒருத்தர் இஞ்சை வந்தவர்.''

அவன் எதிர்பாராத சங்கதி இது.

''உன்னைப் பற்றி அப்பா கேட்டவர்''

''அவன் என்ன சொன்னவன்?''

''நல்லாய் ...... ஏதோ ...... அள்ளி வைச்சிட்டுத்தான் போனவன் ...... உடனை இஞ்சை அப்பா, அம்மாவோடை துள்ளிஅடிச்சுக் கொண்டு வரவெளிக்கிட்டார் ...... பிறகு அம்மா ஒரு மாதிரி சொல்லிக்கில்லி நிற்பாட்டினவ.''

அவன் என்ன சொல்லியிருப்பான் என்பதில் சந்தேகம் இல்லை. அதுதான் அப்பாவின் மாற்றத்துக்கு காரணம் என நினைத்துக்கொண்டான்.

''நெடுகலும் ஒரு இடத்திலை இருந்து வேலை செய்யக் கூடாது'' எனத் தந்தை கூறியதற்கு வேறு எந்த நியாய முமே தேவையில்லை.

RangaRakes tamilnavarasam.com

"எல்லாம் விதிப்படிதான் நடக்கும். பயப்படாமல் போ!" எனக் கூறுகின்ற தந்தை, தான் நினைத்துப் பயப்படுவதை போல ஏதாவது நடக்குமென்றாலும் அதையும் ஏன் 'விதிப்படி' என நினைத்துக் கொள்ள மறுக்கிறார்?

இப்படியான நினைவுகள் அவனுள் எழுந்த பொழுது இந்த உலகவாழ்க்கை மீதே வெறுப்பு ஏற்பட்டது. எண்ணிக் காட்டிவிட்டுப் போகக் கூடிய சில வருட வாழ்க்கைக்குத்தானே இந்தப் போலி கௌரவங்களும் பாராட்டுக்களும்? இப்படி நினைத்த பொழுது கலியாணமே ஒரு தேவையில்லாத விஷயமாகத் தெரிந்தது. எல்லாருமே வலுசீக்கிரத்தில் சாகப் போகிறோம். அதற்கிடையில் வாழ்க்கையை சற்று இலகுவாக்குவதற்கு ஒருவருக்கொருவர் துணை தேவைப்படுகிறது. யாருக்கு யாரென்று தேர்ந்து கொள்வதற்கு இடையில் இத்தனை சிக்கல்களா?

மனதை ஆட்கொண்டு ஆக்கிரமிக்கின்ற வெறுப்பையும் விரக்தியையும் தீர்க்கின்ற வழி புரியவில்லை. வீட்டிலே இருந்தால் இந்த மனக்கிளர்ச்சி இன்னும் விகாரமடைந்து கொண்டிருந்தது. உடனடியாக ஆறுதல் தேவைப்பட்டது.

குழம்பிய மனத்தோடு சைக்கிளை எடுத்துக்கொண்டு புறப்பட்டான். அவன் போகப் போகிற இடம் அம்மாவுக்குத் தெரியும்.

"இவ்வளவு படிச்சுப் படிச்சுச் சொன்னப் பிறகும் எங்கையடா போறாய்?"

அம்மாவின் கண்டிப்பான குரலையும் பொருட்படுத்தாது அவன் செல்வியின் வீட்டுக்குச் சென்று கொண்டிருந்தான்.

# அத்தியாயம் - 20

அதிக நாட்கள் யாழ்ப்பாணத்தில் நிற்பதற்குப் பிடிக்கவில்லை, சிவகுமாருக்கு. அப்பா கோபக்காரனைப் போல இருக்கிறார். எந்தப் பக்கம் பாடுவது என்ற சங்கடம் அம்மாவுக்கு. இந்த விசித்திரத்தில் வீட்டிலே இருப்பது எப்படி?

செல்வி கூடச் சிணுங்குகிறாள்; "நீங்கள் இப்ப என்னைத் துப்பரவாக மறந்திட்டீங்கள்......" "நான் ஒருத்தி இஞ்சை உங்களுக்காக இருக்கிறதே உங்களுக்கு நினைவில்லை."—செல்வியை மறக்க முடியுமா? அவளுக்கு அதை எப்படிப் புரிய வைப்பது. அவனது ஆறுதலே அவள் தானே. அவனால் தன்னை மறக்க முடியாது என்பது அவளுக்குத் தெரியும். ஆனாலும் நெடுநாட்கள் காணாது இருக்க முடியாமல் தான் அப்படிக் கூறுகிறாள் என நினைத்தான். சகல பிரச்சினைகளாலும் தாக்கப்படுகின்ற மனதுக்கு ஒத்தடம் கொடுப்பது போன்ற சுகத்தை அளிப்பது அவளது நினைவு தானே? முன்னரைப்போல அடிக்கடி அந்த நினைவு எழுவதில்லைத் தான். எப்பொழுதாவது இருந்து விட்டுக் கிளர்ந்து வந்து மனதை ஆக்கிரமித்துக் கொள்ளும். அவனது துணைவியாக அவள் இருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்! அவன் எதற்குமே கவலைப்படமாட்டான். எல்லாவற்றையும் அவளே கொண்டு நடத்துவாள்; தேற்றுவாள்; ஆற்றுவாள்; அவனை மடியில் கிடத்தி நெற்றியையும் தலையையும் வருடிக் கவலைகளை மறக்கச் செய்வாள்.—இப்படியெல்லாம் கற்பனை செய்திருக்கிறான். தனிமையான ஒரு வீட்டிலே அவளோடு அமைதியாகக் குடும்பம் நடத்தி வாழ்வதாகக் கனவு கண்டிருக்கிறான். கை நிறை

RangaRakes tamilnavarasam.com

யச் சம்பளம் தருகின்ற நிரந்தரமான ஒரு உத்தியோகம். ஒரு கார், ஒரு வீடு—வீடு நிறையத் தளபாடங்கள், பூஞ் செடிகள்,—மலர்களைப் போன்ற குழந்தைகள்......அவள் எல்லாவற்றையும் ஒரு ராணியைப்போல நிர்வகிப்பாள்—அவனை இயக்குவாள்; இயக்க வேண்டும் என்றெல்லாம் நினைத்திருக்கிறான். இந்த உத்தியோகத்திலிருந்து கொண்டு என்னத்தைத் தான் வெட்டிப் பிடுங்க முடிகிறது? கைநிறையக் காசு வந்தால் மறுநாளே போகிற வழி தெரியவில்லை. அப்படி விலைவாசிகள் உயர்வு. பொறுப்புக்கள், பிரச்சினைகள், சுமைகள்!

அவள் இப்பொழுதுகூட 'சரி' என்று ஒரு வார்த்தை சொன்னால் போதுமாம்! கையைப் பிடித்துக் கொண்டு வந்து விடுவாளாம்—செல்வி சொல்கிறாள். அப்படிச் சொன்ன நேரத்தில் கிளர்ந்தெழுந்த இன்பத்துக்கு அளவில்லை. அவனை நம்பி வர—அவனுக்காக ஒருத்தி! ஆனால், கூட்டிக் கொண்டு எங்கே தான் போவது? கொழும்பிலே இல்லாத ஒன்றுக்காக இவ்வளவு தலையைப்போட்டு உடைக்கும் அப்பா......இதை அறிந்தால் பொல்லுத் தூக்கிக் கொண்டு வரமாட்டாரா? அப்படியென்றால் அப்பா சொல்வதுபோல அவர் பார்த்துக் கொண்டு வருகின்ற எங்கேயோ இருக்கிற, முன் பின் தெரியாத ஒருத்திக்குத் தான் தாலியைக் கட்ட வேண்டுமா?—'நோ!'

செல்வியைக் காதலித்திருக்கவே கூடாது. பாவம். எப்படி உருகிப் போய்விட்டாள் – இவனுடைய நினைவாம் மலர்கின்ற பருவத்தில் மொட்டாக இருந்த அவள் மனம், இவனை நினைத்து நினைத்தே இதழை விரித்து இவனுக்காகவே ஏங்குகின்ற மலர். செல்வியிடம் கண்ணீரிலே விடைபெற்று வந்தாயிற்று—ஒரு முடிவும் சொல்லாமலே! 'எல்லாம் கடவுள் விட்ட வழி' என்று சொன்னான். தனது துணிவற்ற தன்மையை மூடிமறைக்க இப்படியானதொரு மடைத்தனமான பதிலைச் சொல்ல வேண்டியிருந்தது. அவன் நினைத்தபடி ஒருத்தியைக் கூட்டிக் கொண்டு வந்



தால் என்ன குடியா முழுகிப் போய்விடும்? இது அப்பாவுக்கு ஏன் புரியவில்லை? அப்பா தராதரங்கள் பார்த்துக் கொண்டு வருகிற ஒருத்தி நாளைக்கு இவனது மனத்துக்கு ஒத்துவரா விட்டால் யார் பழி?

கடலின் பரப்பிலிருந்து எதையோ சாதிக்கப் போவது போல வீறுகொண்டு ஓடி வருகின்ற அலைகள் கரையில் மடிந்து போகின்றன.—மீண்டும் அதே அலைகளின் ஆவேசமான ஓசை.

கொழும்புக்கு வந்தால் மகேந்திரன் புதிய செய்தியோடு காத்திருக்கிறான்.

''மச்சான், ஜெகநாதனுக்கும் மணிசிக்காறிக்கும் இடையிலை குழப்பம்!''

''உனக்கு நல்ல கதையே பேசத் தெரியாதா?''—சிவகுமார் ஆத்திரத்தோடுதான் கேட்டான். ஆனால் அப்படி ஏதாவது ஆகியிருக்குமோ என்ற எண்ணமும் தோன்றியது.

வாகனமொன்று 'சடின்பிறேக்'' போடுகிற இரைச்சல்—யாரோ குறுக்கே போயிருக்க வேண்டும். நிதானமாக நின்று பார்த்துப் போயிருக்கலாம். அதன் குறுக்கே போயிருக்கவும் தேவையில்லை. அதன் வழியைத் தடை செய்திருக்கவும் தேவையில்லை. எப்படியோ விபத்து நடக்காவிட்டால் சரிதான்.

''மச்சான், உனக்கு நான் என்ன சொன்னாலும் பகிடிதான்... ஆனால், இது உண்மை.''

மகேந்திரன் காய்கறிகளை நறுக்கியபடியே கூறினான். இப்பொழுதும் இடையிடையே சமையல் செய்கிறார்கள். ஊருக்குப் போனால் அம்மா மிளகாய்த்தூள் இடித்துக் கொடுத்து விடுவாள். (''தம்பி நேரம் கிடைக்கிற நேரம்

RangaRakes tamilnavarasam.com

ஏதாவது சத்துள்ள சாப்பாட்டைச் சமைத்துச் சாப்பிடு ......கடையிலே சாப்பிட்டு சாப்பிட்டு எலும்பும் தோலு மாய்ப் போனாய்......'')

''உனக்கு எப்பிடித் தெரியும்?''—சிவகுமார் மகேந்திரனிடம் கேட்டான்.

''அவன் தான் சொன்னவன்......நீ இஞ்சை இல்லாத நாளெல்லாம் ஒரே குடிதான் பாவி.''

''இப்ப எங்கை போட்டான்?''

''எங்கையாவது குடிக்கத்தான் போயிருப்பான்.''

''வரட்டும் கதைப்பம்.''

''நீ என்னத்தைச் சொல்லித் திருத்தப் போறாய்?...... அவனுக்கு அந்த விஷயங்கள் தெரிஞ்சிட்டுது போலையிருக்குது.''

அந்த விஷயங்கள் என அவன் குறிப்பிடுகின்ற, ஏற்கனவே தன் மனைவி ஒருத்தனுக்கு வாழ்க்கைப்பட்டவள் என்ற சங்கதி தெரிய வந்தால் அவனது மனது எப்படிப் பாதிக்கப்பட்டிருக்கும் என்பதை உணர முடிந்தது. செல்வியைக் காதலிப்பதாலும் அவளால் காதலிக்கப்படுவதாலும் தான் அடைகின்ற பெருமையை அவன் அனுபவிக்க முடியாது. தனக்கு வரப்போகிறவள் உள்ளத்தாலும் உடலாலும் தூய்மையானவளாக இருக்க வேண்டும் என்ற ஓர்மம் ஏன் இந்த ஆண்களின் மனதில் பதிந்து போயிருக்கிறது? அப்படி எதிர்பார்க்கின்றவர்கள் ஏன் அதை ஒரு பக்கமாக மாத்திரம் கற்பனை செய்கிறார்கள்?

ஜெகநாதன் செய்த திருகுதாளங்கள் கொஞ்ச நஞ்சமா? 'உன்னிடம் மயங்குகிறேன்' என்று ஒருத்திக்குச் கடிதம் கொடுத்து, அவளுக்குப் பின்னால் அலைந்து திரிந்து கையும் களவுமாகப் பிடிபட்டு வெள்ளவத்தைச் சந்தியில் வைத்து அவளது ஆட்களால் நல்ல உதையும் பட்டிருக்கிறான். அவற்றையெல்லாம் பழைய கனவுகளாக மறந்து விட முடியுமானால்......இவற்றைப் புதிய உறவுகளாக ஏற்க ......ஏன் மனது வெறுக்கிறது?



அன்று அகிலா நேரம் கழித்தே வீட்டுக்கு வந்தாள்.

''என்ன பிள்ளை இவ்வளவு நேரமும் செய்தாய்?......... இருண்டு போச்சுது. இது எங்கட ஊருகள் மாதிரியா?...... சந்திக்குச் சந்தி காவாலிகள் நிற்குறானுகள். நேரத்தோட வீட்டுக்கு வந்திட வேணும்.''

அம்மாவின் எச்சரிக்கையான பேச்சை அவ்வளவு பெரிது படுத்தாமலே பதில் சொன்னாள் அகிலா, ''ஏனம்மா பயப்படுறீங்க? நான் என்ன சின்னப் பிள்ளையா......உழைக்கிறதுக்கென்று ஊரைவிட்டு இவ்வளவு தூரம் வந்திருக்கிறம்......அப்பறம் என்ன பயம்?......வேலைகள் தலைக்கு மேலே இருந்திச்சு. ஓவர்ரைம் செய்தால் காசு தானே?......ராஜேசன் கூட்டி வந்து விட்டிட்டுத்தான் போனவர்.''

அதற்குப் பிறகு அம்மா பேசவில்லை. அகிலாவின் குரலைக் கேட்டதும் சிவகுமார் எழுந்து வந்தான், ''எப்பிடி அகிலா ஓவர்ரைம்?'' என்று கேட்டவாறே.

அவனது கேலிக் கதையைக் கேட்டு குப்பென்று முகம் சிவந்தவள், அம்மாவின் முன்னிலையில் அந்தக் கதையை வளர்க்க விரும்பாமல்;

''எப்ப வந்தீங்க சிவா?'' எனக் கதையை மாற்றினாள்.

அவனை அம்மாவோடை கதைத்துக் கொண்டிருக்க விட்டு குளித்து உடைமாற்றி வருவதற்குச் சென்றாள்.

RangaRakes tamilnavarasam.com

"எப்படித் தம்பி ஊரிலை........பெத்தவங்க......சகோதரங்கள் பாடு?"

"பரவாயில்லை"

அகிலா தேநீரோடு வந்தாள். "என்ன சிவா, அதுக்கிடையிலை திரும்பிட்டீங்க?"

"ஏன் வரக் கூடாதா?"

"அதுக்கில்லை! கனநாளய்க்கப்புறம் போனீங்க......உங்கட செல்வியை விட்டிட்டு இவ்வளவு கெதியிலை வரமாட்டீங்க என்று நினைச்சன்."

செல்வி! உண்மை தான்—அவளைவிட்டு எப்படி வர முடிந்தது? வருகின்ற பொழுது அவள் அழாக்குறையாகச் சொன்னாள்;

"எப்பவும்......செல்வி, செல்வி என்றுதான் கூப்பிடுறீங்கள்......பிறகு வாழ்க்கை முழுதும் என்னைச் செல்வியாகவே இருக்க விட்டிடாதையுங்கோ."

"செல்வி! வட் யூ மீன்?"

அவள் கூட அவனைச் சந்தேகிக்கிறாளா? அப்பாவுக்குச் சொல்வதுபோல அவளின் பிஞ்சு மனத்திலும் யாராவது நஞ்சைப் போட்டிருப்பார்களோ?

"என்ன செல்வி சந்தேகமா?"

"இல்லை உங்களைச் சந்தேகப்படேலுமா? நீங்கள் எனக்குத்தான்—அதைவிட வேறை ஆரோடையும் உங்களைச் சேர்த்து நினைக்கக்கூட எனக்கு எலாது. முந்தி அடிக்கடி ஓடி வருவீங்கள்......இப்ப எவ்வளவோ நாளைக்குப் பிறகு வந்து, வந்த சுவடே தெரியாமல் ஓடிப்

RangaRakes



போறீங்கள்..."அதற்குமேல் கதைக்கமுடியாதவளைப்போல அழுதாள்! அதை நினைத்துக் கொண்டு இப்பொழுது இவனது நெஞ்சு குமுறியது. கண்கள் கலங்கிக் கண்ணின் இமைகளை உடைத்துக் கொண்டு உருண்டது. அதைக் கண்டு அகிலா பதறிப் போனாள்.

"சிவா என்ன இது? நான் ஏதாவது தேவையில்லாததைச் சொல்லியிட்டேனா?"

அப்பொழுதுதான் அவளுக்கு அவனை வீட்டிலிருந்து உடனடியாக அழைத்த தந்தி ஞாபகத்துக்கு வந்தது. ஒரு வேளை வீட்டில் வேறு கலியாணம் பேசியிருப்பார்களோ?

"சிவா......ஏன் தொட்டதுக்கெல்லாம் கவலைப்படுறீங்க?......வீட்டிலை ஏதாவது பிரச்சினையா?"

"இல்லை."

"அப்புறம் எதுக்குத் தந்தி குடுத்தாங்க" என ஆதரவோடு கேட்டாள். அம்மா அவ்விடத்தில் நிற்கிறாளா என்று பார்த்துவிட்டுத் தனது தாவணித் தலைப்பை எடுத்து அவனது கண்ணீரைத் துடைக்குமாறு சொன்னாள். அவனும் ஒரு தாயின் அரவணைப்புக்குக் கட்டுப்படுகிற குழந்தையைப்போல அப்படியே செய்தான்.

"ஜெகநாதன் எனக்குக் கலியாணம் பேசிப் போயிருக்கிறான்" என்று சொன்னான்.

அவளுக்கு விளங்கவில்லை.

"அவர் ஏதோ மிஸிஸ்சோடை மனஸ்தாபப்பட்டுக் கொண்டு இப்ப ஊருக்குப் போகாமல் குடிச்சுக் கொண்டு திரிகிறாரே" எனத் தனது சந்தேகத்தை வெளிப்படுத்தினாள்.

tamilnavarasam.com

''மற்றவனுக்குக் கெட்டது நினைச்சால் அது தனக்கு நடக்கிறதுக்குக் கனநாள் செல்லுமா?......நாங்கள் நிர்ணயிக்கிற விலையிலேயே தீர்க்கப்படுவம் என்றது அவனுக்குத் தெரியவில்லை'' என ஆத்திரத்தோடு சொல்லிவிட்டு, இரண்டு மாதத்திற்கு முன்னர் ஜெகநாதன் திருமணத்திற்காகச் சென்றிருந்த பொழுது தன் வீட்டுக்கும் சென்று இல்லாதது பொல்லாததுகளையெல்லாம் அள்ளி வைத்துவிட்ட சங்கதியைக் கூறினான்.

"எனக்கு இருந்த பிரச்சினைக்குள்ள ஊருக்குப் போகவும் நேரம் கிடைக்கயில்லை......கடிதமும் போடுறது குறைவு.....அதுதான் அதுகளும் என்னவோ ஏதோ என்று பயந்து தந்தி அடிச்சிருக்குதுகள்.'' என்று சொல்லிக் கொண்டிருக்கும் பொழுதே ஜெகநாதன் நிறைதண்ணியில் வந்து பக்கத்து அறையில் அலட்டுவது கேட்டது. சிவகுமார் போக விடைபெற்ற பொழுது அகிலா தடுத்தாள். "வேண்டாம் சிவா......அவரும் வெறியிலை நிற்கிறார்....... அப்புறம் வீண் பிரச்சினைகள் வரும்.''

சிவகுமார் சிரித்தபடி கூறினான். ''நீங்கள் பயப்படாதையுங்கோ. நான் அதைப் பற்றி ஒண்டும் கதைக்கமாட்டன்......அவங்கடை அவங்கடை மனது அப்பிடி! நாங்கள் என்ன செய்யிறது.......மனிசியோடை சண்டை பிடித்துக் கொண்டு வந்திருக்கிறாரும்.........என்னெண்டு கேட்டுப் பார்ப்பம்.''

சிவகுமாரைக் கண்டதும், ஜெகநாதன் ''ஹலோ! சிவா'' என்று குசலம் விசாரித்தான். ''யூ ஆர் லக்கி பெலோ மச்சான்'' என்றான்.

''நான் அதிர்ஷ்டக்காரனெண்டு நீதான் சொல்லுறாய். எனக்கென்றால் அப்பிடித் தெரியவில்லை—என்ன விஷயம்?''



''உனக்கென்ன குறை? ஊரிலை மனம் நிறைஞ்ச காதலி......இஞ்சை நல்லதொரு சிநேகிதி......''

''உனக்கு இன்னும் இந்தக் குணம் விட்டுப் போகயில்லை......சரி போகட்டும்......உனக்கு என்ன குறை? ஏன் இப்பிடிக் குடிச்சு அழிகிறாய்?''

''வேறை என்ன செய்ய மச்சான்......காசு வேணும் வேணுமெண்டு பெரிய இடத்திலை கட்டினன்......இப்ப அதுகும் இல்லை......இதுகும் இல்லை......''

''நீயாக எதையாவது கற்பனை பண்ணியிருப்பாய்?...... உன்ரை பழக்கமே அதுதானே?''

''இல்லை அவள் தலைக்கனம் பிடிச்சவள்......''

தலைமயிரைக் கோதியவாறு அவன் விரக்தி ததும்பக் கதைப்பதைப் பார்க்கப் பாவமாக இருந்தது. மகேந்திரன் தான் புகைத்துக் கொண்டிருந்த சிகரட்டை நீட்டினான். ''இந்தா மச்சான்.......''

அவன் திரும்பிப் பார்த்துவிட்டு ''வேண்டாம்!'' எனத் தலையை அசைத்தான்— ''நான் குறைச் சிகரட் குடிக்கிறதில்லை.'' மகேந்திரன் வற்புறுத்தவில்லை. ஆனால் அவனது மாற்றத்தை நினைக்க வியப்பாக இருந்தது. முன்னரென்றால் ஒரு சிகரட் குடிக்க விடமாட்டான்; ''பட்''டைத் தா மச்சான்!'' என்று அரைவாசிக்கு வருமுன்னரே பறித்து விடுவான். இப்பொழுது என்ன நேர்ந்தது?

''இந்த ரெண்டு மாதத்துக்குள்ள எத்தனையோ பிரச்சினை வந்தது. எனக்கு அந்த ஊரிலை இருக்கவே பிடிக்கவில்லை. என்னோடை கொழும்புக்கு வரச் சொன்னாலும் மாட்டாளாம். அவள் நினைத்தபடி ஆட நானென்ன மடையனே? இப்ப உத்தியோகம் பார்க்கப் போறனெண்டு

RangaRakes tamilnavarasam.com

நிக்கிருள். எனக்கு அது விருப்பமில்லை. சொல்லிப் பார்த்தன்......கேட்கிருளில்லை...... 'நீங்கள் எனக்கு ஒன்றும் சொல்லத் தேவையில்லை' எண்டு சொல்லுகிருள். அவள் படிச்சவளாம்! பணக்காரியெண்ட திமிர்! நான் சொல்லாமல் வேறை ஆர் சொல்லுறது? ......நீ என்னத்தையாவது செய்யடி ஆத்தை எண்டிட்டு வந்திட்டன்......''

''என்னடாப்பா கலியாணம் முடிச்சு ரெண்டு மாதத்துக்கிடையில இப்படியெண்டால்?''

''இனிச் சீவியத்துக்கும் வேண்டாமெண்டுதான் வந்திட்டன்........''

''அப்ப என்ன செய்யப் போருய்?'' என்று அனுதாபத்தோடு கேட்டான் சிவகுமார்.

''விளையாட்டுக் கல்யாணமே......வெறும் விபரீத முடிவாகுமே'' என ராகம் இழுத்துப் பாடினுன் ஜெகநாதன். அவனது கட்டைக் குரலில் அந்தப் பாட்டைக் கேட்டபொழுது இசைத்தட்டு மெதுவாகச் சுழலும்பொழுது ஏற்படுகின்ற இயக்கமற்ற ஓசையைப்போல அசிங்கமாக இருந்தது. அவன் இருக்கின்ற நிலையில் இதற்கு மேலும் கதைப்பதால் பிரயோசனமில்லையென்றும் தோன்றியது.

''சரி......சரி முகத்தைக் கழுவிவிட்டு வா மச்சான் சாப்பிடுவம்........நீ ஒண்டுக்கும் யோசியாதை......எல்லாம் வெல்லலாம்'' என்று மகேந்திரன் தந்திரமாக அழைத்தான்.

''வேண்டாம்......நான் கடையில சாப்பிட்டிட்டுத் தான் வந்தனுன்......எனக்கு ஒருதரும் தேவையில்லை...... என்னை காலிலை நிற்கத் தெரியும் எனக்கு'' எனக் கூறிவிட்டு உடையை மாற்ற முயன்ருன். அதுகூட முடியாமல் நிலைதடுமாறி அப்படியே கட்டிலிற் குப்புற விழுந்து படுத்தான்.

# அத்தியாயம் - 21

இருள் அகலாத அதிகாலையிலே ஜெகநாதனுக்கு விழிப்பு ஏற்பட்டுவிட்டது. இன்றைக்கும் நேரத்துடனே விழிப்படையச் செய்தது அந்தக் குருவியின் பாடல்தான். ஒவ்வொருநாளும் விடிவதற்கு முன்னரே வந்துவிடுகிறது. அறையின் பக்கத்தே உள்ள செடிகளிலும் வேலியின் மரக் கொப்புகளிலும் தத்தித் தத்தி இருந்து தனது மென்மையான குரலால் இராகம் இசைத்துப் பாடுகிறது. அந்த ஓசை சோகத்துடன் யாரையோ அழைப்பது போன்ற பிரமையையே ஜெகநாதனுக்கு அளிக்கிறது.

தூரத்திலே காகங்கள் கரைகின்ற சத்தம். அவைகளும் இனிக் கலைந்து தங்கள் சாப்பாட்டுக்காகப் பறக்கும். இடையிடையே வீதி வாகனங்களின் இரைச்சல். விடியற் காலையிலே வேலைகளுக்கு நடந்து செல்லும் தொழிலாளிகளின் காலடி யோசை. வயிற்றுப்பாட்டுக்காக எல்லோருமே எல்லாமே ஆயத்தமாகிவிட, இந்தச் சின்னக் குருவிக்கு மட்டும் அந்த யோசனையே இல்லையா? செட்டைகளை உதறி உடலைச் சிலிர்த்தது. தன் தலையையும் சிறிய கண்களையும் திருப்பித் திருப்பி எங்கோ எங்கோவெல்லாம் பார்க்கிறது. பின்னர் அழுவது போலப் பாடுகிறது. தனது துணையைத் தேடுகிறதோ?

'இப்படி ஒருவரை ஒருவர் பிரிந்து கொண்டு எத்தனை நாட்களுக்குத்தான் சீவிக்கப் போறீங்கள்?' பஞ்சலிங்கத்தார் அடிக்கடி தூது வந்து கேட்பார். இவன் சீறிச் சினந்து அனுப்பி விடுவான்; உந்த விசர்க் கதையளை என்னோடை கதைக்காமல் போங்கோ—இனிச் சீவியத்துக்கும் அவள்

RangaRakes tamilnavarasam.com

வேண்டாம், அவள் வேண்டாம் என்று சொல்ல முடிகிறது. ஆனால் அறுபது நாட்கள் ஒன்றாக வைத்திருந்த கட்டிலின் இனிய நினைவுகள்?

ஆறு மாதங்கள் இடைவெளி. ஊர்ப்பக்கமே தலைகாட்டவில்லை. அவள் வேண்டாமென்றால் ஊரே வேண்டாமென்று அர்த்தமா? அம்மாவும் வேண்டாம் - அப்பாவும் வேண்டாம். யாரை நினைத்தாலுமே வெறுப்புத்தான். ஆனால் இப்பொழுது அவளது நினைவு இடையிடையே இதயத்தை நெருடிக் கொண்டு வருகிறது—குருவியின் சோக கீதத்தைப் போல, 'தூரத்தே வா! வா!' என அழைக்கின்ற கடலோசை.

கட்டிலிற் படுத்திருந்தவாறே பக்கத்துக் கட்டிலில் அயர்ந்து தூங்குகிற சிவகுமாரைப் பார்த்தான். பாவம்—அவன் கூட எத்தனை நாட்கள் இவனை வற்புறுத்தியிருக்கிறான்—"இந்த வயதிலை, உன்ரை வாழ்க்கையைப் பாழாக்கிறதுக்கு பின்னடிக்குத் தான் கவலைப்படுவாய்! சொல்லுறதைக் கேள் மச்சான்! விட்டுக் குடுத்து வாழ்கிற மனப்பான்மை வேணும்!" இவன் எந்தப் பேச்சையுமே கேட்கவில்லை. 'இவர் பெரிய மனிசன் எனக்குப் புத்தி சொல்ல வாறார்' என ஏளனமாக எண்ணியிருக்கிறான். ஆனால் அவன், எவ்வளவு துரோகமாகத் தான் நடந்து கொண்ட போதிலும் எதையுமே பெரிதுபடுத்தாமற் பெரிய பண்பாளனாக பழகுகிறான். இந்தப் பெருந்தன்மை - மனப்பக்குவம் வேறுயாருக்கு வரும்? இப்படி உலகத்தில் எத்தனை பேர் இருப்பார்கள்? எல்லோருமே ஒருவரையொருவர் புரிந்துகொண்டு சுயநலம் கருதாமல் உதவிசெய்யும் மனப்பான்மையோடு ஐக்கியமாக வாழப் பழகினால் வாழ்க்கை எவ்வளவு சுலபமானதாகவும் இன்பமாகவும் இருக்கும்!

இப்படியெல்லாம் நினைத்து விட்டு மனவிரக்தியோடு சிரித்துக் கொண்டான் ஜெகநாதன். மகேந்திரன் இருந்



தால் எதையாவது கதைத்து மனப்பாரத்தைக் கொஞ்சம் இறக்கலாம். இன்றைக்கு அவன் இல்லை. இப்பொழுது கொஞ்ச நாட்களாக அவனைக் காணக் கிடைப்பதே அரிதாகத்தான் இருக்கிறது. எங்கே போய் விடுகிறானோ? சில இரவுகளில் படுக்கைக்கும் வருவதில்லை. காரணம் கேட்டால் ஏதாவது உருட்டுப் பிரட்டுக் கதைகளைச் சொல்லிக் குழப்பி விடுவான்.

காலை ஒன்பது மணிக்குப்பின்னர் அன்றைக்கு வந்தான் மகேந்திரன். சனிக்கிழமையாதலால் நண்பர்களும் அறையில் இருந்தார்கள். சிவகுமார் பாத்ரூமில் தன் உடைகளைக் கழுவிக் கொண்டிருந்தான். அழுக்கேறுகிற உடைகளைச் சேர்த்து வைத்திருந்து இப்படிச் சனி ஞாயிற்றுக்கிழமைகளில் தானே கழுவிக் கொள்வான். எல்லாவற்றையும் 'லோண்டறி'யில் போடுவதானால் கட்டாது. அகிலாவிடம் 'அயன்' இருக்கிறது. அவள் கெட்டிக்காரி. தன் சிறிய சம்பளத்திலேயே இப்படி ஏதாவது பொருள்களை வேண்டி குருவியைப்போல சிறுகச் சிறுக சேர்த்துக் கொள்கிறாள். உடைகளைக் கழுவி உலர்த்திவிட்டு அங்கே கொண்டு சென்று அயன் பண்ணலாம். சிலவேளை அகிலாவே அயன் பண்ணிக் கொடுப்பாள். முன்னர் இந்த வசதி இல்லாத போது கழுவி உலர்ந்த பின்னர் இரவு படுக்கைக்கு முன் தலையணைக்குக் கீழ் மடித்து வைத்து விட்டுப் படுத்தால் விடிய அணிவதற்கு 'ரெடி' யாகிவிடும்!

சிவகுமார் தனது அலுவல்களை முடித்துக் கொண்டு அறையினுள் வந்து ஆறுதலாக அமர்ந்தபொழுது மகேந்திரன் "மச்சான் எனக்கு ஒரு உதவி செய்வாயா?" என்று கேட்டான்.

'இவன் எதற்கு அத்திவாரம் இடுகிறான்?' என நினைத்த பொழுது [illegible]ம் 'திக்' 'திக்' என்று அடித்துக் கொண்டது.

RangaRakes tamilnavarasam.com

அப்படி என்ன உதவியாயிருக்கும்? ஏதாவது காசு தேவைப்படுகிறதோ? பொதுவாகவே கைவசம் மேலதிகமாகக் காசு இருப்பதில்லை. இந்த நிலையிலை நண்பர்கள் யாராவது அவசரத்தில் கைமாற்றுக் கேட்டால் பெரிய சங்கடம் ஏற்படும். எந்த முகத்தை வைத்துக்கொண்டு இல்லை என்று சொல்லுவது? சொன்னாலும் அவன் நம்புவானோ என்னவோ? அவன் நம்பினாலும் அவனுக்கு உள்ள அவசரத்தேவைக்கு கொடுக்க முடியாமற் போய்விட்டதே என்ற கவலை தோன்றும்.

''என்......னலை...... ஏலக் கூடியதென்றால் செய்யிறன்... சொல்லு!'' - இவன் 'திக்' கித் 'திக்' கிப் பதிலளித்தான்.

''உன்னாலை நிச்சயம் ஏலும்!'' - இதென்னடா 'தர்ம' சங்கடம். காசு தேவையென்றாலும் நண்பர்களிடம் இப்படித்தான் சுற்றி வளைத்துக் கொண்டு வருவார்கள். காசு கடனைக் கொடுப்பதென்றாலும் அது கூட ஒருவித 'தர்மம்' தான். தனது குறைந்த பட்ச தேவைகளுக்காக கைவசம் தற்செயலாக இருக்கிறசொற்ப காசில் பங்கிட்டுக்கொடுத்து விட்டால் அது திரும்புவதற்கு பல மாதங்கள் கூட தவணையெடுக்கும். சிலவேளை திரும்பி வராமலும் விடும். ஏனென்றால் வேண்டியவனது கையிலும் சம்பளக்காசு மிஞ்ச வேண்டுமே!

''சரி, விஷயத்தைச் சொல்லு! என்ன காசு தேவையா?''

''இல்லை மச்சான்...... எனக்கு நீங்கள் தான் சாட்சிக் கையெழுத்துப் போடவேணும் நான் கலியாணம் முடிக்கப் போறன்!''

வெள்ளவத்தை தேவாலய மணி கணீரென ஒலித்து வாழ்த்துக் கூறியது!

RangaRakes



''இதென்ன புதுக்கதையாய் இருக்கு...... - எங்களுக்கு ஏன் இவ்வளவு நாளும் சொல்லயில்லை...... ஆரடாப்பா பொம்பிளை?''

'' சுவர்ணா''

நண்பர்கள் இருவரும் யார் அந்தச் சுவர்ணா என்ற சிந்தனையில் ஆழ்ந்தனர்.

'அட உன்ரை சிங்கள ரீச்சரே?' என வினவினான் ஜெகநாதன்.

''ஓம்'' என மகேந்திரனிடமிருந்து நிதானமாகப் பதில் வந்தது.

ஆச்சரியந்தான். இப்படி நடக்குமென்று அவர்கள் ஒருபோதும் நினைத்திருக்கவில்லை. மகேந்திரனுக்கு அவளோடு 'கொனெக்சன்' இருக்கிற விஷயம் சிவகுமாரைவிட ஜெகநாதனுக்குத்தான் கூடத் தெரியும். எனினும் அது இவ்வளவு தூரத்துக்குப் போய் முடியும் என நினைத்திருக்கவில்லை.

'அப்ப வசமாய் மாட்டியிட்டாய் எண்டு சொல்லு. என்ன மருந்தைப் போட்டு மடக்கினவளவை? எனக்கு அப்பவே தெரியும் இப்படி நடக்குமென்று!'' ஜெகநாதனது பேச்சு மகேந்திரனுக்குச் சற்று எரிச்சலையும் ஊட்டியது.

''உனக்கு இந்த விசயத்திலை ஞானம் கூடத்தான்-உந்த விசர்க்கதையளை இனியாவது விடு. அவையள் ஒரு மருந்தும் போடவில்லை, மாயமும் செய்யவில்லை. நானாய்த்தான் விரும்பிச் செய்யுறன்'' - எனப் பதிலளித்தான்.

ஜெகநாதன் அவனது கோபத்தைப் பொருட்படுத்தாமல் ''ஏன்ராப்பா உனக்கு ஊரிலை ஒரு நல்ல பொம்பிளை கிடைக்கயில்லையே?...... போயும்போயும் ஒரு சிங்களத்தியே கிடைச்சிருக்கிறாள்?'' என்றான்.

tamilnavarasam.com

மகேந்திரனது ஆத்திரம் எல்லை மீறிக்கொண்டு வந்தது. ''ஏன் முடிச்சுப்போட்டு பிறகு உன்னைப் போலை விட்டிட்டு வந்து இருக்கச் சொல்லுறியோ?'' என ஒரு போடு போட்டான்.

ஜெகநாதனது வாய் அடைத்துக் கொண்டது. தான் அப்படி சொல்லியிருக்கக் கூடாது என்று பிறகுதான் மகேந்திரனுக்குத் தோன்றியது.

இவ்வளவு நேரமும் அவர்களது சம்பாஷணையைக் கவனித்துக் கொண்டு பேசாமலிருந்த சிவகுமார் இப்பொழுது வாயைத் திறந்தான்.

''மகேந்திரன் ஏன் இப்படி அவசரப்பட்டு ஒரு முடிவை எடுத்தனீ?''

''அவசரப்பட்டில்லை......ஆறுதலாய் கனநாள் யோசித்துத்தான் முடிவை எடுத்தனான்.''

''இந்த வயசிலை இருக்கிற துடிப்பிலையும் ஆசையிலையும் நீ இப்பிடி ஒரு முடிவை எடுக்கலாம். பிறகு காலம் போகப் போக அதுக்காகக் கவலைப்பட வேண்டியும் வரும்...... அவள் உன்னோடை ஒத்துவருவாளோ என்றது என்ன நிச்சயம்?''

''முன்னைப்பின்னை தெரியாமல் பேசிச் செய்யிற பொம்பிளையளே ஒத்து வாழ்க்கை நடத்துகினம் - இதிலை என்ன புதிசாய் பார்க்க இருக்கு - நான் அவளோடு கனநாள் பழகிய பிறகுதான் இந்த முடிவை எடுத்தனான்.''

''என்றாலும்— நீ ஒரு தமிழ் இந்து...... அவள் ஒரு சிங்கள கிறிஸ்டியன்''

''இனம் மதம் என்று பிரிச்சுப் பேசிறதாலை என்ன மச்சான் இருக்கு? எல்லாரும் மனிசர்தானே? மதங்கள் எல்லாம் வெவ்வேறு கோணத்திலை ஒரே வாழ்க்கை முறை



யைத்தானே சொல்லுது. மனசு ஒத்துப்போனால் சரி...... மொழிப்பிரச்சினைகூட இல்லை! இப்ப...... நான் நல்லாய்ச் சிங்களம் பேசுவன்...... அவள் நல்லாய்த் தமிழ் கதைப்பாள்...... பிறகென்ன?''

''எண்டாலும் பண்பாடு கலாச்சாரம் எல்லாம் வித்தியாசம் தானே......''

''இதிலை கனக்க யோசிச்சு மண்டையைப் போட்டு உடைக்க ஒன்றுமில்லை மச்சான்...... பண்பாடு கலாச்சாரம் எல்லாம் மனிசன்ர வாழ்க்கை முறைகளும் அவையளின்ரை பழக்கவழக்கங்களும் தானே...... ரெண்டு பேரும் மனமொத்து வாழ்ந்தால் அதைவிடச் சிறந்த பண்பாடு என்ன இருக்கு?''

''சரி.......... உன்ரை விருப்பப்படி செய்யலாம் மச்சான்.......... ஆனால் உன்ரை 'பேரன்ஸ்' சம்மதிப்பினமோ?''

''அவையிட்டையும் அனுமதிஎடுக்க வேணும்தான். ஆனால் இட் இஸ் ரூ லேற் - இதை இப்ப சொல்லப்போக ......அவையள் போர்க்கொடி உயர்த்திக்கொண்டு வெளிக்கிடுவினம். பிறகு அதைச் சமாளிக்கிறதுக்கு இடையிலை விசயம் முத்திப் போய் விபரீதமாய் முடிஞ்சாலும் முடிஞ்சிடும்...... இது அவசரமாய் செய்ய வேண்டிய கலியாணம் - பிறகு அவையளைச் சரிப்படுத்தலாம்.''

''ஏன் வற்புறுத்தலா?''

''இல்லை அவளுக்கு இப்ப நாலுமாசம்''

''விளையாட்டுப் பிள்ளைமாதிரித் திரிஞ்சு திரிஞ்சு நீயும் வலுத்த ஆளடா'' என ஜெகநாதன் சொன்னான்.

அதை ஆமோதிப்பது போல மகேந்திரன் சிரித்து விட்டுச் சொன்னான்:

RangaRakes tamilnavarasam.com

''மச்சான் நீ நினைக்கிறது போல நான் எக்கச்சக்க மாய் போய் மாட்டுப்பட்டிட்டன் என்று மாத்திரம் நினையாதை. நான் நினைச்சால் விட்டிட்டும் ஓடியிருக்கலாம். ஆனால் பாவங்கள் மச்சான். ஏழைச்சனங்கள். என்னிலை நம்பிக்கை வைச்சவளுக்குத் துரோகம் பண்ணக்கூடாது.''

சிவகுமாரின் கண்களால் மகேந்திரனை அளக்க முடியவில்லை. அன்றுடம் பஸ்களில், சினிமாவில், கடற்கரைகளில் என்று எத்தனை கதைகளைச் சொல்லுகின்ற மகேந்திரஞ இவன்? சிவகுமார் அவனை நிமிர்ந்து பார்த்தவாறு கேட்டான்;

''மகேந்திரன் இந்த முடிவை உன்ரை பேரன்ட்ஸ் விரும்புவினமா?''

அவன் பெரிதாகச் சிரித்துவிட்டுச் சொன்னன்- ''என்ன மச்சான் கலியாணம் முடிக்கப்போறது நான்தானே?''

இவனல் எப்படி எந்தப் பிரச்சினைகளையுமே சிரித்துச் சிரித்துச் சாதாரணமாக எடுக்க முடிகிறது! நண்பர்கள் ஆச்சரியப்பட்டவாறு திருமண நோட்டிஸ் பத்திரத்தில் கையெழுத்துப் போடுவதற்கு பதிவுக்காரரிடம் பயணமானர்கள்.

# அத்தியாயம் - 22

மகேந்திரன் சுவர்ணவை மணமுடித்துக்கொண்டு அவளது வீட்டிற்கே குடிபோய்விட்டது திருவாட்டி வெங்கடாசலத்தைப் பொறுத்தவரை தான் பெரிய இழப்பாக இருந்தது. மாதா மாதம் கிடைத்து வந்த ஐம்பது ரூபாயில் துண்டு விழுந்து விட்டதே! இதையிட்டுத் தனது திருவாளரிடம் அவள் அடிக்கடி குறைபட்டுக் கொண்டாள். அந்த மனிசனும் தன் அடிசிற்கினியாளின் சொற் தவற முடியாமல் தனக்குத் தெரிந்தவர்களிடம் எல்லாம் அறையில் 'வேக்கன்ற்' இருப்பதாகச் சொல்லி வைத்தது.

இரண்டு பேர் மாத்திரம் சீவிக்கக் கூடிய அறையில், தாங்கள் மூன்று பேரும் நண்பர்கள் என்ற முறையில்—வேறு அறையும் கிடைக்காமற் போனதால் ஒருவாறு 'அட்ஜஸ்ட்' பண்ணி இருந்து காட்டியது தான் தவறு என்று ஜெகநாதன் சொன்னன். முன்னர் இரண்டு பேர்தான் வாடிக்கை. 'சரி, இனி என்ன செய்வது, எங்களுக்குத் தெரிந்த யாரையாவது சேர்த்துக் கொள்ளலாம்' எனச் சிவகுமார் கூறினன். பஞ்சலிங்கத்தார் இந்த விஷயம் அறிந்ததும் வருவதற்கு விருப்பம் தெரிவித்தார். தற்போது குடியிருக்கும் அறைக்கு நூறு ரூபா அழவேண்டியிருப்பதால் சற்றுக் குறைந்த விலையில் ஓர் அறை அவருக்குத் தேவைப்பட்டது.

மூன்று கட்டில்கள் போடுவதற்கு இடம் போதவில்லை. 'பரவாயில்லை' என்று கட்டிலைப் பொருத்தாமல் ஒரு பக்கமாகக் கட்டிப் போட்டார்—'ஒரு பாய் வேண்டினற் சமாளித்து விடலாம்' என்றூர். தவிர இப்படியொரு பொது

RangaRakes tamilnavarasam.com

வான அறையில் கட்டில் பாவிப்புக்குட்படாமல் இருந்தால் பழுதடையாமலும் இருக்கும் என அந்தரங்கமாகக் கருதினார். முன்னைய அறையில் தனிக்குடித்தனம். அவர் வந்து அறையைத் திறந்து சரியும்வரை அந்தக் கட்டில் அவருக்காகவே விசுவாசமாகக் காத்திருக்கும்.

தனது சமையலுக்கென ஒரு பக்கத்து மூலையை ஒதுக்கி எண்ணெய் அடுப்பையும் தட்டு முட்டுச் சாமான் பெட்டியையும் வைத்தார். "தம்பியவையள், நான் சைவம் கண்டியளோ!......உங்களோடை ஒத்துவராது......என்ரை கையாலை சமைச்சாத்தான் மனமாய்ச் சாப்பிடுவன்......" எனக் காரணம் சொன்னார். ஆனால். அதுகூடப் பொருளாதார ரீதியான ஓர் ஏற்பாடுதான் என்று தோன்றியது இவர்களுக்கு. 'தனிய என்றால் எதையும் சமைக்கலாம் ஒரு பச்சடியுடனும் சாப்பிடலாம்!'

"சரியான கசவாரம் மச்சான்......உந்தக் குணத்துக்குத் தான் எல்லாப் பிள்ளையளும் பெட்டையளாயே பிறந்திருக்குது" என ஜெகநாதன் சிவகுமாரின் காதில் முணுமுணுத்தான்.

பஞ்சலிங்கத்தாரைப் பொறுத்தவரை இந்த அறை கிடைத்தது ஒரே கல்லில் இரண்டு மாங்காய்கள் கிடைத்த கதை. ஜெகநாதனோடு படிப்படியாகக் கதைத்து அவனது மனதை மாற்ற வேண்டுமென்பது ஒன்று—ஊரிலிருந்து மனைவி எழுதுகின்ற எல்லாக் கடிதங்களிலுமே அதைப் பற்றிக் குறிப்பிடுகிறாள்; 'அந்தப் பெட்டையும் தனிய எவ்வளவு நாளைக்கென்றுதான் இருக்கும்? பெடியனோடை கதைச்சுப் பாருங்கோ. அதுகள் இஞ்சை அடிக்கடி வந்து பெரிய கரைச்சலாய் இருக்கு.' யாருக்காக. இல்லாவிட்டாலும் மனைவிக்காகவென்றாலும் இந்த விஷயத்தைத் திரும்பவும் ஒப்பேற்ற வேண்டும் என எண்ணிக் கொண்டார்—'பெண்சாதி பகுதியில் சம்பந்தம் பேசி வைத்தால் இது தான் கரைச்சல்.'



மற்றது சிவகுமார் விஷயம், சிவகுமாரைப்போல ஒரு தங்கமான பிள்ளை எங்கே கிடைக்கப் போகிறான்? அரசாங்க உத்தியோகம். சோலி சுரட்டுக்குப் போகாதவன், தானுண்டு தன்பாடுண்டு என்று இருப்பவன். தன் மூத்த மகள் லலிதாதேவியோடு அவனை ஒப்பிட்டுக் கற்பனை செய்து பார்த்தார்; 'நல்ல தோதான மாப்பிள்ளை.'

"தம்பி சிவகுமார்......நீர் யாழ்ப்பாணத்திலை எந்த இடம்?" என்று கேட்டார். இடத்தைக் கூறியதும் அண்மையில் இருக்கின்ற தனக்குத் தெரிந்த யாரையாவது நினைவு படுத்திக் கொண்டு, 'இவரைத் தெரியுமா?' 'அவரைத் தெரியுமா?" எனக் குடையத் தொடங்கி விடுவார். எப்படியாவது தனக்குத் தெரிந்த யாராவது அவனுக்கும் தெரிந்திருந்தால் அதன் மூலம் தங்களுக்கிடையில் உள்ள நட்பை (அல்லது உறவை) இன்னும் நெருக்கமாக்கிக் கொள்ளலாம் என்ற எண்ணந்தான்.

"தம்பி ....உமக்கு நல்ல எதிர்காலம் இருக்கு......சாதகக் குறிப்பைக் கொண்டு வாரும்......பார்த்துச் சொல்லுறன்" என அவனது கையைப் பிடித்துப் பார்த்துச் சொல்லுவார்.

"அண்ணை......உங்களுக்குச் சாத்திரம் பார்க்கவும் தெரியுமோ?" அவனது ஏளனம் அவருக்குப் புரியாது—

"ஓம்......கொஞ்சம் கொஞ்சம் தெரியும்" என அடக்கமாகப் பெருமையடித்துக் கொள்வார்.

"ஆனால், எனக்கு இதுகளிலை நம்பிக்கையில்லை" என அவன் 'சப்'பென சம்பாஷணையை முறித்துக் கொள்வான். அவர் விடமாட்டார்.

"இல்லை.........அதுகளிலையும் உண்மையிருக்கு......" என கதையை வளர்த்து வளர்த்து—'அப்பாடா!......இந்த உல

RangaRakes

tamilnavarasam.com

கம் எப்போ உருப்படப் போகுது'—என அவனுக்குச் சலிப்பை ஏற்படுத்தி விடுவார்.

ஒரு முறை ஊருக்குப் போய்விட்டு வந்த பொழுது லலிதாவைக் கையோடு அழைத்துக் கொண்டு வந்து விட்டார். ''பிள்ளை .....கொழும்பு பார்க்க வேணுமெண்டு அடிக்கடி ஆசைப்பட்டவள் தம்பி......இப்ப பள்ளிக்கூடங்கள் விடுதலைதானே......மற்றவையளை தாய்க்கு உதவியாய் இருக்க விட்டிட்டு இவளைக் கூட்டி வந்திட்டன்'' எனக் கூறிவிட்டுக் காரணமில்லாமல் சிரித்தார். அதில் சிரிப்பதற்கு என்ன 'ஜோக்' இருக்கிறது என்று அவனுக்குப் புரியவில்லை.

மகளுக்குச் சிவகுமாரை அறிமுகப்படுத்தினர். அவனைப் பற்றி மிகையாகவே கூறினர்.

லலிதா ஒரு பாவமும் அறியாமல் நின்ருள். ஓர் அந்நிய ஆடவனுடன் முதல் தடவையாக அறிமுகமாகின்ற கூச்சம் இல்லை. அப்பாவின் ஒரு நண்பரைச் சந்திக்கின்ற மரியாதையே அவளது பார்வையில் நிறைந்திருந்தது.

லலிதா கொழும்பிலே நிற்கின்ற நாட்களில் அகிலாவோடு தங்குவதற்கு சிவகுமார் மூலமாக ஏற்பாடு செய்தார் பஞ்சலிங்கத்தார். மாலைகளிலும் லீவு நாட்களிலும் எங்கேயாவது வெளிக்கிடும் பொழுது சிவகுமாரையும் வற்புறுத்தி அழைப்பார், அவனுக்குப் பெரிய சங்கடமாய்ப் போய்விடும். 'என்ன மனிசன் இவர்?' என்ற எரிச்சலும் ஏற்பட்டது. ஆனாலும் அதை வெளிக்காட்டாது நடந்து கொண்டான். சில இடங்களுக்குச் செய்வதறியாமல் அவர்களோடு இழுபட்டான்.

இதையெல்லாம் கவனித்த ஜெகநாதன், ''மச்சான் ... பஞ்சலிங்கத்தார் மாப்பிளை பிடிக்கத் திட்டம் போட்டிருக்கிருர் போலையிருக்கு........மாட்டுப் பட்டிடாதை!'' என்று



விளையாட்டாக எச்சரிக்கை செய்தான். ஆனல் 'சிவகுமார் உண்மையிலேயே அதிஷ்டக்காரன்' என்ற ஒருவித பொருமையும் அவனுள் எழுந்தது; இவ்வளவு போட்டியும் பொருமையும் தனக்கு இல்லையே?

எப்படியாவது அவர்கள் இருவரையும் ஒன்று சேர்த்து வைப்பதற்குப் படாத பாடுபட்டார் பஞ்சலிங்கத்தார். ஆனல் அவனே வளைகின்ற பாட்டைக் காணவில்லை. அகிலா வீட்டிற்கு அடிக்கடி போகின்றவன், இப்பொழுது லலிதா இருக்கும் நேரங்களில் போவதையும் தவிர்த்துக் கொள்கிருன். அவள் இந்தப் பக்கம் அப்பாவோடு கதைப்பதற்கு வந்து விட்டால் இவன் அங்கே போய்விடுவான்.

இவனுக்கு என்ன வந்தது? எந்நேரமும் அகிலாவே கதி என்று கிடக்கிருன். அவளும் எவ்வளவு உரிமையாக இவனேடு நடந்து கொள்கிருள். சில வேளைகளில் இவனது உடைகளைக் கூடக் கழுவிக் கொடுப்பதையும் பஞ்சலிங்கத்தார் 'நோட்' பண்ணியிருக்கிருர்.

எல்லோரும் சொல்வதுபோல 'சங்கதி அது தானே?' என மனவருத்தத்தோடு இரை மீட்டுப் பார்த்தார். அகிலாவின் 'கறெக்ரர்' கூடச் சரியில்லை என்று கேள்விப்பட்டிருக்கிருரே! இவன் ஏன் அநியாயமாக அங்கேயே மாண்டு போகப் போகிருன்?

''தம்பி.........நீர் ஒரு ஆம்பிளை அவள் குமர்ப்பெட்டை இருக்கிற வீட்டிலை அடுகிடை படுகிடையாய்க் கிடந்தால் ......பாக்கிறவங்கள் என்ன சொல்லுவாங்கள்?......அந்தப் பெட்டையின்ரை பழக்க வழக்கங்களும் அவ்வளவு சரியில்லையெண்டு கேள்வி''—எனப் புத்தி சொல்லிப் பார்த்தார்.

''நீர் இப்படித் திரியிறதை அறிஞ்சால் உம்மடை தாய் தேப்பன் என்ன சொல்லுவினம்?......உவையள் ஆர்

RangaRakes tamilnavarasam.com

ஆக்கள்......என்ன சாதி எண்டுகூட அறியாமல் திரியிறீர் போலை கிடக்கு.''

''அவையள் எப்படியாவது இருந்திட்டுப் போகட்டும் .........உங்களுக்கேன் அந்தக் கவலை?'' என அவன் சினங்கொண்டு சில வேளைகளில் கேட்பான்.

''அவள்......ஒபிசிலையும்......ஒருத்தனோடை 'கொனெக்சன்' என்று கேள்விப்பட்டிருக்கிறன் கண்டியோ? உம்மட நன்மைக்குத் தான் சொன்னனான். யோசித்து நட.''

ஒருத்தனோடு மாத்திரம் அவளை சம்பந்தப்படுத்தி மிச்சம் விட்டது பெரிய காரியம் தான் என நினைத்தான் சிவகுமார். அவரது செயல்கள் ஒரு பக்கம் சிரிப்பையும் மறு பக்கம் எரிச்சலையும் ஊட்டின.

# அத்தியாயம் - 23

கடல் அமைதியாகக் கிடக்கிறது. எப்போதாவது ஒரு நாளைக்கு இந்தக் கடல் இப்படிச் சோகமாய் இருப்பதைக் காணலாம். யாருடனோ கோபித்துக் கொண்டதுபோல மௌனம் சாதித்துக் கொண்டிருக்கும். அட்டகாசமாகச் சிரிப்பதுபோல இரைந்து கொண்டு ஓடிவருகின்ற கடல் இப்படிச் சும்மா இருப்பதைக் காணக் கவலையாயிருக்கிறது என எண்ணினான் சிவகுமார். எனினும் இது மனதுநாட்டம் கொள்கிற கவலை தரக்கூடிய அமைதி. நெருக்கமும் இரைச்சலும் திணறடிக்க வைக்கிற கொழும்பில் இந்தக் கடல்தானே மனதுக்கு ஓர் ஆறுதல்? கடலுக்கு அண்மையாக அறை கிடைத்தது எவ்வளவு வசதியாய்ப் போய் விட்டது? இப்பொழுது சில நாட்களாக அதிகாலையில் இந்தக் கடற்கரைக்கு வந்து ஒன்றுமே பேசாமல் ஒரு கல்



லில் உட்கார்ந்திருப்பதைத் தான் மனதும் விரும்புகிறது. யாருடன்தான் கதைப்பது? அகிலா கோபக்காரியாகி விட்டாள். இரண்டு மூன்று நாட்களாக அகிலா அவனோடு கதைக்காமலிருக்கிறாள். இந்தக் கல்லில் வந்து இருந்து கொண்டு, 'அவள் ஏன் இப்படி மாறினாள்?' என்று சிந்தித்து முடிவெடுப்பதற்குள்ளே மண்டையே வெடித்து விடும் போலிருந்தது. இதைப் போய் ஏன் பெரிதாக அலட்டிக் கொள்ள வேண்டும்? ஒன்றும் புரியவில்லை. எப்போதும்போல மனதைத் திறந்து கதைக்காமலிருப்பதே பெரிய குறையாக இருக்கிறது. இவனது பிரச்சினைகளுக் கெல்லாம் தீர்வு சொல்லுவாள். கவலைகளைத் தேற்றுவாள். சிவகுமாரும் அவள் விஷயங்களில் இதேயளவு பங்கு எடுத்திருக்கிறான். இப்பொழுது என்ன நடந்து விட்டது? காரணம் கேட்டால் 'ஒன்றுமில்லை' என்று பேச்சை வெட்டி விடுகிறாள்.

''அகிலா! ஏதோ காரணம் இருக்கு இல்லாட்டி இப்படி இருக்கமாட்டீங்கள். மனசைத் திறந்து கதைச்சால் கவலை தீரும்......உங்கடை கவலை என்னென்று எனக்குச் சொல்லக் கூடாதா?''— 'எனக்கு' என்பதில் அழுத்தம் கொடுத்தே கதைத்தான், 'எந்தப் பிரச்சினைகளையும் என்னோடு தானே மனம்விட்டுப் பேசியிருக்கிறாய்' என்பதை நினைவூட்டுவதற்காக.

''இந்த உலகத்திலை ஆரைத்தான் நம்பேலும்?'' விரக்தியான பதில். என்ன இது? அவனை அகிலா நம்பவில்லையா? இது ஒரு தாங்க முடியாத கவலை. அவள் விஷயத்தில் அவன் எவ்வளவு நேர்மையாக நடந்திருக்கிறான். தன்னைப் பூரணமாக அவள் புரிந்து வைத்திருக்கிறாள் எனவும் நம்பியிருக்கிறான். ஆனால் தனது நம்பிக்கை வீண் என்று அறிய வரும் பொழுது எவ்வளவு கவலையும் ஆத்திரமும் பொங்கி வருகிறது. தன்னைச் சந்தேகிக்கிறாளா? தவறான நோக்கத்தோடு தான் அவளோடு பழகுவதாகக் கருதுகிறாளா?

RangaRakes tamilnavarasam.com

யார் என்ன பழியைச் சொல்லிவிட்டுப் போனாலும் அது வேலையற்ற வீணர்களின் செயல் என்று கவலைப்படாம லிருக்கலாம். தங்களைப் புரிந்து வைத்திருக்கிற ஒருவர் என்று கருதப்படுகின்ற ஒருவரே அந்தப் பழியைச் சொல் லும் பொழுதுதான் தாங்க முடியாமலிருக்கிறது. எப்படித் தான் அவளால் இவ்வாறு கருத முடிகிறது?

அவளது பிரச்சினைகளையும் சுமைகளையும் அறியும் பொழுது மனப்பூர்வமாக இரங்க முடியுமானல் அவளுக்கு வேறு எந்தத் துரோகம் செய்ய மனம் வரும்? சகோத ரத்துவத்திலிருந்து இம்மியளவு கூடப் பிசகாமல் பழ கியதை அவளால் புரிந்து கொள்ள முடியவில்லையா?

ஒருவேளை ராஜேசன்தான் அவளைத் தன்னோடு கதைக்க வேண்டாம் என்று கூறியிருப்பானே? அதற்காகத் தான் அவள் இப்படியெல்லாம் நடந்து கொண்டு தன்னைக் கை கழுவிவிட எண்ணியிருக்கிருளோ? அது நியாயமாகத் தோன்றினலும் அந்த நிலையில் அழுகை பொங்கிக் கொண்டு வந்தது. தான் என்ன தவறு செய்ததற்காக இப்படிப் புறக்கணித்து விடுகிருள்? இனிச் சீவியம் முழு தும் அவளோடு கதைக்கவே கூடாதா? அவளைக் காணவே கூடாதா?

''அகிலா நீங்கள் என்னோடை கதைக்க விருப்ப மில்லாவிடில்......இஞ்சை வர வேண்டாம் என்ரு சொல்லு நீங்கள்?''

''ஆரு சொன்னுங்க அப்படி?......எனக்கு மனம் சரி யில்லை...... ஆரோடையும் கதைக்க விருப்பமில்லை ......... இங்கை அம்மா இருக்கிருங்க.........வந்து கதைக்கலாம் தானே?''

அவளே கதைக்க வேண்டாம் என்று சொன்ன பிறகு அந்த வீடு எதற்கு? அம்மாவைக் கூட ஒரு சாட்டுக்காகத் தான் சொல்லியிருக்கலாம்—அப்படிச் சொன்ன பிறகும் ஏன் ரோஷம் கெட்டவனைப்போல அங்கே செல்ல வேண் டும்?



''அகிலா நான் எந்தவிதமான கூடாத எண்ணத் தோடையும் பழகயில்லை ......ஆனல் ...... நீங்கள் இப்படி என்னை வெறுத்து ஒதுக்கிறீங்கள்.........நான் போறன்...இனி நீங்கள் நினைக்கிறமாதிரி கரைச்சலும்தர வரமாட்டன்...... நான் எத்தனையோ பேருக்கு உதவி செய்திருக்கிறன். ஒரு விதமான பிரதி பலனையும் எதிர்பாராமல் தான் மன நிறைவோடை செய்திருக்கிறன். ஆனல், உங்களொருத்திக் குத்தான் கடமைப்பட்டிட்டன். என்னையறியாமலே, நீங் கள் செய்த உதவிகளையெல்லாம் ஏற்று ஏற்றுக் கடனளி யாயிட்டன் ...... அதையெல்லாம் எப்படித் தீர்க்கப் போறனே என்ற கவலையோடைதான் போறன்'' என்று சிவகுமார் கண்ணீருக்கிடையே கூறினன்.

அதைக் கேட்டு அவள் அழுதாள். அவன் அதைப் பொருட்படுத்தாமல் வந்து விட்டான். வரும்பொழுது இப்படித் தன்னைச் சந்தேகிக்கிருளே' என்ற வருத்தமும் இருந்தது.

ஆனல், இப்படித் தனிமையாயிருந்து சிந்திக்கும் பொழுது, அவள் பெரிதாக ஒன்றும் செய்துவிடவில்லை என்று தோன்றுகிறது. மற்றவர்கள் பேசுகிற கதைகளை யும் பொருட்படுத்தாமல் இவ்வளவு நாட்களும் தன்னோடு தளங்கமில்லாமற் பழகியதே அவளது பெருந்தன்மை யைத்தானே உணர்த்துகிறது? தான் அவளோடு பழகி யதே எவ்வளவு தவறு என்று இப்பொழுது புரிகிறது. அது தன் வாழ்க்கையையே அல்லாமல் அவளது வாழ்க்கையைத் தான் கூடப் பாதிக்கும் என்பதை முன்பு உணர முடிய வில்லை. இப்பொழுது அப்படித்தான் ஏதாவது நடந்திருக் குமோ? ராஜேசன் தான் நிச்சயமாக அவளைச் சந்தேகப் பட்டிருப்பான். 'கடவுளே! அப்படி இருக்கக் கூடாது.'

அதிக நாட்களுக்குப் பிறகு அவன் கடவுளை நினைத் தான். அதுகூட அவளுக்காகத் தான். அவளது வாழ்க்கை

RangaRakes tamilnavarasam.com

சீர்குலைந்து நடுத்தெருவில் நின்றால் அதற்குக் காரணம் தான்தானே எனக் கருதிக் குழம்பினான். அவள் நடுத்தெருவில் அபலையாக நிற்பதை நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை. தன்னலம் கருதாமல் உதவிகளைச் செய்தாள். தன்னை ஒரு குழந்தையைப் போலக் கருதி எவ்வளவு ஆதரவாகத் தேற்றியிருக்கிறாள். அவளை ஒரு தாயின் ஸ்தானத்தில் தான் கருத முடிகிறது.. அப்படியே போய் அவளது கால்களைத் தொட்டு வணங்க வேண்டும் போன்ற உணர்வு பொங்கி வந்தது.

கடல் ஏதோ நினைத்துக் கொண்டதுபோல மெல்ல அலைவீசி, வரத் தொடங்கியது. இப்படி மனதுக்குள் அடக்கி வைத்திருப்பதும், பின்னர் எண்ணங்கள் குமுறலெடுக்கும் பொழுது ஒரு முடிவைக் காண வேண்டுமென்ற ஆவேசத்துடன் பொங்கி வருவதும் கரையைத் தொட்டதும் தொடர்ந்து வரத் துணிவில்லாத கோழையாகி மீண்டும் அடங்கிப் போய் விடுவதுமான காரியத்தைத்தான் கடலும் செய்து கொண்டிருக்கிறது போலும்—இப்பொழுது காற்றடிக்கத் தொடங்கியிருக்கிறது.

'வேலைக்குப் போக நேரமாகி விட்டது!' என்ற நினைவில் எழுந்து அறைக்கு வந்தான். மகேந்திரன் இருந்தால் இப்பொழுது எவ்வளவு ஆறுதலாயிருக்கும்! மனைவி வீட்டுக்குச் சென்ற பின்னர் அவன் வருவதும் குறைவு! 'மனிசியைக் கண்டதும் எங்களையெல்லாம் மறந்து விட்டான்' என எண்ணியவாறு இன்று மாலையில் போய் அவனைச் சந்திக்க வேண்டுமென நினைத்துக் கொண்டான்.

"என்ன தம்பி சிவகுமார்......ஒரு மாதிரி இருக்கிறீர்........ஏதாவது பிரச்சினையா?" என பஞ்சலிங்கத்தார் கரிசனைப்பட்டார்!

"ஒன்றுமில்லை!"

RangaRakes



"இல்லை.........எனக்கு மறைக்காதையும் ...... ரெண்டு மூன்று நாளாய் கவனிச்சுக் கொண்டுதான் இருக்கிறன்...... கண்டியோ!......அந்த பக்கம் போறதுமில்லை......உம்மட முகமும் சரியில்லை."

அவன் ஒன்றுமே பேசாமல் அலுவலகத்துக்கு வெளிக்கிட்டுச் சென்றான்.

மாலை அலுவலகம் முடிந்து மகேந்திரனைச் சந்திக்கச் சென்றபொழுது அவன் இருக்கவில்லை. அறைக்குத் திரும்பினான். கடந்த சில நாட்களுக்குப் பின்னர் இன்று தான் சற்று நேரத்தோடு போகிறான். இல்லாவிட்டால் எங்காவது காலத்தைக் கழித்துவிட்டு இரவு பத்துப் பதினொரு மணிக்குப் பின்னர் தான் வந்து படுக்கையில் விழுவான். யாருடனாவது கதைக்க முற்பட்டால் தேவையில்லாத காரணங்களுக்கெல்லாம் கோபம் பற்றிக் கொண்டு வருகிறது. அதைத் தவிர்ப்பதற்காகத் தனிமை தேவைப்பட்டது.

இன்று அவன் அறைக்கு வருகின்ற நேரத்திலேதான் அகிலாவும் அலுவலகத்திலிருந்து வந்து கொண்டிருந்தாள். சிவகுமார் அவளைக் கண்டும் காணாதவன்போல நடந்து கொண்டிருந்தான். அது அவளுக்குப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. 'சிவா, இவ்வளவு ரோஷக்காரனா?'

அவன் அவளை விலத்திவிட்டு முன்னே நடந்து செல்வதைப் பொறுக்காதவளாய் விரைந்து நடந்தாள்.

"சிவா! சிவா!" என அவனுக்கு மட்டும் கேட்கும்படியாக அழைத்தாள். அந்தச் சத்தம் தொண்டையிலிருந்து பெரிய கஷ்டத்துடனேயே வெளிப்பட்டது அதை முந்திக் கொண்டு அழுகை வந்துவிடும் போலிருந்தது. அவள் அழைத்தது அவனுக்குக் கேட்கவில்லையோ என்னவோ, திரும்பிப் பார்க்காமலே நடந்து கொண்டிருந்தான்.

tamilnavarasam.com

வீட்டை அடைவதற்கு முன்னர் அவனோடு கதைத்து விடலாமென்ற துடிப்பிலே விரைவாக நடந்தாள். ஆனால், அவனும் வேணுமென்றே விரைவாக நடந்திருக்க வேண்டும். அது முடியாமற் போய்விட்டது. கதவைத் திறந்து கொண்டு வீட்டினுள் நுழைந்தவன் இவள் வருவதே தெரியாதவன்போல கதவைச் சாத்திவிட்டு நடந்தான்.

அகிலா கவலையோடு கதவைத் திறந்தாள். ஒரு ரோசாச் செடி அழகான மலரைப் பூத்திருந்தது. இப்பொழுது அதன் இதழ்களையெல்லாம் உதிர்த்துவிட்டுப் பரிதாபமாய்க் காட்சியளித்தது. அதன் தோற்றம் ரோசா முள்ளைப்போல அவள் கண்களைக் குத்தியது. அழகான மலருக்கு ஏன் நெடுங்காலம் சீவிக்கத் தெரியவில்லை? மிகப் பக்குவமாய் மெல்ல மெல்ல விரிந்து மலர்ந்த இதழ்களை இழந்துவிட எப்படி மனம் வந்தது?

## அத்தியாயம் - 24

ஜெகநாதனுக்குப் பெண் குழந்தை பிறந்திருப்பதாகத் தந்தியில் செய்தி வந்தது. பெண்பிள்ளை என்றதும் சற்று முகச் சுளிப்புத்தான். ஆனால், அதையும் மீறத் தோன்றிய ஒருவித உற்சாகமான மனக் கிளர்ச்சியைக் கட்டுப்படுத்த முடியவில்லை. தனக்கு ஒரு குழந்தை-நான் அப்பா என்ற உணர்வு ஒரு புதுமையான இன்பத்தை அளிக்கிறது. மண முடித்து மனைவியைப் பிரிந்து வந்து ஏழெட்டு மாதங்கள் தனிமையாக வாழ்ந்தாயிற்று. இந்த இடைக் காலத்தில் வெறுமையும் விரக்தியுணர்வும் தான் கண்ட பலன். இப்பொழுது அந்தக் குழந்தை பிறந்து 'நீங்கள் எனக்கு



அப்பா' என்று சொல்லுகிறது. அது மழலை பொழிந்து வளர்ந்து சிரித்துச் சிரித்துத் தவழ்ந்து சின்னக் கால்களைப் பதித்து நடக்கப் போகிற நினைவுகள் அவனது மனதை அசைத்தன.

அவள் இனித் தனது சொல்லுக் கேட்கிற ஒருத்தியாக மாறிவிடுவாளோ? குழந்தை பிறந்திருப்பதாகத் தந்தி அடித்திருக்கிறார்கள். அவளது விருப்பத்தின் பேரிலே தான் செய்திருப்பார்கள். அப்படியென்றால் தான் வருவதை அவள் விரும்புகிறாளோ?

குழந்தையின் பக்கத்தில் படுத்திருக்கிற அவளது தோற்றம் நினைவில் வந்தது. அவளது முகத்தை கவலையோ அல்லது களைப்போ சோபை இழக்கச் செய்திருக்கிறது. தன்னைக் கண்டால் அந்த முகம் மலர்ச்சியடையும் என்று கற்பனை செய்தான். உடனடியாகப் போய் அவளைப் பார்க்க வேண்டுமென்ற ஆசை பொங்கியது.

இவ்வளவு நாட்களும் ஒரு கடிதம்கூட எழுதாமல் விட்டிருக்கிறாளே? 'தலைக்கனம் பிடிச்சவள்' என்ற கோபமும் அடுத்த கணமே தோன்றியது. 'இப்பொழுது குழந்தை பிறந்த பிறகுதான் என்னைத் தேவைப்படுகிறது, விருப்பமென்றால் தேடி வரட்டுக்கும். நான் போகக்கூடாது' என்று எண்ணினான்.

பஞ்சலிங்கத்தார் தருணம் அறிந்து கதைத்தார்' "தம்பி.......நடந்ததை மறந்திட்டுப் போய்ப் பிள்ளையைப் பார்த்திட்டு வாரும்......சும்மா நெடுகலும் பிடிவாதமாய் இருக்கக் கூடாது கண்டியோ!"

அவன் பதில் பேசவில்லை.

"பெண் மனசு தம்பி!........இந்த நேரத்திலை புருஷனைக் காணத்தான் துடிக்கும்......முந்திப் பலதும் நடந்திருக்கும் ......இனி எல்லாம் சரி வரும் போட்டுவாரும்."

RangaRakes tamilnavarasam.com

''சீவியத்துக்கும் வேண்டாம் என்றுதானே விட்டிட்டு வந்தனுன்......பிறகேன் அந்தக் கதையளைக் கதைக்கிறியள்?''

''உப்பிடி எவ்வளவு காலத்துக்கென்று இருக்கப் போகிறீர்?''

''நான் ஆம்பிளை தானே? எப்படியும் இருப்பன்.''

''உப்பிடிச் சொல்லாதையும் தம்பி.........ஆண் என்ருப் போலை?.........அவனுக்கும் ஒரு துணை தேவைதான்......கண்டியோ! உம்மடை மனுசியையும் குழந்தையையும் எவ்வளவு காலத்துக்கென்றுதான் விட்டிட்டு இருப்பீர்?''

''எனக்கு ஒருத்தரும் தேவையில்லை!''

''உப்பிடிச் சொன்ன எத்தனையோ பேரை நானும் கண்டிருக்கிறன்......''

மௌனமாக அவர்களது சம்பாஷணையைக் கவனித்துக் கொண்டிருந்த சிவகுமார் சொன்னுன்:

''ஜெகநாதன் இப்பிடி நீ பிடிவாதம் பிடிக்கிறதாலை ஆருக்கு லாபம்? கொஞ்சமாவது விட்டுக் கொடுத்து வாழப் பழக வேணும்.''

''மச்சான்.........நீயென்ருல் கூட என்னைப்போலத் தான் செய்வாய் ...சுய கௌரவத்தை விட்டிட்டுப் போகச் சொல்லுறியோ?''

''அப்படி உன்ரை சுய கௌரவத்தைப் பாதிக்கக் கூடியதாய் என்னதான் நடந்தது?''

''எத்தனையோ நடந்தது மச்சான்......எல்லாத்தையும் சொல்லிக் கொண்டிருக்கேலாது. ஒரு பெண் தன்ரை புருசன்ரை சொல்லுக் கேட்காமல் நடக்கிறதே பிழைதானே?''



''பிழை தான் மச்சான்.........பிழையைத் திருத்த முயல வேணுமொழிய இப்பிடிக் கைவிட்டிட்டு வரக் கூடாது!''

''என்னுல் ஏலாக் கட்டத்திலைதான் விட்டிட்டு வந்தனுன்.''

''நீ எவ்வளவு தான் நியாயம் கதைச்சாலும் எப்பவோ ஒரு நாளைக்கு ஒன்று சேரத்தான் போறீங்கள்! ஏனெண்டால் இப்ப பிறந்திருக்கிற குழந்தையாலை உங்களுக்குள்ளை இன்னும் பிணைப்புக் கூடியிருக்குது. அதை ஆரோ ஒரு அன்னியக் குழந்தை என்று நினைக்க முடியுதோ? ரெண்டு பேராலுமே அது முடியாத காரியம்: பிறகு ஒரு நாளைக்கு இதுக்காக ஒன்று சேரப் போறனீங்கள்.....இப்பவே அதைச் செய்தால் என்ன?''

ஜெகநாதன் மௌனம் சாதித்தான். மனது சிந்தனை வயப்பட்டது.

சிவகுமார் சொல்வதும் உண்மைதான். அவர்களைக் கைவிட்டு இருக்க வேண்டுமென வெளிப்படையாக நினைத்தாலும் நடைமுறையில் அது சாத்தியப்பட்டு வராது. குழந்தை பிறந்த செய்தி அறிந்ததும் தோன்றிய மகிழ்ச்சியும் துக்கமும் கலந்த மனர்க் கிளர்ச்சியே அதற்குச் சான்று. ஜெகநாதனின் மனதைத் தொடும்விதமாகச் சிவகுமார் தொடர்ந்து சொன்னுன்;

''ஆர் முதலிலை கதைக்கிறது என்ற தன்மானப் பிரச்சினையாலை.........அநியாயமாய் உங்கடை இளமையைத்தான் வீணுக்கப் போறீங்கள். இதிலை தன்மானப் பிரச்சினைக்கே இடமில்லை......இப்ப இல்லாமல் பிறகு குடு குடு கிழவனுய்ப் போனபிறகு ஒன்று சேர்ந்து என்ன செய்யப் போறியள்? ......நாங்கள் விரும்புகிற வாழ்க்கை எங்களுக்கு அமையாட்டில்......எங்களுக்கு அமையிற வாழ்க்கையை ஏற்றுக்

RangaRakes tamilnavarasam.com

கொண்டு சந்தோஷமாய் வாழ வேண்டியதுதான் மச்சான்......இதிலே யோசிக்க ஒன்றுமில்லை.''

கதைத்துக் கொண்டிருக்கும் பொழுதே நெடுநேரம் கடந்து போய் விட்டது. அந்த நேரத்திலும் அடங்கிப் போகாத வாகனங்களின் இரைச்சல். இருப்பிடத்துக்குத் திரும்புவதற்கு நேரம் தவறிய பறவையொன்று தனது துணையை ஏக்கத்தோடு அழைத்தவாறு பறக்கின்ற ஓசை சன்னமாக ஒலிக்கிறது.

அடுத்த நாள் புலர்கின்ற பொழுதில், ஜெகநாதன் யாழ்ப்பாணத்துக்குப் பயணமானான். அவனை வழியனுப்பி வைத்துவிட்டுத் தனது சாதுரியத்தினால் தான் அந்த நல்ல காரியம் கை கூடியது எனச் சிவகுமாருக்குப் பெருமையடித்தவாறு புகையிரத நிலையத்திலிருந்து திரும்பிக் கொண்டிருந்தார் பஞ்சலிங்கத்தார்.

## அத்தியாயம் - 25

அன்றைய தபாலில் சிவகுமாருக்கு ஒரு கடிதம் வந்திருந்தது. அப்பா அனுப்பியிருந்தார். அப்பா அடிக்கடி கடிதம் போடமாட்டார். ஏதாவது முக்கிய விஷயமென்றால்தான் எழுதுவார்;

'சிவபெருமான் கிருபையை முன்னிட்டு வாழும் என்றும் என்மேற் பட்சம் மறவாத அன்பு மகன் அறிவது,

—சிவகுமாருக்கு அழுகை வந்தது. அப்பா நேரிலேயே வந்து பாசம் பொங்க அழைப்பதைப்போல இருந்தது. இப்படிச் சின்னச் சின்ன விஷயங்களுக்கெல்லாம் உணர்ச்சி வசப்பட்டு விடுவது அவனது வழக்கம். அப்பா, அவனோடு அதிகம் பேசாமல் கோபக்காரனைப்போல இருந்தாலும் வழக்கமான அப்பா தான். பிள்ளை என்ற பாசம் இல்லாமற் போய்விடவில்லை. சின்ன வயதில் எவ்வளவு கண்டிப்பாக வளர்த்தாலும், அதையும் மீறிய அன்பினால் எல்லாம் ஆட்கொண்ட நினைவுகள் மனதிலே விரிந்தன. அவனுக்கு ஒரு தலையிடி காய்ச்சல் என்றால் துடித்துப்போய் விடுவார்- ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் புத்திமதி சொல்லி வழிகாட்டியாக இருந்திருக்கிறார். இப்பொழுது அதிகம் கதைக்காமல் விட்டது அவன் பெரியவனாகி விட்டதற்குக் கொடுக்கின்ற கௌரவமாக இருக்கலாம். பிள்ளைகள் மேல் அன்பாகவும் பாசமாகவும் இருப்பதைப்போல அவருக்கு இனிமையாகக் கதைக்கத் தெரியாது. அதனால் கதைப்பதைக் குறைத்திருக்கலாம். இந்தக் கல்வியும் உத்தியோகமும் அவர் இட்ட பிச்சை என்றுதான் சொல்ல வேண்டும்.

பலவிதமான மனச்சலனங்களுடன் கடிதத்தைத் தொடர்ந்து வாசித்துக் கொண்டிருந்தான் சிவகுமார். ஏதோ ஒருவித பயம் மனதைக் கவ்விக் கொண்டுமிருந்தது.

'......எனக்கும் வயது போட்டுது இன்னும் எவ்வளவு காலத்துக்கென்றுதான் உங்கடை விஷயங்கள் எல்லாத்தையும் கவனிக்காமல் இருக்கிறது? இந்தச் சின்ன வயதிலேயே உனக்கும் பொறுப்புக்கள் அதிகம் தான். இதையெல்லாம் நான் யோசிக்காமல் இல்லை. அக்காவுக்கும் வயது ஏறிக் கொண்டே போகுது. காலாகாலத்திலை அவளது காரியத்தையும் ஒப்பேற்றி வைக்க வேணுமென்று அம்மாவும் நச்சரித்துக் கொண்டிருக்கிறாள்......'

—அக்காவும் பாவம், எவ்வளவு காலத்துக்கென்றுதான் இப்படி வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடப்பாள்?



RangaRakes tamilnavarasam.com

அவள் வயதையொத்த சிநேகிதிகள் பலர் மணமுடித்துப் பிள்ளை குட்டிகளோடு மகிழ்ச்சியாக வாழ்க்கை நடத்துகிறார்களாம்! அப்பாவும் அவளுக்கென்று பேசாத சம்பந்தங்கள் இல்லை. ஒரு பெண்ணின் அழகையும் பண்பையும் விடப் பணத்தைத் தான் பெரிய தராதரமாக எல்லோரும் கருதுகிறார்கள். அப்படி அள்ளிக் கொடுக்க அப்பாவிடம் என்ன இருக்கிறது? வீடு கட்டுவதற்குப் பட்ட கடனில் சொச்சம் இன்னும் வளர்ந்து கொண்டே போகிறது. தம்பியின் படிப்புச் செலவுகளுக்கு, அப்பா மாறி அவன் மாறி அனுப்ப வேண்டும். அன்றாடம் வீட்டுச் செலவுகள்...... அலுக்காமல் சலிக்காமல் அதைக் கவனிக்கின்ற அப்பா! எப்பொழுதுதான் இதற்கெல்லாம் விடிவு பிறக்கப் போகிறதோ?

'......கடவுள் இப்பதான் கண் திறந்திருக்கிறார். அல்லும் பகலும் நான் அவனை வேண்டியது வீண் போகவில்லை. அவன் செயலால் ஆகாதது ஒன்றுமில்லை. இப்பொழுது ஒரு நல்ல இடத்துச் சம்பந்தம் கிடைத்திருக்கிறது. மாப்பிள்ளை உத்தியோககாரனில்லைத்தான். சொந்த வியாபாரம் செய்கிறாராம். பெடியன் நல்ல குணசாலி. சீதனமென்று அவர்கள் ஒன்றும் கேட்கவில்லை. எங்களுக்கு விருப்பப்படி செய்துவிடச் சொன்னார்கள்......

—அக்காவின் நல்ல குணத்துக்குத் தான் இப்படியொரு வாழ்க்கை அமைந்திருக்கிறது—ஓ! இனி அக்காவும் அம்மி மிதித்து அருந்ததி பார்த்து மனம் நிறைந்த மணாளனைக் கைப்பிடித்து......

'......ஆனால், அவர்கள் இதை மாற்றுச் சம்பந்தமாகத் தான் செய்ய விரும்புகிறார்கள். மாப்பிள்ளையின் தங்கைக்கு உன்னைக் கேட்கிறார்கள். அவர்களே விரும்பி நல்ல சீதனமும் தருகிறார்கள். நல்ல வசதியுள்ள இடம். பெட்டையும் படிச்சவள்—இந்த இடத்திலை சம்பந்தம் வைத்தால் எங்கடை கடன் தனியெல்லாம் தீரும். அக்கா



வின்ரை பிரச்சினையையும் தீர்த்து வைச்ச புண்ணியம் உன்னைச் சேரும். உங்கடை காரியங்கள் ஒப்பேறியிட்டுதென்றால்......நான் ஒரு கவலையுமில்லாமல் சின்னவன்ரை படிப்புச் செலவுகளையும் மற்றப்பாடுகளையும் கவனித்துக் கொண்டு காலத்தைக் கடத்துவன். என்ரை பிள்ளையள் என்ரை சொல்லைத் தட்டமாட்டுதுகள் என்ற அசையாத நம்பிக்கை எனக்கு இருக்குது. நான் அவையளுக்குச் சரியென்று வாக்கும் கொடுத்திட்டன். என்ரை வாக்கைக் காப்பாற்றிறது உனது பொறுப்பு. கடவுள்தான் இந்த வழியைக் காட்டியிருக்கிறார்......

—'கடவுளே!' எனத் தன்னை மறந்து அழைத்தான் சிவகுமார்.

அப்பா பிள்ளைமேலுள்ள அசையாத நம்பிக்கையில் வாக்குக் கொடுத்து விட்டார். இனி என்ன செய்வது? ஒரு கலியாணத்துக்கு எத்தனை வாக்குகள் கொடுக்கப்படுகின்றன? அப்பா ஒருத்திக்குக் கொடுத்தாராம்! நானும் ஒருத்திக்கு வாக்குக் கொடுத்திருக்கிறேன். இன்னும் அம்மாவும் யாருக்காவது சொல்லி வைத்திருப்பாளோ என்னவோ?

"இதற்கு நான் சம்மதிக்க மாட்டேன்" என்று எழுதிவிட வேண்டியதுதான் என எண்ணினான்; எந்த முகத்தை வைத்துக் கொண்டு எழுதுவது? அப்பா அதைத் தாங்கிக் கொள்ள மாட்டார். அவருக்கு மானம்தான் பெரிசு! தான் வாக்குக் கொடுத்துவிட்டு, பிறகு இல்லையென்று போனால் அது அவருக்குப் பெரிய மானம் போகிற விஷயம். அக்கா இப்பொழுது எந்த அளவுக்கு மனக்கோட்டைகளைக் கட்டி வைத்திருப்பாளோ தெரியாது. தம்பியின் முடிவை அறிவதற்கு வழிமேல் விழி வைத்துத் தபால்காரனைப் பார்த்துக் கொண்டிருப்பாள் — அவன் கொண்டு போய்க் கொடுக்கிற கடிதத்தைப் பிரித்துப் பார்க்கின்ற நொடிப்

RangaRakes tamilnavarasam.com

பொழுதிலேயே அவளது மனக் கோட்டைகள் இடிந்து போகும். அதை இடித்துப் போடுகிற தைரியம் எனக்கு ஏது? 'செல்வி! நான் உனக்குத் துரோகம் செய்யப் போகிறேன்? என்னை மன்னித்துவிடு! இந்தக் கோழையைக் காதலித்த பாவத்திற்காக. இனி நீ வாழ்க்கை முழுதும் அழப் போகிருய். ஏனெனில் எனது அக்காவையும் பெற்ருேரையும் சிரிக்க வைக்கப் போகின்ற சுயநலக் காரணத்துக்காக உன்னை அழவைக்கப் போகிறேன். ஒரு பெண்ணைச் சிரிக்க வைக்க வேண்டுமென்ருல் இன்ெனாரு பெண்ணை அழவைக்க வேண்டுமென்பது தவிர்க்க முடியாத ஒரு நியதியா?

'......ஒரு நல்ல நாளில் பெண் பார்க்கப் போகலாம்' திகதி குறிப்பிட்டுப் பின்னர் அறிவிக்கிறேன் வரவும்.

இப்படிக்கு,

அன்புள்ள

அப்பா.

—அன்புள்ள அப்பா தான்! தன் பிள்ளைகள் எல்லோருக்கும் நல்லது செய்ய வேண்டும், அவர்களை நல்லபடி வாழ வைக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு தான் இதையெல்லாம் செய்கிருர். அவர் பெற்று வளர்த்த பிள்ளைகளை அவர் விருப்பப்படி செய்ய உரிமையிருக்கிறது. அக்காவை வீட்டுக்குள் வைத்திருந்ததுபோல எல்லோரையுமே பூட்டி வைத்திருக்க வேண்டும். பிறகு தனது விருப்பப்படி செய்வதற்கு இலகுவாக இருந்திருக்கும்!

சிவகுமார் கலங்கிக் கொண்டிருந்தான். சாதாரணமாக எதிர் பார்க்கக் கூடிய இந்த முடிவு தனது வாழ்க்கையிலும் வந்து பெரிய அதிர்ச்சியைத் தரும் என்று அவன் நினைத்திருக்கவில்லை. அவன் நினைத்திருந்ததெல்லாம் செல்வியைத் தான். இனி எந்த முகத்தை வைத்துக் கொண்டு அவளுக்கு முன்னே போய் நிற்பது? தன்னை மறந்து விடும்படி சொல்வது?



பிரமை பிடித்தவனைப்போல வானத்தை வெறித்துப் பார்த்தான். பறவைகள் பறக்கின்றன. அவை மீண்டும் வந்து பதிய இருக்கின்றன. அந்தப் பறவைகள் ஏன் வானத்தின் மீது உயர உயரப் பறக்கவில்லை? எல்லாமே ஒரு நியதிக்குட்பட்டவை போலக் குறிப்பிட்ட எல்லைக்குள்ளேயே பறந்து பறந்து மீண்டும் இறங்கி விடுகின்றன. ஒரு பறவையாவது அந்த நியதிகளை மீறி உயரமாகப் பறந்து கொண்டே செல்ல மாட்டாதா என்று ஏக்கத்தோடு பார்த்துக் கொண்டிருந்தான். ஆனல், ஒன்றிற்காவது அந்தத் துணிவு வரவில்லை. அவை அப்படிப் பறக்காமலிருந்தது பெரிய குறையாக இருந்தது.

இந்த விஷயத்தை யாருடனுவது மனம் விட்டுக் கதைத்து ஒரு முடிவு காணமுடியாதா என்று மனது தவித்தது. ஜெகநாதன் ஊருக்குப் போய்விட்டான். பஞ்சலிங்கத்தாருடன் இதையெல்லாம் கதைக்கக் கூடாது. அகிலா தான் சரியான ஆலோசனை சொல்லக் கூடிய ஒருத்தி. ஆனல், அவளும் இப்போது கோபக்காரியாகிவிட்டாள். எப்படியாவது மகேந்திரனைச் சென்று சந்திக்க வேண்டும் என எண்ணினன்.

அன்று மாலை அவனது வீட்டுக்குச் சென்ருன் சிவகுமார்.

"ஹலோ சிவா!......வெல்கம்!......என்னை நீ இன்னும் மறக்கவில்லைத் தான்! மகேந்திரனின் சந்தோஷமான வரவேற்பு.

"நீதான்......எங்களை மறந்திட்டாய்...அந்தப் பக்கம் வாறதுமில்லை......நான் அண்டைக்கும் வந்தனன். உன்னைக் காண முடியவில்லை."

RangaRakes tamilnavarasam.com

"தெரியாதே ...... இப்பிடித் தான் எங்கையாவது போயிருப்பன்......உன்ரை பாடுகள் எப்பிடி? முகமெல்லாம் வாடிப் போயிருக்குது......என்ன விஷயம்?"

மகேந்திரன் சந்தோஷமாய்க் காணப்பட்டான்...... அவனிடம் மகிழ்ச்சிக்குக் குறைவே இருந்ததில்லை.

"மச்சான்......உன்னைப்போல எந்த நேரமும் மகிழ்ச்சியாயிருக்க எனக்கு ஏலாது—அது உனக்குக் கிடைச்சிருக்கிற வரப்பிரசாதம்......உன்ரை விஷயங்கள் வீட்டுக்குத் தெரியுமோ?"

"இன்னும் இல்லை......ஆறுதலாய் அறிவிப்பம்! பேரப்பிள்ளையோடை போய் நின்றால் ஏற்றுக் கொள்ளத்தானே வேணும்......எல்லாம் வெல்லலாம் மச்சான்!"

"சரி இப்ப விஷயத்துக்கு வருவம்—

நான் உன்னட்டை ஒரு ஆலோசனை கேட்க வந்திருக்கிறன்......" எனக் கதையைத் தனது வழிக்குத் திருப்பினான் சிவகுமார்.

"அதென்னடாப்பா நான் ஆலோசனை சொல்ல வேண்டிய விஷயம்?...... நான் அவ்வளவு பெரிய ஆள் என்று எனக்கே தெரியாது......"

மகேந்திரனின் மனைவி தேநீர் கொண்டு வந்து கொடுத்தாள். அந்த நேரத்தில் சிவகுமாருக்கு அது மிகவும் தேவைப்பட்டது.

"தாங்ஸ்" சொன்னான்.

"நொட் அற் ஓல்!"



சிவகுமார் விஷயத்தைக் கூறினான். அவனது இக்கட்டான நிலையை அறிந்ததும் ஜெகநாதனும் கரிசனையோடு பேசினான்.

"செல்வியும் நீயும் ஒருத்தரை ஒருத்தர் மனசார விரும்பியிருக்கிறீங்கள் ...... அவளும் காசுக்காரிதானே? கொப்பரிட்டைப் போய் விஷயத்தைச் சொல்லு......அவருக்குத் தேவையான சீதனத்தைப் பேசி அவளையே செய்து வைக்கட்டும்."

"அது விசர்க் கதை ...... மச்சான் ...... ஒருத்தியைக் காதலிச்சுப் போட்டு பிறகு போய் காசு தந்தால்தான் கலியாணம் முடிப்பன் என்று நிக்கிறது எவ்வளவு கேவலம்?"

"நீதான் அப்பிடி நினைக்கிறாய்! செல்வியே இதை அறிஞ்சால் கட்டாயம் உதவுவாள்......உங்கடை தேவைக்காகத் தானே காசு கேட்கப் போறியள்? காசில்லாமல் கொக்காவைக் கட்டிக் கொண்டு போக இந்தக் காலத்திலை ஆர் வரப் போறாங்கள்?"

"இப்ப பேசியிருக்கிறது மாற்றுச் சம்பந்தம் ... அதைச் செய்யிறதாலை அக்காவின்ரை பிரச்சினையும் தீருது எண்டு அப்பா எழுதியிருக்கிறார் ...... அதுதான் நானும் யோசிக்கிறன்......"

"நீ இப்ப செல்வியையே கட்டப் போறாய்என்று வைச்சுக் கொள்ளுவம்—கொக்காவின்ரை அலுவலைக் கவனியாமல் விட்டிடுவியோ?"

"ஆர் சொன்னது? எப்பிடியும் அக்காவுக்கு ஒரு மாப்பிளை தேடிக் கட்டி வைச்சிட்டுத்தான் என்ரை கலியாணத்தைப் பற்றி யோசிக்கிறது என்று இருந்தனான்......அதுக்குள்ளை அப்பா தான் அந்தரப்படுறார்!"

RangaRakes tamilnavarasam.com

''நீ உழைச்சு சம்பந்தம் பேசி வைக்கிறதுக்கிடையிலை கொக்கா கிழவியாய்ப் போயிடுவாள் என்று நினைச்சிருப்பார்'' என வேடிக்கையாகக் கூறினான் மகேந்திரன். அதில் சற்று நியாயமும் கலந்திருப்பதைச் சிவகுமாரன் உணர முடிந்தது.

''அப்ப என்னை என்னதான் செய்யச் சொல்லுறாய்?'' எனச் சினத்தோடு கேட்டான் சிவகுமார்.

''ஆத்திரப்படாதை!......ஒரு 'ரேக் இற் ஈஸி' பொலிசி இருக்க வேணும் மச்சான்......எல்லாம் நன்மைக்கே என்று நினை......பிரச்சினைகளைப் பெரிசு படுத்தாதை......கொஞ்சம் ஆறுதலாய் யோசிச்சு ஒரு முடிவு எடுக்கலாம். அது சரி இப்ப உன்ரை அகிலா என்ன செய்கிறாள்?''

சிவகுமாருக்கு முகம் ஓடிச் சிவந்தது—அகிலாவை 'உனது' என அவன் குறிப்பிட்டுக் கதைத்தது இன்னும் தங்களைக் கரவாகத் தான் கருதுகிறானோ என்று சந்தேகத்தை ஏற்படுத்தியது. அவனது மாறாத மனநிலையை எண்ணி மெல்லச் சிரித்தவாறே சொன்னான்.

''உனக்கு இன்னும் இந்த நக்கல் கதையளைவிட விருப்பமில்லை?''

''அதுக்கில்லை மச்சான்......ஒரு முக்கியமான விஷயம் இதுக்காக நானே வந்து உன்னைச் சந்திக்க வேணுமெண்டு இருந்தனான்.''

''என்ன?''

''ராஜேசனுக்குக் கலியாணம் முற்றாகியிட்டுது!''

சிவகுமாருக்கு இந்த அதிர்ச்சியிலிருந்து மீளமுடியவில்லை;

''உண்மையைத் தான் சொல்லுறியா?''



''ராஜேசன் தான் இதைச் சொன்னான் ...... யாழ்ப்பாணத்திலை நல்ல சீதனத்தோடை முடிக்கப் போறான்...''

''அப்ப அகிலா?''

''அதை என்னட்டைக் கேட்டு நான் என்ன செய்யிறது? ...... அதுக்காகத்தான் உன்னைக் காணவரவேணுமெண்டு நினைச்சனான். அகிலா பாவம் தான்......நானும் அவனுக்கு எவ்வளவோ சொல்லிப் பாத்தன்.........கேட்கிறானில்லை......''

சிவகுமாருக்கு அதுக்குமேல் அவ்விடத்தில் இருப்புக் கொள்ள முடியவில்லை. உடனடியாகப் போய் அகிலாவைக் காண வேண்டும் போன்ற துடிப்பு. அகிலா சில நாட்களாகச் சோகமே உருவாக இருப்பதற்குக் காரணம் இது தானா? அது புரியாது அவளைத் தானும் புறக்கணித்து நடந்ததை நினைக்கக் கவலை பொங்கி வந்தது. மகேந்திரனிடம் விடை பெற்றுக் கொண்டு வெளியேறினான்.

எங்கும் இருள் சூழ்ந்திருக்கிறது. வானத்தில் நட்சத்திரங்கள் பூத்துவிட்டன. ஓட்டை விழுந்த மேகம், பொய்யான மினுக்கங்கள். வானத்திலிருந்து ஒரு நட்சத்திரத்தின் வீழ்ச்சி. நெஞ்சை அடைத்துக் கொள்கிற கவலை.

RangaRakes tamilnavarasam.com

# அத்தியாயம் - 26

இரவு, நேரம்கடந்த பின்னர் தான் சிவகுமார் அறைக்கு வந்தான், அவன் எப்பொழுது வருவான் என்று பதட்டத்தோடு பார்த்துக் கொண்டு இருந்தாள் அகிலாவின் தாய். அவனைக் கண்டதுமே வாசலுக்கு ஓடி வந்தாள்.

''தம்பி......அகிலாவுக்கு ஏதோ சுகமில்லை ...... ஒருக்கால் வந்து பாருங்கோ......''

அகிலாவுக்குச் சுகமில்லை என்றதுமே மனது 'திடுக்' குற்றது.

''என்ன சுகமில்லை?''

மகேந்திரன் மூலம் ராஜேசன் வேறு கல்யாணம் செய்யப் போகிற செய்தியை அறிந்து கொண்டதுமே அவனது மனதைத் தாங்க முடியாத வேதனை ஆட்கொண்டது. இப்படியொரு செய்தியோடு எப்படி அகிலாவைக் காண்பது என்று புரியாத குழப்பத்தோடு சென்று கடற்கரையில் நீண்ட நேரம் அமர்ந்திருந்தான். அப்பொழுதெல்லாம் அகிலாவின் நினைவுதான் மனதை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தது. இப்பொழுது வந்ததும் 'அகிலாவிற்குச் சுகமில்லை' என்றதும் உடலியக்கங்களெல்லாமே நின்று விட்டதைப் போலுணர்ந்தான்—

''பிள்ளை இண்டைக்கு நல்லாய் மழையில நனைஞ்சிட்டாள் போல......வந்து தலையிடிக்குது என்று படுத்தாள்... இப்ப பாத்தால்......''



அம்மாவைத் தொடர்ந்து சிவகுமார் வீட்டுக்குள் நுழைந்தான். அகிலா கட்டிலிற் படுத்திருந்தாள். ஆழ்ந்த உறக்கத்திலிருப்பவளைப்போல மூச்சு வாங்கினாள். முகம் வீக்கமடைந்திருந்தது.

அம்மா அகிலாவைத் தட்டி எழுப்புவதற்கு முயற்சித்தாள், அவள் விழிக்காமல் இருக்கவே ''ஐயோ...என்டை பிள்ளைக்கு என்ன வந்ததோ......'' எனப் புலம்பத் தொடங்கினாள். சிவகுமாருக்கு அகிலா கிடக்கும் கோலத்தையும் செய்வதறியாது நிற்கும் தாயையும் பார்க்கப் பெரிய பரிதாபமாக இருந்தது.

''காய்ச்சல் காயுதோ?'' எனக் கேட்டவாறே அகிலாவின் கழுத்திலும் கன்னத்திலும் கையை வைத்துப் பார்த்தான் சிவகுமார்; ''உடல் குளிர்ந்து போயிருக்குது''...... என்று கூறினான்.

''டொக்டரிட்டைக் கொண்டு போவமோ?'' என்று அம்மாவைப் பார்த்துக் கேட்டான்.

அகிலா தூக்கத்திலிருந்து விழித்தாள். சிவகுமார் வந்து நிற்பது ஒரு கனவு போலத் தெரிந்தது. பெரிய முயற்சியின் பின்னர் கண்களை மெல்ல மெல்ல விழித்தாள். எல்லாம் ஒரே சுழற்சியாகவும் அந்தரத்திலே பறப்பது போலவும் இருந்தது. சிவகுமாரோடு ஏதாவது பேச வேண்டும் என்று மாத்திரம் மனது துடித்தது.

''அகிலா! என்ன செய்யுது? எழும்புங்கோ ...... டொக்டரிட்டைப் போகலாம்!'' என்றான் சிவகுமார்.

அவள், ''ஒன்றும் இல்லை'' என்பதுபோலத் தலையை அசைத்தாள். எழுந்திருப்பதற்கு முயன்றாள். அம்மா கையைக் கொடுத்து அணைத்து உதவி செய்தாள்.

RangaRakes tamilnavarasam.com

கண்களை விழித்துச் சிவகுமாரை விசித்திரமாகப் பார்த்தாள்.

''அகிலா, என்ன செய்யுது என்று சொல்லுங்கோ...... டொக்டரைக் கூட்டி வரவா?'' எனத் திரும்பவும் கேட்டான் சிவகுமார்.

அகிலா பிடிவாதமாக மறுத்தாள்.

''வேண்டாம் சிவா!......எனக்கு......ஒன்றுமில்லை...... மழையிலை நனைஞ்சிட்டன்......அதுதான் தலையிடி......தலைப் பாரமாய் இருக்கு......டிஸ்பிறின் போட்டிருக்கிறன்......எல்லாம் சரியாயிடும்......நீங்க போங்க'' என ஒரு பொய்யைக் கூறினாள்.

சிவகுமார் எவ்வளவோ வற்புறுத்தியும் வைத்தியரிடம் போவதற்கோ அல்லது வைத்தியரை அழைத்து வரவோ அவள் சம்மதிக்கவில்லை.

சிவகுமார் நீண்ட நேரம் அம்மாவோடு கதைத்துக் கொண்டிருந்தான். அகிலாவும் இருந்தாள். கதிரையிலிருந்தவாறே அவள் உறங்குவதைக் கவனித்த சிவகுமார் ...... ''நீங்கள் போய்ப்படுங்கோ அகிலா......'' எனக் கூறினான். தான் போகும்வரை அவளும் படுக்க மாட்டாள் என்ற எண்ணத்தில் பின்னர் விடை பெற்றுச் சென்றான்.

இரவு வெகுநேரமாகியும் சிவகுமாருக்கு உறக்கம் பிடிக்கவில்லை. அகிலா சுகயீனமாகக் கிடந்த கோலம் சுற்றிச் சுற்றிக் கண்ணுக்குள் வந்து கொண்டிருந்தது...... முகமெல்லாம் அதைத்து வீக்கமெடுத்ததுபோல... பார்க்க மிகவும் பரிதாபமாக......அப்படி என்ன சுகயீனம்? ...... நிறைய அழுதிருப்பாளோ?

ராஜேசன் இன்னொருத்தியை முடிக்கப் போகிற விசயம் அவளுக்குத் தெரிந்திருக்குமோ தெரியாது என்ற சமசி



யத்தில்தான் முதலில் வந்தான். இதை எப்படி அவளிடம் தெரியப்படுத்துவது என்ற பெரிய சங்கடத்துடனேயே வந்தான். ஆனால், ஏற்கனவே அவளுக்கு விஷயம் தெரிய வந்திருக்கிறது. அந்த அதிர்ச்சி தான் அவளை உருக்குலைத்திருக்கிறது......

அடுத்த நாள் விடியற்காலை சிவகுமார் வந்தான்.

''இப்ப எப்படி அகிலா?''

''எனக்கு ஒன்றுமில்லை......!''

''நீங்கள் சொல்லத் தேவையில்லை...... முகத்தைப் பார்க்கத் தெரியுது......சுகமில்லையெண்டு!''

அவள் பேசாமலிருந்தாள்.

''காசுக்காகப் பார்த்துத்தானே டொக்டரிட்டை வர மாட்டனெண்டனீங்கள்? ஆருக்காகத் தான் இப்படி மிச்சம் பிடிக்கிறீங்களோ தெரியாது'' எனச் சற்றுச் சினத்துடனேயே கேட்டான்.

அகிலா மெதுவாகச் சிரித்து அவனைச் சமாதானப்படுத்தினாள்.

''அதில்லை சிவா, நான் டொக்டரிட்டை வராததுக்கு வேற காரணம்......''

''என்ன?''

''அப்புறமாகச் சொல்லுறன்.''

சிவகுமாரும் அன்று அடிக்கடி வந்து அகிலாவின் சுகத்தை விசாரித்துக் கொண்டிருந்தான். அம்மா 'மாக்கற்றுக்குப்' போய்விட்ட பின்னர் அகிலா சொன்னாள்.

RangaRakes tamilnavarasam.com

''சிவா, நான் ஏன் டொக்டரிட்டை வரயில்லைத் தெரியுமா?''

''ஏன்?''

''சாகிறதுக்காக நித்திரைக் குளிசை போட்டிட்டு ஒருத்தி டொக்டரிட்டைப் போவாளா? பிடிபட்டிடுவன் என்ற பயம் தான்.

சிவகுமார் அதிர்ந்து போனான். எவ்வளவு சாதாரணமாகச் சொல்கிறாள்! பதட்டத்துடனும் பயத்துடனும் அவனது நடுங்கும் குரல் கேட்டது.

''என்ன வேலை செய்தீங்க அகிலா? டொக்டரை நான் சமாளிக்கிறன்......வாங்க போவம்......'' என அவசரப் படுத்தினான்.

''பயப்பிடாதையுங்கோ ...... எல்லாம் சத்தியெடுத்துத் தீர்த்திட்டன்......இப்ப நல்ல சுகம்.''

அவன் அதிசயப்பட்டான். தூக்க மாத்திரைபோட்டு, பிழைத்து உயிரோடு இருக்கிறாள் என்றால், எதையுமே நம்ப முடியவில்லையே'

''எந்தச் சக்தி என்னைத் தப்ப வைச்சது என்று எனக்குக் கூட அதிசயமாயிருக்கு சிவா......, இப்ப சொல்லட்டா? ......அந்தச் சக்தி நீங்கதான். என்ட வாழ்க்கைக்கா மனப்பூர்வமாகக் கவலைப்படுகிறவர் நீங்கள்தானே?......இந்த உலகத்தைவிட்டுப் போயிட வேணுமெண்டு அடிக்கடி சொல்லுவன்......இந்த உலகத்தில இன்னும் இருப்பதே உங்கள் ஒருவருக்காகத்தான்......உங்கட அன்புதான் என்னைச் சாகவிடாமற் தடுத்திருக்கு......''

''இப்படிச் செய்யத் தூண்டிற அளவுக்கு உங்களுக்கு என்ன கவலை அகிலா?......என்னட்டைச் சொல்லியிருக்கலாமே?''



''சொல்ல முடியாத அளவுக்குக் கவலையென்றால் வேறு என்ன செய்யிறது? சொன்னாலும் நீங்க தீர்த்து வைக்கவா போறீங்க?......நீங்களும் சேர்ந்து கவலைப்படுவீங்க.''

''அப்படி என்ன சொல்ல முடியாத கவலை? ராஜேசன் கைவிட்டிட்டான் என்று தானே? அந்த மடையன் தேவையில்லை ...... இன்னுமொருத்தனை நான் பார்த்துக் கட்டி வைக்கிறன்.''

அகிலா சற்று நேரம் மௌனமாயிருந்தாள். ஒரு பெருமூச்சு வெளிப்பட்டது. பின்னர் நிதானமாகச் சொன்னாள்:

''சிவா நான் ஏமாந்து போயிட்டன்......ராஜேசனை நம்பி என்ட வாழ்க்கையையே இழந்திட்டன்.''

சிவகுமாருக்குப் புரிந்தது போலவும் இருந்தது' அதை எப்படிக் கேட்பது என்றும் புரியாமல் அகிலாவைப் பார்த்தான்.

''நீங்க நினைக்கிறது சரி. ஒரு பெண் எதை இழக்கக் கூடாதோ அதை நான் இழந்திட்டன்.''

—ஒருவித குழப்பமுமில்லாமல் அவள் சொல்லிவிட்டாள்! அதனால் தான் பாதிக்கப்படாதவள்போல நிதானமாக இருந்தாள்.

''அது ஒரு விபத்துப்போல நடந்து முடிஞ்சிட்டுது...... என்ட கெட்ட காலம் அன்றைக்கு நான் ஏன் இடம் குடுத்தன் என்றதே அதிசயமாயிருக்குது ...சிவா, நான் கொஞ்ச நாளாய் கவலையோடு உங்களோடை கூடக் கதைக்காமல் இருந்ததுக்கும் காரணம் அதுதான்......இனி என்ன செய்யிறது......வாழ் நாள் முழுக்க இப்படியே இருக்க வேண்டியதுதான்.''

RangaRakes tamilnavarasam.com

சிவகுமாருக்கு நெஞ்சு குமுறியது.

''அகிலா நான்போய் அவனைக் கண்டு கதைக்கட்டா?''

''தேவையில்லை சிவா! நான் எவ்வளவோ அழுது குளறியும் இரங்காதவன் நீங்கள் கேட்டா சம்மதிக்கப் போருன்?......எனக்கு இனி அவன் தேவையில்லை.''

சிவகுமாருக்கு அவள் புரியாத புதிராகக் காட்சியளித்தாள். அகிலா அவனது மனதை ஆற்றுவது போலச் சொன்னுள்;

''சிவா! இதிலை கவலைப்பட ஒன்றுமில்லை......நான் ஒரு தற்ற தயவிலை வாழவேண்டிய அவசியமில்லை......நான் உத்தியோகம் செய்து சம்பாதிக்கிறவள்......என்ட வயிற்றுப் பாட்டைப் பார்த்துக் கொண்டு உங்களைப் போன்ற நல்ல நண்பர்களின்ரை துணையோட சீவிக்கலாம் தானே? பொம்பிளைப் பிள்ளைதானே என்று விட்டிடாமல் எத்தனையோ கஷ்டங்களுக்கு இடையிலும் என்னைப் படிப்பிச்சு விட்ட அப்பாவை இப்பதான் நன்றியோடு நினைச்சுக் கொள்ளுறன் சிவா! அந்தப் புண்ணியத்தாலைதான் இப்ப என்ட காலிலை நிற்க முடியுது!''

சிவகுமாரின் கண்கள் ஆச்சரியத்தால் விரிந்தன — அகிலா உங்களை என்னுல் அளக்கவே முடியாது!''

# அத்தியாயம் - 27

எதிர்பாராத விருந்தாளியைப் போல ஒரு பெரு மழை வந்தது. வெளித்திருந்த வானம் திடுதிப்பென்று இருண்டு கொண்டு வந்து பெருமழை கொட்டத் தொடங்கியது.

சிவகுமாருக்கு வீட்டிலிருந்து தந்தி வந்திருந்தது — அப்பா சுபநாள் குறிப்பிட்டு அறிவித்திருக்கிருர். பெண் பார்க்கப் போக வேண்டும்!

இடி இடித்தது.

இப்பொழுது என்ன செய்யலாம்? அப்பாவுக்கு அடங்கிய பிள்ளையைப்போல வீட்டிற்கு ஓடிச் சென்று அவர் காட்டுகிற பெண்ணின் கழுத்தில் முடிச்சுப் போட்டுவிட்டு வர வேண்டியதுதானு? நோ! முடிச்சுப் போடுகிறவரை அவருடைய பிள்ளையாக இருக்கலாம். பிறகு?

செல்வி அவனைப் பரிதாபமாகப் பார்ப்பதுபோலப் பிரமை ஏற்பட்டது— ''நீங்கள் என்னை மறந்து போகப் போகிறீர்களா?''

—இல்லை செல்வி உன்னை எப்படி மறக்க முடியும்?

விஷயத்தை ஆரம்பத்திலேயே அப்பாவுக்குத் தெரியப் படுத்தாமல் மூடி மூடி வைத்திருந்தது எவ்வளவு தவருகப் போய்விட்டது! இப்பொழுது போய் ஒருத்தியை விரும்புகிறேன் என்ருல் அப்பாவே குழம்பிப் போகமாட்டாரா?

பிரச்சினைக்குத் தீர்வு காண அகிலாவிடம் தான் ஆலோசனைக்குப் போக வேண்டும், ஆனுல் அவள் கூட இப்

RangaRakes tamilnavarasam.com

பொழுது பட்டு நொந்து போயிருக்கிறாள். முதலில் அவளது பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும்.

அகிலா என்றதும் அவள் எத்தனையோ வகையில் ஆறுதலாகவும் உதவியாகவும் இருந்த சந்தர்ப்பங்கள் நினைவில் வந்தன. பாவம் அகிலா—அவளுக்கு இந்தக் கதியா? இனி அவள் வாழ்க்கைக்கு வழிதான் என்ன? வழியே தெரியாமல் தானே அவள் இறந்து போய்விட நினைத்திருக்கிறாள்.

ராஜேசனைப் போய் கொலை செய்யலாம் போலத் தோன்றியது. அந்த அரக்கனிடம் போய் இந்தப் பேதை எப்படிக் கெஞ்சியிருப்பாளோ என இரக்கத்துடன் எண்ணிப் பார்த்தான்......

''......ராஜேஸ் ...... நான் கேள்விப்பட்டது உண்மையா?......உங்களுக்குக் கலியாணமாமே?......'' அவன் ஒரு புதுமணப் பெண்ணைப்போல ஒரு பதிலும் சொல்லாது தலையைக் குனிந்து கொண்டிருந்திருப்பானோ, முட்டாள்.

''உண்மைதானா......? சொல்லுங்க...... ப்ளீஸ்......?''

ஒரு தலையசைவில் அவளது தலை வெடித்துச் சிதறுகிற பதிலைச் சொல்லியிருப்பான். அவளுக்கு வாழ்வு அளிப்பதாகக் கூறி அவளது வாழ்க்கையையே அழித்திருக்கிறான்......

அகிலா, ஏன்தானோ அவனிடம் தோற்றுப் போனாள்? அவளது புத்தி சாதுர்யமெல்லாம் எங்கே ஒளிந்து கொண்டது? அல்லது அவனது ஆசை வார்த்தைகளில் மயங்கிப் போயிருப்பாளோ? பெண்களுக்கேயுரிய இயற்கையான பெலவீனம் இடம் கொடுத்து விட்டதா? தங்கள் அழகைப் புகழ்ந்து பேசுகிற ஆண்களின் வார்த்தைகளில் மயங்கி மோசம் போகிற எத்தனையோ பெண்களைக் கண்டிருக்-



கிறான்......அந்த வரிசையில் இவளுமா? அல்லது......ஆண்கள் செக்ஸை எதிர்பார்த்து அன்பைப் பொழிகிறார்கள்......பெண்கள் அன்பை எதிர்பார்த்து செக்ஸைக் கொடுக்கிறார்களாம்...... அந்தக் கதையா?

'அவரோட இவ்வளவு பழகியாச்சு......சபலபுத்தி உள்ளவரெண்டால்போலவிடுறதா?......திருத்தியிடலாமெண்ட நம்பிக்கையிருக்கு......அதுக்காகத்தான் அவர் விரும்புகிற மாதிரியெல்லாம் நடக்கிறன்......இல்லாட்டி அவர் மற்ற கேர்ள்ஸ்சோடை திரியிறதைப் பார்த்துக் கொண்டிருக்கேலுமா?' என அகிலா முன்பொருமுறை சொல்லியிருக்கிறாள்.

அந்த எண்ணத்திற்தான் உன்னை இழந்து விட்டாயா? ப்வ(ர்) கேர்ள்......'என்னில இவ்வளவு அன்பும் விருப்பமும் உள்ளவரோடை ......வாழுறதில பிழை இல்லைத் தானே? எனக்கு இப்பிடியொரு அதிஷ்டம் கிடைச்சா...... பெத்தவங்களுக்கும் பாரமில்லாமற் போகலாம் தானே? ......' என ஆரம்பத்தில் நியாயம் பேசினாய்......இப்பொழுது பார்த்தாயா அந்த நாகத்தை?

சிவகுமார் சற்று நேரம்தான் கட்டிலிற் படுத்திருந்தான். எல்லாமே ஒரு கனவுபோல இந்த உலகமே வெறும் போலியாக இருந்தது. முகட்டிலே குடியிருக்கும் குருவி கூட்டிற்குள்ளிருந்து எட்டி இவனைப் பார்த்தது......கவலையோடு எல்லாப் பக்கமும் பார்த்தது. பின்னர் மிகவும் மெல்லிய குரலில் அழத் தொடங்கியது.

......ஆண்குருவி எங்கேயோ ஓடியிருக்குமோ? அவன் நெஞ்சு நிரம்பிய கவலையோடு தலையணையில் முகத்தைப் புதைத்தான். குருவியின் அழுகை உள்ளத்தை வருத்தியது. அதற்கு எப்படி ஆறுதல் சொல்லலாம் என மனது துடித்தது.

RangaRakes
tamilnavarasam.com

இந்த உலகத்திலே இப்படி வாழ்கிற சீவன்களும் இருக்கின்றனவா? எதற்காகக் கணவன் மனைவி குடும்பம் என்ற உறவுகள்? நம்பிக்கை என்ற ஒரு சத்தியத்தை வைத்துக் கொண்டே மகிழ்ச்சியாக வாழ வேண்டுமென்றால் அந்த நம்பிக்கைகள் இலகுவாக ஏமாற்றப்படுகின்றன. பிறகு மனநிறைவான வாழ்க்கைக்கு என்ன உத்தரவாதம்?

அகிலாவின் நினைவும் அவளது தோற்றமும் விசுபரூபமெடுத்துக் கொண்டு முன்னே நின்றன. தற்செயலாக அவள் செத்துப் போயிருந்தால்......என்ற எண்ணம் தோன்றியது — 'வாழ்ந்து என்ன பயன்? செத்தே போய் விடலாம்?' என அவள் விரக்தியாகச் சொல்லும் போதெல்லாம் துடித்துப் போயிருக்கிறான். அப்படிப் பேசுவதையே தாங்கிக் கொள்ள முடியாதவன் உண்மையிலேயே நடந்து விட்டால் எப்படித் தாங்கிக் கொள்வேன்? அதற்குப் பிறகு எனது பொறுப்புக்கள், பிரச்சினைகள், சுமைகள்... தம்பி, அப்பா, அம்மா, அக்கா......செல்வி?

மேற்கொண்டு அவனால் கட்டிலிற் படுத்திருக்க முடியவில்லை. சிந்தனைகள் தடைப்பட்டன. தன்னைப் பொறுத்தவரை அகிலாவின் ஆக்கிரமிப்பை உணர முடிந்தது. எங்கும் அகிலா, எதிலும் அகிலா. முதலில் அகிலாவின் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண வேண்டும். கவலைகள் எல்லாவற்றிற்கும் பெரிய கவலைகளாக விசுவரூபம் எடுத்துக் கொண்டு நிற்கிற அவளது கவலைகளுக்கு ஒரு தீர்வு காண வேண்டும். அதற்குப் பிறகுதான் இந்த மனசும் சுகமடையும்.

நேரத்தைப் பார்த்துக் கொண்டு தெருவில் இறங்கி நடந்தான். சில்லிடுகிற குளிர். காலி வீதியில் ஏறி நடந்தான் — பட்டாளக்காரரைப்போல அணிவகுத்து நிற்கிற வீதி விளக்குகள்......அவனை வரவேற்று மரியாதை செய்கின்றன! புதிய பலம் வந்தவனைப்போல நெஞ்சை நிமிர்த்



திக் கொண்டு நடந்தான்......'இங்கு உண்மைகள் தூங்கவும், ஊமைகள் ஏங்கவும் நானா பார்த்திருப்பேன்?'

ராஜேசன் ஒரு சாதுவைப் போல அறையில் பதுங்கியிருந்தான் — இந்தப் பூனையும் பால் குடிக்குமா? சிவகுமார் நைஸாக விஷயத்திற்கு வந்தான் — அவன் மிருகத்தனமாகச் சீறினான்.

''நீயும்தான் அவளை வைச்சிருந்தனி?......மறுகா என்னட்ட வாறாய்? ... .. அவ்வளவு கரிசனையென்றால் நீயே அவளை முடிக்க வேண்டியதுதானே?''

இவன் இழுத்துப்போட்டு உதைத்தான். அவனும் உதைத்தான் — கட்டிற் சட்டத்தை எடுத்து விளாசினான், நல்ல அடி! எழுந்து என்ன செய்வது என்று புரியவில்லை. பிறகு அவனைப் பார்த்து மன்றாட்டமாகக் கதைத்தான்.

''ராஜேஸ்......அகிலா பாவம்! ...... அவளைக் கைவிட உனக்கு எப்பிடி மனம் வந்திது? ...... பெண் பாவம் சும்மா விடாது ...... தயவு செய்து அவளைக் கைவிட்டிடாதை.''

''பெண் பாவமும் ...... மண்ணாங்கட்டியும் ...... மண் தின்னுறதை மனிசன் தின்னுறான் ...... நீயேன் அவளுக்காக இவ்வளவு கரிசனைப்படுகிறாய்?'' அவனது ஏளனம்.

சற்று நேரம் பிரமை பிடித்தவனைப்போல நின்றான் சிவகுமார். பின்னர், ''ராஜேசன்......நான் விடமாட்டன் ......கடைசிவரையும் விடமாட்டன்......ஒரு முடிவு தெரியாமல் இஞ்சையிருந்து போகமாட்டன்......'' என ஆவேசம் வந்தவனைப் போலக் கர்ச்சித்தான்.

அதைக் கண்டு ராஜேசனுக்கு மிரட்சி ஏற்பட்டது. எப்படியாவது அவனை அவ்விடத்தைவிட்டு அகற்றினாலே பெரிய நிம்மதி எனத் தோன்றியது.

RangaRakes tamilnavarasam.com

''சிவகுமார்......சும்மா......விளையாடாமல் போ!...... நான் வேணுமெண்டா இப்படிச் செய்தனுன்?''

''எனக்கு எந்தச் சமாதானமும் வேண்டாம்......நீ அகிலாவை முடிக்க வேணும்!''

''தயவு செய்து எனக்குத் தொல்லை தராமல் போ...... என்ர விருப்பத்துக்கு முடிக்க பேரன்ஸ் விடமாட்டாது கள்......''

சிவகுமார் சீறினன், ''பேரன்ஸைக் கேட்டா எல்லாம் செய்தனீ?......மடையா அவளைக் கலியாணம் செய்யிறதாய் சத்தியம் செய்து குடுத்திருக்கிருய்......கடைசிவரை கைவிடமாட்டன் எண்டு நீ சொன்னதை நம்பித் தானே அவள் மோசம் போனுள்......?''

''பெரிய சுத்தம் பேசாதை!......அவளுடைய வீட்டிலேயே அடுகிடை படுகிடையாய்க் கிடந்தது நீ தான்...... மறுகா என்ர தலையிலை கொண்டு வந்து கட்டப் பார்க்காதை......''

ஓர் அற்ப புழுவைப் பார்ப்பதைப்போல அவனைப் பார்த்தான் சிவகுமார்......

'தூ!'

வெளியேறி நடந்தான்—கடற்கரையை நோக்கிச் சென்றன கால்கள். கடற்கரைப் பாதையில் புகையிரதமொன்று விரைந்து ஓடுகிறது. பாதையோரமாகக் கடலின் கரையில் அமைந்திருக்கிற குடிசைத் தொடர்கள்...... அவற்றிலே அமைதியாகச் சீவிக்கின்ற ஏழை மக்கள்! புகையிரதங்களின் கோரமான இரைச்சலும்......கடலின் 'வருவேன், வருவேன்!' எனப் பயமுறுத்துகிற ஓசையும் அவர்களை எந்தவிதத்திலும் பாதிக்கவில்லை!



கடல் அலைகள் ஓடிவந்து மண்ணைத் தொட்டுத் தொட்டுப் பார்த்துச் செல்கின்றன. ஒரு நாளைக்கு ஆவேசம் கொண்டு கொந்தளித்து வந்து இந்த மண்ணையும் குடிசைகளையும் அழித்துவிட்டுப் போகவும் தயங்காது! தன்னோடு ஒட்டி உறவாடித் தன்னை நம்பிச் சீவிக்கிற ஏழைகள் என்ற இரக்கம் அதற்கு இருக்காதோ?

சிவகுமார் ஒரு கல்லில் அமர்ந்து கொண்டான்.

'அவளை நீயும்தான் வைச்சிருந்தனீ?......பிறகேன் என்னட்டை வாருய்?'—கடலின் அட்டகாசமான சிரிப்பு! அவனுக்கு இருப்புக் கொள்ளவில்லை......எழுந்து அறையை நோக்கி நடந்தான்.

நிலவு எறித்துக் கொண்டிருக்கிறது—ஒரு பாவமும் அறியாமல்! வாசலுக்கு வந்து கதவைத் திறந்தான்.

நிழல்கள்! அவனைச் சுற்றி, அவனை மையமாகக் கொண்டு வெவ்வேறு கோணங்களில் வெவ்வேறு பருமன்களில் நிழல்கள் தென்பட்டன. அவன் மெல்ல நடந்தான். நிழல்களும் அசைவு பெற்று வெவ்வேறு கோணங்களிலும் பருமனிலும் மாற்றமெடுத்தன.

வீதி விளக்கின் வெளிச்சத்திலிருந்து உருவெடுத்து ஒரு நிழல். வீட்டிலுள்ள வெவ்வேறு விளக்குகளிலிருந்து தோற்றமெடுத்தன சில நிழல்கள். முன் வீட்டு வெளிச்சத்திலிருந்து இன்னும் சில. தூர இருக்கின்ற நிலவின் பார்வையிலும் ஒரு நிழல். அவைகள் எல்லாமே அவனது தோற்றத்தில் தாங்கள் உருக் கொடுக்கிற நிழல்களைத் தான் நிஜங்கள் என்று கருதுகின்றனவோ......மனிதர்களைப் போல! தாங்கள் பார்க்கின்ற கோணங்களில்தான் தவறு இருக்கிறது என்பதை யாருமே உணரவில்லை. சரியான நிலைக்கு வந்து உண்மையை அறிந்து கொள்ள—நிஜத்தை உணர்ந்து கொள்ள யாருக்கும் விருப்பமும் இல்லை!

RangaRakes tamilnavarasam.com

'அகிலாவை நீயும்தான் வைச்சிருந்தனீ?......அவ்வளவு கரிசனையெண்டால் நீயே அவளை முடிக்க வேண்டியது தானே?'

சரிதான், அறிந்தோ அறியாமலோ அவளது வாழ்க்கை பாதிக்கப்படுவதற்குத்தானும் காரணமாயிருந்திருக்கிறேன் என்ற உண்மை புலப்பட்டது. அந்தப் பேதை செத்துப் போகத் துணியும் அளவிற்குத் தள்ளப்பட்டதற்குத் தனது பங்கும் இருக்கிறது. அதை அவள் மறுத்தாலும் உண்மை அதுதான். மற்றவர்கள் என்ன கதைகளைச் சோடித்தாலும் எங்கள் வரையில் தூய்மையாக இருந்தால் சரி என நினைத்துப் பழகியது எவ்வளவு தவருகப் போய் விட்டது. இப்பொழுது ராஜேசனும் மற்றவர்களில் ஒருவனுக நின்று அவளைக் கைவிட்டு விட்டான். இனி? அவளுக்கு வாழ்க்கை அளிக்க வேண்டியவன் நீ தான்—என அவனது மனச்சாட்சி பேசியது. சிவகுமார் அதற்கு அடங்கினான். தனது மற்றைய சகல பிரச்சினைகளோடு ஒப்பிட்டுப் பார்த்தாலும் அகிலாவுக்கு வாழ்வு கொடுக்க வேண்டியது தவிர்க்க முடியாதது என முடிவெடுத்தான்.

# அத்தியாயம் - 28

வழக்கமாகவே அதிகம் பேசாத சுபாவமுடையவன் சிவகுமார். இப்பொழுது அதுவும் இல்லை! நன்ருகப் பழக்கமானவர்களுடனேயே கதைக்க விருப்பமில்லாதிருக்கிறது. ஓரிரு வார்த்தைகளில் சம்பாஷணையை வெட்டிக் கொண்டான். எல்லோரையும் தவிர்த்துத் தனிமையாக இருந்தால் போதும் எனத் தோன்றுகிறது. இந்த உலகம், மனிதர்கள், மரம், செடி, கொடி ஒன்றும் வேண்டாம், எல்லோரையும் உதறிவிட்டுத் துறவியைப்போல இருக்க வேண்டும். அப்படியாருற்தான் இப்பொழுது விட்டகுறை தொட்டகுறையாக இருக்கிற உறவுகளின் தொல்லைகளும் இல்லாமற் போகும்!

ஓ! அதுகூட எவ்வளவு சுயநலமான எண்ணம்? தொல்லைகள் இல்லாமல் சுகமாக இருக்க விரும்புகிற மனம்! மற்றவர்களுக்காக இரங்குவதிலும் அவர்களுக்காக வாழ்க்கையை அர்ப்பணிப்பதிலும் உள்ள நிம்மதி வேறு எங்கே கிடைக்கும்? எதையும் எங்களுக்காக என எண்ணும்பொழுது தான் பிரச்சினைகளே உருவாகின்றன.

ஊருக்குச் சென்றிருந்த ஜெகநாதன் வந்ததும் படுக்கையிலிருந்த சிவகுமாரைக் கவனித்தான். வந்ததுமே பஞ்சலிங்கத்தார் மூலம் செய்தி கிடைத்து விட்டது.

''என்ரை புத்திமதியைக் கேட்டு நடந்திருந்தால் இப்படி முடிஞ்சிருக்குமே?......அநியாயமாய்ப் போய் மாட்டுப் பட்டிட்டாய்......இப்பிடி நடக்குமென்று எனக்கு அப்பவே தெரியும்.......'' எனத் தனது தீர்க்கதரிசன ஞானத்தைக் குறிப்பிட்டுக் கதைத்தான்.

RangaRakes tamilnavarasam.com

"சிவா! நல்லாய் யோசிச்சுத்தான் இந்த முடிவை எடுத்தனியோ?......ராஜேசுவோடை அவள் ஆடித் திரிஞ்ச ஆட்டங்கள் தெரியும்தானே?"

சிவகுமார் ஏளனமாகச் சிரித்தான்.

"உங்களைப்போல ஆம்பிளையள் செய்யிற பாவங்களுக்குப் பிராயச்சித்தமாயாவது இது இருக்கட்டும்." என அவனது வாயை அடக்குவதுபோலக் கூறினான். பின்னர் அங்கிருக்கப் பிடிக்காமல், எழுந்து அகிலாவைக் காண்பதற்குச் சென்றான்.

மலர்ச்சியோடு வரவேற்றாள் அகிலா. சில நாட்களுக்குள் அவளிடம் பெரிய மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. பட்டுத் தெளிந்த புன்னகை. அமைதியான பார்வை.

அவன் கதிரையில் அமர்ந்தபொழுது நேற்றைய அடியில் பட்ட கைமூட்டு வலியெடுத்தது. கட்டிற் சட்டம் நினைவில் வந்தது. 'அம்மா' என முனகியவாறு நிமிர்த்திருந்தான் சிவகுமார்.

அகிலா காரணம் கேட்டாள். பாத்றூமில் சறுக்கி விழுந்ததாகப் பொய் கூறினான்.

"சிவா! சறுக்கி விழுந்தீர்களா?......ஆராவது பாத்தானுகளா?"

"இல்லையே ஏன்?" புரியாமல் விழித்தான் சிவகுமார்.

"சந்தர்ப்பம் ஒரு சகதிநிலம்......அதில் சறுக்கி விழாதவர்கள் மிகவும் சொற்பம்.....ஆனால், நாலுபேர றிய விழுந்தவன் மாத்திரம் நகைக்கப்படுகிறான் என யாரோ சொல்லியது ஞாபகம் வந்தது."



இவளால் இப்படியெல்லாம் பேசமுடிகிறதே என ஆச்சரியமேற்பட்டது. தனது மனநிலையை மறப்பதற்குத்தான் இப்படி நடந்து கொள்ளுகிறாளோ தெரியவில்லை. அல்லது தன்னையே தேற்றிக் கொள்கிறாளா?

அவன் மௌனமாகச் சிந்தனையிலாழ்ந்திருந்தான். அகிலாவே வலிந்து கதைத்தாள்.

"என்ன சிவா, கவலைப்பட வேண்டியவள் நானே........ பேசாமலிருக்கிறன்......நீங்க ஏன் உம்முணுமூஞ்சி கொட்டிக் கொண்டிருக்கிறீங்க?"

சிவகுமார் ஒரு விசித்திரமான சிரிப்பை வெளிப்படுத்தினான். கவலைகள் எல்லாவற்றையும் அனுபவித்து மனம் முதிர்ச்சி அடைந்த நிலை; இன்னும் பல பிரச்சினைகளை எதிர் கொள்வதற்கு மனதை வைரமாக்கிய நிலை. மனிதாபிமானத்திற்காக தன்னை அர்ப்பணிக்க முடிவு செய்த ஞானம்.

அப்பா அனுப்பியிருந்த தந்தியை அவளிடம் கொடுத்தான் — சுபநாள்! அதைப் பார்த்துவிட்டு அகிலாவும் ஆழ்ந்த சிந்தனை வசப்பட்டவள் போல அமைதியானாள். பின்னர் கேட்டாள்.

"சிவா!......நீங்கள் ஏன் இப்பிடிக் கனக்க யோசிச்சு மண்டையைப் போட்டு உடைக்கிறீங்க?......அப்பா பேசின கலியாணம் பிடிக்காட்டில்......ஒன்றுக்கும் யோசியாமல் போய் செல்வியைக் கூட்டிக் கொண்டு வாங்க......அக்காவுக்கும் கடவுள் படி அளக்காமலா விடுவார்?........அந்தக் கவலையையும் பெரிசுபடுத்தாமல் விடுங்க......

"........என்னைப் பற்றியும் கவலைப்பட வேணும்........ நாங்க நினைக்கிற வாழ்க்கை கிடைக்கா விட்டால்......அமைகிற வாழ்க்கையை ஏற்றுக் கொண்டு சந்தோஷமாக

RangaRakes tamilnavarasam.com

வாழப் பழக வேணுமெண்டு நீங்கதானே அடிக்கடி சொல்லுவீங்க......எனக்கு என்ன குறை? சாப்பாட்டுக்கு வழியில்லாமலா இருக்கிறன்?......

''சிவா!......வாழ்க்கை என்று ஒன்று......இருந்தாலே போதும்......சந்தோஷம் வேண்டாம்......இந்த உலகத்திலே எத்தனையோ பொம்பிளையள் சீதனப் பிரச்சினையாலேயே கலியாணம் இல்லாமல்......அரைகுறை வாழ்க்கை வாழுகினம்......அப்பிடி நானும் இருந்திட்டுப் போறன்......''

''அதுக்கு நான்......ஒருகாலும் சம்மதிக்கமாட்டன் அகிலா......நான் உங்களைக் கலியாணம் செய்ய முடிவு செய்திருக்கிறன்!''

அகிலாவுக்குத் தன் காதுகளையே நம்பமுடியவில்லை. என்ன இது? இப்படியும் நடக்கலாமா? சிவா விளையாட்டுக்காக அப்பிடிச் சொல்லுகிறானா?

அவனது நிதானம் தவறாத பார்வையை ஏறிட்டு நோக்கினாள். ஒன்றையும் அளக்க முடியவில்லை.

''சிவா... ..உண்மையாத்தான் சொல்லுறீங்களா?'' எனப் பதட்டத்தோடு கேட்டாள். அவன் பேசாமலிருந்தான். மீண்டும் ஒரு தவறு நடப்பதற்கு தான் உடந்தையாவது போன்ற பய உணர்வு அவளுள் ஏற்பட்டது. நடுக்கத்தோடு கூறினாள்—

''சிவா......வேலை இல்லாதவனுகள்......ஆயிரம் கதையளைக் கதைப்பானுகள்......அதுக்காக நீங்க இப்படிச் செய்ய வேணும்!''

''நான் ஒருத்தற்றை கதையையும் கேட்கவில்லை...... நல்லாய் யோசிச்சு......நானாகத்தான் இந்த முடிவு எடுத்தனான்.''



அகிலாவுக்குக் கண்கள் கலங்கின. ராஜேசன் காரணமாக ஆண் வர்க்கத்தின் மேல் ஏற்பட்டிருந்த வெறுப்பு இருந்த இடம் தெரியாமல் பறந்தது. சிவகுமாரோடு பழகக் கிடைத்த சந்தர்ப்பத்தை நினைத்து மனதுக்குள் பெருமையடைய முடிந்தது. இவனோடு தான் சிநேகிதமாய்ப் பழகியது எவ்வளவு அநியாயமாகப் போய் விட்டது என மறுகணம் தன் மீதே வெறுப்புத் தோன்றியது. சிவகுமாரின் நிலையை எண்ண இரக்கம் மேலிட்டது.

''சிவா என்னில் இரக்கப்பட்டு நீங்கள் இந்த முடிவை எடுத்திருக்கலாம்......மறுகா......நீங்க தான் அதுக்காகக் கவலைப்படுவீங்க......நான் இதுக்கு ஒருக்காலும் சம்மதிக்கமாட்டன்.''

சிவகுமார் வெறிபிடித்தவனைப்போல எழுந்து தனது தலையைச் சுவரோடு பலமாக அடித்தான்— ''என்னை எல்லாருமாய்ச் சேர்ந்து என்னதான் செய்யச் சொல்லுறீங்கள்?''

அகிலா ஓடிவந்து அவனைப் பிடித்துத் தடுத்தாள். அடிபட்ட இடத்திலிருந்து இரத்தம் கசிந்தது. ''என்ன சிவா இது?......குழந்தைப்பிள்ளை மாதிரி?......'' எனக் கண்டித்தவாறே தனது சேலைத் தலைப்பால் இரத்தத்தைத் துடைத்தாள்.

அப்பொழுது அவனுக்கு அழுகை வந்தது. விம்மலெடுத்து அழுதான்.

ஆதரவோடு அவனது கண்ணீரைத் துடைத்துவிட்டவாறு அகிலா மெதுவாகக் கேட்டாள்; ''செல்வியைப் பற்றி நீங்க நினைச்சுப் பாக்கயில்லையா?''

அவனுக்கு எதையுமே நினைத்துப் பார்க்க முடியாத நிலை. குழம்பிய மனசு. அசதியாக இருந்தது. அகிலா தேநீர் கொடுத்து கட்டிலிற் படுக்க வைத்தாள்.

RangaRakes tamilnavarasam.com

"ஒன்றுக்கும் யோசியாமல்.......ஆறுதலாய்ப் படுங்க... அப்புறமா முடிவு எடுக்கலாம்!"

ஆழ்ந்த உறக்கத்தின் பின் மாலையில் கண்விழித்தான். குளிர்மையான காற்று வீசி வந்தது. அகிலா ஒரு தேவதையைப்போல அந்த அறைக்குள் பிரவேசித்தாள்.

கட்டிலிற்குப் பக்கத்தில் கதிரையை இழுத்து அமர்ந்து கொண்டாள். சிவகுமாரின் தலைமுடியைக் கோதிவிட்டாள்.

"சிவா?......"

அவன் பேசாமல் அவள் பக்கமாகத் திரும்பினான்.

"தயவு செய்து நான் சொல்லுறதை ஆறுதலாய்க் கேளுங்க......நாங்க அவசரப்பட்டு ஒரு முடிவும் எடுக்கக் கூடாதுதானே?

"நீங்க உங்க பக்கத்திலை மட்டும் யோசிக்கிறீங்க...... என்ர பக்கத்திலையும் நினைத்துப் பார்க்க வேணும்தானே? ......உங்கட முடிவுக்கு நான் கட்டுப்பட வேணுமெண்டு ஏன் எதிர்பார்க்கிறீங்க......? சுதந்திரமா முடிவு எடுக்கிற உரிமை எனக்கும் இருக்குத் தானே......?

"இரக்க உணர்வு உங்களுக்கு மட்டும்தான் இருக்க வேணுமா?......நான் அதெல்லாம் இல்லாத மரக்கட்டையெண்ணு நினைச்சீங்களா?......

"......வெறும் மனச்சாட்சி இல்லாத மிருகமாய் என்னை இருக்கச் சொல்லுறீங்களா?......முந்தியே ஒருத்தனுக்கு, அவர் ...... விருப்பப்படியெல்லாம் வாழ்ந்த என்னை......எப்படி இன்னொருகலியாணம்செய்யச் சொல்லுவீங்க?......அந்த அளவுக்கு நான் கேடுகெட்டவளா?"



—பொங்கி வந்த அழுகையை அடக்க முடியாமல் அவள் குலுங்கிக் குலுங்கி அழுதாள். சிவகுமார் எழுந்து செய்வதறியாது திகைத்தான்.

"அகிலா......ப்ளீஸ்........அழ வேண்டாம்!"

சற்று நேரம் தனது கைகளுக்குள் அழுகையை அடக்கிக் கொண்டு குனிந்திருந்தாள் அகிலா. பின்னர் சேலையால் கண்களைத் துடைத்தவாறே நிமிர்ந்தாள்.

"இல்லை......அகிலா ... ராஜேசனும் உங்களை ஏமாத்திவிட்டான்......அதுதான் நான் இந்த முடிவு எடுத்தன்" என அவளைச் சமாதானப்படுத்த முயற்சித்தான்......

"மற்றவனுகள் சொல்லுறது போலே......நான் ஆராவது ஒரு மாப்பிள்ளை பிடிக்கத்தான் திரியிறன் என்று நீங்களும் நினைச்சிருக்கிறீங்களா......?"

சிவகுமாரால் அந்தச் சூட்டைத் தாங்க முடியவில்லை. அவளை நேருக்கு நேர் நோக்குவதற்குக் கூடத் திராணி இல்லாதவன் போலத் தலை குனிந்தான். பின்னர் வெளியேறி நடந்தான்—கடல் அழைக்கிறது......

மரங்கள் காற்றில் அசைகின்றன. காற்றில்லாத போது துக்கம் அனுஷ்டித்துக் கொண்டிருந்துவிட்டு மீண்டும் காற்றுவர அதே மகிழ்ச்சியோடு ஆடுகின்றன. பறவைகள் தாளப் பறக்கின்றன. தொழிற்சாலைகள் உற்பத்தி செய்து மகிழ்கின்றன. மனிதர்கள் இயங்குகிறார்கள். பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதே இரவு வந்து விடுகிறது. யாரையும் எதிர்பாராமல் அடுத்த நாளும் விடிகிறது.

இந்த நியதிகளை மாற்றுவதற்கு இனி யாரும் பிறந்து வரப் போவதில்லை. மாற்றவும் முடியாது. சிவகுமா

RangaRakes tamilnavarasam.com

ருக்கு இவை விசித்திரமாகக் கற்பனையிற் தோன்றியது. அவற்றிலெல்லாம் ஏதோ அர்த்தம் இருப்பதாகச் சிந்தனையில் ஆழ்ந்தான். 'எங்களைப் பார்த்து நீங்களும் சந்தோஷமாக வாழுங்கள்' என அவை சொல்வதுபோல இருக்கிறது........

இரவு புகையிரதத்தில் யாழ்ப்பாணம் போவதற்காக அகிலாவிடம் விடைபெற வந்தான் சிவகுமார். அவள் ஒரு பார்சலை அவனிடம் கொடுத்தாள்—இரவுச் சாப்பாடு. இந்தக் கரிசனை!......இந்த அன்பு!......இதற்கிடையில் பெரிய பிரிவு நேரப் போவது போன்ற ஏக்கம்......உள்ளத்தில் அடங்காது உடைத்துக் கொண்டு வருகிற பாசம், கண்ணீராகத் துளிர்த்தது.

''ரேக்......இற்......ஈஸி!'' என்றாள் அகிலா. ஆனால், அவளது கண்களும் கலங்கிவிட்டன. இனி, அவன் போக வேண்டும்.

(முற்றும்)

RangaRakes tamilnavarasam.com